[illegible]

15/2/57

இலக்கியச் சிந்தனைகள்

எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

சென்னை ஸர்வகலாசாலைத்

தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் 1936—46

பாரி நிலையம்

59. பிராட்வே · சென்னை 1.

B. சிவலிங்கநாதன்,

புக்ஸ் & நியூஸ் ஏஜன்ட்,

நாகர்கோவில்.

இரண்டாம் பதிப்பு, 1956.

விலை ரூபாய். 3-8-0

நவபாரத் பிரஸ், சென்னை—2.

முகவுரை

(இந்நூலின் முதற் பதிப்பிற்கு எழுதியது:)

இலக்கியச் சிந்தனைகள் என்ற இந்நூலிலுள்ள கட்டுரைகளில் முதல் மூன்று இலக்கியம் பற்றிய பொதுக் கட்டுரைகள். இலக்கியத்தின் தன்மை, அதன்பயன், அதன் ஆதிவரலாறு என்ற பொருள்கள் இவற்றிலே விளக்கப்படுகின்றன. இங்கிலாந்து முதலிய மேனாட்டு அறிஞர்கள்தாம் இலக்கிய ஆராய்ச்சியைச் செம்மையாய் நீண்டகாலமாக நிகழ்த்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டினரும் தங்கள் மொழியிலேயுள்ள அரிய இலக்கியங்களையும், லத்தீன், கிரீக் முதலிய பிராசீன மொழிகளிலுள்ள இலக்கியங்களையும், பிறநாட்டு மோழிகளிலுள்ள இலக்கியங்களையும் ஒப்புநோக்கிக் கற்றுப் பல உண்மைகளைக் கண்டுள்ளார்கள். அன்றியும், பிறநாட்டு அறிஞர்கள் செய்துள்ள இலக்கிய ஆராய்ச்சிகளையும் கற்று, தங்கள் ஆராய்ச்சியை நெறிப்படுத்தி யிருக்கிறார்கள். இலக்கிய ஆராய்ச்சியை ஒரு கலையாகவும் அவர்கள் போற்றி வளர்த்து வருகிறார்கள். ஆகவே, இலக்கியம் பற்றிய பொது விஷயங்களில் அவர்களையே நாம் பின்பற்றுதல் வேண்டும். அவர்களுடைய கருத்துக்களையே நான் பெரும்பாலும் தழுவியிருக்கிறேன். முதற் கட்டுரை உவில்லியம் ஜே. லாங்க் எழுதிய 'ஆங்கில இலக்கியம்' ('English Literature' by William J. Long: Ginn and Company) என்ற நூலின் முன்னுரையைத் தழுவி எழுதியிருக்கிறேன். இச் சிறந்த நூலை ஆங்கிலங் கற்ற தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் கற்க வேண்டுமென வற்புறுத்துவேன். இலக்கியத்தின் பயன் என்ற இரண்டாவது கட்டுரை அகஸ்டின் பிர்ரெல் (Augustine Birrel) எழுதிய சிறு கட்டுரை ஒன்றை அடியொற்றி எழுதியது. மூன்றாவது கட்டுரையாகிய 'தமிழ் இலக்கியத்தின் முதல் தோற்றம்' கம்மியர் (Gummere), மக்கென்ஸி (Mackenzie) முதலிய பேராசிரியர்கள் இயற்றிய நூல்களின் உதவியால் எழுதப் பட்டது. தமிழ் இலக்கியத்தின் முதல் தோற்றம் மற்ற மொழி

களிலுள்ள இலக்கியங்களின் முதல்தோற்ற நெறியினின்றும் வேறுபடுதற்கு நியாயம் இல்லை. ஏனெனின், இத் தோற்றம் ஆதி மக்களின் உளப்பாங்கினைப் பொறுத்தது. இக்கட்டுரையிற் காணும் விஷயங்கள் பெரும்பாலும் ஊகமேயெனினும், இவை கள் இப்பொருள்பற்றி ஆராய்ச்சி நிகழ்த்திய பேரறிஞர்களிற் பெரும்பாலார் ஒப்புக்கொண்டனவே.

முதல் தோற்றத்தின் பின், தமிழ் இலக்கியத்தின் தொன் மையைக்குறித்து மூன்று கட்டுரைகள் உள்ளன. தற்காலத்தில் நம்மவர்களுள் சிலர் ஆதாரம் யாதுமின்றி, தமிழ் இலக்கியம் பதினாயிரம், இருபதினாயிரம் ஆண்டுகளாகப் பயின்று வந்துள் ளது என நெகிழ்ந்து எழுதிவருகிறார்கள்; சிலர் உறுதியாகவே இக்காலக் கணக்கைத் துணிந்து வற்புறுத்துகிறார்கள். ஆதார மில்லாத இந்தக் கொள்கை மிகவும் கேடு தருவதாகும். அறிஞர் கள் எவரும் இதனை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். கீழ்நாட்ட வர்களுக்கு இயல்பாக உரிய மிகைநவிற்சி என்று இதனை ஒதுக்கிவிடுவார்கள். நாம் கூறும் பிற உண்மையுரைகளையும் கூட நம்பாமல் தள்ளி விடுவார்கள். வள்ளுவர்,

> கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
> வல்லதூஉம் ஐயம் தரும்.

என்று கூறினர். இவ் அறிவுரையை நாம் மனத்திற் பதித்தல் வேண்டும். உண்மையான தமிழ்ப்பற்றுடையவர்கள் ஆதார மற்ற மிகையுறையைச் சிறிதும் விரும்பமாட்டார்கள். தமிழ் இலக்கியம் மிகைநவிற்சி யாது மின்றியே நாம் போற்றத்தகும் தொன்மைவாய்ந்தது. இப்போதுள்ள மிகவும் பழைமையான தமிழ் இலக்கியம் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண் டில் தோன்றியது.

மேலே குறித்த கட்டுரைகளை அடுத்து, இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பினைத் தமிழ் இலக்கிய வர லாறு நாட்டுவரலாறு என்ற இரண்டின் வாயிலாகவும் விளக்க முயன்றுள்ளேன். இத் தொடர்பு இயற்கையானது; தவிர்க்க முடியாதது. மொழிகள் அனைத்திலுமுள்ள இலக்கியங்களுக்

கெல்லாம் ஒப்பமுடிந்தது. நம்மவர்கள் இத் தொடர்பினை நன்கு உணர்தல் வேண்டும்.

இதன்பின்னருள்ள ஐந்து கட்டுரைகள் தமிழ் இலக்கியப் பகுதிகளை நேர்படக் குறித்து எழுதியவை. இவற்றுள் முதல் இரண்டு கட்டுரைகள் சங்க இலக்கியங்கள் பற்றியவை. கடைச் சங்கம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகைகள் முதலியவை முதற் கட்டுரையின் பொருள்கள். இரண்டாவது கட்டுரையில், சங்கச் செய்யுட்களின் இயல்பும், இவற்றில்காணும் வீரம்,காதல் என்ற பொருள்களைச் சங்கப் புலவர்கள் கவிதைச்சுவை படப் பாடியிருக்கும் சிறப்பும் உணர்த்தியிருக்கிறேன். காதலை 'நாடகக் காதல்' என்றும் 'இயற்கைக் காதல்' என்றும் நான் பகுத்துக் கொண்டிருக்கிறேன். இப்பாகுபாடு கவிதைச்சுவையை நுகர்வதற்குப்பயன்படுவதாகலாம். கவித்துவஆற்றலுக்குப் பேரெல்லையாக விளங்கும் கம்பனையும், நலன்கள் பலவும் முற்றிக் கனிந்த இனிய அழகிய கருவியாக நமது தமிழ் மொழியை அப் பெருங் கவிஞன் ஆக்கியமைத்துள்ள முறையையும் பற்றியது மூன்றுவது கட்டுரை. கம்பன் காலத்திற்குப் பின்னர், 16-வது நூற்றுண்டில் சமயச் சார்பான மடங்களும், விஜயநகர அரசர்களும், தமிழ்ச் சிற்றரசர்களும் தமிழ் இலக்கியத்தை வளர்த்த வரலாற்றினை நான்காவது கட்டுரையிலும், 19-வது நூற்றுண்டில் ஆங்கிலேயர் ஆட்சியில், தமிழ் இலக்கியம் சென்ற நூதன நெறிகளை ஐந்தாவது கட்டுரையிலும் விளக்கியிருக்கிறேன்.

இந் நூதன நெறிகளிற் பிறந்த நூல்களுள் முக்கியமானதொன்று அகராதியாகும். லாம்பார்ன் (E. A. G. Lamborn) என்ற ஆங்கில ஆசிரியர் 'ஒருவன் படித்தவன் என்பதற்கு அறிகுறி அவன் அகராதியை எளிதில் நோக்கிப் பயன்படுத்தும் திறமையேயாகும். மனிதனை அவன் கையாளும் அகராதியைக் கொண்டு அறியலாம்' என்று கூறினர். இதனுல் அகராதி எவ்வாறு மதிக்கப்பட்டுள்ளது என்பது ஒருவாறு விளங்கும். இவ் அகராதியைக் குறித்து மூன்று கட்டுரைகளில் (13-15) கூறியுள்ளேன். இவற்றுள், முதலாவது கட்டுரை அகராதிகளிலெல்லாம் தலைசிறந்ததாய் விளங்கும் நூதன ஆங்கிலப் பேரக

ராதியைப் (The New English Dictionary) பற்றியது. இரண்டாவது கட்டுரையில் முன்புள்ள தமிழ் அகராதிகளின் இயல்பும் இவற்றின் குறைபாடுகளும், இக் குறைபாடுகளைப் பெரும்பாலும் நீக்கிச் சென்னை ஸர்வ கலாசாலையார் வெளியிட்ட தமிழ்-லெக்ஸிகனின் சிறப்பியல்புகளும் விவரிக்கப்பட்டுள்ளன. மூன்ருவது கட்டுரையில், தமிழில் தோன்றிய அகராதிகளின் வரலாறு விளக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த நூதன நெறிகளிற் பிறந்த தமிழ் நூல் வகைகளில் ஒன்று நாடகமாகும். இக் கலையின் வரலாற்றைக் குறித்து ஒரு கட்டுரையில் கூறியுள்ளேன். தமிழ் மொழியை இப்போது இயக்கிவரும் நூதன சக்திகளைக் குறித்து இறுதிக் கட்டுரையில் விளக்கியுள்ளேன். இக்கட்டுரையில், சங்கக்காலந் தொட்டுச் சமீபகாலம்வரை, தமிழை உயிர்த்தத்துவம் நிரம்பிய மொழியாக்கி அதனை ஊக்கிவந்த புதிய புதிய பல சக்திகளும், அவைகளுக்கு உறைவிடமாக விளங்கிய மதுரை மாநகரின் இலக்கிய வாழ்க்கைச் சரித்திரமும் கூறப்பட்டுள்ளன.

எனது இலக்கிய முயற்சிகளில் பிரதி செய்தல், ஒப்பு நோக்குதல் முதலிய பல வகைகளிலும் உதவி புரிந்துவரும் வித்வான் திரு. மு. ஷண்முகம் பிள்ளை இக் கட்டுரைகளைப் பதிப்பிடுதலிலும் ஒத்துழைத்தனர்.

அச்சு வேலையின் நெருக்கடி மிகுந்த இக்காலத்தில் இந் நூலைக் கூடிய விரைவில் அச்சிட்டுதவிய சென்னை தாம்ஸன் கம்பெனியாருக்கு எனது நன்றி.

சென்னை }
30-8-47. } எஸ். வையாபுரிப் பிள்ளை.

இரண்டாம் பதிப்பில் கம்பனும் தமிழும் என்ற கட்டுரை நீக்கப்பட்டு ஜைனரும் இலக்கியமும், கூத்தும் இசையும், தமிழில் நாட்டிய நூல்கள், மதன நூல் வரலாறு, இலக்கியத்தில் மொழி வழக்கு ஆகிய ஐந்து கட்டுரைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

சென்னை. }
22-12-56 } பதிப்பாளர்கள்

உள்ளுறை

			பக்கம்
1	இலக்கியமாவது யாது?	...	1
2	இலக்கியத்தின் பயன்	...	18
3	இலக்கியத்தின் முதல் தோற்றம்	...	21
4	தமிழ் இலக்கியத்தின் தொன்மை I	...	34
5	,, II	...	46
6	,, III	...	59
7	இலக்கியமும் சமூகமும்	...	70
8	சங்க இலக்கியங்கள் I	...	76
9	,, II	...	83
10	ஜைனரும் இலக்கியமும்	...	94
11	பதினாறும் நூற்றாண்டில் இலக்கியம்	...	100
12	பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலக்கியம்		108
13	நூதன ஆங்கிலப் பேரகராதி	...	120
14	தமிழ் அகராதி	...	127
15	தமிழும் அகராதியும்	...	137
16	கூத்தும் இசையும்	...	149
17	நாடகக் கலையின் வரலாறு	...	162
18	தமிழில் நாட்டிய நூல்கள்	...	171
19	மதன நூல் வரலாறு	...	178
20	இலக்கியத்தில் மொழி வழக்கு	...	193
21	மதுரையும் தமிழ் இலக்கியமும்	...	201

இந்நூற் கட்டுரைகள் வெளிவந்த பத்திரிகைகள் முதலியன:

இலக்கியப் பூந்துணர்:	ஆக்ஸ்பர்ட் யூனிவெர்ஸிடி பிரஸ்
கம்பன்மலர்	சென்னைக் கம்பர் கழகம்
கலைமகள்	மைலாப்பூர்
சக்தி	சக்தி காரியாலயம், சென்னை
சித்தாந்தம்	சைவ சித்தாந்த மகா சமாஜம்
செந்தமிழ்	மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை
நாடகக் கலைமலர்	எம். என். எம். பாவலர்
பாரத தேவி	சென்னை
நாட்டியம்	சென்னை
அமுத சுரபி	சென்னை
சிந்தனை	சென்னை
தினமணி	சென்னை

இப்பத்திரிகை முதலியவற்றின் தலைவர்களுக்கு எனது நன்றி

ஆசிரியன்.

1

இலக்கியமாவது யாது?

இரண்டு அனுபவங்கள்

ஒரு முறை ஒரு சிறுமியும் அவள் தந்தையும் கடல்-கரையில் உலாவிக் கொண்டிருந்தனர். அழகான சிப்பி யொன்றை அச்சிறுமி கண்டு, அதனை ஆவலுடன் எடுத்துத் தன் காதருகில் வைத்துக்கொண்டாள். வைத்ததும், தான் அதுவரை கேட்டிராத நூதன ஒலி சிப்பியிலிருந்து வருவதை உணர்ந்தாள். சிறுமி வியப்புற்றாள். அவள் முகத்தில் அதிசயக் குறிப்பும் மகிழ்ச்சியும் நடம்புரிந்தன. சின்னஞ்சிறு சிப்பியில் ஒலிகள் வந்த வண்ணமா யிருந்தன. அந்த ஒலிகள் மென்மையாய் இனிமையாய் இருந்தன. மற்றொரு நூதன உலகிலிருந்து அவை வருகின்றன என்று நினைத்தாள். தான் வாழ்ந்து வந்த கடல்—உலகிலுள்ள மூடுமந்திரங்களை நினைவிற்குக் கொண்டுவந்து மீண்டும் அவற்றை மெல்லெனச் சிப்பி மிழற்றுவதுபோல் தோன்றியது. அவற்றின் மாய இன்னிசையிலே அச் சிறுமி பிணிப்புண்டு மகிழ்ச்சியுற்றுக் கேட்டு, தந்தையுடன் செல்வதையும் மறந்து விட்டனள். முன்னே சென்றுகொண்டிருந்த தந்தை திரும்பி வந்து தன் மகள் செயலைக் கண்ணுற்றார். சிப்பியினின்றுவரும் ஒலியின் ரகசியத்தை விளக்கத் தொடங்கி, அதில் அவ்வாறு ஒலி கேட்பது புதுமையன்று என்றனர். காதிற்கு எட்டாத பல மெல்லொலிகளைச் சிப்பி தனது வெண்புரிகளிலே அகப்படுத்தி, பளபளக்கும்

உட்குழிவுகளிலே கணக்கற்ற எதிரொலிகளின் உள்—அரவத்தை நிறைத்துவைத்திருக்கிறது எனக் கூறினர். சிப்பியின் வழியாக வந்த ஒலிகள் ஒரு நூதன உலகில் தோன்றிவருவன அல்ல; இந்தப் பழைய உலகில் உள்ள வையே. ஆனால் அவற்றின் நிரம்பிய இசையினிமையை ஒருவரும் கவனித்துக் கேட்டதில்லை. இவ்வாறு கேளாதன கேட்ட காரணத்தாலேயே, சிறுமி வியந்து அதில் ஈடு பட்டாள். இவளது அனுபவம் ஒரு வகை; இவளது தந்தையின் அனுபவம் வேறொன்று.

இலக்கியச் சுவை நுகர்ச்சி

இவைபோன்ற இரண்டு அனுபவங்கள் இலக்கியக் கல்வி நிகழும்பொழுது நமக்கு ஏற்படுகின்றன. ஒன்று இலக்கியத்தின் சுவை நுகர்ச்சியும் அதன் நலம் வியத்தலுமாம்; மற்றொன்று அதனைப் பகுத்து உணர்ந்து அதன் உண்மை-இயல்பை அறிவதாம். நாம் கற்றற்கு எடுத்தது ஓரே அனுபவத்தை உணர்த்தும் சிறு கவிதையாயினும் சரி; பலவேறு வகைப்பட்ட அனுபவங்களை நுட்பமாய் உணர்த்திச் செல்லும் பெருங் கவிதையாயினும் சரி. கற்கும் அந் நேரத்திலாவது ஒரு புதிய உலகத்தைப் புதிதாகக் காண்கிறோம். இவ் உலகு கண் கூடாயுள்ள நமது உலகத்தினின்றும் எத்தனையோ வகையில் வேறுபட்டது; கனவும் மாயமும் நிகழும் அற்புத உலகமாயுள்ளது. இப் புது உலகிலே புகுந்து நுகர்ந்து இன்புறுதலே தலைசிறந்த செயற்பாடாவது. நல்ல இலக்கியங்களை வேறு பயன் கருதாது அவற்றால் விளையும் இன்பத்தின் பொருட்டே அன்பு பூண்டு கற்பதுதான் இலக்கியக் கல்வியாளன் மேற்கொள்ள வேண்டுவது. 'அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே' என்று நமது மூதாதையர் கூறினர். இதில் இன்பம் என்றது காம-இன்பமாம். இது சிறந்ததன்று. இலக்கிய-இன்பத்தோடு இதற்கு ஒருவகையான இயைபும் இல்லை. முன்னோர் கருத்துக்கு மாறாக, இலக்கிய-இன்பம் என்றதன் தனிப்பட்ட நிலையைக் கண்டு, அது இலக்கிய-ஆராய்ச்சிக்கு அஸ்திவாரம் ஆகும் என்று விளக்கிய வர்கள் நவீன கலா-ரஸிகர்களே ஆவர்.

சுவை நுகர்ச்சியைப் போலவே தலைசிறந்தது இலக்கியத்தைப் பகுத்து உணர்ந்து அதனை விளக்கும் முறையை அறிதல். ஒவ்வோர் இலக்கியத்தின் அடிப்படையிலும் அதன் ஆசிரியன் புலப்படுகிறான்; ஆசிரியனுக்கு அடிப்படையாக மனித வர்க்கம் உள்ளது; மனித வர்க்கத்திற்கு அடிப்படையிலே, இயற்கை, சமூகம் என்ற இருவகைச் சூழ்நிலைகள் உள்ளன. இச்சூழ்நிலைகள், ஆசிரியனது முயற்சி வேண்டாது, வெளிப்படத் தோன்றுதலின்றி, அதிரகசியமாக அவனிடத்தே பிரதிபலிக்கின்றன. ஓர் இலக்கியம் கருதியது அனைத்தையும் நாம் முற்ற உணரவேண்டுமாயின், இங்கே குறித்த சூழ்நிலைகள் அனைத்தையும் நாம் நன்கு ஆராய்ந்து அறிதல் வேண்டும். எனவே இலக்கியத்தின் சுவையை நுகர்தல் இன்றியமையாததாயுள்ளது போலவே, அதன் இயல்பைப் பகுத்து உணர்தலும் இன்றியமையாததாம். இதற்கு முதற்படியாக, இலக்கியத்தின் முக்கிய இயல்புகள் எவை எனத் துணிதல் நலமாகும்.

இலக்கிய இயல்பு அறிதல்: பகுத்து உணர்தல்

இலக்கியம் என்பது நுண்கலைகளில் ஒன்றாகும். அறிவும் மனோபாவமும் கலந்து தொழிற்பட்டு மக்களுக்கு இன்பத்தை விளைவிக்கும் சிறந்த கலைகள் நுண்கலைகள் எனப்படும். ஓவியம், சிற்பம், முதலியன தக்க உதாரணங்களாம். ஈண்டெல்லாம் உண்மையும் அழகும் பொருந்திய உருவங்களாக வாழ்க்கை புலப்படுகிறது. இதனை வேறொரு வகையாகவும் கூறலாம். உலகிலுள்ள சில உண்மைகளும் அழகுகளும் சாதாரணமாய்ப் புலப்படாமலிருக்கின்றன. நுண்ணிய உட்புரிகளையுடைய சிப்பியே செவிப் புலனாகாத மெல்லிய ஒலிகளையும் இன்னிசைகளையும் எதிரொலிக்கச் செய்யும். அதுபோல, நுண்ணுணர்வுடைய சில மக்களுக்கே இவ்வுண்மைகளும் அழகுகளும் புலப்படுகின்றன. இவற்றை இவ்வகை மக்களே நம்போலியர்க்கு அறிவுறுத்தத் தக்கவர்கள். எத்தனையோ மக்கள் குரவம் முதலிய மரங்களும், கிளி முதலிய புள்ளினங்களும் நிரம்பிய சோலைவழியாகச்

இலக்கியம்: நுண்கலை

செல்லுகின்றனர். அம் மரங்களை நேராகச் செல்லும் வழியிற் குறுக்கிட்டு நிற்கும் இடையூறுகளாக அவர் களிற் சிலர் கருதலாம்; அப்புள்ளினங் களை இரைச்சலிட்டு அமைதியைக் கெடுக் கும் ஆரவாரப் 'பக்கிகள்' என்று கருதி ஒரு சிலர் வெறுப்புக் கொள்ளலாம். அவ் வழியே ஓர் இளைஞனும் சிறுமியும் செல்ல நேரிடின், அன்னார் தகாத செயலில் ஈடுபட்டுச் செல்கிறார்களெனக் குறும்புக் குறிப்புள்ள கண்களோடு வேறு சிலர் நோக்கலாம். கோவலனும் கண்ணகியும் தமது நகர் நீங்கிச் செல்லும் போது, அவர்களை இங்ஙனம் ஒருவன் கருதினான் என்ற கதை (சிலப். X. 219-233) நம்மிற் பலரும் அறிந்ததே. கவிஞன் இவ்வாறு கருதமாட்டான். அவன் ஆழ்ந்து நோக்குகிறான்; உண்மையையும் அழகையும் காண்கிறான்: அவன் கண்டதைப் பின் வருஞ் செய்யுள் உணர்த்துகிறது.

கவிஞன் காட்சியும் கருத்தும்

இது என் பாவைக்கு இனிய நன் பாவை
இது என் பைங்கிளி எடுத்த பைங்கிளி
இது என் பூவைக்கு இனிய சொற் பூவை
என்று
அலம்வரு நோக்கின் நலம் வரு சுடர்நுதல்
காண்தொறும் காண்தொறும் கலங்கி
நீங்கினளோ என் பூங்க ணோளே

ஓர் இளம் பெண்; தன் பிறந்தகத்தை விடுத்துத் தன் காதற்குரிய தலைவனோடு சென்றுவிட்டாள்; அவ் இளம் பெண் வருந்திச் சென்றதைக் குறித்து அவள் தாய் புலம்புகிறாள்: 'போகும் வழியிலே பாவை (பொம்மை) போன்ற குரவமலரைப் பார்த்திருப்பாளே! தான் வீட்டில் அருமையாகப் போற்றி விளையாடும் பொம்மைக்கு ஏற்ற பொம்மை யென்று அதனை நினைத்திருப்பாளே! அங்கே பசிய சிறகுடைய கிளியைப் பார்த்திருப்பாளே! தான் வீட்டில் நெய்யடிசில் ஊட்டி அன்புடன் வளர்த்து வந்த பைங்கிளிக்குத் தோழியா யிருக்கத்தக்க கிளியென்று

நினைத்திருப்பாளே! வழியிலே நாகணவாய்ப் புள் இருக்குமே! அதனைத் தான் வீட்டில் பாராட்டிப் போற்றிவந்த நாகணவாய்க்குத் தக்க இணை என்று நினைத்திருப்பாளே! இவ்வாறெல்லாம் நினைத்து, சுழன்றுவரும் பார்வையோடு இவற்றைக் காணுந்தோறும் காணுந்தோறும் நெஞ்சு கலங்கி வருந்திப் பேதையுள்ளம் பின் இழுக்கக் காதல் முன் இழுக்கப் போயிருப்பாளே!'

அன்னையின் அன்பு, இளம் பெண்கள் தாம் வளர்த்து வரும் கிளி முதலியவற்றின்மீது கொள்ளும் பேதை-அன்பு, எவ்வகை அன்பினையும் கீழ்ப்படுத்து வெற்றி கொள்ளும் காதல்-அன்பு: இவைகள் எல்லாம் உண்மைகள். 'இது என் பைங்கிளி எடுத்த பைங்கிளி' என்ற அடியிலே ஒரு புதிய அழகு வெளிப்படுகிறது. அழகிய பசுங்கிளியைக் காணுந்தோறும் காணுந்தோறும் இச்செய்யுளின் அடிகள் நமது ஞாபகத்திற்கு வருகின்றன. இவற்றின் அபூர்வ அழகு நம்மைப் பரவசப்படுத்துகிறது.

கலையழகு

இங்ஙனமே, நுண்கலை-அமைப்பு ஒவ்வொன்றும், வியப்புறுத்தும் முறையிலே முன்பின் இல்லாத புதுமையாய் அமைந்து, இன்பம் விளைத்தல் வேண்டும். சிற்ப வித்தைதான் நுண்கலைகளுள் பழமையானது ஆகலாம். எனினும் இன்றுகூடக் கொற்றர்கள்தாம் மிகுதியாய் உள்ளார்கள்: அவர்களுள் சிற்பி எனத்தக்கவர் சிலரே யாவர். மரம், கல் முதலியவற்றைக்கொண்டு தாம் செய்கின்ற அமைப்புக்களிலே இச்சிற்பியர் மறைந்து கிடக்கும் சில உண்மையினையும் அழகினையும் மக்களது புலன்களுக்குக் குறிப்பால் உணர்த்துகிறார்கள். நம்மனத்தில் அழகு உணர்ச்சியைத் தூண்டும் சொற்கள் கொண்டு வாழ்க்கையை இழைத்துக் காட்டுகிற இலக்கியத்திலும் இவ்வாறே. எழுத்தாளர் பலர்; அவர்களுள் இலக்கியக் கலையாளர் சிலரேயாவர். விரிந்த பொருளில், இலக்கியம் என்பது மக்கள்-இனத்தார் எழுதிய அனைத்தையும் குறிக்கலாம்; சரித்திரம், சாஸ்திரம், கவிதை, கதை முதலியன எல்லாம் அதன்கண் அடங்கும். மிகச் சுருங்கிய பொருளில், இலக்கியம் என்பது அழகு உணர்ச்சி ததும்ப

எழுதியனவற்றையே குறிக்கும்; மக்கள் எழுதியுள்ளன பல அதன்கண் அடங்காது ஒழியும். வெயில், குளிர் முதலியவற்றுக்கு அஞ்சி ஒதுங்கும் புகலிடமாக மட்டும் அமைந்த நமது வீடுகளைச் 'சிற்பம்' என்று கருதமுடியாது அல்லவா? அதுபோலத்தான் இலக்கியக் கலையிலும். ஏகதேசமாக, ஒரு சரித்திர-நூல் அல்லது விஞ்ஞான-நூல் இலக்கியமாகக் கருதப்படலாம். ஆனால் அப்பொழுது நூற்பொருளையும் அதனைத் தெளிவுறுத்தும் முறையையும் மறந்துவிடுகிறோம். நூலின் சொல்-அழகிலும், நடை-அழகிலும், பொருள்-அழகிலும் மனத்தைப் பறி கொடுத்துவிடுகிறோம்.

இந்தக் கலையழகுதான் (**artistic quality**) இலக்கியத்தின் சிறப்பு-இயல்புகளுள் முதன்மையானது. சிறப்பு-இயல்புகளுள் இரண்டாவது இலக்கியத்தின் குறிப்பாற்றலாகும் (**suggestiveness**). இது நமது அறிவினைக் காட்டிலும் நமது உணர்ச்சியையும் பாவனா சக்தியையும் தொழிற்படுத்துகிறது. நமக்கு வெளிப்படையாகச் சொல்வதைக் காட்டிலும் நமது ஆன்ம உணர்வை எழுப்பி விடுவதிலேதான் இதன் நலம் சிறக்கின்றது. சீதை தானும் காட்டிற்கு உடன் வருவதாக இராமனிடம் வற்புறுத்தியபொழுது, அவன் 'எல்லையற்ற இடர் தருவாய்' என்றான். இச்சொற்கள் அறிவிற் சிறந்த பொருள் யாதொன்றனையும் கூறிவிடவில்லை; ஆனால் நமது பாவனா சக்தியைத் தூண்டிப் பெரியதோர் ஊகஉலகை இயற்றி, நம் மனத்தை அங்கே சஞ்சரிக்கச் செய்கிறது. சிறிய எளிய சொற்கள்; ஆனால் அவைகள் பேராற்றல் வாய்ந்தன. இராவணன் தன் தம்பி கும்பகர்ணனைத் துயிலெழுப்பி அழைத்துவரச் செய்கிறான். வந்ததும் கும்பகர்ணன்,

குறிப்பாற்றல்

> ஆனதோ வெஞ்சமர் அலகில் கற்புடைச்
> சானகி துயர் இனந் தவிர்ந்த தில்லையோ?

என வினவுகிறான். இவ் அடிகள் சிறப்புடைய பொருள் ஒன்றனையும் அறிவுறுத்தவில்லை. இக்கேள்விகளுக்கு விடை எதிர்பார்க்கப்படவும் இல்லை. ஆனால் இவற்றால்

வேருேர் உலகு நமது அகக்கண்முன் விரிந்து தோன்று கிறது; நமது மனேபாவனே அங்கே புகுந்து உலவுகிறது. தீவினேகள் எல்லாம் ஒருபுறம்; நல்வினேகள் எல்லாம் எதிர்ப்புறம். இருபக்கமும் ஒன்ருெடொன்று எதிர்த்துக் கொடும்போர் புரியத் தொடங்குகின்றன; ஒன்றன் வலிமையைப் பிறிதொன்று அறியலாயிற்று. இராவண னது தீய காமம், அக்காமத்தின் சூழ்ச்சி, அதன் விளேவு: இவற்ருல் நிரம்பியது பாவனே—உலகில் ஒரு பாதி; பிறிதொரு பாதியில் இராமனது தூய காதல், அக்காத லுக்கு நேர்ந்த இடையூறு, அவனது குலத்திற்கு ஏற்பட்ட பழி, அவமானம், இப்பழியை நீக்குதற்கு எடுத்த உபாயம், இதன் விளேவு; இவை நிரம்பியுள்ளன. தீவினே ஒரு புறமும், நல்வினே மற்ருெரு புறமும் தன்னேத் தீப்போலக் காய்ந்து நிற்க, இடையே புழுப்போலத் துடித்துத் துன் புறுகின்ருள் சானகி. எவ்வகைத் துன்பத்திலும் தனது கற்பைக் காத்துக்கொள்கின்ருள் இவ் அரும் பெறல் நங்கை இவ்வாறு அமைந்த ஓர் கற்பனே—உலகு மேலே அடிகளால் சிருஷ்டிக்கப் படுகின்றது. புதிய உலகுகளேத் தோற்றுவிக்கும் மாயா சக்தியை இச்சொற்கள் படைத் துள்ளன.

கண்ணனது குழலிசையிலே ஈடுபட்டுப் பெரி யாழ்வார்,

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண் கோடச் செய்யவாய் கொப்ப
குறுவெயர்ப் புருவம் கூடலிப்பக் [ளிப்பக்
கோவிந்தன் குழல்கொ டூதினபோது
பறவையின் கணங்கள் கூடுதுறந்து
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
கவிழ்ந் திறங்கிச் செவியாட்ட கில்லாவே.

என்று கூறுகிருர். மாயக் கண்ணனது மாய இசையிலே இக்கவிஞர்பிரான் மயங்கித் தம்மை இழந்து நின்றதோடு, இலக்கியத்தின் பெருநலத்தை அளந்து அறிதற்கு ஓர் அளவுகோலேயும் இவர் தந்துள்ளார். இவர் குறிப்பிட்ட

பறவையினம் முதலியவற்றைப்போல, நம்மையும் துன்ப இன்பங்கள் விரவிக் கிடக்கின்ற இந்த நனவுலகினின்றும் நழுவி ஓடிப்போய் இன்பமயமாயுள்ள கனவுலகிலே சில காலமேனும் மகிழ்ந்து வாழும்படி செய்வதுதான் உயர்தர இலக்கியத்தின் சீரிய மாண்பாகும். கலைகள் அனைத்திற்கும் பொதுப்பயன் அறிவுறுத்துவது அன்று; இன்புறுத்துதலேயாம். இலக்கியமும் நம்மை இன்புறுத்துதல் வேண்டும்; வாசகர்கள் ஒவ்வொருவரையும் அவர்களது இதய உலகிலே இன்பப் பூஞ்சோலையொன்று நிருமிக்கச் செய்து அதன்கண்ணே ஒரு கலைக் கோயிலை அழகுற நிறுவப் பண்ணுதல் வேண்டும். அப்பொழுதுதான் 'இலக்கியம்' என்ற பெயர் தகுதியுடையதாகும்.

இலக்கியத்தின் நோக்கம்

மேற்குறித்த கலையழகு, குறிப்பாற்றல் என்ற இரண்டினையும் அடிப்படையாகக் கொண்டதுதான் இலக்கியத்தின் மூன்றாவது சிறப்பு — இயல்பாகிய நிலைபேறுடைமை (Permanence). 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' (புறம். 18) என்று புறநானூறு கூறுகிறது. எனினும் உலகம் உண்டியினால்மட்டும் வாழுவதன்று. முயற்சி வேகம், ஆசைப்பாடு, லௌகிகப் பொருள்களில் ஈடுபாடு: இவற்றால் எத்துணை கலவரப் பட்டாலும், அழகுடைய பொருளை இழந்துவிட எளிதில் மனம் இணங்கமாட்டாது. இது சிற்பம், ஓவியம் என்பவற்றிற் காட்டிலும், செய்யுள் பற்றிய மட்டில் பெரிதும் உண்மையாம். நூல்கள் கோடிக் கணக்காக வந்து பெருகிவிடும் தற்கால உலகில் நிலைபேறுடைமை அருமையே யாகும். இந் நூல்களின் வெள்ளப் பெருக்குத் தற்காலத்து மட்டுமுள்ள ஒரு காட்சியன்று; மிகப் பழைய காலந்தொட்டே நூற் பெருக்குத் தொடங்கிவிட்டது. கி. பி. 16-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில், கோவாவிலுள்ள ஏசு சங்கத்தாரால், இந்தியாவில் அச்சு வித்தை முதன் முதலாகத் தொடங்கப் பெற்றது. தமிழ் நாட்டில், கொச்சியில், கி. பி. 1577-ல் மலையாளத் தமிழ்

நிலைபேறுடைமை

எழுத்துக்கள் ஜொஆன்னெஸ் கொன்ஸால்வெஸ் (**Joannes Gonsalves**) என்பவரால் செதுக்கப்பட்டது,* 17-ம் நூற்றாண்டிலிருந்து தமிழ் நூல்கள் அச்சில் வெளிவரத் தொடங்கின. அக்காலத்திற்கு முன் கல்வியிற் பற்றுள்ளவர்களாலும், ஆசிரியர்களாலும், மாணாக்கர்களாலும், அங்கங்கே உள்ள மடங்களின் தலைவர்களாலும், கோயில் அதிகாரிகளாலும், அரசியல் அதிகாரிகளாலும், நூல்கள் ஏட்டுச்சுவடி வடிவில் பெரிதும் பெருக்கமடைந்து போற்றி வரப்பட்டன. நமது நாட்டில் மட்டுமேயன்றி, பிற நாடுகளிலும் முற்காலத்தே நூல்கள் மிக மிகப் பெருகிச் செழித்திருந்தன. அலெக்ஸான்டிரியா நகரத்தில் மிகப் பெரியதொரு நூல்-நிலையம் இருந்தது. வேண்டும் நூலை எடுத்துக் கையாள முடியாதபடி அத்துணை மிகுதியாக நூல்கள் இருந்தன என்று நிலையத்தின் பரிபாலகர் வருத்தம் உற்றனர் எனத் தெரியவருகிறது. எனினும், மிகப் பலர் அங்கே பிரதிசெய்து கொண்டே யிருந்தனர். ஒரு நூற்றாண்டில் அவர்கள் எழுதி முடித்திருக்கக் கூடிய பிரதிகள் இப்பொழுது ஒரு வாரத்தில் அச்சு ஏறி வெளி வருகின்றன.

இந்நிலையில் மக்கள் இயற்றும் நூல்களில் எதுவும் நிலைபேறுடையதா யிருக்குமோ என்பது ஐயப் பாட்டிற்கு இடனு யுள்ளதே. தற்காலம்வரை நிலைத்துள்ள சிறந்த பாடல்கள் பின்வரும் யுகங்களில் ஜீவதசையிலிருந்து நம்முடைய பின்சந்ததியார்களை இன்புறுத்தும் என்பதும் ஒரு தலையாகத் துணியக் கூடாததே. ஆனால் இலக்கியம் என்பது பெருக்கெடுத்து ஓடும் பேராறு போன்றது. இரண்டு வகையாக அது தூய்மை அடைகிறது: சேறு, குப்பை முதலியன எல்லாம் அடியிலே தாழ்ந்து விடுகின்றன; மற்றை அழுக்குக்கள் எல்லாம் மேலே மிதந்து எளிதில் அகன்றுவிடுகின்றன. இவ்வகையாக மலினங்கள் எல்லாம் ஒழிந்து தூயனவா யுள்ளனவே இலக்கியம் என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுவன

இலக்கியங்கள் தூய்மை அடைதல்

*Grierson : Linguistic Survey of India, Vol. IV., p. 301 et seq.

வாம். தூய இலக்கியத்திலே இரண்டு இயல்புகள் காணப்படுகின்றன. இந்த இரண்டு இயல்புகளையும் இலக்கியத்தின் சிறப்பு அறிதற்கு அளவு-கருவிகளாகவும், நிலைபேறு தெரிதற்கு உரிய உரைகல்லாகவும் நாம் கொள்ளலாம்.

அளவு கருவி: உலகுப் பொதுமை

முதலாவது அளவு-கருவி என நாம் கூறத்தக்கது இலக்கியத்தின் உலகுப் பொதுமை அல்லது அகிலத்துவம் (universality), அதாவது மக்கள்-இனத்துள் பெரும் பாலர்க்குப் பொதுவாயுள்ள ஆவல்களுக்கு இடமளிப்பதாயும், எளியவான அடிப்படை உணர்ச்சிகளுக்குப் பற்றுக்கோடாயும் இலக்கியம் அமைதல் வேண்டும். காலதேச உபாதிகளைக் கடந்த இயல்புகள் பலவும் இலக்கியப் பொருளில் காணுதல் வேண்டும். வடமொழி இலக்கியம், கிரேக்க இலக்கியம், லத்தீன் இலக்கியம் எனவும், ஜெர்மானிய இலக்கியம், ஆங்கில இலக்கியம் எனவும், பலபடியாக நாம் பிரித்து உணர்கிறோம். ஒவ்வொன்றிற்கும் ஒரு சில சிறப்பு-இயல்புகளும் காணப்படுகின்றன. எனினும், உயர்தர இலக்கியம் ஜாதிமத பேதங்களால் கட்டுப்பட்டு நிற்பதன்று; மனிதவர்க்கம் அனைத்திற்கும் அது பொதுவாக உள்ளதே. மக்கட் பொதுவிற்கு இயற்கையாயுள்ள அடிப்படை உணர்ச்சிகளையும், உள்ளக் கிளர்ச்சிகளையுமே அது முக்கியமாக விரித் துணர்த்துவது. விருப்பு வெறுப்பு, இன்ப துன்பம், பயபக்தி: இவைகள் மக்கள் இயல்பில் தலைமையாயுள்ளன. இவற்றை எத்துணை அளவாக இலக்கியம் காட்டுகிறதோ அத்துணை அளவாக மனித இனங்களில் ஒவ்வோர் இனத்தைச் சார்ந்தவனிடத்தும் இலக்கியம் எதிர் உணர்ச்சியை எழுப்பவல்லதாகிறது. தந்தையாயுள்ள ஒவ்வொருவனும் தசரதனது சோகத்தின் அளவை உணர்ந்து வருந்துவான். எங்கெல்லாம் மக்கள் வீர வாழ்க்கையைப் போற்றுகிறார்களோ, அங்கெல்லாம் வியாசர், வான்மீகி, கம்பர் இவர்களது ஒப்புயர்வற்ற கவித்துவப்பெருஞ்சிறப்புப் பக்தியுடன் கொண்டாடப் படும். தீமையே பெருகியிருக்கும் நிலையைக் குறித்து எங்

கெல்லாம் மனிதன் சிந்திக்கிருனே, அங்கெல்லாம் புத்த பகவானது அருள்-மொழிகள் போற்றப்படுவனவாகும். குழந்தைகள்மீது அன்பு சுரக்கும் மக்கள் வாழ்கின்ற இடங்களிலெல்லாம், சந்திரமதியின் புலம்பல் எதிரொலி எழுப்பவல்லதாகும். இவைகள் எல்லாம் உலகுப் பொது மையாயுள்ள ஆசாபாசங்களைக் குறித்து எழும் பாடல் களே நிலைபேறு உடையனவாயிருக்கும் என்பதற்குத் தக்க உதாரணங்களாம்.

இரண்டாவது அளவு-கருவி எனக் கூறத்தக்கது ஆசிரியனது ஆன்மாவிற்கே தனித்து உரிய ஒரு சிறப்பு—இயல்பு ஆகும். இதனை அவனது 'இலக்கிய நடை' என்று கூறலாம். தற்குறிப்பேற்றம், உயர்வு நவிற்சி முதலிய அணிகளும், எதுகை மோனை முதலிய நயங் களும் நடை என்று நினைப்பது தவறு. இங்ஙனமே கருத்தைச் செவ்விதாக வெளிப்படுத்தும் சொல்லமைப்பு வகைதான் நடை என்பதும் தவருகும். இவையெல்லாம் மேலெழுந்த வாரியாகப் பார்த்து எளிதிற் கொண்ட சிறு முடிபுகள் ஆகும். ஆழ்ந்து சிந்தித்தால், ஆசிரியனது ஆன்ம குணங்கள் அவன் இலக்கிய நடையிலே, அவன் அறியாமலே, விளங்குகின்றன என்றே நாம் கூறவேண்டும். எனவே ஆசிரிய னுக்கும் அவன் கையாளும் நடைக்கும் வேறுபாடு இல்லை. இதனுலேயே 'நடை தான் ஆசிரியன்' என்று ஒரு பிரெஞ்சு ஆசிரியர் கூறினர். ஓர் உவமானம் இதனை நன்கு விளக்கவல்லது. ஆசிரியன் ஒரு கண்ணுடி போன்றவன். கண்ணுடி தன்னை அடுத் துள்ள பொருள்களை எல்லாம் பிரதிபலித்துக் காட்டு மாறு போல, ஆசிரியனும் உலகத்துள்ள மக்கட் பன் மையின் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் பிரதி பலித்துக் காட்டுகிருன். இங்ஙனம் காட்டும் ஆசிரிய னது ஆன்மாவே இலக்கிய நடையின் மூலம் என்று சொல்லத்தக்கது. நிறமற்ற கண்ணுடியே இல்லை; அதன் நிறத்தை அது புலப்படுத்தும் உருவத்திற்கும் நன்கு ஊட்டி விடுகிறது. இதுபோலவே ஆசிரியனது இயற்கை யான ஆன்ம குணமும், அவன் அறியாதே, அவன் புலப்

இலக்கிய நடை

படுத்தும் வாழ்க்கை - நிலையிலும் படிந்து விடுகிறது. தனது ஆன்ம குணம் படியாதபடி, எந்த ஆசிரியனும் வாழ்க்கை - நிலையை வெளியிட இயலாது. இந்த ஆன்ம குணமே இலக்கியத்தின் நடையாகப் பரிணமிக்கிறது.

மேற்கூறிய இரண்டில், அகிலத்துவம் ஆசிரியனுக்குப் புறத்தேயுள்ள பொருள்பற்றியது; இலக்கிய நடை அவனது அகத்தேயுள்ள குணம் பற்றியது. ஒன்று உலகுப் பொதுமையாக உள்ளது; பிறிதொன்று ஆசிரியனது தனிப் பண்பாக உள்ளது. மனித வர்க்கத்தினரின் ஆழ்ந்த கருத்துக்களும் உணர்ச்சிகளும் முந்தியதில் அமைகின்றன; பிந்தியதில், அக்கருத்துக்கள் முதலியவற்றிற்குத் த்ன்நிறத்தை ஊட்டிப் புலப்படுத்துகின்ற ஆசிரியனது வாழ்க்கையும் அனுபவமும் நிரம்பி அமைந்து விடுகின்றன.

இலக்கியங்களைக் கற்பதிலே நமக்கு ஒரு தனி இன்பம் விளைகின்றது என்று முன்பே கூறப்பட்டது. நாம் ஒரு புது உலகிலே புகுகிறோம்; நமது பாவனு சக்தி அங்கே விரைந்து தொழிற்படுகின்றது. இதனால் விளையும் இன்பத்தைத் தவிர, வேறொரு முக்கியமான பயனும் இவ்வகைக் கல்வியால் நமக்கு உண்டாகிறது. மனித இயல்பை உள்ளவாறு உணர்வதுதான் அப்பயன். மனிதனுக்கு இரண்டு தனிப்பட்ட பண்புகள் உள்ளன. ஒன்று வெளிப்படையாக உள்ளது; பிறிதொன்று உள்ளிடமாக இருப்பது. அவன் செய்கைகளைச் செய்யும் கர்த்தாவாய் இருப்பது மட்டுமின்றி, கனவு காணும் கனவாளனுகவும் இருக்கிறுன். ஆதலால், அவன் எவ்வகைப் பருவத்தினனுயினும், அவனை அறிந்து கொள்வதற்கு அவனுடைய வெளி வரலாற்றைமட்டும் உணர்வது போதியது அன்று; இன்னும் ஆழ்ந்துசென்று அவனை நோக்குதல் வேண்டும். வெளி வரலாறு அவனுடைய செய்கைகளையும் அவன் பலருக்குத் தெரியும்படியாக ஒழுகுகின்ற ஒழுக்கங்களையும் பெரும்பாலும் உணர்த்துகிறது. ஆனுல் ஒவ்வொரு பெருஞ்செயலும் ஒவ்வொரு நோக்கம்பற்றி, லட்சியம்பற்றி, எழுகின்றது.

இலக்கியக் கல்வி

இந் நோக்கத்தையும் லட்சியத்தையும் உணர்வதற்கு, அவனுக்கு உரிய இலக்கியத்தைக் கற்றல் வேண்டும். ஏனென்றால், அந்த இலக்கியத்தில்தான் அவனது லட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும். உதாரணமாக, நமது தமிழ் மக்களுடைய பூர்வ சரித்திரத்தை எடுத்துக் கொள்வோம். அவர்கள் முற்காலத்தில் சிறந்த போர்வீரர்களாக இருந்தார்கள். உண்டு, உடுத்து, மகிழ்ந்து, உலகப்பற்று மிக்கவர்களாய் இருந்தார்கள். அவர்கள் வாழ்ந்துவந்த மனையைப் பற்றியும் அவர்களுடைய பழக்க வழக்கங்கள் பற்றியும் சிறிது அறிவோம். இவைகள் எல்லாம் நமக்கு மிக்க சுவையுள்ள செய்திகள். ஆனால், நமது மூதாதையர்களான அவர்களைக் குறித்து நாம் எதை அறிய முக்கியமாக விரும்புகிறோமோ அது தெரிதற்கு அரிதாயுள்ளது. அவர்கள் யாது செய்து வந்தார்கள் என்பதை அறிவதோடு நாம் திருப்தியடைய முடியாது. அவர்கள் என்ன நினைத்தார்கள்? என்ன உணர்ச்சிகள் அவர்களை இயக்கி வந்தன? அவர்கள் வாழ்தல், சாதல் என்பனவற்றை என்ன உளப்பான்மையோடு நோக்கினார்கள்? எவற்றின்மீது அன்பு கொண்டிருந்தார்கள்? எவற்றினிடம் பயங்கொண்டிருந்தார்கள்? தெய்வப் பிறப்பிலும் மக்கட் பிறப்பிலும் எவ்வகையாயுள்ள குணங்களை அவர்கள் பாராட்டி வந்தார்கள்? இவற்றை எல்லாம் அறிய விரும்புகிறோம். இவ்வகை அறிவிற்கு வெளிவரலாறு பயன்படுவது அன்று. அவர்கள் இயற்றியுள்ள இலக்கியமே தக்க கருவியாயுள்ளது. அவ்வற்றைக் கற்றவுடன் இப்பொருள்களை எல்லாம் நாம் உணருகிறோம்.

வாழ்க்கையைப் புலப்படுத்துவது இலக்கியம்

உடல் உரமும் மன உரமும் பெற்ற நமது மூதாதையர்கள் கேவலம் போர் வீரர்களாகமட்டும் வாழ்ந்து மடியவில்லை. அவர்களும் மனித இயற்கை படைத்தவர்களே. அவர்களுடைய உணர்ச்சிகள் அவர்கள் பின்வழியினரான நமது ஆன்மாவிலும் உணர்ச்சியை எழுப்புகின்றன. அவர்களை மகிழ்வித்து வந்த பாணர்களுடைய சொற்களிலே நாமும் ஈடுபடுகிறோம்: நமது ஆன்மாவும் ஓர் அதிர்ச்சி எய்துகிறது. அவர்களுடைய இல்லொழுக்கத்

தின் சிறப்பைக் கண்டு, நமது மனமும் அன்பு கொள்ளுகிறது. அவர்கள் தங்கள் தலைவர்கள்மீது கொண்டுள்ள மாருத பக்தியைக் கண்டு, நாமும் தேசபக்தி மீதூரப் பெறுகிறோம். போர்க்களத்தில் அவர்கள் அருஞ்செயல் புரிந்து உயிர் நீத்த பின்பு, அவர்களுக்குக் கல் நட்டுப் பெயரெழுதி அவர்களை வணங்கினர் என்று தெரிந்து நாமும் இதுபோன்ற புகழை எய்துதற்கு அவாவுறுகிறோம். தூய பெண்மையைக் கண்டு வணங்கிப் போற்றுகிறோம். சீதையை அலங்கரித்து அரசவை முன் அழைத்து வந்த பொழுது அங்குள்ளார் பலரும் அவளைத் தெய்வம் எனக்கருதித் தலைமீது கைகூப்பி வணங்கினர் என்று கம்பர் கூறுகின்றார்.

> நைவளம் நவிற்றுமொழி நண்ணவர லோடும்
> வையம் நுகர் கொற்றவனும் மாதவரும்
> அல்லார்
> கைகள்தலை புக்கன கருத்துளதும் எல்லாம்
> தெய்வமென உற்ற உடல் சிந்தைவசம்
> அன்றே
>
> (கம்ப. கோலங்காண். 43)

இச் செய்யுளின் பொருள் நமது கருத்திலும் தோய்ந்து அதனைப் பண்படுத்துகிறது. நமது முன்னோர்களுடைய துக்கங்களையும் அவர்கள் வாழ்விலுள்ள இடர்ப்பாடுகளையும் நாம் கண்டு வருந்துகிறோம். அவர்களைப் போலவே நாமும் அனைத்துயிர்க்கும் தந்தையாகிய, இறைவனது அருளை நம்பி வணக்கமும் சிறிது இறுமாப்பும் கொண்டவர்கள் ஆகின்றோம். இவைகளும் இவைகளைப் போன்ற பல உணர்ச்சி வகைகளும், காலத்தால் கவரப்படாது எஞ்சி நின்ற சில அழகிய செய்யுட்களை நாம் கற்கும்போது, நம் ஆன்மாவினூடே எளிதிற் புகுந்து உலவி, அதனை நம் மூதாதையர்களது லட்சிய வாழ்க்கையோடு ஒத்திசைக்கச் செய்கின்றன.

இவ்வண்ணமாகவே உள்ளன ஒவ்வொரு நாட்டினரது இலக்கியங்களும். அவைகளை உணர்வதற்கு, அவர்கள் செயல்களை வெளியிடும் சரித்திரங்களைக் கற்ப

தோடு அமையாது, அச்செயல்கள் முற்றுதற்குக் காரண மாயிருந்த லட்சியக்கனவுகளை வெளியிடும் அவர்களது இலக்கியங்களையும் கற்பது அவசியமாகும். இதுபற்றியே அரிஸ்டாட்டில் என்ற கிரேக்க ஆசிரியர் 'சரித்திரத்தைக் காட்டிலும் கவிதை அதிகக் கௌரவம் வாய்ந்தது; மிகுதி யான தத்துவ-உண்மைகளையும் கொண்டது' என்று கூறினர். ஜெர்மானிய மகாகவி கெய்த்தே 'உலக முழு வதையும் மக்கட் பண்பினதாகச் செய்வதே இலக்கியம் ஆவது' என்று உணர்த்தினர்.

பெரும்பாலார் இலக்கியம், மற்றைக் கலைகளை ஒப்பப் பாவனு சக்தியின் லீலையே என்றும், ஒரு புதிய நவீனத் தைப் போல இன்புறுத்துகிறது என்றும், அனுபவ நிலையில் பயன்தரத்தக்கதன்று என்றும் கருதுகின்றனர். இது மிக்க விநோதமே. இதனைக் காட்டிலும் உண்மை யின் வழுவியது பிறிது ஒன்றும் இல்லை. ஒரு நாட்டி னரின் லட்சியங்களை இலக்கியமே போற்றிப் பாதுகாத்து வழங்கி வருகிறது. காதல், நம்பிக்கை, கடமை, நட்பு, சுதந்திரம், பக்தி முதலியனபற்றி லட்சியங்கள் சில கைக்கொள்ளப்படும். இவ்வகை லட்சியம் மனித வாழ் வின் தனிப்பட்ட ஒரு சிறந்த கூறு என்று சொல்லத் தகுவது; பாதுகாத்துப் பிற சந்ததியாருக்கு வழங்கப் படுமவற்றுள் இதனினும் சிறந்தது காணுதல் அரிது. கிரேக்கர்கள் மிகவும் வியத்தற்கு உரிய மக்கட் பிரிவினர் என்று கருதப்படுகிறுர்கள். எனினும், அவர்கள் அருமையாகத் தந்தவற்று ளெல்லாம், ஒரு சில லட்சியங்களையே தற்காலத்தார் பெரிதும் போற்றுகின்ற னர். இந்த லட்சியங்கள் அழகுபற்றியன வும் உண்மை பற்றியனவும் ஆம். அழகு பற்றியன அழிவு எய்துந் தன்மையுள்ள கற்களின் மூல மாய்ப் புலனுகின்றன. உண்மை பற்றிய லட்சியங்கள் அழிவில்லாத இலக்கியங்களின் மூலமாய்ப் புலனுகின் றன. கிரேக்கர், எபிரேயர், ரொமானியர் இன்னோரது லட்சியங்களே அவ்வவர்களது இலக்கியங்களில் பாது காக்கப்பட்டு வந்து, அவர்களது பெருஞ் சிறப்புக்குக்

ஆன்ம லட்சியங்களை வெளியிடுவது இலக்கியம்

காரணமாயிருந்தன; பிற்பட்ட தலைமுறை மக்களுக்கு மதிப்பரிய செல்வமாய் முடிந்தன. தமிழ் மக்களது லட்சியங்களும் இங்ஙனமே அவர்களது இலக்கியங்களிலே அமைந்துள்ளன. ஆனால், இந்த லட்சியங்கள் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றிப் பாரத மக்கள் அனைவர்க்கும் பொதுவானவை. எனவே, இவைகள் பாரதப் பொது மொழியாகிய வடமொழியிலும் அதன் வழிப்பட்ட பிறமொழிகளிலும் காணப்படுகின்றன. பாரத மக்கள் அனைவரும் பல்வேறு தொகுதியினராய் ஆதியில் இருந்த போதினும், ஒரு குடும்பத்தினராகப் பிற்காலத்தில் ஒற்றுமைப் பட்டுவிட்டனர் என்பது மேற்கூறியதிலிருந்து விளங்கும். தற்காலத்தில் அஹிம்ஸா தர்மத்தைப் பெரியதொரு லட்சியமாகக் காந்தியடிகள் மேற்கொண்டு நம் மக்கள் அனைவரும் அதனைக் கைக்கொள்ளுதல் வேண்டும் என்று கூறி வருகிறார். இந்தத் தர்மம் இன்று நேற்றுப் பிறந்தது அன்று; பூர்விகத் தமிழ் மக்கள் மேற்கொண்டதே யாகும். பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், சிறப்பாகத் திருக்குறள் போன்ற அரிய நூல்களிலும், 'இன்னா செய்யாமை என்ற பெயரால் வற்புறுத்திக் கூறப்பட்டதே யாகும் இந்த அஹிம்ஸா லட்சியம். இது நம்மையும் பாரத தேசத்துப் பிற மக்களையும் இயக்கிவந்த லட்சியமாகும். இன்றளவும் இது அழியாமல் இருப்பதற்கு ஒரு காரணம் நமது பழைய இலக்கியங்களிலே அமைந்து நின்று இது பாதுகாக்கப்பட்டுள்ளமையே, லட்சியமே மக்கள் வாழ்விற்குப் பெருந்துணையாக நிற்பது. இதனைத் தெளிவுறுத்தும் இலக்கியங்கள் எப்பொழுதும் போற்றத்தக்கன. சுருங்கக் கூறின் நமது நாகரிகம், நமது அபிவிருத்தி, நமது இல்லொழுக்கம், நமது சமயநெறி முதலிய எல்லாம் இந்த லட்சியங்களையே மிகத் திண்ணிதான அடிப்படையாகக் கொண்டுள்ளன. நில்லாமை சால நிலை பெற்ற இவ்வுலகத்தில் நீடித்து நிலைத்து நிற்பது லட்சியம் ஒன்றுதான். ஆதலால், தலைமுறை தலைமுறையாக இதனை வழங்கி வருகிற இலக்கியங்களின் பெருமையை அளவிட்டுக் கூற முடியாது. மக்கள், நகரங்கள், அரசியல்கள், நாகரிகங்கள் முதலிய எல்லாம் மறைந்துவிடலாம்; ஆனால்

லட்சியங்கள் என்றும் அழியமாட்டா. ஒரு முகம்மதிய னுடைய செயல் ஒன்றை இங்கே ஞாபகப்படுத்தலாம். அவனுக்கு எழுத்து வாசனை சிறிதும் கிடையாது; ஆகவே, எழுதியது ஒன்றையும் வாசிக்க அவனுக்கு இயலாது. ஆனால், தெய்வபக்தி நிறைந்தவன். அல்லா என்ற திரு நாமத்தின் பெருமையை நன்கு அறிந்தவன். எழுத்துக் கள் அடங்கிய கடிதத் துண்டுகளை எங்கே கண்டாலும் அவன் பொறுக்கித் திரட்டி வைத்துக்கொள்வது வழக் கம். ஏனெனில், அவைகளில் எதிலேனும் அல்லாவின் நாமம் இருத்தல் கூடும் அல்லவா? இவன் கருதிச் செய் தது போலவே, நாமும் செய்தல் வேண்டும். உலகத்தி லுள்ள பலவகைப்பட்ட இலக்கியங்களிலும், மேற்பார் வைக்கு எதிர்ப்படாமல், ஏதாவது லட்சியம் மறைந்து கிடக்கக்கூடும். ஆதலால், இலக்கியங்கள் எல்லாம், எவ் வகையவா யிருப்பினும், நம்மால் அருமையாகப் பாது காத்துப் போற்றப்பட வேண்டியனவே ஆகும்.

மேற் கூறியவற்றால் இலக்கியத்தின் தன்மையை நாம் ஒருவாறு உணரலாம். இலக்கியம் உண்மையும் அழ கும் நிரம்பிய சொற்களால் வாழ்க்கையைப் புலப்படுத்து கிறது; அது மனிதனது ஆன்மாவையும், அவன் கருத் துக்கள் உணர்ச்சிகள் தலை நோக்கங்கள் முதலியவற்றை யும், சொல்-வடிவிலே காட்டும் குறிப்பாகும்; ஆன்மாவின் உண்மைச் சரித்திரமாக உள்ளது அதுவே; அதன் சிறப்பு-இயல்புகள் கலையழகும், குறிப்பாற்றலும், நிலை பேற்றுப் பண்புகளும் ஆகும். அதன் அளவு-கருவிகள் அதனுடைய அகிலத்துவமும், அதன் தனிப்பட்ட நடை அமைப்பும் ஆகும். அதன் பயனாவது நம்மை இன்புறுத்தலே அன்றி, மனிதனின் உண்மை இயல்பை அறிவுறுத்தலும் ஆகும். அதாவது, மனிதனுடைய செயல்களைக் காட்டிலும் அவனது ஆன்ம இயல்பினை உணர்த்துவதுதான் அதற்குச் சிறந்த பயன் எனக் கொள்ளுதல் வேண்டும். நமது நாகரிகம் அனைத்திற்கும் அடிப்படையாயுள்ள லட்சியங்களை மானிட சமுதாயத் திற்குப் பாதுகாத்து வழங்குதலினாலே, நம்மால் விரும்பிக் கற்கத் தகுவனவற்றுள், அது தலைசிறந்த தொன்றாகும்.

2

இலக்கியத்தின் பயன்

நமது பண்டை நூல்களிலே 'அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே' என்று கூறப்பட்டுள்ளது. இவை புருஷார்த்தங்கள் என்றும் உறுதிப் பொருள்கள் என்றும் சொல்லப்படும். அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ ஒருவன் அடைவதற்கு உதவுவதுதான் நூலின் பயன் என்பது இதன் கருத்து. திருவள்ளுவர்,

பண்டை நூல்களின் கருத்து

> கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின்

என்று கூறினார். நூல் கற்பதனால் உண்டாக வேண்டும் பெரும்பயன் இறைவனைத் தொழுவதுதான் என்பது இவரது கருத்தாகும். இத்தகையவாய கருத்துக்களைத் தற்காலத்து அறிஞர்கள் ஒப்புக் கொள்வார்களா?

டாக்டர் ஜான்ஸன் என்ற ஆங்கில விற்பன்னர் வாழ்க்கை இன்பத்தை நுகர்வதற்கும் வாழ்க்கைத் துன்பத்தைப் பொறுத்தற்கும் நமக்குக் கற்பிப்பதே இலக்கியம் என்றனர். 'வாழ்க்கை இன்பங்கள் வேண்டும், வேண்டும்' என மக்களில் ஒரு சாரார் முறையிடுகின்றனர். மற்றொரு சாரார், 'வாழ்க்கைத் துன்பங்கள் பொறுக்க முடியவில்லையே! எவ்வாறு பொறுப்பது!' என வருந்தி ஓலமிடுகின்றனர். இன்பங்கள் அடையுந்தோறும் மேன்மேலும் அவை வேண்டும் என்ற அவா

டாக்டர் ஜான்ஸன் கருத்து

மேலிடுகிறது. துன்பங்களுக்கு ஒரு முடிவில்லை என்றும் தோன்றுகிறது. இவ் இரண்டினுள் இன்பத்தை நெறிப்படுத்தி அளவிட்டு அனுபவிப்பதற்கும், துன்பத்தை மனவலிமை கொண்டு பொறுப்பதற்கும் கற்பிக்கும் நூல் சிறந்த இலக்கியமாவதற்குத் தடையே இல்லை. இக்கருத்துத் தற்காலத்தாருக்கு மிக ஒத்ததாக இருக்கும் என்றே தோன்றுகிறது.

ஆனால், மக்கள் மனவலிமையை இடைவிடாது பரிசோதித்துக் கொண்டிருக்கும் இன்ப துன்பங்களில் இலக்கியம் எவ்வாறு உதவுதல் கூடும்? இக்கேள்விக்கு விடை எளிதன்று. ஒரு வழியை இங்கே கூறலாம்.

இலக்கியம் உதவும் முறை

இன்பநுகர்ச்சிக்கு ஆதாரமாயிருப்பது தன்மறதி ஆகும். தன்னை மறந்தால்தான் இன்பத்தில் ஆழ்ந்து நின்று அதனை முற்ற நுகர்தல் கூடும். துன்பப் பொறுதிக்கும் தன்மறதி இன்றியமையாததே. தன்னை மறந்த இடத்துத் துன்பம் பாதிக்கமாட்டாது. ஆதலால், இலக்கிய ஆசிரியன் வாசகர்களிடத்தில் தன்மறதியை உண்டாக்க வேண்டும். அவர்களுக்கு 'நான்' என்ற உணர்ச்சி தாற்காலிகமாக அறவே இல்லாது ஒழித்தல் வேண்டும். இவ்வாறு செய்ய வல்லவன்தான் சிறந்த இலக்கிய ஆசிரியனாவான்.

நவீனகமும் இலக்கியமே

இதற்கு எளிதான ஒரு வழி உண்டு. ஆசிரியன் பல மக்களைத் தன் இலக்கியத்தில் சிருஷ்டித்து விடுதலே இவ்வழி. ஒரு நவீனகத்தை (**Novel**) எடுத்துக் கொள்ளுவோம். இதில் பல பாத்திரங்கள் வருகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைகளும் இன்பங்களும் துன்பங்களும் விரிவாக கூறப்படுகின்றன. அவர்களுடைய செய்கைகளிலே ஈடுபட்டு வாசகன் தனது மனத்தைப் பறிகொடுத்துவிடுகிறான். தன்னை அறவே மறந்துவிடுகிறான். இம்மறதியால் அவனுக்கு முடிவில் இன்பம் விளைகிறது. நவீனங்களும் சிறந்த இலக்கியங்களில் ஒரு வகையே.

'நவீனகங்களால் அறிவு வளர்ச்சி யாதும் ஏற்படுவதில்லையே! அறிவு வளர்ச்சிக்கு உதவாத நூலை இலக்

கியம் என்று கூறலாமா?' என்று சிலர் கேட்கலாம். நவீனகமும் அறிவு வளர்ச்சிக்கு உதவுவதேயாகும். இது வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் ஒரு பெரிய கண்ணுடி போன்றது. பிறவகை இலக்கியங்களைக் காட்டிலும் இது மிகவும் அகன்ற பொருட்காட்சியைத் தெரிவிக்க வல்லது. இதன் தன்மை பல திறப்படும். கதைக் கூற்றின் நயத்தில் சில நவீனகங்கள் சிறந்து விளங்கலாம். வழக்க—ஒழுக்கங்களின் சித்திரங்களாகச் சில அமையலாம். மக்களது குண விசேஷங்களின் காட்சியாகச் சில விளங்கலாம். வாழ்க்கைத் தத்துவங்களை உபதேசித்தற்கு உரிய கருவியாகச் சில பயன்படலாம். இங்ஙனமாக அன்றி, நவீனகத்தின் ஆசிரியனது ஆன்ம இயல்பை அறிந்துகொள்ள வேண்டும் என்ற பேரவாவை முற்றுவித்தற்கும் இவ்வகை இலக்கியம் உதவலாம். அறிவை வளர்த்து, இன்பத்தைப் பெருக்குதற்கு மேற்கூறியன போதியவை அல்லவா? ஆகவே துன்பத்தைப் போக்கி இன்பத்தை மிகுவிப்பதுதான் இலக்கியத்தின் பயன் என்பது இதனுல் விளங்கும்.

சமையற்காரன், போர்வீரன், இலக்கிய ஆசிரியன் இம்மூவரும் ஒரு வகையால் ஒப்புமையுடையவர்கள்.

இலக்கிய ஆசிரியன்

சமையற்காரன் காய்கறி பதார்த்தங்களைத் திருத்துகிருன். பல்வேறு வகையாகப் பக்குவங்கள் செய்கிருன். இவன் திருத்தும் முறையும் பக்குவம் செய்யும் முறையும் நாம் விசாரிக்க வேண்டிய அவசியமில்லை. சமையல் அறைக்குள் போகவேண்டியதில்லை. அவன் சமையல் நன்ருயிருக்கிறது என்ற முடிபு தான் நமக்கு வேண்டியது. போர்வீரன் ஆயுதம் கவசம் முதலியன தரித்துச் சன்னத்தனுகுதலும், போர்க்குச் செல்லுதலும், பல்வேறு முறையில் சண்டை புரிதலும் நாம் நுணுகித் தெரிந்து கொள்ளவேண்டும் விஷயங்கள் அல்ல. போர்க்களத்துக்குப் போக வேண்டியதில்லை. போரில் அவன் வெற்றி கொண்டான் என்ற முடிவே நமக்கு வேண்டுவது. இவர்களைப்போலவே ஆசிரியன் கையாளும் முறையும் அவ்னது கட்டுக்கோப்பு முதலியனவும் வாசகர்கள் சாதா

ரணமாகத் தெரியவேண்டும் விஷயங்கள் அல்ல. அவன் இயற்றிய நூல் வாசகர்களுக்கு இன்பம் விளைக்கிறதா என்ற கேள்வியே முக்கியம்.

இலக்கியத்தின் பயன்

ஓர் ஆசிரியனது நூலைக் கற்கவேண்டும் என்ற கட்டுப்பாடு ஒருவருக்கும் இல்லை. ஒவ்வொருவரையும் கற்கும் படியாகத் தூண்டவேண்டிய அம்சங்கள் ஆசிரியனது நூலில் அமைந்திருத்தல் வேண்டும். ஆசிரியன் இதை மறக்கலாகாது. மக்களை இன்புறுத்துவதே இலக்கியத்தின் பயனாகும்.

3

இலக்கியத்தின் முதல் தோற்றம்

முதல் இலக்கியத்தின தன்மை

மக்களின் சரிதத்தில் முதன் முதல் தோன்றிய இலக்கியம் எவ்வகைத்தா யிருந்தது? இக்கேள்வியே இங்கே பரிசீலனை செய்ய எடுத்துக்கொண்டது. எவ்வாறு இலக்கியம் தோன்றிற்று என்ற கேள்வி மேலைக் கேள்வியோடு நெருங்கிய தொடர்பு உடையது; ஆனால் அது முற்றிலும் வேறுபட்டதாகும். இலக்கியம் எவ்வகைத்து என்பதில் அதன் தன்மையையும் அது தோன்றிய நிலைமையையும் நாம் மனத்திற் கருதுகிறோம். இங்கே நமக்கு உதவும் கருவிகளுள் முக்கியமானவை மனித

வர்க்க நூல் (ethnology), சமுதாய நூல் (sociology), இலக்கிய வரலாற்று நூல் (history of literature) ஆகிய மூன்றுமேயாம். உள நூல் (psychology) அடுத்தபடியாகப் பயன்படலாம். எவ்வாறு தோன்றியது என்ற கேள்வியில், தோன்றியதன் காரணத்தை நாம் மனத்திற் கருதுகிறோம். இங்கே நமக்கு உதவும் கருவிகளுள் முக்கியமானது உள நூலே யாகும். இவ் வேறுபாட்டை நாம் நன்குணர்தல் வேண்டும்.

முதன்முதல் தோன்றிய இலக்கியம் எவ்வகைத்து என்பதை இனி நாம் ஆராயப் புகுவோம். இவ் ஆராய்ச்சியில் முதற்படியாக உள்ள ஓர் எளிய உண்மையை நாம் உணர்ந்து கொண்டோமானால், அது பெரிதும் அனுகூலமாயிருக்கும். உலகத்துள்ள இலக்கியங்களில் உரைநடையில் உள்ளவை காலத்தாற் பிற்பட்டவை; செய்யுளில் இயன்றவை காலத்தால் முற்பட்டவை. எகிப்து மொழியிலுள்ள ஆதி நூல்களுக்கு முந்திய இலக்கியம் உலகத்துள்ள எம்மொழியிலும் இல்லை; இவற்றுள் சில செய்யுள் வடிவில் உள்ளன. நமது தமிழ் மொழியிலும் இப்போது அகப்படும் இலக்கியங்கள் எல்லாவற்றுள்ளும் மிக முந்தியது செய்யுளால் இயன்றதே. நமது பண்டைத் தொகை நூல்கள் இதற்குச் சான்று பகரும்.

முதல் தோன்றியது செய்யுள்

தொல்காப்பியத்தில் செய்யுளியற் சூத்திரங்களில் (செய். 173-5) உரைநடை கூறப்பட்டுள்ளதே என்று சிலர் வினவலாம். நான்கு வகை உரைநடைகள் உள்ளன :

பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருள்மர பில்லாப் பொய்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும் என்று
உரைவகை நடையே நான்கென மொழிப.

இவற்றுள் முதலாவது பாட்டிடை வைத்த குறிப்பினால் வருவது. இஃதொழிய மற்றை மூன்றுமே உரைநடை என்று இளம்பூரணர் கருதினர்; பேராசிரியர் மாறு

பட்டு உரைத்தார். சூத்திரத்தின் பொருளோ கருகலா யுள்ளது. எங்ஙனமாயினும் நூல்வழக்குப் பயின்று முதிர்ந்த காலத்தேயுள்ள உடைநடையையே இச்சூத்திரங் கள் உணர்த்துகின்றன. ஆகவே செய்யுள், உரைநடை என்பனவற்றுள் எது முற்பட்டதென நிறுவுதற்குத் தொல்காப்பியம் ஒரு சான்ருக உதவுதலில்லை. ஆங்கில மொழியிலும் செய்யுளே (**Beowulf**) முற்பட்டது. பிற மொழிகளிலும் இங்ஙனமே ஆதல் காணலாம்.

செய்யுள்-வழக்கைப் பின்பற்றியது ஆதி உரைநடை

இங்கே கூறிய கொள்கையை வலியுறுத்தும் சான்று கள் பல உள்ளன. இவற்றுள் ஒரு சில விஞ்ஞான சாஸ் திர முடிபுகளைப் பின்பற்றியன. இவை களை விடுத்து, எளிமையாயுள்ள இரண்டு சான்றுகளைத் தருகிறேன். முதலில் இப் போது அகப்படும் உரைநடையில் மிகப் பழமையானதை எடுத்துக்கொள்வோம். உதாரணமாக, நக்கீரர் இயற்றியதாகக் கூறப்படும் களவியல் உரையை நோக்குவோம். காதலால், 'கார் மருங் கின் மின்னுப்போலவும் நீர் மருங்கிற் கொடி போலவும் தளிரும் முறியுந் தந்து குளிரும் நளிருங் கவினியெழா நின்றதோர் கவின்பெறு கொடிப்போலுங் காரிகை கண்ணுடி மண்டிலத்து ஊதாவி போலக் காணக் காண ஒளி மழுங்கிக் கனல் முன்னிட்ட மெழுகுபாவை போல மனமுருகிப் பசந்து காட்டினுள்' (பவா. 52-3) என்பது அதில் ஒரு வாக்கியம். இதில் செய்யுட்கே உரிய எதுகை மோனைகள் பயின்று வருகின்றன; ஒரு சில பகுதியைச் செய்யுளின் அடிகளாகவே அமைத்துவிடலாம்போலத் தோன்றுகிறது. இவ் உரை நடை செய்யுட்கு உரிய இயல்புகளைக் கையாளுகின்றது. அடிப்பட்ட செய்யுள் வழக்கைப் பின்பற்றி இவ்உரைநடை தோன்றியுள்ளது என்பதில் ஐயமில்லை. இங்ஙனமே பல மொழிகளிலும் உள்ள பண்டை உரைநடைகள் அமைந்துள்ளன. செய் யுளே முற்பட்டது என்பதை இச்சான்று நன்கு விளக்கு கிறது.

பிறிதொரு சான்றும் உரைநடையின் வரலாறு பற்றியதே. காலத்தால் முற்பட்டுச் செல்லச் செல்ல

செய்யுள், உரை நடை என்ற இரண்டற்கும் உரிய வேறுபாடு மங்கிக்கொண்டே வருகிறது; இறுதியில் வேறுபாடே இல்லாது செய்யுள் மாத்திரம் தனித்து நிற்கிறது. இதற்கு ஓர் உதாரணமாகச் சிலப்பதிகாரத்தில் வரும் உரைபெறு கட்டுரையை நாம் கூறலாம்: 'அது கேட்டு, கொங்கிளங் கோசர் தங்கணாட்டகத்து நங்கைக்கு, விழவொடு சாந்திசெய்ய, மழை தொழிலென்றும் மாறாதாயிற்று.' இங்கே வேறுபாடு சிறிது சிறிதாக மங்கி வருவதைக் காணலாம்.

உரைநடை வரலாறு: செய்யுள் மயக்கம்

உரை நடையின் வகைகளுள் ஒன்றாகிய 'பாட்டிடை வைத்த குறிப்பினானும்' என்பதற்கு உதாரணமாக,

கயலெழுதிய இமய நெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந் தண்பொழில் மன்னரோ(டு)
ஏவல் கேட்ப அரசாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலுள்
காலைமுரசியம்புமாகலின்
நெய்ம் முறை நமக் கின்றாகுமென
வையை தன் மகளைக் கூஉய்க்
கடை கயிறு மத்துங்கொண்(டு)
இடைமுது மகள் வந்துதோன்றுமன்

என்ற ஆய்ச்சியர் குரவைப் பகுதியை இளம்பூரணர் காட்டினர். இங்கே வேறுபாடு முற்றும் அழிந்து போயினமை காணலாம். இவ் உதாரணங்கள் இலக்கிய வரலாற்றில் மிகப் பிற்பட்டனவே யாயினும், இவற்றினுட் பொதிந்த உண்மை இலக்கியத்தின் தொடக்க நிலைக்கும் பொருந்துவதே ஆம். ஆகவே இவ்வரலாற்று முறையே நோக்கினும், உரைநடைக்கு முற்பட்டது செய்யுள் என்பது புலனா

பாட்டிடை வைத்த குறிப்பு

கும். மேலே சுட்டிய விஞ்ஞான நூற் சான்றுகள் இந்தத் துணிபை ஐயத்திற்கு இடனின்றித் தெளிவுறுத்துகின்றன. ஆனால் அந் நூல்களிற் பயிற்சி யுடையார்க்கே அவற்றை எளிதில் தெற்றென உணர இயலுமாதலின், அவற்றை இங்கே விவரிக்க முற்படவில்லை.

கவிதை வகை

இங்ஙனமாக, செய்யுளே முற்பட்டுத் தோன்றியது என்பதை ஒருவாறாக உணர்ந்தோம். செய்யுளும் பல வகைத்தாயுள்ளது. அவற்றுள் எவ் வகைச் செய்யுள் காலத்தால் முற்பட்டது என ஆராய்தல் வேண்டும். சில வகைகளை இங்கே தருகிறேன். பாரதியாரின் ஆரிய தரிசனத்தில் புத்தபகவானைப் பற்றிய செய்யுள்களைப் பார்ப்போம்:

கனவென்ன கனவே - என்றன்
கண் துயிலாது நனவினில் உற்ற (கன.)

குன்றத்தின் மீதே - அந்தக்
குன்றத்தின் மீதே - தனி
நின்றதோர் ஆலநெடு மரம் கண்டேன் (கன)

பொன் மரத்தின் கீழ் - அந்தப்
பொன் மரத்தின் கீழ் - வெறுஞ்
சின்மய மானதோர் தேவன் இருந்தான் (கன)

புத்த பகவன் - எங்கள்
புத்த பகவன் - அவன்
சுத்த மெய்ஞ்ஞானச் சுடர்முகம்
கண்டேன் (கன)

காந்தியைப் பார்த்தேன் - அவன்
காந்தியைப் பார்த்தேன் - உப
சாந்தியில் மூழ்கித் ததும்பிக் குளித்தான் (கன)

தன் பொருட்டுக் கவிதை

இங்கே பாரதியார் கண்விழித்திருந்தும் நனவிற் கனவு காணுகிறார். அவரது உயரிய பாவனா சக்தி விரைந்து தொழிற்படுகிறது. அதியற்புதமான காட்சிகள் அவரது மனக்கண் முன்னே தோன்றுகின்றன. அவற்றுள் ஒன்று குன்றத்தின் மீதுள்ள ஆலமரத்தின் கீழாகப் புத்தபகவான் அறிவொளி வீசுந் திவ்ய மங்கள மூர்த்தியாய் வீற்றிருக்கும் காட்சி. இதனைத் தம் பாவனா சக்தியினால் உருப்பெறுவித்துத் தம் உணர்வினால் உணர்ந்து விம்மிதம் எய்துகின்றார். இச்செய்யுட் பகுதி பாரதியின் சுய சிருஷ்டியாகும். தம் பொருட்டாகவே, தாம் ஆனந்தம் அடைதற் பொருட்டே, இயற்றியதாகும்; பிறர் யாருக்கும் இக் கற்பனையுலகில் இடமில்லை. ஓர் ஆசிரியன் தன் ஆனந்தத்தின் பொருட்டு தன் கவித்வ முயற்சியால், தானே சிருஷ்டிக்கும் இக் கவிதை ஒரு வகை. இதனைத் **தன் பொருட்டுக் கவிதை** எனப் பெயரிடலாம்.

இனி, வேறோர் உதாரணம் காண்போம் :

பல்லவி

தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர் (தாயின்)

சரணம்

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் - அதன்
உச்சியின் மேல் வந்தே மாதரம் என்றே
பாங்கின் எழுதித் திகழும் - செய்ய
பட்டொளி வீசிப் பரந்தது பாரீர் (தாயின்)

இங்கே பாரதியார் தம் நாட்டு மக்களை நோக்கித்தாம் காணும் மணிக்கொடியினை அவர்களும் கண்டு களிகூர்ந்து இன்புறுமாறு அழைக்கின்றார். பிறர் உணர்ந்து இன்புறற் பொருட்டுப் பாடியதாதலின், இதனைப் **பிறர் பொருட்டுக் கவிதை** என்று பெயரிடலாம்.

பிறர் பொருட்டுக் கவிதை

மற்றும் ஒரு வகையை நோக்குவோம் :

பல்லவி

வந்தே மாதரம் என்போம்-இந்த
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்
(வந்தே)

சரணம்

ஜாதி மதங்களைப் பாரோம்-உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே-அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே (வந்தே)

* * * *

உளப்பாட்டுக் கவிதை

இங்கே பாரதியார் தம் நாட்டினர்கள் அனைவரையும் உளப்படுத்தித் தமது பாரத மாதாவை வணங்குவதற்கு அழைக்கின்றார். ஆதலால் இதனை **உளப்பாட்டுக் கவிதை** எனப் பெயரிடலாம்.

சமுதாய நிலையிற் பாடிய கவிதை

மேலே காட்டிய மூன்று கவிதைகளையும் பாடியவர் ஒருவரே எனினும், முதற் கவிதைக்கும் ஏனை இரண்டு கவிதைகளுக்கும் ஒரு வேறுபாடு காணலாம். தனிப்பட்ட நிலையிற் பாடியது முதலாவது; மற்றை இரண்டும் சமுதாய நிலையிற் பாடியவை. பிற்கூறிய நிலையிலே தோன்றியவையும் இரு கூறுபடும். சமுதாயத்தாரினின்றும் தனியே பிரிந்து நின்று முதலிற் பாடி, பின் அவரும் தாமும் கூடிப்பாடுமாறு இயற்றியது ஒரு கூறு; பிறிதொரு கூறு சமுதாயத்தாரினின்றும் தன்னைப் பிரித்துக்கொள்ளாது அனைவரும் சேர்ந்து பாடுதற்கு என இயற்றியது.

கவிதை

- **தனி நிலை**
- **சமுதாய நிலை**
  - **உளப் படுத்தியது**
  - **உளப் படுத்தாதது**

இவ்வகைகளுள் எது காலத்தால் முதன்முதல் தோன்றியதாதல் வேண்டும்? இதனை நிச்சயித்தற்கு எவ்வகைப் பாட்டுக்கும் இன்றியமையாததாய் அமைந்துள்ள ஓர் உறுப்பு நமக்குப் பயன்படுகிறது. செய்யுள் எத்தனை எளிதாயிருப்பினும், எத்தனையாக 'ஆரம்ப நிலையிலிருப்பினும் (**primitive**), அதன்கண்ணும் இவ் உறுப்பு அமைந்திருத்தல் ஒருதலை. இவ் உறுப்பு யாது எனில் '**rhythm**' என்று ஆங்கில அறிஞர் கூறுகின்ற ஒத்திசையேயாகும். நமது செய்யுள் இலக்கணத்திற் காணப்படுகிற அசை, சீர், தளை, அடி என்பன இவ் ஒத்திசை ஆகமாட்டா. 'பா' என்பதனைப் பேராசிரியர் 'சேட் புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லுந் தெரியாமற் பாடமோதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்தற்கேதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை' என விரித்துள்ளார் (செய், 1, உரை). இவர் கருதுவதும் ஒத்திசையாக மாட்டாது. செய்யுளின் புற-உறுப்பில் ஒன்று எனவே இது கொள்ளத்தக்கது. அடி, சீர், அசை என்பவற்றிற்கு ஆதாரமாய் இவற்றோடு ஒத்திசைப்பதாய் உள்ள அக-உறுப்பும் அதன் எதிரொலியாய்ப் புறத்து வெளிப்படும் ஓசை நியதியுமே ஒத்திசையாவது. செய்யுள் - இலக்கண ஆசிரியர்கள் இதனைக் கூறாதது வியப்பன்று. செய்யுளின் 'அகப்-புற-உறுப்பு' என்று கூறத்தகும் இவ் ஒத்திசைக்கு உரிய பெயர் போலும் வடமொழி, திராவிட மொழிகளில் காணப்பெறவில்லை. செய்யுள் ஆராய்ச்சியிற் சிறந்த மேனாட்டு ஆசிரி

ஒத்திசை கண்டார் மேனாட்டார்

யர்களே இவ் அகப்-புற-உறுப்பின் உண்மையை முதலில் தெளிவுற வகுத்துக் கண்டவர்கள்.

ஓத்திசையின் இயல்பினை ஒருவாறு உணர்ந்துகொள்ளுதல் நலமாகும். புறப் பார்வையில், தாளம், லயம் என்பவற்றோடு இது நெருங்கிய தொடர்பு உடையது. அளவுபட்டுச் செல்லும் கால நிகழ்வே ஓத்திசையின் மூலமாக உள்ளது. இதனை இசைப் பாட்டுக்களிலும், நடனத்திலும், தாள லயங்களாற் குறிப்படுகிறோம்.

ஓத்திசையின் இயல்பு

செய்யுளில், குறித்த காலத்தில், குறிப்பிட்ட நியதியில், அடுத்தடுத்து நிகழும் ஒலியழுத்தத்தால் இதனை உணருகிறோம். இவ்வகை அழுத்தம் உளதாவதற்குக் காரணம் குறில், நெடில் முதலிய உயிரெழுத்துக்கள் குறித்த ஒரு கிரமத்திலே தொடர்பு உற்று நிரவி வருவதேயாகும். கடிகாரத்தில் 'ஸெக்கன்ட்' அடிப்பதைக் கவனித்திருப்போம். இந்த அடிப்புக்களில் உண்மையில் வேறுபாடில்லையென்றாலும், அவை தொடர்ந்து நிகழும் போது ஒன்றுவிட்டு ஒன்று அழுத்தமாக ஒலிப்பதுபோல நமக்குத் தோன்றும். இதுபோலவே செய்யுளில் ஒலியழுத்தங்கள், இடையிட்டு இடையிட்டு, ஒழுங்காகத் தோன்றிக் கொண்டேயிருக்கும். இங்ஙனம் முறைப்பட வரும் ஒலியழுத்தைத்தான் 'ஓத்திசை' என்று இங்கே கூறியது.

இவ் ஓத்திசை செய்யுளிலே அதன் ஓசையால் வெளியாவது என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். இவ்வாறேயன்றி, தலை, கை, கால் என்ற உடல்-உறுப்புக்களின் தொழிற்பாட்டினாலும் இது வெளியாவது உண்டு. சங்கீத சாஸ்திரத்தில் ஞானம் இல்லாதார் நம்மிற் பலர் இருக்கின்றார்கள். என்றாலும், சங்கீதக் கச்சேரிக்கு நாம் போகிறோம். அங்கே இனிய சங்கீதத்தைக் கேட்டு

ஓத்திசையில் பரவசநிலை

அனுபவிக்கும் போது, நம்மை யறியாமலே நமது தலை ஆடத் தொடங்குகிறது. நமது கைகளும் பாதங்களும் தாளம் போடத் தொடங்குகின்றன. இதற்குக் காரணம் ஓத்திசைதான். ஓத்திசையின் துடிப்புத்தான் நம் கை,

கால் முதலிய உறுப்புக்களில் பரவி, நம்மைப் பரவசமாக்கித் தாளமிடச் செய்கிறது. அரங்கிலே நர்த்தகியானவள், நடனத்தின் இடையிடையே தாளத்தின் அமைதியில் நிற்கும் பொழுது, தன் தலையை நீட்டி நீட்டி இழுப்பதைப் பலரும் பார்த்திருக்கலாம். இது தன் கழுத்தின் அழகையும், தலையின் அழகையும் மக்கள் கண்டு மயங்குதற் பொருட்டன்று; வேண்டாத விகாரம் என்றே பலரும் கருதலாம். ஆனால் உண்மையில் நர்த்தகி வேண்டுமென்று மனமாரச் செய்வதன்று இது. நடனம் புரியும் பொழுதும் இடைப் பொழுதிலும் அவள் சரீரம் முழுவதும் லயமயமாய்த் துடிக்கின்றது; அவளால் தன்னை அடக்கிக் கொள்ள முடிவதில்லை. ஒத்திசையின் பாரவசிய குணத்தால் முற்றும் தன்னையிழந்து செய்யும் தலையாட்டமே இதுவாகும்.

ஒலி—அழுத்தத்தாலும், உறுப்புகளின் தொழிற்பாடுகளாலும் புலப்படுகிற இந்த ஒத்திசைக்கும் நமது உணர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அளவுபட்டு அளவு பட்டு நிகழும் உணர்ச்சியின் தொடர் கதியே இந்த ஒத்திசைக்கு உரிய ஆதாரமென்று சொல்லலாம். இந்த உணர்ச்சிகள் தாமும் இன்பம் பற்றியனவும் துன்பம் பற்றியனவும் என இரண்டு வகைப்படும். இன்ப உணர்ச்சிகள் நீடித்து நிற்கவும், துன்ப உணர்ச்சிகள் குறுகி ஒழியவும், இவ் உணர்ச்சிகளோடு தொடர்புற்று எழுகின்ற குரலும் தொழிலும் உதவுகின்றன. ஆகவே மனம், மொழி, மெய் என்ற முக்கரணங்களும் ஒத்திசையிலே தொழிற்படுகின்றன.

ஒத்திசையும் உணர்ச்சியும்

மேற் கூறியதனால், ஒத்திசையின் இயல்பை ஒருவாறு உணரலாம். இவ் ஒத்திசைகள் எவ்விதமான சந்தர்ப்பங்களில் தோன்றுகின்றன என்பதை இனி அறிதல் வேண்டும். இன்பத்திலும் துன்பத்திலும் முயற்சியிலும் வீரச் செயலிலும் இவ் ஒத்திசை உண்டாகக் காண்கிறோம். தற்காலத்திற்போலவே பண்டைப் பழங்காலத்திலும்—மக்களது அநாகரிக தசையிலும்—

இங்கே குறித்தனபோன்ற சந்தர்ப்பங்களிலே ஒத்திசை நிகழ்ந்தன என்று சமுதாய நூலார் கூறுகின்றனர். ஓர் உதாரணத்தால் இதை விளக்கலாம். ஏதேனும் ஒரு முயற்சியில் அல்லது வேலையில் முனைந்து தொழில் செய்யும் ஒருவன், அவ்வேலையின் கஷ்டம் புலப்படாதபடி, தான் அறிந்தபடி பாடிக்கொண்டே வேலை செய்கிருன். இப்பாடலை ஒத்திசையோடு அமைந்திருப்பதனுலே, இவன் மனம் இவ் ஒத்திசையில் ஈடுபட்டு, வேலையிலே ஊன்றி நிற்பதில்லை. வேலையும் ஒத்திசையின் வழிப்படுகிறது; வேலையின் பாரம் இவனுக்குத் தோன்றுவதில்லை. நாம் கவனிக்க வேண்டுவது பிறிதொன்றும் உளது. இங்ஙனம் தன்னை மறந்திருக்கும் நிலையிலே, சுற்றுப்புறத்துள்ள ஒத்திசை ஒலிகள், ஒத்திசைச் செயல்கள் இவனை எளிதில் தம் வசமாக்கிவிடுகின்றன. இவனும் பிற்கூறிய ஒத்திசையின் கண்ணே வசப்படுகிருன்.

ஒத்திசையின் தோற்றம்

சுற்றுப்புறத்துள்ள ஒத்திசையின் வரலாறு யாது? மக்கள் வாழ்வின் ஆரம்ப காலத்திலே மகிழ்ச்சிக் கூத்து, பொது வேலை என்ற இரண்டின் அடியாகச் சமுதாயங்கள் (social condition) அமையத் தொடங்கின. இவ் உண்மையை மக்கள் வரலாறுபற்றி ஆராய்ந்த ஆசிரியர்கள் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். இவ் ஆரம்ப காலத்தே பலரும் ஒன்றுசேர்ந்து கூட்டமாக ஆடியும் பாடியும் வந்தனர். இவற்றைச் சமுதாய ஆடல், சமுதாயப் பாடல் என முறையே பெயரிடலாம். சமுதாயப் பாடலினின்றுதான் கவிதை தோன்றலாயிற்று. பலரும் ஒருங்கு கூடி ஆடிப் பாடுதல் செய்தலினுலே, ஒத்திசை இங்கே மிகமிக அவசியமாயிற்று. சமுதாய-ஆடல், தொழில் முதலியவற்றினின்றே ஒத்திசை என்பது பிறந்தது. இதனுல் ஆதிமக்களின் சரீர இயக்கத்தில் ஓர் இலாகவம் உண்டாயிற்று; அவர்களது சரீரபலத்தை விரயம் செய்வதில் ஒரு சிக்கனம் ஏற்பட்டது; ஒரே இனம் என்ற உணர்ச்சி பெருகி வளர்ந்தது;

சுற்றுப்புறத்து ஒத்திசையே சமுதாயப் பாடல்

மீண்டும் மீண்டும் முறையாகத் தோன்றும் ஒலியாலும் செயலாலும் இன்பம் பிறந்தது. இவை சமுதாய உள ஒற்றுமையை விளைத்தன. உள ஒற்றுமையின் அறிகுறியே சமுதாயத்தில் நிகழ்ந்த ஒத்திசை.

சில அநாகரிக ஜாதிகளை நோக்கினால், சமுதாய ஒத்திசையின் உண்மை நன்கு புலப்படும். இவர்களிடையே ஆடலின்றிப் பாடல் இல்லை, இங்ஙனமே பாடலின்றி ஆடல் இல்லை; ஒரு பெயரே இரண்டனையும் குறிக்கின்றது. எனவே, ஆதிகாலத்தில் ஆடல், பாடல், கவிதை என்பன பிரிக்க இயலாத ஒரே தொழிலின் அம்சங்களாக இருந்தன. வட்டமாகச் சுற்றி நிற்றல், கைகோத்துத் தழுவி நிற்றல், பாதமும் குரலும் ஒத்திசைக்கு இணங்கத் தொழிற் படுதல்: இங்ஙனம், சமுதாய அடிப்படையும், கலையின் சமுதாயத் தோற்றமும் உளவாயின. இவற்றினின்றும் முற் கூறிய முறையிலே கவிதைகளும் தோன்றின. ஆனால், இக்கவிதைகள், கூடி நிற்கும் மக்களின் தொகுதி முழுவதிற்கும் அப்போதைய ஆவலாயுள்ள ஒரு விஷயம் பற்றியே அமைந்தன. செய்யுள் மரபுகள், கதைகள், புராதன வரலாறுகள், காதற் செய்திகள், நட்சத்திரங்கள், சூரியோதயம் முதலிய தோற்றங்கள் சமுதாயக் கவிதைகளில் இடம் பெறவில்லை. ஒத்திசையே இக்கவிதைகளுக்கு உயிராக இருந்தது.

ஒத்திசையே ஆதிக் கவிதைக்கு உயிர்

ஆகவே சமுதாயத்தின் உள ஒற்றுமையைக் குறித்தற் பொருட்டுச் சமுதாயச் செயலாக மாறிய ஓர் இயற்கை-உணர்ச்சியே ஒத்திசையாய் முடிகின்றது. இயற்கை-உலகில் காணும் ஒத்திசை, நமது சுவாசம், நாடித் துடிப்பு, அலையின் ஏற்றம்-இறக்கம், நட்சத்திரம் முதலியவற்றின் கதி, கண்ணறை (cell) உட்கண்ணறை முதலியவற்றின் துடிப்பு: இவைகளோடு ஒத்திசை எவ்வகைத் தொடர்பு உடையது? இக்கேள்வியை இங்கே ஆராயவேண்டிய அவசியமில்லை. ஒத்திசை சமுதாயத்தினின்றும் தோன்றியது. ஒத்திசை

சமுதாயக் கவிதை

யையே உயிராகவுடைய ஆதிக்காலத்தே கவிதையும் சமுதாயத்தில் தோன்றியதே. ஆகவே, தொடக்கத்தில் கவிதை சமுதாயக் கவிதையாகவே இருந்தது. குரவைப் பாட்டு, வள்ளைப் பாட்டு முதலியன மிகமிகப் பிற்பட்ட காலத்தனவாயினும், சமுதாயக் கவிதையின் பரம்பரையிலே தோன்றியனவாகும்.

இச் சமுதாயக் கவிதை எங்கேனும் காணப்படுகிறதா? இக் கேள்விக்கு மனித வர்க்க நூலாரும் சமுதாய நூலாரும் விடையளிக்கின்றனர். ஆங்கிலத்தில் **'primitive'**, **'primeval'** என்று இரண்டு வார்த்தைகள் உள்ளன. இவற்றை 'ஆதியியல்புள்ள', 'ஆதிக்காலத்து' என முறையே மொழி பெயர்க்கலாம்.

சமுதாயக் கவிதை காணும் இடம்

முந்திய சொல், தன்மை, நிலைமை முதலியவற்றைக் குறிப்பது; பிந்திய சொல் காலத்தை மட்டும் குறிப்பது. இரண்டின் கருத்துக்களும் ஒன்றோடொன்று தொடர்பில்லாதனவாய் இருத்தலும் கூடும். எவ்வாறெனில் ஆதியியல்புள்ளன எல்லாம் ஆதிக்காலத்தனவாய் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. தற்காலத்து வாழும் ஜாதியார் சிலர் ஆதியியல்புள்ளவராய் இருத்தல் இயலும். இவர்கள் நாகரிகம் என்னும் பேராற்றின் கதியிலே ஒன்றிச் செல்லாது பிற்பட்டுத் தங்கிவிட்ட மனித சமூகத்தினர். இங்ஙனமுள்ளவர்கள் தற்காலத்துப் பல பிரதேசங்களிலும் காணப்படுகிறார்கள். நம் நாட்டிலும் துடவர்கள் (Todas) முதலானவர்கள் இப் பகுதிப்பட்டவர்கள். இவர்களிடையிலே சமுதாயக் கவிதைகள் உள்ளன.

4

தமிழ் இலக்கியத்தின் தொன்மை-I

பல தேசங்களிலும் முதன் முதல் தோன்றிய இலக்கியம் சமுதாயக் கவிதையா யிருந்தது. இதனை நாகரிக ஏணியில் ஏறி மேற்செல்லாது தாழ்ந்த படியிலிருக்கும் மக்கட் பிரிவினரிடையே காணும் கவிதையின் தன்மையினால் நாம் அறிகிறோம். நாகரிகம் சிறந்து விளங்கிய பின்பும், சமுதாயக் கவிதையின் மரபிலே தோன்றிய கவிதைகள் உள்ளன. தோழியர்கள் கூடி நெல் குற்றுதல், பூக்கொய்தல் முதலிய விளையாட்டுக்களில் ஒன்று சேர்ந்து களித்தும், வினு விடுத்தும், பாடுகிற பாட்டுக்கள் இந்த இனத்தைச் சேர்ந்தனவே. இவற்றிற்கு உதாரணங்கள் கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலே காணப்படுகின்றன.

சமுதாயக் கவிதை மரபு

பாடுகம் வா வாழி தோழி வயக்களிற்றுக்
கோடுலக்கை யாகநற் சேம்பின் இலைசுளகா
ஆடுகழை நெல்லை அறை உரலுட்பெய் திருவாம்
பாடுகம் வா வாழி தோழி நற்றோழி பாடுற்று

*　　*　　*

இலங்கும் அருவித்து இலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை

*　　*　　*

இளமழை ஆடும் இளமழை ஆடும்
இளமழை வைகலும் ஆடும் என் முன்கை
வளைநெகிழ வாராதோன் குன்று

* * *

மணிபோலத் தோன்றும் மணிபோலத்தோன்றும்
மண்ணு மணிபோலத் தோன்றும் என் மேனியைத்
துன்னான் துறந்தான் மலை (கலித். 41)

இக்கலிப்பாட்டு நாகரிக முதிர்வில் தோன்றியதென்பது செஞ்சொற்களால் இழைத்து ஒப்பனை செய்த அதன் செயற்கை அழகே நமக்குப் புலப்படுத்துகிறது.

ஆதி இலக்கியத்தின் தன்மையை இதுபோன்ற செய்யுட்கள் பெற்றுள்ளமையால், இவைகளே தமிழின் ஆதி இலக்கியங்கள் எனக் கொண்டு, இவற்றின் காலத்துத்தான் தமிழ் இலக்கியம் முதன் முதல் தோன்றியது எனக்கொள்ளுதல் கூடாது. தமிழ் இலக்கியத்தின் தொன்மை வேறு சான்றுகளால் துணியப்படுதல் வேண்டும்.

கர்ண பரம்பரைச் செய்திகள்

முதலாவது கர்ணபரம்பரை வரலாறுகளை நோக்குவோம். இவைகள் இறையனார் அகப்பொருள் உரையிலே (பவா. பதிப்பு பக்கம். 5—7) விரிவாகக்கூறப் பட்டுள்ளன. தலைச்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் பாண்டியர்களால் நிறுவப் பட்டன. இவற்றுள் [1] தலைச்சங்கத்தில் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், குன்றமெறிந்த முருகவேள், நிதியின் கிழவன் (குபேரன்) என்ற தெய்வங்களும் தமிழ் ஆராய்ந்தன! இத்தெய்வங்களுள்பட 4,449 பேர்கள் இச்சங்கத்தில் இருந்தனராம்!

1. சுமார் 50 ஆண்டுகட்கு முன்னர் 'செங்கோன்றரைச் செலவு என்ற சிறு நூலொன்று உரையுடன் மதுரையில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. இது 'தாப் புலிப்பா' என்ற யாப்பினுல்(?) இயன்றதாம்! தலைச்சங்கத்துத் தோன்றிய நூலாம்! இக்கட்டுக்கதையின் பொய்மை எளிதில் அறியத்தக்கதே.

இச்சங்கம் இருந்த காலம் 4,440 ஆண்டுகளாம்! இருந்த இடமாகிய மதுரை கடல்வாய்ப்பட்டு அழிந்துவிட்டதாம்! இடைச் சங்கத்தில் தெய்வங்களைக் காணவில்லை; அவர்களுக்குப் பதிலாக அகத்தியனுர் என்ற ரிஷி இருந்தனர். இங்ஙனம் மகத்துவத்தில் சிறிதளவு குறைவு பட்டதுபோலவே, இச்சங்கத்தி லிருந்தவர்களது எண்ணும் குறைந்துவிட்டது. 3,700 பேர்கள்தாம் இதில் தமிழ் ஆராய்ந்தனர். சங்கம் இருந்த காலமும் 3,700 ஆண்டுகள்தாம். இச்சங்கம் இருந்த கபாடபுரமும் கடல் கொள்ளப்பட்டு அழிவு எய்தியது. கடைச்சங்கத்தில் தெய்வங்களும் இல்லை, ரிஷிகளும் இல்லை. எனவே, இக் கடைச் சங்கம்தான் முற்றும் மக்களால் இயன்றது. இதற்கு ஏற்ப, பிற சிறப்புக்களும் சிறிது சிறிது குறைவு பட்டுள்ளன. இதில் 449 புலவர்கள் பாடினுர்கள்; இச் சங்கம் தமிழ் ஆராய்ந்த காலம் 1850 ஆண்டுகள். இந்த முச்சங்கங்களுள் தலைச்சங்க வரலாற்றினை மட்டும் அடியார்க்கு நல்லார் 'வேனிற்காதை' (1—2) உரையில் கொடுத்துள்ளார்.

இவ்வரலாறுகளை வாசித்து நோக்கிய அளவில், தலை இடைச்சங்கங்கள் முழுக் கற்பனை என்பது புலனுகும். எனவே, இவற்றை ஆராய்ந்து உண்மை காண முயல்வது பயனற்ற செய்கை தமிழின் தொன்மையையும் அதன் தெய்வத் தன்மையையும் வற்புறுத்துதற்கு எழுதிவைத்த கற்பிதக் கதை என்றே இவை கொள்ளத் தக்கன. கடைச்சங்கத்தைப் பற்றிய வரலாறு அங்ஙன மன்று. இதிற் கூறிய புலவர்களில் பெரும்பாலரது செய்யுட்கள் இப்போதும் உள்ளன. இதில் ஆராய்ந்தன வாகக்கூறும் நூல்களிற் பெரும்பாலனவும் இப்போதும் அகப்படுகின்றன. ஆனுல் இவ்வரலாற்றினும் கற்பனைக் கலப்புள்ளது என்று கருத இடமுண்டு. ஐங்குறுநூறு தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும் பொறை. இவனும் இவனது சமகாலத்தவனுன தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் பகைவர் என்பது மூன்று புறப்பாட்டுக்களாலும் (17, 20, 22) அவற்றின் பிற்குறிப்புக்களாலும் விளங்குகிறது. இந் நிலையில் ஐங்குறுநூறு மதுரைமாநகரிற் கூடியதாகக்

கூறும் கடைச்சங்கத்தில் ஆராயப்பட்டிராது என்பது திண்ணம். இவ்வாறே சேர அரசர்களைப்பற்றியே முழுதும் அமைந்த பதிற்றுப்பத்தும் மதுரையில் ஆராயப்பட்டது என்பது பொருந்துவதன்றும். மேலும், எட்டுத் தொகையைச் சார்ந்த நூல்களுள், தொகுப்பு வரலாறுகள் கிடைப்பனவற்றுள் ஒன்றிலேனும் மதுரையில் கடைச் சங்கம் கூடித் தமிழ் ஆராய்ந்ததாகக் காணப்படாமை ஊன்றிக் கவனிக்கத்தக்கது.

கடைச் சங்கச் செய்திகளிற் சில உண்மையே

தொகை நூற் புலவர்களுள்ளும் ஒருவரேனும் சங்கம் ஒன்று இருந்ததாகப்போலும் கூறினரல்லர். புறநானூற்று முகவுரையில் 'இந்நூற் செய்யுட்களாற் பாடப்பட்டவர்கள் ஒரு காலத்தாரல்லர்...... ஓரிடத்தாருமல்லர், பாடியவர்களும் இவ்வாறே' என டாக்டர் சாமிநாதையரவர்கள் எழுதியிருக்கிறார்கள். இது மிகவும் உண்மை என்பது தொகை நூற் பயிற்சியுடையார் யாவரும் அறிவர். ஆனால், இச்சங்க வரலாற்றில் சில உண்மைகள் உள்ளன. இதன்கண் 'நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப' என்று காணப்படுகிறது. இந்த எண், தொகை நூற் புலவர்களின் எண்ணோடு பெரும்பாலும் ஒத்துள்ளது. கங்குல் வெள்ளத்தார், கல்பொரு சிறுநுரையார் முதலிய தொடராற் பெற்ற சுமார் 25 பெயர்களை நீக்குதல் வேண்டும். ஆசிரியர் பெயர் காணாத செய்யுட்களில், சிலவற்றை இயற்றியவர் பெயர்கள் முற்காலத்து விளங்கி யிருக்கலாம்; இதனால் ஒரு சில பெயர்களைக் கூட்டுதல் வேண்டும். இங்ஙனம் கணக்கிட்டு நோக்கினால், இறையனார் அகப்பொருள் உரையில் கூறும் எண் ஒத்து வருதல் காணலாம். ஆனால் இப் புலவர்கள் வாழ்ந்த காலம் 1850 ஆண்டுகள் என்பது முதலியன கற்பிதங்கள் என்றே கொள்ளத்தக்கன. இவர்களது காலம் சுமார் ஒரு நூற்றாண்டின் எல்லையேயாம் என்பது எளிதில் காட்டுதல் கூடும். இப் புலவர்களின் எண்ணேயன்றி, வேறு சில உண்மைகளையும் அடிப்படையாகக்கொண்டு இவ் வரலாறு புனையப்பட்டுள்ளது. பாண்டியர்கள் தங்கள் தமிழ் மொழியின்மீது ஆராத பேரன்புகொண்டிருந்தனர். இது

பற்றியே 'தமிழ்நர் பெருமான்' (முத்தொள்ளாயிரம்) 'தமிழ் நாடன்' (திவாகரம்) முதலிய சிறப்புப் பெயர்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டன. இவர்கள் தலைநகராகிய மதுரையும் தமிழ் நிலைத்திருக்கும் இடமாகக் கருதப் பட்டது.

மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை

என்பது சிறுபாணாற்றுப்படை (64-67).

வரைய சாந்தமும் திரைய முத்தமும்
இமிழ் குரல் முரச மூன்றுடன் ஆளும்
தமிழ் கெழு கூடல் தண்கோல் வேந்தே

என்பது புறநானூறு (58). பௌத்த சங்கமும் ஜைன சங்கமும் அங்கங்கே தோன்றித் தத்தம் சமய நூல்களை ஆராய்ந்து வருவது பெருவழக்கமா யிருந்தது. இச் சங்க உணர்ச்சியும் முற்கூறிய உண்மைகளோடு கூடித் தமிழ்ச் சங்கம் ஒன்று மதுரையில் நிறுவப்பட்டிருந்தது என்ற பரம்பரை வரலாற்றுக்குக் காரணமாய் முடிந்தது.

சங்க வரலாறு விளைந்த வகை

எட்டுத்தொகை நூல்களும் தொகுக்கப்பட்ட காலத்திற்குப்பின் அதாவது சுமார் 5-ம் நூற்றாண்டிற்குப்பின், இவ் வரலாறு தோன்றியிருக்கவேண்டும். இது நாளடைவில் பெருகி வளர்ந்தது. கி. பி. 10-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சின்னமனூர்ச் சாசனத்தில்,

பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோஹிதனாகப்
பெற்றது

* * * *

செம்மணிப்பூ ணொடுதோன்றித் தென்றமிழின்
கரைகண்டும்

* * * *

வளமதுரை நகர்கண்டும் மற்றதற்கு மதிள்
வகுத்தும்
உளமிக்க மதியதனல் ஒண்டமிழும் வடமொழியும்
பழுதறத்தா ஞராய்ந்து பண்டிதரின் மேந்
தோன்றியும்

*　　*　　*

தலையாலங் கானத்திற் றன்னொக்கு மிரு வேந்
தரைக்
கொலைவாளிற் றலைதுமித்துக் குறைத்தலையின்
கூத்தொழித்தும்
மஹாபாரதந் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச்
சங்கம் வைத்தும்

(S. I. I. III பக். 454.)

என்று காணப்படுறது.

பாண்டியர்களது வமிச வரலாறு கூறும் இவ்விடத்தே, தலையிடைச் சங்கங்கள் அவர்கள் நிறுவிய கதையாவது, கடல்கொண்ட தென்மதுரையாவது, கபாடபுரமாவது குறிக்கப்படவில்லை. இது நன்கு மனங்கொள்ளுதற்குரியது. ஒருவேளை, பாண்டியன் ஒருவனுல் நிறுவப்பட்ட ஓர் அவைக்களத்தின் ஞாபகத்தை அடிப்படையாகக் கொண்டு முச்சங்க வரலாறுகள் அனைத்தும் தோன்றியிருத்தலும் கூடும். 'நிலந்தரு திருவிற் பாண்டியன வையத்து'த் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டதாக அதன் பாயிரம் கூறும்; இதுவே அடிப்படையாகவும் அமைந்திருக்கலாம். எங்ஙனமாயினும், இச்சங்க வரலாறுகள் தமிழ் இலக்கியம் மிக்க தொன்மை வாய்ந்தது என நம் முன்னோர் கருதிவந்தனர் என்பதற்குத் தக்க சான்றுகளாம்.

இறையனார் அகப்பொருள் உரை இப்போதுள்ள வடிவில் கி. பி. 10-ம் நூற்றாண்டினதாகல் வேண்டுமெனக் கூறுகின்றனர். பழமொழி முதலிய நூற் செய்யுட்களை உரை நடையில் (பவா. பக். 60) அமைத்து எடுத்தாளுதலினால் இந்தக்கால வரையறை பொருந்துவதேயாம். தமிழ் இலக்கியத்தின் தொன்மையை வலியுறுத்துதற்கு அகப்பொருள் உரை வரலாற்றுக்கு முற்பட்ட சான்றுகள் உளவோ என நோக்குவோம்.

இறையனார் களவியலுரை சிறந்த சான்றாகாது

புறநானூற்றின் 2-ம் பாட்டு முரஞ்சியூர் முடிநாகராயர் என்ற ஒரு புலவரால் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்ற ஒரு சேர அரசன்மீது பாடப்பெற்றது. இச்சேரன் மகாபாரதப் போர் நிகழ்ந்து துரியோதனாதியர் பட்டபொழுது பெருஞ்சோறளித்தான் என இப்பாட்டுக் கூறுகிறது.

அலங்குளைப் புரவி ஐவரொடு சினை இ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம்பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்
தோய்

என்ற அடிகளால் இது விளங்கும். இதுபற்றி மாமூலனார் (அகம் 233) சில வரலாறுகளைப் புதியனவாகச் சேர்த்துள்ளார் எனத் தோன்றுகிறது. அவர் கூறுவது வருமாறு:

'மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇ யிருந் தாங்குக்
குறியவும் நெடியவுங் குன்று தலைமணந்த சுரன்'

இங்கே முதியர் என்றது பாரதப் போரில் இருதிறத் தாரையும் குறிக்கலாம். இவர்களுக்கு உதியன் பெருஞ் சோறு கொடுத்த பொழுது சிறியவும் பெரியவுமாகிய பேயினங்களும் (உண்ணு தற்கு?) அங்கங்கே கூட்டமிட்டிருந்தன வாம். காட்டு வழியிலே அங்கங்கே சிறிய வும் பெரியவுமாய்க் கிடந்த குன்றுகள் இப்பேய்களைப் போன்றிருந்தனவாம்.

முரஞ்சியூர் முடிநாகராயர்

சிலப்பதிகாரத்திலும் (29, ஊசல்வரி) பெருஞ்சோ றளித்த வரலாறு வந்துள்ளது.

ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றுது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்

என வந்துள்ளது. பாரதப் போரில் படைகளுக்கு உண வளித்த சேரனை விளித்துப் புறநானூற்றுச் செய்யுள் பாடப்பட்டிருத்தலினால், அச்செய்யுளை இயற்றிய புலவ ரும் அதற்குக் காரணமாகிய சேரனும் பாரத காலத்தவர் எனக் கொள்வர். இதற்கேற்ப, முரஞ்சியூர் முடிநாக ராயர் தலைச் சங்கப் புலவர்களுள் ஒருவராகவும் இறை யனுர் களவியல் உரையில் குறிக்கப்பட்டுள்ளனர். எனவே புறநானூற்றில் வந்துள்ள இவரது செய்யுள் மகாபாரத காலத்ததாகும்; தமிழ் இலக்கியத்தின் தொன்மை இதனால் நன்கு தெளியப்படும் என்பர்.

உதியன் சேரலது காலத்தை ஒருவாறாக அறுதியிடக் கூடும். இவன் பதிற்றுப்பத்தில் 5-வது பத்திற்கு உரிய வனை செங்குட்டுவனுக்குப் பாட்டனுதல் வேண்டும். செங்குட்டுவனும் இலங்கை அரசனை முதலாம் கஜபாகு வும் ஒரே காலத்தினர். எனவே செங்குட்டுவன் காலம் கி. பி. 170-225 என்று கொள்ளலாம். உதியன் சேரலின் காலம் சுமார் கி. பி. 100 என்று கொள்ளுதல் வேண்டும். இக்காலத்திற்கும் பாரத யுத்தம் நிகழ்ந்ததாகக் கணிக்

கப்படுங் காலத்திற்கும் எத்தனையோ நூற்றாண்டுகள் இடைப்பட்டன ஆதல் வேண்டும். ஆதலால் பாரதப் படைகளுக்கு இவன் சோறளித்திருத்தல் இயலாது. மேலும், தென்னாட்டிலிருந்த அரசனொருவன் பாரத யுத்தம் நிகழ்ந்த குருக்ஷேத்திரத்திற்கு உணவுப் பொருள் களை யெல்லாம் எடுத்துச் சென்று அங்கே போரக் கூடி யிருந்த படைகளுக்கெல்லாம் உணவளித்தான் எனல் சரித்திர முறையில் ஒப்புக்கொள்ளக் கூடிய தன்று. அன்றியும், சேரர்கள் இவ்வாறு உணவளித்தார்கள் என்ற செய்தி வியாச மகாபாரதத்தில் கூறப்படவில்லை. அங்குச் சேரர்களைக் குறித்துக் காணப்படுவதெல்லாம், கர்ணனது திக்கு விஜயத்தில் இவனால் தோல்வியுற்றுத் துரியோதனனுக்குத் திறைசெலுத்தினார்கள் என்பதும், பின்பு யுதிஷ்டிரரது படையோடு சேர்ந்து பொருது உதவி னார்கள் என்பதுமேயாம். எல்லாவற்றிற் கும் மேலாக, சேரனது இவ்வள்ளன்மை, பாரத யுத்தம் வியாச பாரதத்திற் கூறி யுள்ளபடியும் பல வேறிடங்களில் பல வாறாக வழங்கும் கதைக் கூறுகளின் படியும் ஒவ்வோர் அம்சத்திலும் உண் மைச் சரித்திர நிகழ்ச்சியேயாம் என்ற அடிப்படையின் மேல் அமைந்துள்ளது. யாண்டும் உண்மையாக முடியாத இக் கொள்கை நமது சமயத்தோடும் நம்பிக்கையோடும் பின்னிக்கிடக்கின்றது. காலஞ் செல்லச் செல்ல வளர்ந்து இடந்தோறும் கதைக்கூறுகள் புதிய புதியவாகப் புகுந்து பெருகி நமது கவித்வ உணர்ச்சிக்கும் சமய உணர்ச்சிக்கும் லட்சிய உணர்ச்சிக்கும் ஆதாரமாயுள் ளது மகாபாரதம் என்னும் இப் பேர் இதிகாசம். இந்த அளவில் நாம் திருப்தியடைய வேண்டும்; இதனினும் அதிகமாகச் சரித்திர நூல் ஒன்றுங் கூறத் துணியமாட் டாது. இக்காரணங்களால் சேரன் பாரத யுத்தத்திற் சோறளித்தது உண்மை நிகழ்ச்சியெனக் கொள்ளத்தக்க தன்று. முடிநாகராயர் தம் காலத்து நிகழ்ந்த சரித்திர நிகழ்ச்சிபோன்று இங்ஙனம் கூறுவான் ஏன் என்ற கேள்வி எழலாம். வீரத்தாலும் கொடை முதலிய பிற தகுதிகளாலும் பெயர் சிறந்து விளங்கிய தேசிய வீரர்க

மரபுபற்றிக் கூறியது சமகால நிகழ்ச்சியல்ல

ளோடு தொடர்புடையராக அரசர்களைக் கூறுதல் உலகம் முழுதும் வழங்கிய ஒரு மரபாகும். [1] ஐரோப்பிய அரசர்கள் துரோஜன் யுத்தத்தில் போர் புரிந்தவராகக் கருதும் வீரர்களோடு தொடர்புடையராகத் தம்மைக் கூறிக் கொண்டனர். இதுபோன்ற ஒரு மரபினை மனத்துள் கொண்டே முடிநாகராயர் தமது அரசனைப் பாடினுர் என்று நாம் கொள்ளுதல் வேண்டும். இது கேவலம் ஒரு மரபே அன்றி வேறல்ல என்பது வேறோர் சோழ அரசனும் பாரத வீரர்களுக்குச் சோறளித்தனன் என்று வரும் கலிங்கத்துப் பரணிச் செய்யுளால் அறியலாகும். அது பின்வருமாறு :

> தூங்கு மூன்றெயில் எறிந்தஅவ னும்திரள்மணிச்
>   சுடர் விமானமது வான்மிசை உயர்த்த அவனும்
> தாங்கு பாரத முடிப்பளவு நின்று தருமன்
>   தன்கடற்படை தனக்குணவு தந்த அவனும்
>
> (கோபாலையர் பதிப்பு, தாழிசை 181)

இச் செய்யுளில் 'தனக்குணவுதந்த' என்பதற்கு 'தனக்குதவி செய்த' என்ற பாடபேதமும் உண்டு. சோழன் ஒருவன் உணவுதந்த செய்தி சிலப்பதிகாரம் கட்டுரை காதையில் 'பெருஞ்சோறு பயந்த திருந்துவேற் றடக்கை' (55) என்ற அடியினுல் விளங்கும். சோறு பயந்தவன் சோழனுவான் என்று அரும்பதவுரை கூறுவதாக இக் காப்பியத்தின் முதற் பதிப்பில் உள்ளது. உதியன் சேரலைக் குறித்து இங்ஙனம் ஒரு வரலாறு வழங்குதற்குக் காரணம் என்னென்று வினவலாம். பாடிச்சென்ற பரிசிலரைப் பலவகைப்பட்ட ஈகையால் பெரிதும் மகிழ்வித்தவன் இவன் என்று ஓர் அகப்பாட்டுக் கூறுகிறது :

---

1. Indian kings were just as fond of tracing their ancestry back to those who fought in the Bharata Battle as European princes were anxious to prove their descent from the heroes of the Trojan war. Cf. Rapson, Cambridge History, I p. 307. I consider it as entirely contrary to historical crlticism to draw chronological conclusions…from this fiction (Winternitz, History of Indian literature, Vol. I, p. 523, fn. 2).

நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவ வினி வாழி (அகம். 65)

பிறிதோர் அகப்பாட்டு, 'இவன் கொடையைக் கடமை யாக மேற்கொண்டு தன்பாற் சென்ற பரிசிலர்க் கெல்லாம் யாதொரு தடையுமின்றி உணவளித்து வந்தமையால் இவனது அட்டில் எப்பொழுதும் ஒலிமிக்கிருந்தது' எனப் புகழ்கிறது. அப்பாட்டின் அடிகள் வருமாறு :

நல்லான் பரப்பிற் குழூஉர் ஆங்கண்
கொடைக் கடன் ஏன்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில்போல ஒலியெழுந்து (அகம். 168)

'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே' எனக் கருதி, அதனினும் மேம்பட்ட கொடை இல்லை என்று உணர்ந்து, அன்னதானம் செய்துவந்த இவ்வரசன் வரலாற்றில் பாரதப் படைகளுக்குப் பெருஞ் சோறளித்தவன் என்ற புகழும் சேர்தல் இயற்கைதானே. ஆகவே இப் பெருஞ் சோற்று வரலாறு ஒரு புகழ்ச்சி மரபென்றே நாம் துணிதல் வேண்டும். இதுபற்றித் தமிழ் இலக்கியத்தின் தொன்மையைத் திட்டமாய் அளத்தல் கூடாதாம். ஆனால் நம் முன்னோர்கள் அத்தொன்மையை மிகவும் பாராட்டி வந்தார்கள் என்பது புலனாகும்.

தொன்மை போற்றுதல் வழக்கம்

இத்தொன்மையை நம்மவர்கள் மிகுதியும் போற்றி வந்தனர் என்பது தொகை நூல்களில் காணும் . பிறிதொரு சான்றினாலும் அறியலாகும். புறநானூற்றிலே (9) பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் புகழ்ந்து வாழ்த்து மிடத்து,

முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே

என வருகின்றது. எனவே இவ்வழுதியின் காலத்துப் பஃறுளியாறு இருந்தது எனல் பெறப்படுகின்றது. இது பின்னால் கடல் கொள்ளப்பட்டது என்பது,

மலிதிரை யூர்ந்து தன் மண்கடல் வவ்வலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடிடம் படப்
புலியொடு வில் நீக்கிப் புகழ் பொறித்த கிளர்
கெண்டை
வலியினன் வணக்கிய வாடார் சீர்த் தென்னவன்

என்ற கலித்தொகை (104) யாலும்,

அடியில் தன்னள வரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி

என்ற சிலப்பதிகாரத்தாலும் (11, 17-22) அறியலாகும். ஆகவே இக் கடல்கோள் நிகழ்ந்த காலத்திற்கு முன்பு முதுகுடுமிப் பெருவழுதியும் அவனைப் பாடிய நெட்டிமை யாரும் இருந்தனராதல் வேண்டும் என்பர்.

இதனைப் பொதுப்பட ஒப்புக் கொள்ளுதலில் தடை யொன்றும் இல்லை. அருகிலுள்ள நிலத்தைக் கடல் கவர்ந்து விடுதல் ஒரு நாட்டின் சரித்திரத்தில் பலமுறை நிகழக்கூடியதே. மகாபலிபுரத்தில் ஒரு பகுதி கடல் கொள்ளப்பட்டது சரித்திரம் ஒப்பிய செய்தியே. இங்ஙனமே மயிலாப்பூரில் ஒரு சிறுபகுதி கடல் வாய்ப்பட்டதும் பலரும் அறிந்ததே. இந் நிகழ்ச்சிகளைப் போன்று நேர்ந்த ஒரு கடல் கோளைக் கலித்தொகையும் சிலப்பதிகாரமும் கருதியிருக்கலாம். இங்ஙனம் அழிந்த நிலப்பகுதி சிற்றளவினதே என்பது 'இந் நிலக் குறைக்குச் சோழநாட் டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமும் என்னும் இவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன் வாழ்வானாக' என்று வரும் அடியார்க்கு நல்லார் உரைப் பகுதியால் உணரலாம். இவ்வளவில் நின்று, ஒரு பழங்கால நிகழ்ச்சியைக் குறிப்பதாகக் கொண்டு, தமிழ் இலக்கியம் மிகப் பழமை வாய்ந்தது என்று துணிதல் பொருத்தமே.

5

தமிழ் இலக்கியத்தின் தொன்மை-II

முந்திய அத்தியாயத்தில் கூறிய பொது முடிபோடு அமையாது, கடல்கோளின் காலத்தை நிர்ணயிக்கப் பல ஆராய்ச்சியாளர்கள் முயன்றுள்ளார்கள்.

கடல்கோள் பற்றி நவீன ஆராய்ச்சியாளர்

'தலைச் சங்க வரலாற்றை நோக்கினால் கடல்கோளில் பல நாடுகள் அழிந்தன என்று தெரிகின்றது. இப் பேரழிவுக்குப் பொருத்தமாவது லெமூரியாக் கண்டம் எனவொன்று அழிந்ததாகப் பூ-தத்துவ ஆசிரியர்கள் கூறுவதே யாகும். ஆதலால் இக்கண்டம் கடற்கீழ் ஒழிவதன் முன்பே தமிழிலக்கியம் தோன்றியதாதல் வேண்டும். லெமூரியாக் கண்டம் என்பதன் ஒரு பகுதியே தமிழகமாகும் என்று கூறுவர் நவீன ஆராய்ச்சியாளர் சிலர்.

இதனைக் கூர்ந்து ஆராயவேண்டியதில்லை. பூ-தத்துவ நூலார் அனுமானிக்கும் கடல் கோளுக்கும் தமிழ் நாட்டின் ஒரு சிறு பகுதி கடலால் அழிவு எய்தியதற்கும் யாதோர் இயைபும் இல்லை. அந்நூலார் குறிக்கும் காலம் நூற்றாண்டுகளால் அளக்கப்பெறாத மிக நீண்ட பேரூழியாம். அதனைப் பூ-தத்துவ காலம் (geological period) என்று கூறுவர். லெமூரியாக் கண்டம் அழிவுற்றதாகக் கூறும் காலத்தில் மனிதன் நிலவுலகில் தோன்றியிருந்தானா என்பதுகூடச் சந்தேகமே. இந்நவீன ஆராய்ச்சியாளர் கூறுவது நமது கவனத்திற்குச் சிறிதும் உரியதன்று என ஒதுக்கற்பாலதே யாகும்.

இதனைத் தவிர, தமிழகத்தோடு தொடர்பிருக்கக் கூடிய கடல் கோள்கள் தெரியவேண்டுமாயின், இலங்கைச் சரித்திரத்தை நாம் நோக்குதல் வேண்டும். நமது நாட்டினின்றும் இலங்கை பிரிந்து போவதற்குக் காரணமாயிருந்தது ஒரு கடல் கோள். தூத்துக்குடி முதல் மன்னார்வரை, இராவணனது பெருங் கோட்டையும், இருபத்தைந்து அரண்மனைகளும், நான்கு லட்சம் தெருக்களும் உடையதாய் ஒரு நிலப்பரப்பு இருந்ததாம். அவனது கொடுமையைப் பொறுக்கமாட்டாமல், கடல் கொந்தளித்து இந்நிலப்பரப்பைத் துவாபர யுகத்தில் அழித்து விட்டதாம் (ராஜாவளி **Upham** பக். *191*). இது சுமார் கி. மு. *2387*-ல் நிகழ்ந்திருக்கலாம் என்று **டென்னெண்ட்** கூறுவர். இலங்கை கடலுக்கு அப்பாலுள்ளதாக வால்மீகியார் இராம சரிதம் நடத்துவதால், இராவணன் கொடுமையால் கடல் கோள் நிகழ்ந்து, இலங்கை தீவாகப் பிரிந்து போயிற்றெனல் பொருந்தாது. ஆதலால் ராஜாவளி கூறும் இக்கடல் கோள் ஒரு கதை என்று ஒதுக்கற்பாலதாம். எனவே நமது கவனத்திற்கு இதுவும் உரியதன்று. இனி, பாண்டுவாஸா காலத்தில் ஒரு கடல் கோள் நிகழ்ந்ததாகக் கூறுவர். இவன் காலம் கி. மு. *444* முதல் *414* வரை யென்பர் **கெய்கர்**. இதனை உண்மை நிகழ்ச்சி என்று கொள்ளினும், இது குறித்து ஒரு செய்தியும் நமக்குத் தெரியமாட்டாது. தமிழ் நாடு இதனால் யாதிக்கப்பட்டது என்பதற்கு ஆதாரமில்லை.

தமிழகத்தோடு தொடர்புடைய கடல் கோள்

வேறொரு கடல்கோள் தெவாநாம் பிய திஸ்ஸாவின் காலத்தில் கி. மு. *306*-ல் நிகழ்ந்ததெனவும், இதனால் கொழும்பு நகரை அடுத்திருந்த கரைப் பிரதேசம் கடலில் அமிழ்ந்ததெனவும் கூறுவர் (ராஜாவளி பக். *180, 190*). ஆனால் தமிழ் நாட்டுப் பகுதி யாதொன்றும் அழிந்ததாக ஒரு குறிப்பும் காணப்படவில்லை. இக்கடல் கோள்கள் அனைத்தும் உண்மை நிகழ்ச்சிகள் என்று எண்ணுதற்குச் சான்று இல்லை என்று **டென்னெண்ட்** [1] கூறியுள்ளார்.

---

1. Evidence is wanting to corroborate the assertion of such an occurrence at least within the historic period. (Tennent: Ceylon, Vol. I. p. 6—7)

முன் கூறிய கலித்தொகை (104) தவிர, மற்றைத் தொகை நூல்களில் ஒன்றிலேனும் கடல்கோள் - செய்தி கூறப்படவில்லை. இறையனார் அகப்பொருள் உரையிலும் சிலப்பதிகார உரையிலும் காணும் கடல்கோள் வரலாறு மிகப் பிற்பட்டது; கி. பி. 10-ம் நூற்றாண்டிலும், 14-ம் நூற்றாண்டிலும் இவை முறையே தோன்றியன. அன்றியும், ஒன்றோடு ஒன்று முரண்படுவன. இறையனார் அகப்பொருள் உரை இடைச் சங்கத்து இறுதியில் கடல்கோள் நிகழ்ந்ததாகக் கூறுகிறது; இதனைத் தழுவி எழுதியதாகக் கூறும் அடியார்க்கு நல்லார் உரை தலைச் சங்கத்து இறுதியில் நிகழ்ந்ததாகக் கூறுகிறது. முந்திய உரையில், அழிவுற்ற நிலங்களைப் பற்றியும் நாடுகளைப் பற்றியும் யாதும் கூறப்படவில்லை; பிந்திய உரையில், அழிவுற்ற நாடுகளின் கணக்கும் பெயர்கள் முதலிய விவரமும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்திற் காணப்படும் வரலாறு (XI, 18-22) முதல் இடைச் சங்கங்களோடு இக்கடல் கோள் யாதோர் இயைபும் உடையதாகக் கூறவில்லை; ஒரு பௌராணிக வரலாறு போலவே இது தோன்றுகிறது. ஆகவே இக்கடல்கோளை ஆதாரமாகக் கொண்டு சரித்திரம் அமைத்தல் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிக் கடக்க முயல்வது போலாம்.

இலக்கியவுரைகளில் காணும் கடல் கோள் ஒரு புராண கதை

சிலப்பதிகாரக் காப்பியம் கடல்கோளைப் பற்றிக் கூறும் பகுதியை முன்னரே காட்டினேன். ஆனால் இக்காப்பியமும் பிற்பட்ட காலத்ததேயாகும். இது கூறியபடி, பஃறுளியாற்றைக் கடல் கொண்டதாகக் கொள்ளல் இயலாது. அடியார்க்கு நல்லார் உரைக்கு முற்பட்ட அரும்பத உரைக்காரர் 'பஃறுளியாறு குமரிப்பக்கத்தோர் யாறு' என்று எழுதினர். பஃறுளியாறு தற்காலத்தில் பறளியாறு என வழங்குவதே. அன்றியும், இவ்வரலாறு இயற்கையும் சம்பாவித விதியையும் கடந்து செல்கின்றது. எனவே இக் கடல் கோள் யாதானும் ஒரு கதைபற்றியிருத்தல் வேண்டும்.

சிலப்பதிகாரத்தில் வரும் கடல் கோள்

'வடிவே லெறிந்த வான்பகை பொருது' கடல் கொந்தளித்து எழுந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இங்கே தென்னவன் வேலெறிந்தது பரசுராமன் தனது அம்பினைக் கடல்மீது செலுத்திய கதையை நினைவிற்குக் கொண்டு வருகிறது. இத்தென்னவனைப் போலவே, சரித்திர வீரனாகத் தற்காலத்தில் வழங்கும் சேரன் செங் குட்டுவனும் கடலிலே வேலை யெறிந்து அதனைப் பிறகே ஓட்டிக் 'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்' எனப் பெயர் பெற்றான். இச்செய்தியைப் பரணர் பதிற்றுப்பத் தில்(46)

கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு
உடைதிரைப் பரப்பிற் படுகடல் ஓட்டிய
வெல்புகழ்க் குட்டுவற் கண்டோர்
செல்குவம் என்னார் பாடுபு பெயர்ந்தே

என்று கூறுவதனால் அறியலாகும். இவ்வரலாறும் பரசுராமன் கதையைப் பெரிதும் ஒத்திருக்கிறது. ஆகவே மேற்குறித்த வரலாறுகள் அனைத்தும் இப் பரசுராமன் சரிதத்தினை அடிப்படையாகக் கொண்டு தோன்றின என ஊகித்தல் தகும். பரசுராமன் சரித்திரம் சங்க காலத்துப் புலவர்கள் நன்கு அறிந்ததே. அம்முனிவன் வேள்வி இயற்றிய செய்தி அகநானூற்றில் (220) உள் ளது.

இதுகாறும் உண்மைச் சரித்திர நிகழ்ச்சிகள் என் பதற்குச் சான்றுகளின்றி, கதைகளென்று கொள்ளத் தக்கன சிலவற்றை நோக்கினோம். இனி, சரித்திரநிகழ்ச்சி யென்று தோன்றுமாறு அமைந்துள்ள ஒரு செய்தியை நோக்குவோம். அசோக சக்கரவர்த்தியைப்பற்றி அறியாதாரில்லை. இவர் மௌரிய வம்சத்தைச் சார்ந்தவர். இம்மௌரியர்கள் தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்து பொதியில் மலையை அடைந்தனர் என அகநானூறு (251) தெரிவிப்பதாக [1]டாக்டர் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கா

அசோகன் படையெடுப்பு

1. Beginnings of S. I. History, p. 99.

ரவர்கள் கூறுகிறார்கள். இம்மௌரியர் ஆட்சிக்காலம் கி மு. 322-ல் தொடங்குகிறது. எனவே இப்படையெடுப்பைப் பற்றிக் கூறுஞ் செய்யுட்கள் சுமார் கி மு. 300-ல் தோன்றியிருக்க வேண்டும். ஆதலால் இங்குக் குறித்தகாலம்வரை தமிழ் இலக்கியத்தின் தொன்மை செல்லுகின்றது எனச் சிலர் வாதிப்பர்.

முதன்முதல் நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுளது. டாக்டர் ஐயங்காரவர்கள் அகநானூற்றுச் செய்யுளை மௌரியர்கள்[1] தெற்கே தமிழ்நாட்டிற்குள் படையெடுத்து வந்தார்கள் என்பதற்கு மாத்திரந்தான் சான்றாகக் கொண்டார்கள். சரித்திர ஆசிரியர்கள் [2]தக்ஷிணத்தில் மைசூர் எல்லைவரை மௌரியரது ஆணை நிகழ்ந்து வந்தது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்களே அன்றி, அதற்குத் தெற்கே அது பரவியிருந்ததாகக் கருதவில்லை. இக்கொள்கையை மறுப்பதுதான் ஐயங்காரவர்களது நோக்கம். அகநானூற்றுச் செய்யுள் சம காலத்துச் செய்தியை[3] உணர்த்துவதாக அவர்கள் கொள்ளவில்லை. அவர்கள் கொள்கை ஒரு பிழையின்மேல் எழுந்ததாகும். அகநானூற்றுச் செய்யுளில் வரும் 'தொன் மூதாலத்தரும் பணைப் பொதியில்' (அகம் 251) என்ற அடிக்குப் 'பழைய ஆலமரத்தடியின்கணுள்ள பொதுவிடம்' என்பதே உரிய பொருள்[4]; பொதியில் மலை என்பதன்று. எனவே ஐயங்காரவர்களது கொள்கைக்குச் சான்று யாதுமில்லை.

இவர்களுக்கு முற்பட்டு எழுதிய ஸ்ரீ. ராவ் ஸாஹேப் மு. இராகவையங்காரவர்களும் மௌரியர் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகிறார்கள்; ஆனால் பொதியில் மலையைக் குறித்து யாதும் கூறவில்லை. இவர்கள்[5] 'மோரிய அரசர் திக்கு விசயஞ் செய்துகொண்டு தென்றிசை நோக்கிவந்த போது, இப்பழையன் (மோகூர்) அவர்க்குப் பணியாமையால், அவர்க்கும் இவனுக்கும் பெரும்போர் நிகழ்ந்த

1. Beginnings of S. I. History, p. 90.
2. V. A. Smith, Oxford History of India, p. 76.
3. Begin. of S. I. History, p. 100.
4. Com. குறுந்தொகை 15.
5. சேரன் செங்குட்டுவன், 1947, பக்கம் 31.

தென்று தெரிகிறது' என்று மட்டும் எழுதிச் சென்றார்கள். இங்ஙனம் எழுதுதற்கு,

துனை காலன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்கு வெள்ளருவிய அறைவா யும்பர்

(அகம்-251)

என்ற அடிகள் காரணமாயுள்ளன. மாமூலர் இயற்றிய இப்பாடலைத் தவிர, மௌரியர்களை வேறு மூன்று செய்யுட்களும் குறிப்பிடுகின்றன. புறநானூற்றில் கள்ளில்—

மௌரியர் ஆத்திரையனார் செய்த செய்யுள் ஒன்று (175), அகநானூற்றுச் செய்யுள் இரண்டு (69, 281). இவை முறையே பரங்கொற்றனாராலும் மாமூலனாராலும் இயற்றப்பட்டன. இவற்றை ஆதாரமாகக் கொண்டே மௌரியர் வரலாற்றை நாம் துணிதல் வேண்டும். புறநானூற்றுச் செய்யுள் ஒன்றினுக்கே பழைய உரையுள்ளது; ஏனையவற்றிற்குப் பழைய உரையில்லை. ஆகவே பழைய உரை கூறுவதனை நாம் முதற்கண் நோக்குதல் வேண்டும். அங்கே 'மோரியராவர் சக்கரவாளச் சக்கரவர்த்திகள்; விச்சாதரரும் நாகரும் என்ப' என்ற விளக்கமுள்ளது. அங்குக் கூறப்பட்டுள்ள மௌரியர் செய்தியும் மேற்சுட்டிய அகச் செய்யுட்களில் வரும் செய்தியும் ஒத்துள்ளமை

விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக விடைகழி யறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
பலர்புர வெதிர்ந்த அறத்துறை நின்னே

(புறம்-175)

விண்பொரு நெடுங்குடை யியல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறையிறந் தகன்றன ராயினும் எனையதூஉம்
நீடலர் வாழி தோழி

(அகம்-69)

முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
அறையிறந் தவரோ சென்றனர்

(அகம்-281)

என்ற பகுதிகளை ஒப்பு நோக்கி அறியலாம். எனவே ஒரு பௌராணிக வரலாறு இங்கே குறிக்கப்பட்டுள்ளமை தெளிவாம். பரங்கொற்றனார் செய்யுளிலும் (அகம். 69) இப் பௌராணிக வரலாறு பொருந்துவதேயாம். மாமூலனார் ஒருவரே இவ்வரலாற்றைச் சரித்திர நிகழ்ச்சி என்று தோன்றுமாறு செய்யுட்கள் இயற்றினர். இவரது இரண்டு செய்யுட்களுள் ஒன்றில் (அகம்-281), 'வடுகர் முன்னுறச் சென்றனர்' என்று இயைத்து 'வடுகர்... மொழிபெயர்தேஎயம் இறந்தனர்' (அகம்-295) என்ற பொருளே படக் கொள்வதில் தடையாதுமில்லை. இங்ஙனம் கொள்வதாயின், இச்செய்யுளும் பௌராணிக வரலாற்றை உட்கொண்டதாகவே முடியும். மேற்குறித்த புறநானூற்றுச் செய்யுளில் (175) 'மோரியர்' என்பதற்குப்பதிலாக 'ஓரியர்' என்பது அதன் முதற்பதிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. பின் பதிப்புக்களில் இது பாடபேதமாகக் காட்டப்பட்டுள்ளது. இச்சொல்லுக்கு 'நில முழுதும் ஆண்ட வேந்தரது' என உரையில் பொருள் கூறப்படுகிறது. இப் பொருளை நோக்குமிடத்தும், 'அகவிடம்' என்று பொருள்படும் 'உர்வீ' எனும் வட சொல்லோடு இச்சொல் தத்திதத் தொடர்பு உடையதாகலாம் என்பதனைக் கருதுமிடத்தும், இதுவே உண்மைப் பாடமாதல் வேண்டும் எனத் தோன்றுகிறது. 'ஓரியர்' என்ற இப் பாடம் ஒரு பௌராணிக வரலாறே கருதப்பட்டது என்பதை நன்குக வலியுறுத்துகிறது.

இங்ஙனமாயின், முன்னே தரப்பட்ட அகச்செய்யுள் (251) சரித்திர பூர்வமாய் நாம் அறிந்துள்ள மௌரியரைக் குறிப்பதாகுமா? குறிக்கமாட்டாது என்று துணிவதே மேற் கூறியவற்ரோடு பொருந்துவதாம். குறிக்கும் என்று கொள்ளின், சில இடர்ப்பாடுகள் உள்ளன. முதலாவது, மோகூர் பாண்டிய நாட்டிலுள்ளது. மௌரியர் படையெடுப்பு இப்பாண்டிய நாடுவரை எட்டியது என்பதற்குச் சான்றில்லை என்பது மேலே காட்டப்பட்டது. இரண்டாவது, மோகூர் மன்னனது அவையில் கோசர்கள் தோன்றி விளங்கினுர்கள் என்பது

அகப்பாடற் செய்தி சரித்திரச்சான்று ஆகாது

பழையன் மோகூ ரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன

(மதுரைக்காஞ்சி, 508—9)

என்ற அடிகளாலும், மாறன் என்று புகழ்சிறந்த இவனுக்குக் கீழடங்கிய வீரர்களே கோசர் என்பது

பெரும்பெயர் மாறன் தலைவ னுகக்
கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்

(மதுரைக்காஞ்சி, 772—3)

என்ற அடிகளாலும் புலனுகின்றன. ஆகவே மௌரியர் சார்பாகக் கோசர்கள் மோகூர் மன்னனுேடு போர் புரிந்து அவனைப் பணிவிக்க முயன்ருர்கள் என்பது பொருந்தாததாம். மூன்ருவது, இப்பொருளில் மோரியர் வரவு தமிழ் நாட்டின் எல்லையகத்து நிகழ்ந்ததெனல் வேண்டும். ஆனுல் தலைமகன் தலைவியைப் பிரிந்து தமிழ் நாட்டு எல்லையைக் கடந்து வெகு தூரத்துக்கு அப்பால் சென்று விட்டனன் என்று கூறுதலே மாமூலனுரது கருத்தாகும் என்பது வெளிப்படை. இதனுலும், மௌரியரது தென்னுட்டுப் படையெடுப்புக் குறிக்கப்பட்டதெனல் பொருத்தமின்மை காணலாம்.

மௌரியரைப்பற்றிய அளவில், இச்செய்யுளைச் சரித்திரச் சான்ருகக் கொள்ளுதல் கூடாது என்பதற்கு

வேறொரு சிறந்த காரணமும் உளது. செய்யுளின் பொருள் விளக்கமின்றி ஐயப்பாட்டிற்கு இடமாயிருத்தலே அக் காரணம். 'வம்பை மோரியர்' என்ற பாடபேதம் ஏடுகளிற் காணப்படுகிறது. 'வம்பை' என்பது ஒரு குறுநில மன்ன னது இயற்பெயராகலாம். 'வம்பையின் அறை (குன்றம்)' எனவும் 'மோரியர் நேமியுருளிய குறைத்த அறை' எனவும் தனித்தனி இயைத்துப் பொருள் கொள்ளலும் கூடும். 'மோகூர்ப் பணியாமையின்' என்ற பாடமும் காணப்படு கிறது. இங்ஙனமாக விளக்கமில்லாததனைச் சான்றாகக் கொண்டு சரித்திரம் அமைத்தல் உண்மையாதல் அரிதாம்.

முடிவாக, ஒரு பௌராணிகச் செய்தியை வேங்கட மலையோடு சார்த்தி வழங்கிய பிற்கால வரலாற்றை உட் கொண்டு மாமூலனார் பாடியுள்ளார் எனத் தோன்றுகிறது. கள்ளில்-ஆத்திரையனார் செய்யுளிலும், (புறம், 175) பரங் கொற்றனார் செய்யுளிலும் (அகம், 69) மலை குறைக்கப் பட்டது ஆஞ்ஞாசக்கரம் செல்லுதற் பொருட்டு என்று கருதற்கு இடமுண்டு. பரத சக்கரவத்தியின் திக்கு விஜயத்தில் அவன் 'அஜிதஞ்ஜயம் எனும் திவ்ய ரதம் ஏறி, தவளச் சத்ரம் கவிப்ப...சக்ர ரத்நம் முன்செல்ல, தண்ட ரத்நங் கைக்கொண்டு ஸேநாபதி மேடு பள்ளம் நிரவி... ஸமதலஞ் செய்து முன் செல்ல விஜயார்த்தத்திற்குத் தெற்காக...நகரியுள் இருந்தனன்....ஸேநாபதி....வெள் ளியம் பெருமலையது ஜகதீதலத்தை யேறித் தமிஸ்ர குகா முகத்தையடைந்து வடதிசை நோக்கி நின்று தண்ட ரத்நத்தாலே குகாத்வார கவாடத்தைத் திறந்தான்' என்று ஜைனரது ஸ்ரீபுராணத்தில் (பக். 114-5; 117-8) காணப் படுகிறது. இது புறநானூற்று உரைகாரர் கூறும் சரித் திரத்தையும் விளக்கி, சக்ர ரத்நமாகிய ஆஞ்ஞாசக்கரமே இங்குக் கருதப்பட்டது என்பதையும் உணர்த்துகிறது.

மயங்கிருங் கருவிய விசும்பு முகனாக
இயங்கிய இருசுடர் கண்ணெனப் பெயரிய
வழியிடை வழங்கா வழக்கரு நீத்தம்
வயிரக் குறட்டின் வயங்குமணி யாரத்துப்

பொன்னங் திகிரி முன்சமத் துருட்டிப்
பொருநர்க் காணுச் செருமிகு முன்பின்
முன்ஞேர் செல்லவும்

(புறம்—365)

என்ற புறச்செய்யுளிலும் ஆஞ்ஞாசக்கரச் செய்தியே புலனுகின்றது.

ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க் கீர்த்தியில் (பெருந்தொகை. பக் 208) 'திகிரிவரைக் கப்புறத்துச் செழுந்திகிரி சென்றுலவ' என வருவதும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது. மாமூலனரது இரண்டு செய்யுட்களுள் ஒன்றிலே (அகம் 281) 'ஒண் கதிர்த் திகிரி' என்பது ஆஞ்ஞாசக்கரம் எனக்கொள்வதில் தடையாதுமில்லை. பிறிதொன்றில் (அகம். 25) மட்டுமே 'தேர்ச்சக்கரம்' உருளுதற்கு மலே குறைக்கப்பட்டது எனக் கதை வேறுபடுகின்றது. இத்தேர்ச் சக்கரமும் பரதர் முதலிய சக்கரவர்த்திகளின் திவ்ய ரதத்திற்கு உரியதாகவே கொள்ளல் பொருந்தும். ஆஞ்ஞாசக்கரம், தேர்ச்சக்கரம் என்ற இரண்டும் சக்கரவர்த்திகளின் தனிப்பெருமையை யுணர்த்துவதற்குக் கூறப்படுவனவே. இதனுல், ஒரு பௌராணிக வரலாறே மாமூலனரும் பிறரும் இயற்றிய அனைத்துச் செய்யுட்களிலும் உள்ளமை புலனும்.

மேற்கூறியவற்றுல், மாமூலனர் குறித்தது சந்திரகுப்தன் முதலிய மௌரியர்களைப் பற்றி அன்று என்பதும் அவர்கள் பாண்டிய நாட்டுக்குள் படையெடுத்து வந்தவர்கள் அல்லர் என்பதும் அறியக்கிடக்கின்றன. எனவே, இச்செய்திகளின் அடியாகத் தமிழ் இலக்கியத்தின் தொன்மையை நிறுவுதல் கூடாது.

இதுகாறும் தமிழ் நாட்டில் வழங்கிய வரலாறுகளை நோக்கினேம். இனி, வடநாட்டுச் சான்றுகளை நோக்குவோம். கி. மு. 150-ல் வாழ்ந்து பாணினீயத்திற்கு மகாபாஷ்யம் இயற்றிய பதஞ்சலிக்குத் தென்னுடு நன்ருகத் தெரிந்திருந்தது. இவர் தமது பாஷ்யத்தில் காஞ்சீபுரத்தையும் (IV. 2. 2-ம் ஆஹ்நிகம்), கேரளத்தையும்

(IV. 1. 4-ம் ஆஹ்நிகம்) குறிப்பிடுகிறார். அசோக சக்கரவர்த்தியின் காலம் கி. மு. 273-232 ஆகும் இச்சக்கரவர்த்தியின் இரண்டாவது, பதின் மூன்றாவது சிலைத்திரு ஆணைகளில் 'சோழ, பாண்டிய, கேரள புத்திரர்கள்' இவரது இராச்சியத்தின் எல்லைக்கு அப்பால் தனியரசு புரிந்து வந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர். பாணினிக்குத் தென்னாடு பற்றி யாதும் தெரிந்திருந்த தாகப் புலப்படவில்லை. ஆனால் பாணினீயத்திற்கு வார்த்திகம் இயற்றிய காத்தியாயனர் சில சில விவரங்கள் கூறுகிறார். தத்திதப் பெயர்களை விரித்துணர்த்து மிடத்துப் 'பாண்டு என்னும் மரபினரின் வழித் தோன்றல் அல்லது அம்மரபினரது நாட்டின் அரசன் என்ற பொருளில் 'பாண்டியன்' என்ற தத்திதத் திரிபு பெற்ற பெயர் வழங்கப்படல் வேண்டும் எனக் கூறினர் (வார்த்திகம்: பாணினி IV. 1. 168). பிறிதோரிடத்து (வார்த்திகம்: பாணினி IV. 1. 175.) சோழர் என்ற சொல் தத்திதத் திரிபு யாதுமின்றி சோழ வம்சத்தினரையும் சோணாட்டு அரசரையும் குறிக்கும் என்றனர். இவற்றால் சோழ பாண்டியர் என்ற பெயர்கள் காத்தியாயனர் காலத்தில் வழக்கில் இருந்தன என்பது நன்கு புலப்படுகிறது. இவர் காலம் சுமார் கி. மு. 350 என்று கொள்ளலாம். இங்குக் கூறியவற்றால், உத்தேசம் கி. மு. 350-ல் தொடங்கித் தமிழ் நாட்டு மூவேந்தர்களும் சரித்திரப் பிரசித்தரா யிருந்தனர் என்பது விளங்கும். இதற்கு எவ்வளவு காலத்திற்கு முன் இம் மூவேந்தர் மரபுகளும் தோன்றின என்பது நம்மால் அறியக்கூடவில்லை. சுமார் ஆயிரம் ஆண்டுகட்குப் பிற்பட்டு, கி. பி. 14-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பரிமேலழகர் 'தொன்றுதொட்டு வருதல்: சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்' (குறள் 955 உரை) என்று எழுதினர். நம்மால் அறியக் கூடாத பழைமை என்பதுதான் இவ்வாக்கியத்தின் கருத்து.

வடமொழிச் சான்றுகள்

தொல்காப்பியத்தின் பாயிரத்தில் 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' என வருகிறது. பாணினீயத்தைக்

கூறுது ஐந்திரத்தைக் கூறினமையாலும், இரண்டனுள் ஐந்திர வியாகரணம் முந்தியது ஆதலாலும், தொல்காப்பியம் பாணினீயத்திற்கு முன் தோன்றியது ; எனவே பாணினீயத்தின் காலமாகிய கி. மு. 450-க்கு முற்பட்டது. தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலாதலின், இதற்கு முற்படவே, தமிழ் இலக்கியங்கள் பல தோன்றிப் பெருகியிருத்தல் வேண்டும். இங்ஙனம் பெருகுவதற்குச் சில நூற்றாண்டுகளேனும் சென்றிருத்தல் வேண்டும். ஆகவே, தமிழ் இலக்கியம் கி. மு. 7 அல்லது 8-ம் நூற்றாண்டிலாவது தொடங்கியிருத்தல் வேண்டும் என்று ஒரு சார் ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.

இம் முடிவு தொல்காப்பியத்தின் காலத்தைப் பொறுத்தது. பின்னர் இக்காலத்தை ஆராய்ந்து துணிய எண்ணியுள்ளேன்[1] பாணினீயத்தைக் கூறுதது தொல்காப்பியம் அதற்கு முற்பட்டது எனத் துணிதற்கு ஒரு காரணமாக மாட்டாது என்பதனைமட்டும் இங்கே தெளிவுறுத்த விரும்புகிறேன். முதலில், இவ்வாறு கூறுதல், தருக்க நெறியோடு பொருந்துவதன்று. தற்காலத்து ஓர் ஆசிரியன் நன்னூலைப் பின்பற்றி ஓர் இலக்கண நூல் இயற்றுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனுக்கு அளித்த சிறப்புப் பாயிரத்தில்

'நன்னூல் உணர்ந்த மன்பேர் ஆசான்'

என வருகிறதென்றும் கருதிக்கொள்வோம். இப்பாயிரம் தொல்காப்பியத்தை உணர்ந்தானைக் கூறுமையினாலே, இவ் ஆசிரியன் தொல்காப்பியருக்கு முற்பட்டவன் என்று துணிதல் சரியாகுமா? இது போன்றதேயாகும் மேலே குறித்த ஆராய்ச்சியாளர் கூற்று. இரண்டாவது, வேறோர் உண்மையும் கவனித்தற் குரியது. ஐந்திர வியாகரணம் ஓர் இலக்கண நெறி அல்லது மதமேயன்றி, ஓர் இலக்கண நூலன்று என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. ஒரு நூலெனக் கொண்டவிடத்தும் அது பாணினீயத்திற்கு முந்தியது என்பது சந்தேகம். ஐந்திர நெறியைப் பின்பற்றி அதன் வழியிற் பல வியாகரணங்கள் தோன்றின.

1. தமிழ்ச்சுடர் மணிகள் பக். 27 பார்க்க.

ஐந்திரம், பாணினீயம் என்ற இரண்டனுள், ஐந்திர முறையே பிற மொழியாளர்கள் எளிதிற் பின்பற்றக் கூடியது. பாணினீயமோ எனின், ஸமிஜ்ஞையும் ஸங் கேதமும் நிறைந்து பெரும்பாலும் பின்பற்ற இயலாதபடி உள்ளது, இதனுலேயே தொல்காப்பியர் ஐந்திரத்தைப் பின்பற்றினர் என்று கொள்வது நேரிது. எனவே, இக் காரணங்கொண்டு பாணினீயத்திற்கு முற்பட்டது தொல் காப்பியம் எனல் பொருந்தாது. இதுபற்றித் தமிழ் இலக் கியத்தின் தொன்மையை நிறுவ முயல்வதும் தகாது.

மேற் கூறியவற்றை நோக்கும்போது, கி. மு. 300 அளவில் தமிழ் அரசுகள் மூன்றும் வடநாட்டுச் சக்கர வர்த்திகள் நட்புரிமை கொள்ளும்படி மேம்பாடுற்று இருந் தன என்பது புலப்படும். இம்மேம்பாடு கல்வி முதலிய வற்றின் சார்பினுலே விளங்கியிருத்தல் வேண்டும். ஆகவே, கி. மு. 300-க்கு முன் தமிழ் இலக்கியங்கள் தோன்றி நன்கு மதிக்கத்தக்க ஒரு நிலையை அடைந்திருந் தன என்று நாம் ஊகிக்கலாம். இம்முடிவிற்கு வேறு சான்றுகளும் உள. அவற்றை அடுத்து விவரிப்போம்.

6

தமிழ் இலக்கியத்தின் தொன்மை - III

தமிழ் நாகரிகத்தின் தொன்மைக்குக் கிரேக்கர் முதலிய அந்நிய நாட்டினரும் சான்று பகர்கின்றனர். **ஹிரோடோட்டஸ் (Herodotus)** என்பவர் ஒரு சரித்திரப் பேரறிஞர். இவரைச் 'சரித்திரத்தின் பிதா' (**the Father of History**) என்று புகழ்வார்கள். இவர் வாழ்ந்த காலம் கி. மு. 5-ம் நூற்றாண்டாகும். இந்தியாவைக் குறித்து இவர் கூறும் செய்திகளுள் ஒன்று மிக விநோதமானது. பொன்னைத் தோண்டியெடுக்கும் ஒருவகை எறும்பு உண்டென்று எழுதினர். காட்டு மரங்களிற் காய்க்கின்ற ஒருவகைக் கம்பிளியால் இந்தியர்களது ஆடை நெய்யப்படுகிறதென்றும், இக் கம்பிளி ஆட்டின் ரோமத்தைக் காட்டிலும் அழகும் மென்மையும் உள்ளதென்றும் இவர் கருதினர்.

தமிழரும் கிரேக்கர் முதலியோரும்

பருத்திப் பெண்டின் பனுவல்

(புறம். 125)

கோடைப் பருத்தி வீடு நிறை பெய்த
மூடைப் பண்ட மிடைநிறைந் தன்ன

(புறம். 393)

பாம்புரி யன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியின் இழையணி வாரா
ஒண் பூங் கலிங்கம்

(புறம், 383)

என்பன போன்ற செய்யுட் பகுதிகளால் பண்டைக் காலத்தே தமிழ் நாட்டில்[1] பருத்திப் பஞ்சினுல் ஆடை

---

1. The Coromandal coast supplied cotton stuffs — Reinaud J. A. Mai - Juin 1883, 308 - 9.

நெய்தல் தற்காலத்துக் குடிசைத் தொழில்போல வழங்கியது புலனாகும். அரசனியர் என்ற (**Arasanians**)[1] ஒரு சாதியிலுள்ள பெண்கள் ஆடை நெய்தலில் வியக்கத்தக்க திறமை வாய்ந்தவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளார்கள். 'பருத்திப் பெண்டு' என மேலே காட்டியது இச் சாதிப் பெண்களின் தொழிலைக் குறிப்பது போலத் தோன்றுகிறது. ஆனால் ஹிரோடோட்டஸ் தென்னிந்தியாவின் நிகழ்ச்சியாக இந்த ஆடை நெய்தலைக் குறிப்பிட்டுச் சொல்லாமையினாலே, தமிழ்நாடுதான் கருதப்பட்டது என்பது உறுதியாய்க் கொள்ள முடியாது. ஆனால், தென்னிந்தியாவில் வாழும் திராவிட மக்களை இவர் எதியோப்பிய ஜாதியார் எனக் குறிப்பிடுகிறார்.

சுமார் 100 ஆண்டுகளுக்குப் பின் வந்த **டேஸியஸ்** (**Ktesias**) என்பவர் இந்தியாவைப் பற்றித் தனியாகவே ஒரு நூல் இயற்றினர். இவர் டேரியஸ் II (Darius II) என்ற பாரஸீக அரசனுக்கு அரண்மனை வைத்தியராகச் சுமார் கி. மு. 416-ல் நியமனம் பெற்றார். இவரது 'இந்திக்கா' (Indika) என்னும் நூல் இப்போது கிடைக்கவில்லை. ஆனால் இந் நூலின் சுருக்கமொன்றை, கி. பி. 858-ல் காண்ஸ்டாண்டிநோப்பிளில் பாத்திரியார்க் (Patriarch) பதவி வகித்த **போதியஸ்** (Photios) என்பவர் இயற்றினர். இச் சுருக்கமும், வேறு சில ஆசிரியர்கள் தத்தம் நூலில் காட்டும் மேற்கோள்களுமே இப்போது அகப்படுவன. இந்திய மொழியில் 'கார்ப்பியன்' என்றும், கிரேக்க மொழியில் முரோரோதா (Muroroda) என்றும் அழைக்கப்படும் ஒரு வாசனை மரம் உண்டென்று டேஸியஸ் குறிப்பிடுவதாகப் போதியஸ் கூறினர். 'கார்ப்பியன்' என்ற பெயரைப் பற்றிக் **கால்டுவெல்** ஆசிரியர் ஆராய்ந்து இது கருவா என்ற தமிழ்ச்

டேஸியஸின் கூற்று

---

1. Ancient India as described by Classical writers: McCrindle, p. 199.

2. Ancient India as described by Ktesias the Knidian: McCrindle, p. 29 - 30 f. n. See p. 89 ff. of the latest edition (1915) of Caldwell.

சொல் என்றும், கிரேக்க மொழியில் முதன் முதற் காணும் தமிழ்ச்சொல் இதுவே என்றும் துணிந்தனர். ஆனால் 'கருவா' என்ற சொல்லின் வடிவமே இது தமிழ்ச் சொல்லன்று எனக் காட்டவல்லது. அன்றியும் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இச் சொல் காணப்படுமாறில்லை. ஆகவே இச் சொல்லால் தமிழ் மொழியின் தொன்மை குறிக்கப்பட்ட தெனல் சாலாது. வேறோர் இடத்தில் தென்னாட்டு மக்களின் செய்தியை டேஸியஸ் உணர்த்தினா ரென லாஸ்ஸென்[1] என்ற ஆராய்ச்சியாளர் கூறினர். இதற்கு 'நாய்முகத்தர்' எனப் பொருள்படும் 'கினோகெபாலாய்' (**Kynokephaloi**) என்ற கற்பித மக்களைக் குறித்து டேஸியஸ் கூறும் கூற்றே ஆதாரமாகும். தென்னாட்டு மக்களுக்கும் இக் கூற்றிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பது எளிதில் அறியலாம். எனவே டேஸியஸ் தென்னாடுபற்றி யாதேனும் கதையினாற் போலும் அறிந் துள்ளாரோ என்பது சந்தேகந்தான்.

மெகாஸ்தனீஸ் இந்த ஆசிரியர்க்குச் சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பின் (கி. மு. 302), சந்திரகுப்த மௌரியனது அரசவைக்குத் தூதராக வந்த **மெகாஸ்தனீஸ்** தமிழ் நாட்டைத் தெளிவு படச் சுட்டிக் கூறியிருக்கிறார். இவர் கூறுவதன் சுருக்கம் வருமாறு :

'பாண்டிய நாட்டினர் பெண்ணரசிகளால் ஆளப்படு கின்றனர். இவ்வரசிகளுள் முதல் அரசி ஹெர்க்குலிஸின் புதல்வி யென்று சொல்லப்படுகிறாள். நைஸா நகரம் இப் பாண்டிப் பிரதேசத்திலுள்ளது எனக் கூறுவர். ஜூபிட ரின் புண்ணிய ஸ்தலமாகிய மேருமலையும் இங்குள்ள தாகவே கருதப்படுகிறது. இதன் குகை ஒன்றில் பாக்குஸ் (**Bacchus**) வளர்ந்து வந்தனனென்று பண்டைக்காலத்து இந்தியர்கள் உறுதியாய் நம்பினர்.

'ஹிராக்ளீஸ்[2] இந்தியாவில் ஒரு பெண்ணைப் பெற்று அவளுக்குப் "பாண்டியா" என்று பெயரிட்டான். இந்தியா

1 Ancient India as described by Ktesias the Knidian : McCrindle, pp 84—87.

2 Ancient India as described by Megasthenes and Arrian : McCrindle, p. 156.

வின் தென் பகுதியாகக் கடல் வரையுள்ள பிரதேசத்தை அவள் ஆளக்கொடுத்து, அப்பிரதேசத்தை 365 கிராமங்களாகப் பகுத்து, அவளது குடிஜனங்களை அக் கிராமங்களில் வசிக்கும்படி செய்தான். ஒவ்வொரு கிராமத்தாரும் வருஷத்திற்கு ஒருநாள் முறை வைத்து, அந்நாளில் அரசிக்குரிய இறைத்தொகையைக் கொண்டுவந்து செலுத்த வேண்டும். இவ்வாருக, யாரேனும் முறைகாரர்கள் ஆண்டு முழுவதும் அரசிக்குத் துணையாக இருப்பார்கள். முறைப்படி இறைசெலுத்தத் தவறியவர்களை இவர்கள் தண்டித்துச் செலுத்தச் செய்வார்கள்.'

அரியன் கூறும் கதை

மெகாஸ்தனீஸ் தூதருக்குச் சுமார் 400 ஆண்டுகளுக்குப் பின் **அரியன்** என்பவர் (கி. பி. 131). இக் கதையை இன்னும் விரிவாகச் செய்தனர்[1]. அது வருமாறு :

ஹிராக்ளீஸின் முதுமைப் பருவத்தில் பாண்டியா பிறந்தாள். இவளுக்கு ஏழு வயதாகிவிட்டது. இந்தியா முழுமையும் ஆளுதற்கு இவள் மூலமாகச் சந்ததியுண்டாக வேண்டுமென்று ஹிராக்ளீஸ் விரும்பினன். ஆனல் இவளது தகுதிக்கேற்ற வரன் கிடைக்கவில்லை. ஆகவே இவ் இளவயதிலேயே இவளை மணப்பருவமுறச் செய்து, தானே இவளை மணஞ் செய்துகொண்டனன். நாட்டிலுள்ள பெண்களனைவரும் இவ்வாறு மிக்க இளமையிலேயே மணப்பருவம் அடையும்படியான வரத்தையும் ஹிராக்ளீஸ் அளித்தான்.

இங்கே பாண்டிய தேசத்தைக் குறித்துப் பல்வேறு கட்டுக்கதைகள் பரவியிருந்தமை காணலாம். இக் கதைகளால் பெரும் பயன் இல்லை; எனினும் இரண்டு விஷயங்கள் கவனித்தற்குரியன. முதலாவது மெகாஸ்தனீஸ் காலத்தில் பாண்டி நாடு குறித்த பல கதைகள் வட இந்தியாவிற் கேட்கப்பெற்று அத் தூதர் செவியிலும் எட்டியிருந்தன. இதனல் தமிழ்த் தேசத்திற்கும் வட இந்தியாவிற்கும் போக்குவரவு அருகியே யிருந்ததென்று நாம் ஒருவாறு ஊகிக்கலாம். இரண்டாவது தமிழ் நாடுகளுள் பாண்டிய நாடு ஒரு தனிச் சிறப்பு உடையதாகக்

---

1 Ancient India, as described by Megasthenes and Arrian : McCrindle, pp 158 – 9.

கருதப்பட்டது. சேர நாடு, சோழநாடு என்ற நாடுகளைக் காட்டிலும் இந்நாடு ஒருவகையிற் புகழ்பெற்று விளங்கியதென நாம் கொள்ளுதற்கு இயைபுள்ளது. இங்ஙனம் விளங்கிய காலம் உத்தேசம் கி. மு. 350-க்கு முன்பாதல் வேண்டும்.

மெகாஸ்தனீஸ் காலத்திற்கு 100 ஆண்டுகளுக்குப் பின்னர் **எரட்டோஸ்தீனிஸ் (Eratosthenes)** இந்தியாவைப் பற்றிப் பொதுவாக எழுதியுள்ளார். இவர் அலெக்ஸான்டிரியாவிலிருந்த நூல்நிலையத்திற்குத் தலைவராக கி. மு. 240-196 வரை அமர்ந்தவர். இவர் தாம் பூ-விவரண நூலை ஒரு சாஸ்திரம் என்று கொள்ளத்தக்க அளவில் முதன்முதலில் செய்வித்தவர். பல நூல்களிலும் சிதறிக் கிடந்த விவரங்களைத் திரட்டி ஒழுங்குபடத் தொகுத்துச் சாஸ்திர முறையில் அவற்றை அமைத்தனர். ஆனால் இந்தியாவின் வடிவைக் குறித்து இவர் கொண்டிருந்த கொள்கை முற்றுந் தவறானது. மக்கள் வாழ்ந்த பூமி முழுதும் தாரஸ் மலைத் தொடராலும் மத்தியதரைக் கடலாலும் இரு கூறாகப் பகுக்கப்பட்டுள்ளது என்றனர். தென் கூற்றில் கீழையோரத்தில் நமது இந்தியா அமைந்திருந்ததாம். இந் நாட்டை, அதன் மலைகள், நதிகள், கடல்கள் முதலியனவற்றைக் கூறி வர்ணிக்கிறார். ஒரே வகுப்பினர் இந்நாட்டில் வாழ்ந்து வந்தனர் என்று இவர் கருதியதாகத் தோன்றுகிறது என்பர்[1] ஒருசிலர். எனவே தென்னிந்தியாவில் திராவிட மக்கள் என்ற ஒரு தனிப்பட்ட வகுப்பினர் வாழ்ந்தனர் என்பது இவர் அறியாத விஷயங்களில் ஒன்றாம். ஆனால் இவர் தென்னிந்திய மக்களை கொனியகி (**Koniaki**) என்ற பெயரால் அழைத்துள்ளார். இலங்கையில் யானை மிகுதியாயுள்ளன என்றும் குறித்துள்ளார்.[2]

பிழைபட்ட சரித்திரங்கள்

---

1. Ancient India as described in classical Literature: Mc Crindle, p. 96.

2. Rawlinson: Intercourse between India and the Western world, p. 93.

ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் கி. மு. 150-ல் வாழ்ந்த ஹிப்பார்க்கஸ் (Hipparchos) என்ற வானசாஸ்திரி எரட்டோஸ்தீனிஸ் கொண்டுள்ள முடிபுகள் பலவற்றையும் கண்டித்து எழுதினர். ஆனால் இவரும் பல இடங்களில் பிழை போயினர். இந்தியாவின் கடை கோடியில் மேரு மலை உள்ளது என்பது இவர் கூறியதாகும்.

தென்னாட்டிலுள்ள மக்கள் ஒரு தனிப்பட்ட வகுப்பினர் என்று முதலில் கூறியவர் ஸ்ட்ராபோ (Strabo) என்பவர். இவர் அகஸ்டஸ் காலத்திலும் டைபீரியஸ் காலத்திலும் வாழ்ந்து கி. பி. 24-ல் மரணமடைந்தனர். இவர் தம் பெரு நூலாகிய பூ-விவரண சாஸ்திரத்தை கி. பி. 19-ல் எழுதி முடித்தனர். இவர் ஒரு பெரிய யாத்திரிகர். பல தேசங்களுக்கும் சென்று பார்வையிட்டுத் தமது அனுபவத்தை முந்து நூல்களில் கண்டவற்றோடு சேர்த்து நோக்கி ஆராய்ந்து தம் பெரு நூலை எழுதினர். இந்நூலைக் குறித்து, அமைப்பின் பெருமையினாலும், அதன் கண்ணுள்ள விஷயங்களின் வகை மிகுதி முதலியவற்றாலும், பண்டைக் காலத்துள்ள பூ-விவரண நூல்கள் அனைத்தையும் இந்நூல் வென்றுவிடுகிறது என்று ஹம்போல்ட் (Humboldt) கூறுகிறார். நில அமைப்பு, அரசியல், வாணிகம், சரித்திரம், கணிதம் முதலிய பல துறைகளுக்கு முரிய விஷயங்கள் இதன்கண் காணப்படுகின்றன என்பர். இந்நூலில் தென்னாடு பற்றி வெளியாகும் விஷயங்களைக் கீழே கண்டு கொள்ளலாம்.

ஸ்ட்ராபோ கூறும் நூதன விவரங்கள்

1. இந்தியாவில் ஓரிடத்திலுள்ள பாண்டியன்[1] என்ற ஓர் அரசனிடமிருந்து ஒரு தூதுவன் தமது கோஷ்டியுடன்

---

1. போரஸ் என்ற பாடபேத முண்டு.

Ancient India, as described in classical Literature : Mc Crindle p. 9, 17. 20, 26, 41

ஆராய்ச்சியாளர்கள் பாண்டியன் என்றது பிழை என்று முடிவு கட்டுகிறார்கள்; அவர்கள் கூறும் காரணங்கள் வன்மையுடையன வாய்த் தோன்றுகின்றன.

Rawlinson: **intercourse between India and the Western World** p. p. 107-8.

மிக்க வெகுமதிகளோடு ஸீஸர் அகஸ்டஸிடம் வந்தனன். இத் தூதுகோஷ்டியைச் சேர்ந்தவர்களை அண்டியாக் என்ற நகரில் நிக்கோலோஸ் டமாஸ்கஸ் பார்த்தான்.

2. தெற்கேயுள்ள மக்கள் தமது நிறத்தில் எதியோப்பியரை ஒத்திருக்கிறார்கள். ஆனால் முகக்கட்டிலும் உரோமத்திலும் மற்றை மக்களைப் போலவே இருக்கிறார்கள்; அவர்கள் உரோமம் ஈரப் பதத்தால் சுருட்டையாவதில்லை. வடக்கேயுள்ள மக்கள் எகிப்தியரைப் போலுள்ளார்கள்.

3. அங்கே மௌஸிக்கெநோஸ் தேசத்தில்[1] சில பெரிய மரங்கள் உள்ளன. இவற்றின் கிளைகள் 12 முழம்வரை நீளமா யுள்ளன; இக்கிளைகள் பூமியைத் தொடுவனபோல வளைந்திருக்கின்றன. பூமியுட் சென்று, புதிதாக நட்டன போல வேருன்றி விடுகின்றன.

4. மௌஸிக்கெநோஸ் தேசத்தவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். 130 ஆண்டுகள் வரை அவர்கள் உயிர் வாழ்கிறார்கள். அவர்கள் மிதூண் கொள்வதில்லை; நல்ல ஆரோக்கியமுள்ளவர்களாக இருக்கிறார்கள்; ஒரு பொது இடத்தில் ஒன்றாக இருந்து உடன் உண்ணுகிறார்கள்; அவர்களுடைய உணவு வேட்டையிற் கிடைத்தனவே. அவர்களுடைய நாடு மிகச் செழிப்புள்ளது. வேண்டுவன எல்லாம் மிகுதியாகத் தருவது. தங்கமும் வெள்ளியும் ஏராளமாய் விளைவது. என்றாலும் இந்த உலோகங்களை அவர்கள் உபயோகிப்பதில்லை. அங்கே அடிமைகள் இல்லை. இளைஞர்களைத் தொழிலின் பொருட்டு ஏவல் கொள்வார்கள். அவர்கள் வைத்திய சாஸ்திரம் தவிர வேறொன்றும் பயில்வதில்லை. போர்ப் பயிற்சி முதலியன தீங்கு விளைக்கும் என்ற கொள்கையினர். கொலை முதலிய கொடும் பாதகங்கள் பற்றித்தான் அவர்கள் நீதிஸ்தலத்திற்குச் செல்வது. ஒருவன் நம்பிக்கைத் துரோகம் செய்வானானால், அதற்குத் தங்களையே நொந்துகொள்வார்களே யன்றி நீதிஸ்தலத்திற்குச் செல்லமாட்டார்கள். உடன்படிக்கை விஷயத்தில் ஒவ்வொருவனும் தனது நன்மையைத் தேடிக்கொள்வது கடமையாகும்.

இம் மேற்கோள்களில், ஸ்ட்ராபோ தென்னிந்தியாவைக் குறித்துச் சில நூதன விவரங்கள் தருகிறார். இவை

1. இதனைச் சிந்து நதியின ஆரம்பப் பிரதேச மென்பர். ஆனால் இந்தியாவின் கடைகோடியிலுள்ள தெனக் குறிப்பிடுவதனால், திராவிட தேசமாக இருக்கலாம்.

உண்மை விஷயங்களே என்பதை நாம் உணர்ந்தாலும், இவற்றுள் சில தமிழ்த் தேசம் பற்றியன என்று உறுதியாய்க் கொள்ளுதற்குரிய சான்றுகள் இல்லை.

பழைய வாணிக விவரங்கள்

ஸ்ட்ராபோவின் நூலுக்குப் பின், 'பெரிப்ளூஸ்' என்ற ஒரு நூலானது கி. பி. 60-ல் எழுதப்பட்டது. ஆசிரியர் இன்னாரென்று தெரியமாட்டாது. நூலின் முழுப் பெயர் '**The Periplus of the Erythraean Sea**' என்பது. இந் நூலின் 53 முதல் 60 முடியவுள்ள பகுதிகளில் வாணிகஞ் செய்வோர்க்குப் பயன்படுமாறு, வழி, வாணிக ஸ்தலங்கள் கிடைக்கும் பொருள்கள் முதலிய சில விவரங்கள் தரப்பட்டுள்ளன:—

53. தமிழகத்தின் முதல் வியாபார ஸ்தலங்களாகிய நௌரா, திண்டிஸ் என்ற நகரங்கள் அடுத்து உள்ளன. இவற்றிற்குப்பின் முஸிரிஸ், நெல்கிண்டா என்ற இரண்டு துறைமுகங்களும் உள்ளன. இவை இரண்டும்தான் இப்பொழுது வாணிகத்தில் தலைமை வகிக்கும் நகரங்கள்.

54. திண்டிஸ் சேர ராஜ்யத்தைச் சேர்ந்தது. அது கடலுக்கு அருகில் வெளியான இடத்தில் உள்ள ஒரு கிராமம். முஸிரிஸ் நகரமும் அந்த ராஜ்யத்தைச் சேர்ந்ததே. இங்கே கிரேக்கர்களால் அரேபியாவிலிருந்து அனுப்பப்பட்ட வாணிகப் பொருள்களைக் கொண்டு வரும் கப்பல்கள் மிகுதியாக உள்ளன. அது ஒரு நதியின் அருகில் இருப்பது; திண்டிஸிலிருந்து நதி வழியாகவும், கடல் வழியாகவும் 500 ஸ்டேடியா[1] தூரத்திலும், கரையிலிருந்து நதிக்கு மேலாக 20 ஸ்டேடியா தூரத்திலும் உள்ளது. நெல்கிண்டாவும் முஸிரிஸிலிருந்து நதி வழியாகவும், கடல் வழியாகவும் 500 ஸ்டேடியா தூரத்தில் உள்ளது. ஆனால் இது வேறொரு ராஜ்யமாகிய பாண்டிய ராஜ்யத்திற்கு உரியது. இந்த ஊரும் கடலிலிருந்து 120 ஸ்டேடியா தூரத்தில் ஓடுகிற ஒரு நதியின் கரையிலே அமைந்துள்ளது.

55. இந்நதியின் சங்கமத்தில் வேறோர் ஊர் உள்ளது. அதுதான் பகர கிராமம். நெல்கிண்டாவிலிருந்து வழிப் பிரயாணம் செய்யும் கப்பல்கள் இந்த இடத்தில் தங்கி நங்கூரமிட்டு வாணிகப் பொருள்களை இங்கே ஏற்றிக்கொள்ளுகின்றன. ஏனென்றால் நதியில் மணல்மேடுகள் மிகுதியாகவும்

1. ஒரு ஸ்டேடியம் 202 கெஜம்.

கால்வாய்கள் தெளிவாய்ப் பிரிந்துசெல்லாமலும் உள்ளன. இந்த இரண்டு வாணிக ஸ்தலங்களுக்கும் உரிய அரசர்கள் உள்நாட்டில் வசிக்கிறார்கள். கடலிலிருந்து இந்த இடங்களுக்கு வருபவர்களுக்கு அறிகுறியாக நாகங்கள் அவர்களைச் சந்திப்பதற்கு வருகின்றன. இவைகள் கருநிறம் உடையனவாயும், குறுகின தலையுடையனவாயும், ரத்தம் போல் செந்நிறமுள்ள கண்களை உடையனவாயும் இருக்கின்றன.

56. இந்த வியாபார ஸ்தலங்களுக்கு, மிளகும், மலபத்ரமும் ஏராளமான அளவில் கிடைக்கிறபடியால் பெரிய கப்பல்களை அனுப்புகிறார்கள். முதலாவதாக நாணயங்களை மிகுதியாக இங்கே கொண்டுவருகிறார்கள். மெல்லிய ஆடை, பவளம், கரடு முரடான கண்ணாடி, செம்பு. ஈயம், தகரம், அரிதாரம், மாலுமிகளுக்கு வேண்டும் கோதுமை முதலியவைகளும் கொண்டுவரப் படுகின்றன. கோதுமை வியாபாரப் பொருளல்ல. மெல்லிய ஆடையும், மதுவும், அதிகமாகக் கொண்டுவரப்படுவன அல்ல. இந்த வியாபார ஸ்தலங்களை அடுத்துள்ள ஒரே ஒரு பிரதேசத்தில் கொட்டனாரா என்ற பகுதியில்தான் மிளகு மிகுதியாக விளைகின்றது. இதை ஏற்றுமதி செய்கின்றார்கள். இதைத் தவிர நன் முத்துக்கள், தந்தம், பட்டாடைகள், கங்கையிலிருந்து வந்துள்ள சில வேர் வகைகள், உள்நாட்டிலிருந்து வந்துள்ள மலபத்ரம், பலவகையான மணிக்கற்கள், வைரங்கள், பச்சைகள், ஆமை ஓடுகள் முதலியனவும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கிரிஸீ தீவிலிருந்தும் தமிழகத்தின் கடற்கரையிலுள்ள தீவுகளிலிருந்தும் ஏற்றுமதிகள் செய்யப்படுகின்றன. அனுகூலமான பருவத்தில் ஜூலை மாதத்தில் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு இங்கே கடல் யாத்திரை செய்கிறார்கள்.

57. மேலே குறித்தபடி முழுப் பிரயாணமும் காணாவிலிருந்தும், யுடிமான் அரேபியாவிலிருந்தும் சிறு மரக்கலங்களில் முன்பு செய்துவந்தார்கள். இவைகள் வளைகுடாக்களின் கரையோரமாகச் சென்றன. மாலுமித் தலைவராக இருந்த ஹிப்பாலுஸ் துறைமுகங்களின் இருப்பையும் கடலின் நிலைமையையும் நோக்கி, கடலுக்குக் குறுக்காக நேரே செல்லும் வழியொன்றை முதன் முதலில் கண்டுபிடித்தார். ஏனென்றால் நம்முடைய நாட்டில் ஏடீஸியன் காற்றுக் கிளம்புகிற அதே காலத்தில் இந்தியாவின் கரைநோக்கிக் கடலிலிருந்து காற்றுக் கிளம்பி அடிக்கிறது. இந்தத் தென்

மேற்குக் காற்று, மேற்குறித்தபடி முதன் முதலில் கடல் வழியைக் கண்டுபிடித்தவர் பெயரால், ஹிப்பாலுஸ் என்று அழைக்கப்படுகிறது. அக்காலத்திலிருந்து இன்றுவரை கப்பல்கள் சில கானுவிலிருந்து நேராகவும், சில வாசனைத் திரவியக் கொடுமுனை (Cape of Spices) யிலிருந்தும் புறப் படுகின்றன. தமிழகத்திற்கு வரவேண்டும் கப்பல்கள் காற் றுக்கு வெகுதூரம் விலகித் தலைமுகத்தை வைத்துக் கொள்ளுகின்றன. பாருகச்சம், லிதியா முதலான இடங் களுக்கு வரும் கப்பல்கள் கரையோரமாக மூன்று நாள் சென்று மீதிக் காலத்தில் அவ்விடத்திலிருந்து கடலுக்குள் நேரான வழியைப் பின்பற்றி அனுகூலமான காற்றோடு ஓடிச் சென்று தரைக்குச் சில தூரத்தில் முன் சொன்ன வளைகுடாக்களுக்கு வெளிப் புறத்தில் பாய் விரித்துக் கடக்கின்றன.

58. பகரைக்கு அப்பால் கருஞ் செங்குன்றம் ஒன்றும், கடற்கரையைத் தொட்டுத் தென்புறமாய் நீண்டு கிடக்கிற பறலியா என்னும் பிரதேசம் ஒன்றும் உள்ளன. கருஞ் செங்குன்றப் பிரதேசம் பலிதா (Balita) என்று பெயர் பெறும். அதில் நல்ல துறைமுகம் ஒன்றும் கரையை அடுத் துக் கிராமம் ஒன்றும் உண்டு. இதற்கு அப்பால் குமரி என்று அழைக்கப்பெறும் பிரதேசம் உளது. இங்கே குமரி முனையும் ஒரு துறைமுகமும் உள்ளன. தங்கள் வாணாளைப் பவித்திரமாக்க விரும்பும் மக்கள் இங்கே வந்து நீராடித் துறவுபூண்டு வசிக்கிறார்கள்; பெண்பாலரும் இவ்வாறே செய்கின்றார்கள். ஏனென்றால், முன்னொரு காலத்தில் பெண்தெய்வம் ஒன்று இங்கே நீராடி வசித்து வந்ததாம்.

59. குமரியிலிருந்து தெற்காகக் கொற்கைவரை இப் பிரதேசம் நீண்டு கிடக்கிறது. இந்தக் கொற்கையில்தான் முத்துக் குளிக்கிறார்கள்; இவ்வேலை தண்டனை பெற்ற குற்றவாளிகளால் செய்யப்படுகிறது. இது பாண்டிய ராச்சியத்தைச் சார்ந்தது. கொற்கைக்கு அப்பால் கரை நாடு என்று அழைக்கப்பெறும் வேறு ஒரு பிரதேசம் உள்ளது. இது வளைகுடாவை ஒட்டியுள்ளது. இதன் உள்நாடு அர்கரு (Argaru) என்று சொல்லப்படும். இந்த இடத்திற்கே கடற்கரையைச் சுற்றிச் சேகரிக்கப்படும் முத் துக்கள் கொண்டுவரப் படுகின்றன. வேறு ஓர் இடத்திற் கும் கொண்டுசெல்லப்படுவதில்லை. இங்கிருந்து அர்கரிடிக் (Argaritic) என்னும் மெல்லிய ஆடைகள் ஏற்றுமதி செய் யப்படுகின்றன.

60. இப்பிரதேசங்களிலுள்ள வியாபார ஸ்தலங்களிலும், தமிழகத்திலிருந்தும் அதற்கு வடக்கிலிருந்தும் கப்பல்கள் வந்து தங்கும் துறைமுகங்களிலும், மிக முக்கியமானவை முதலில் கமரா(Camara),பின் பொதுகா (Poduca), பின் சோபத்மா(Sopatma)என்பவைகளே. இவைகள் கிடக்கும் அடைவிலேயே இங்கே தரப்பட்டுள்ளன. கரை வழியாக டமரிகாவரை செல்லும் கப்பல்கள் இங்கேயுள்ளன. பல கட்டை மரங்களை ஒன்றுகச் சேர்த்துச் செய்த பெரிய மரக் கலங்களும் இங்கே உண்டு. இவைகளுக்கு சங்காடம் (Sangara) என்று பெயர் கிரிஸி (Chryse) க்கும் கங்கைப் பிரதேசத்திற்கும் போகும் மரக்கலங்கள் மிகப் பெரியன வாய் இருக்கும். அவற்றிற்கு கொலந்தியா (Colandia) என்று பெயர். இவ் இடங்களில் டமரிகாவில் செய்யப்படு கின்ற பொருள்கள் அனைத்தும் இறக்குமதி செய்யப்படுகின் றன. எகிப்து தேசத்தினின்றும் கொண்டு வரப்படும் பொருள்களில் பெரும்பாலனவும் டமரிகாவிலிருந்து கொண்டுவரும் பொருள்களில் பெரும்பாலனவும் பற வியா வழியாகக் கொண்டு வரும் பொருள்களும் இங்கே வந்து சேர்கின்றன.

பெரிப்ளூஸ் கூறுவனவற்றிலிருந்து பல அரிய செய்தி கள் தமிழ்நாட்டினையும் தமிழ்நாட்டு வியாபார நிலையை யும் குறித்து வெளியாகின்றன. இவர் கூறும் திண்டிஸ், முசிரி[1] என்னும் பட்டினங்கள் சங்க நூல்களில் பல இடங்களில் காணப்படுகின்றன. திண்டிஸ் என்பது தொண்டி[2] யாகும். பொதுக (Poduca) என்று இவரால் குறிக்கப்பட்டது தற்காலத்தில் புதுச்சேரி என வழங்கும் பாண்டிச்சேரி என்பர். ஆனல், சங்க நூல்களால் பொதுக் கயம்[3] அல்லது புதுக்கயம்[4] என்ற ஊர் ஒன்று உளதாகச் தெரிகின்றது. பெரிப்ளூஸில் வருவதும் இவ்வூரினையே

1. அகம் : 57, 149 ; புறக் : 343.

2. நற் : 8, 18, 195 ; குறுந் : 198, 210, 238 ; ஐங்குறு : 171—180 ; பதிற் : VI-பதிகம், 88 ; அகம் : 10, 60, 290 ; புறம் : 17, 48 ; தொண்டியைப் பற்றிக் குறிப்பிடும் இந்த ஆறு நூல்களும் முற்பட்ட சங்க நூல்கள் எனபதும் கலித்தொகை, பரிபாடல் என்பன பிற்பட்ட சங்க நூல்கள் என்பதும் உய்த்துணர்தல் கூடும்.

3. குறுந் : 337.

4. நற் : 294.

குறித்தது எனக் கொள்ளுதல் மிகப் பொருத்தம் என்று தோன்றுகிறது. மிளகு வியாபாரத்தையும் இந் நூல் குறித்துள்ளது, இவ் வியாபாரமும் சங்க நூல்களால் வெளிப்படுகின்றது. இவற்றை யெல்லாம் நோக்கு மிடத்து, சங்க நூல்களுள் மிகவும் முந்தியன இந் நூலின் காலத்தை (சுமார் கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதியை) அடுத்ததாகலாம் எனக் கொள்ளுதல் தகும்.

7

இலக்கியமும் சமூகமும்

கண்ணன் திருவவதாரம் நிகழ்ந்த திருநாள் ஸ்ரீ ஜயந்தி. அவன் பிறந்த இடமோ வடமதுரையில். இத் தேவ ரகசியங்கள் நமக்கு எப்படித் தெரிய வந்தன? மகா பாரதத்தால். இம் மகாபாரதமும் பின்னர்த் தோன்றிய பாகவதமும் இல்லாமற் போனால் நாம் அனைவரும் பக்தியோடு வணங்கிவரும் கண்ணபிரானும் இல்லை.

கண்ணன் அவதாரம்

கண்ணன் தீராத விளையாட்டுப் பிள்ளை. அவன் செய்த குறும்புச் செயல்களுக்கும் அளவில்லை. கன்றுகள் ஓட அவற்றின் செவியில் கட்டெறும்புகளைப் பிடித்து விடுவான்; எண்ணெய்க் குடத்தை உருட்டி இளம்பிள்ளைகளைக் கிள்ளி யெழுப்பிக் கண்ணைப் புரட்டி விழித்துத் தீம்புகள் செய்வான்; கன்றின் வாலில் ஓலைகட்டி ஓடச் செய்வான்; கனிகள் உதிர எறிவான்; பாம்பைப் பின் தொடர்ந்தோடி அதைப் பிடித்துக்கொண்டு ஆட்டுவான். அவன் தெருவிலுள்ள பெண்களுக்கு ஓயாத தொல்லை. பெண்களுடைய

பின்னலைப் பின்னின் றிழுப்பான்—தலை
　　பின்னே திரும்பு முன்னேசென்று மறைவான்
வன்னப் புதுச்சேலை தனிலே—புழுதி
　　வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான்

இப்படிப்பட்ட குறும்பன் பெரிய மாயாவியாகவும் இருந்தான். இக் காரணத்திஞலே 'மாயக்கூத்தன்' என்று பெயரும் படைத்தான். எல்லாவற்றிற்கும் மேலாக நம்மவர்க்கு அரிய உபதேசங்களைச் செய்து கீதாசார்யஞக விளங்கிஞன். இப் புருஷோத்தமனை நமக்கு அளித்தது மகா பாரதமே. இப் பேரிதிகாசத்தையே கண்ணன் பிறந்த இடமாக நாம் கருதுவோமாஞல் அது சிறிதும் தவருகமாட்டாது. கண்ணன் திரு அவதாரம் செய்தது பாரதத்திலேதான். இவனைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் சமயத்திற்குக் காரணமா யிருந்ததும் இப் பரம இதிகாசம்தான். காவியத்தால் நமது சமுதாயமானது ஒரு லட்சிய புருஷனைப் பெற்று, ஒரு சமய பேதத்தையும் மேற்கொண்டு, ஒரு தத்துவ விசேஷத்தையும் அறிந்து, அதஞல் விளைந்த ஒழுகலாற்றிலே நிகழ்ந்து வருகிறது. இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினைக் கண்ணபிரானது திவ்ய சரித்திரம் நமக்கு நன்கு புலப்படுத்துகின்றது. இத் தொடர்பு மிக்க நெருக்கமானது; அத்தியந்தமானது; நமது சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியினும் ஊடுருவி நின்று விளங்குவது.

கண்ணன் காட்டிய நெறி

இனி உலகத்துள்ள இதிகாசங்களுள் தலைசிறந்ததாகக் கருதப்படும் இம் மகா பாரதம் தானும் இந்து சமுதாய வளர்ச்சியின் ஆதி நிலையில் தோன்றியதாகும். அந்நிலையில் மக்களது மனோபாவனை வீரப் பெருஞ் செயல்களில் ஈடுபட்டிருந்தது. புகழ்படைத்த பெருவீரர்களுடைய குணுதிசயங்களிலே அழுந்தி நின்று மகிழ்ந்தது. இவற்றிற்குத் தகுதியாகவே கருத்துக்களும் மொழிகளும் கையாளப்பட்டன. சுவர்க்கவாசிகளும் பூலோகவாசிகளும், அதாவது தெய்வப் பிறப்பினரும் மக்கட் பிறப்பினரும், ஒருவரோடு ஒருவர் கலந்து உறவாடியும் பகைமை பூண்டு போர் புரிந்தும் வந்தனர் என்று அக் காலத்தவர் எண்ணினர். தொடர்ந்து செல்லும் நீண்ட கதைகளைக் கேட்பதில் பெரு விருப்புற்

மகாபாரத காலத்துச் சமுதாய நிலை

றிருந்தனர். இத்தகைய சமுதாயம் பாரதத்திற்கு விளை நிலமாயிருந்தது. சமுதாயத்திற்கும் இலக்கியத்திற்கு முள்ள தொடர்பினை ஒருவாறு இது விளக்குகிறது. ஆனால் மேலே குறித்த வீரியகாலம் (heroic age) பாரதம் முதலிய இதிகாசங்களினின்றும் ஊகித்துக்கொள்ளப் பட்ட ஒரு காலப்பகுதியாம். இங்ஙனம் அமைந்த காலமும் சமுதாய நிலையும் உலக முழுவதிலும் காணப்படும் உண்மையேயாயினும் சமுதாய-இலக்கியத்-தொடர்பினை எதுக்காட்டி நிறுவுவதற்குப் போதுமானதல்ல. சரித்திர மூலமாய் நன்கறிந்த ஒரு காலப்பகுதியிலுள்ள சமுதாய நிலையையும், அக்காலத்துத் தோன்றிய இலக்கியத்தின் தன்மையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதே தக்க நெறியாகும்.

கி. பி. 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டுச் சரித்திரத்தை நோக்குவோம். அக்காலத்துப் பல்லவ அரசர்களுள் ஒரு சிலர் சைன சமயத்தவராயும், வேறு சிலர் வைணவ சமயத்தவராயும் பின்னும் ஒரு சிலர் சைவராயும் இருந்தனர். பாண்டிய அரசர்களுள்ளும் ஒரு சிலர் சைனராயும் வேறு சிலர் சைவராயும் இருந்தனர். பாண்டிய நாட்டிலும் காஞ்சி முதலிய பல்லவ-ஆதிக்கியம் நிறைந்த நாட்டிலும் சைனத் துறவிகள் ஏராளமாக வசித்துத் தங்கள் கொள்கைகளைப் பரப்பி வந்தார்கள். மதுரையைச் சுற்றியுள்ள எட்டுப் பெரிய குன்றங்கள் இத் துறவிகளின் இருப்பிடமாக விளங்கின. இவர்கள் எப்பொழுதும் வாதம் புரிந்தும், பிற சமயத்தவர்கள் தங்கள் சமயத்தைத் தழுவச் செய்தும், அரசாங்கம் ஒப்பும்படி தங்கள் சமயத்தை மேம்படுத்தியும் வந்தனர். சைன சமயத்திற்கு முன்னாக, தமிழ் நாட்டுப் புராதன சமயமாய் விளங்கி வந்தன சைவ வைஷ்ணவமாகிய வைதிக சமயங்கள்.

கி. பி. 7, 8-ம் நூற்றாண்டுகளில் தமிழ சமுதாயம்

சைன சமயம் அறிவுவலியாலும் சாஸ்திர ஞானத்தாலும் தர்க்கவன்மையாலும் சிறந்து விளங்கிற்று. வைதிக சமயங்கள் பக்தியையே பெருந் துணையாகக் கொண்டு அந்தப் பக்தி நெறியையே வலியுறுத்தி வந்தன. சிறிது காலம் தர்க்கநெறியின்முன் எதிர் நிற்கலாற்றாது இவை தளர்ச்சியுற்றிருந்தன. ஆனால் உணர்ச்சி மேலீட்டால்

எழுந்த இப் பக்திநெறி வெகு விரைவில் தர்க்க நெறியைப் புறங்கண்டுவிட்டது. நாடு முழுவதும் பக்திப் பெரு வெள்ளம் பரந்து பாய்ந்து தர்க்கமாகிய பெரு நெருப்பை அவித்துவிட்டது. பக்திக்கு வித்து ஊன்றியவர்கள் அப்பர், சம்பந்தர் முதலிய சைவ நாயன்மார்களும், பெரியாழ்வார், குலசேகரர் முதலிய ஆழ்வார்களுமே ஆவர்.

7, 8-ம் நூற்றுண்டுகளில் தோன்றிய இலக்கியம்

மேற்குறித்தன எல்லாம் சரித்திரம் ஒப்பிய உண்மைகள். இவை நிகழ்ந்த காலங்களில் எவ்வகையான இலக்கியங்களை நாம் எதிர்பார்க்க வேண்டும்? தர்க்க நூல்களை எதிர்பார்ப்போம்; பக்தி நூல்களை எதிர்பார்ப்போம்; பக்திக்கு இன்றியமையாத கதைகளை எதிர்பார்ப்போம். இவ்வகையான நூல்களே இக்காலங்களில் தோன்றின. குண்டலகேசி, பிங்கலகேசி, நீலகேசி முதலியன தர்க்க நூல்கள்; தேவாரம், நாலாயிரம் முதலியன பக்தி நூல்கள்; திருத்தொண்டத்தொகை முதலியன பக்திக்குரிய கதைகளைக் குறித்து எழுந்தன.

இனி 9, 10-ம் நூற்றுண்டுகளில் நம்நாட்டுச் சரித்திரத்தைக் கூர்ந்து நோக்குவோம். இந் நூற்றுண்டுகளில் சோழரது ஆதிக்கியம் தமிழ் நாட்டில் நிலைபெற்று விளங்கியது. வடநாடுகளிலும் கடலுக்கு அப்புறமுள்ள பர்மா, சுமத்திரா, ஜாவா முதலிய நாடுகளிலும் சோழர்களது வெற்றிக் கொடி பறந்தது. போர்புரிதலும் நாடுகளை வென்றுகொள்ளுதலும் சோழர்கள் மேற்கொண்ட தொழிலாக முடிந்தன.

9, 10-ம் நூற்றுண்டுகளில் தமிழ சமுதாயம்

நாட்டு மக்களில் தலையாயவர்களும் இத்தொழிலில் ஈடுபட்டனர். அரசது சேனாநாயகர்களாகவும், அடிப்படுத்திய நாடுகளில் பிரதிநிதிகளாய் ஆட்சிபுரிபவர்களாகவும், சோழராஜ்யத்தின் ஆட்சிமுறை அதிகாரிகளாகவும் இவர்கள் விளங்கிவந்தனர். அரசர்கள் சிவ பக்தர்கள்; எனவே நாட்டு மக்களும் சிவ பக்தர்களாயிருந்தனர். போர்த்தொழில் இல்லாத காலங்களில்

கோயில் நிர்மாணத்திலும், அரசியல் சீர்திருத்தத்திலும் கல்வி, கலை முதலியவற்றை அபிவிருத்தி செய்வதிலும் அரசர்களும், அவர்களோடு ஒப்ப நாட்டுப் பெரியார்களும் ஊக்கம் கொண்டனர். தமிழ் நாட்டின் கீர்த்தி பிற நாடுகளில் பரவுவதாயிற்று. போர்த் தொழிலும், ஆட்சித் தொழிலும், பக்திமையும், கோயில்-கைங்கரியமும் தமிழ சமுதாயத்தை இயக்கிவந்தன.

9, 10-ம் நூற்றுண்டுகளில் இலக்கிய நிலை

இக்காலங்களில் எவ்வகையான இலக்கியங்களை எதிர்பார்க்கக் கூடும்? கலிங்கத்துப் பரணி முதலிய போர்ப் பிரபந்தங்கள், சாஸன கவிதைகள், மெய்க்கீர்த்திகள், உலா, கோவை, அந்தாதி முதலியன, திருவிசைப்பா முதலிய பக்தி நூல்கள், திருத்தொண்டர் திருவந்தாதி முதலிய பக்திவிளக்க நூல்கள், ராஜராஜேசுவர நாடகம் முதலிய நூல்கள் தோன்றின. சமயத்தை விடுத்து உலகியல் விஷயங்களை நூற்பொருளாகக் கொண்டு பல செய்யுட்களும் இக்காலத்து மிகுதியாய்ப் பிறந்தன. சமுதாய நிலைக்கும் இலக்கியங்களுக்கும் உள்ள தொடர்பை இது நன்கு விளக்குகின்றதல்லவா?

இனி 19, 20-ம் நூற்றுண்டுகளில் இலக்கிய சரித்தை நோக்குவோம். இச்சரிதமும் சமுதாயத்தின் விளைபொருளே இலக்கியம் என்பதை வலியுறுத்திக் காட்டுகிறது. இந்நூற்றுண்டுகளில் கிறிஸ்தவ சமயப் பாதிரிமார்கள் தங்கள் சமயத்தை நமது நாட்டிற் புகுவித்தனர். ஆங்கில அரசாட்சி இங்கே வேரூன்றியது. ஆங்கிலக் கல்விமுறை பரவலாயிற்று. கல்வி ஒரு சிலர்க்கேயன்றி அனைவர்க்கும் உரித்தானது என்னும் கொள்கை பிறந்தது. மேனுட்டுக் கலைகளைக் கற்றுணரும் பரபரப்பு ஏற்பட்டது. இவற்றிற்குத் தக்கபடி சமுதாய நிலையும் மாறுபட்டது. சமுதாய வகைகளில் கிறிஸ்தவ சமுதாயம் ஒன்றும் புதிதாகத் தோன்றியது. இதற்கும் நமது வைதிக சமுதாயத்திற்கும் போர் நிகழ்ந்தது. இரண்டும்

ஒன்றை ஒன்று ஓயாது எதிர்த்துப் போராடின. கிறிஸ்தவ சமய நூல்கள் சில தோன்றின. பைபிள் மொழி பெயர்க்கப்பட்டது. இரட்சணிய யாத்திரிகம் முதலிய நூல்கள் இயற்றப்பட்டன. கண்டன நூல்கள் சிலவும் எழுந்து கூத்தாடின. சமுதாயத்திலே விளைந்த கல்விப்பரபரப்பு ஆங்கிலக் கல்வி முறை அனுபவத்தில் வருதற்குக் காரணமா யிருந்தது. பழைய நிகண்டுகள் வழக்கொழிந்தன; புதிய அகராதிகள் பிறந்தன. பழைய இலக்கணங்கள் மங்கி மறையலாயின; எளிய முறையில் இயற்றப்பட்ட இலக்கணங்கள் வழக்கிலே புகுந்தன. அறிவுப் பொருள்கள் எல்லாம் வசன நூல்களால் உணர்த்தப்பட வேண்டும் என்ற கொள்கை பிறந்தது; வசன நூல்கள் பல தோன்றலாயின. மேனாட்டு அறிவியல் - நூல்கள் ஒருசில தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. இவை போன்ற முயற்சிகளில் சமுதாயம் பெரும்பாலும் ஈடுபட்டிருந்தது. இதனால் பழையன போற்றும் சமுதாயப் பகுதி இல்லை என்று எண்ணுதல் தவறு. ஒருசில மடங்களும் மடங்களைச் சார்ந்தவர்களும் பழைய நூல்களைப் போற்றி வந்தனர். இப்பகுதியாரிற் சிலர் பழைய முறையில் நூல்களையும் புராணங்களையும் இயற்றிவந்தனர். இவர்களுள் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தலை சிறந்தவர். ஆங்கிலம் கற்றுவல்ல அறிஞர்கள் சிலர் பழைமையைப் புதிய முறையில் பேணினர். பழைய நூல்களைத் திருத்த முற அச்சிற்பதிப்பித்து வெளியிட்டனர் ஒரு சிலர். வேறு சிலர் நாட்டின் பழைய சரித்திரத்தை ஆராய்ச்சியால் விளக்கி நூல்களை இயற்றினர். இன்னும் சிலர் பழைய நாகரிகத்தின் பெருமையை நூல்வாயிலாகப் புலப்படுத்தினர். ஆனால், மேற் குறித்தவற்றில் பெரும்பாலன மேனாட்டுக் கல்வியாலும் அச்சுயந்திர ஸ்தாபனத்தினாலும் தமிழ் சமுதாயத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியின் பயன்கள் என்பது மனங்கொள்ள வேண்டும்.

கி. பி. 19, 20-ம் நூற்றாண்டுகளில் தமிழசமுதாயமும் இலக்கியப் போக்கும்

19-ம் நூற்றாண்டின் இறுதியில் நமது சமுதாயத்தில் தேசீய உணர்ச்சி தோன்றத் தொடங்கிற்று. இந்த

உணர்ச்சி நாடு முழுவதும் வெகு விரைவில் பரவியது. கல்வியாளரிடத்தும் பிறரிடத்தும் இவ் உணர்ச்சி பரவி வளர்ந்துவரத் தொடங்கிற்று. இந்த உணர்ச்சி தான் சுப்பிரமணிய பாரதியையும் அவருடைய அற்புதக் கவிதை-அமிர்தத்தையும் தமிழ சமுதாயத்திற்கு உதவியது. இதுவும் சமுதாயத்திற்கும் இலக்கியத்திற்குமுள்ள நெருங்கிய தொடர்பை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

தேசிய உணர்ச்சி

நிலத்தின் தன்மையை அதினிடம் தோன்றிய பயிர் முளை காட்டும். 'நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்' என்றனர் வள்ளுவர். சமுதாயத்தின் தன்மையை அதனிடத்துத் தோன்றிய இலக்கியங்கள் காட்டும். சமுதாயத்தின் தன்மை காலநிலைக்கு ஏற்ப மாறுபடும். இவ்வாறு காலந்தோறும் மாறுபட்டு வரும் தன்மையையும் அவ்வக் காலத்துத் தோன்றிய இலக்கியங்கள் காட்டவல்லன. சமுதாயமும் இலக்கியமும் ஒன்றை ஒன்று தாக்கிப் புதுப் பயன் விளைவித்தலும் உண்டு. இங்ஙனமுள்ள தொடர்பினை நன்கு உணர்ந்தோமாயின், நாட்டின் சரித்திரமும் இலக்கிய சரித்திரமும் பெரிதும் விளக்கம் எய்தும்.

சமுதாய நிலத்தில் விளையும் பயிர் இலக்கியம்

8

சங்க இலக்கியங்கள்-I

இப்போது கிடைக்கும் பழைய தமிழ் செய்யுட்களில் சில கிறிஸ்து அப்தத்தின் தொடக்கத்தில் இயற்றப்பட்டவை. ஆதலால் தமிழ் இலக்கிய சரிதம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே

தொடங்கியுள்ளது. இப் பெருமை எல்லா மொழிகளுக்கும் உரியதன்று. மலையாள மொழியில் கி. பி. பதினுலாம் நூற்றாண்டிலும், தெலுங்கு மொழியில் பதினோராம் நூற்றாண்டிலும். கன்னட மொழியில் ஒன்பதாம் நூற்றாண்டிலும் ஆதி இலக்கியங்கள் தோன்றின. இப்பொழுது பல தேசங்களிற் பயிலப்பட்டு பெருஞ் சிறப்புடன் விளங்கும் ஆங்கில மொழியிலேகூட இலக்கியம் முதன் முதலில் தோன்றியது கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில்தான். ஆரியம், சீனம், லத்தீன், கிரேக்கு, எபிரேயம் முதலிய ஒரு சில மொழிகளில் உள்ள ஆதி இலக்கியங்களே தமிழ் இலக்கியங்களின் அளவு பழைமை வாய்ந்தவை.

தமிழின் தனிப் பெருமை

மிகப் பழைமையான காலந் தொட்டே தமிழ் சிறப்புற்று வாழ்ந்துவந்த இடம் பாண்டிய நாடு என்று கூறுவர். வில்லிபுத்தூரர் இயற்றிய பாரதத்தின் சிறப்புப் பாயிரத்தில், அவர் மகனார் வரந்தருவார்,

> பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே
> [வளர்ந்து, சங்கத்(து)
> இருப்பிலே இருந்து, வைகை ஏட்டிலே
> [தவழ்ந்த பேதை.

என்று தமிழைக் குறித்துக் கூறுகின்றார். இப்பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையிலே ஒரு தமிழ்ச் சங்கம் இருந்தது என்பது கர்ணபரம்பரைச் செய்தி. கிறிஸ்து அப்தத்தின் இரண்டாம் நூற்றாண்டு இச்சங்கம் இருந்த காலம் என்பர் ஆராய்ச்சியாளர். தமிழ்ச் செய்யுட்களையும் புலவர்களையும் ஆராய்ந்து சீர்தூக்கி மதிப்பிடுதல் இச்சங்கம் செய்து வந்த பணி என்று கூறப்படுகின்றது. நானூற்று நாற்பத்தொன்பது புலவர்கள் இச்சங்கத்தில் இருந்தார்கள் என்பர். சங்கத்தைப் பற்றிய வரலாறு இறையனார்களவியல் உரை என்ற நூலிலே விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இது கடைச்சங்கம் என்றும், இதற்குமுன் இரண்டு சங்கங்கள் இருந்தன என்றும்,

கடைச் சங்கம்

களவியல் உரை கூறும். தலைச்சங்கம் 4440 ஆண்டுகளும், இடைச்சங்கம் 3700 ஆண்டுகளும், கடைச்சங்கம் 1850 ஆண்டுகளும் இருந்தனவாம்.

கடைச்சங்கக் காலத்து நூல்களே நமக்கு இப்போது கிடைப்பவை. இந்நூல்களையே நாம் 'சங்க இலக்கியங்கள்' என வழங்குகிறோம். தொல்காப்பியம்[1] என்ற பேரிலக்கண நூல் இடைச்சங்கக் காலத்து இறுதியில், அதாவது சுமார் கி.மு. 5000-ல் தோன்றியது என்றும், தலை, இடைச் சங்கங்களிலே பிறந்த ஏனை நூல்கள் கடல் கொள்ளப்பட்டு அழிந்து விட்டன என்றும் பரம்பரை வரலாறு கூறுகின்றது. ஆனால் தொல்காப்பியர் காலம் கி. பி. 3-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதென் பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன.

சங்க இலக்கியங்களைப் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என இரு பெருங் கூறாகப் பகுக்கலாம். பத்துப் பாட்டுக்களாவன : முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இவற்றை,

பத்துப்பாட்டு

முருகு, பொருநாறு, பாணிரண்டு, முல்லை,
பெருகு வளமதுரைக் காஞ்சி,—மருவினிய
கோலநெடு நல்வாடை, கோல்குறிஞ்சி, பட்டினப்
பாலை, கடாத்தொடும் பத்து

என்ற செய்யுளால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். மலைபடுகடாம் என்ற நூலுக்குக் கூத்தராற்றுப் படை என்ற பெயரும் உண்டு.

முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் என்ற ஐந்து பாட்டுக்களும் ஆற்றுப்படை என்ற நூல்

1. எனது 'தமிழ்ச் சுடர்மணிகள்' என்ற நூலில், தொல்காப்பியர் காலம் என்ற பகுதியைப் பார்க்க.

வகையைச் சார்ந்தவை. கொடையாளி ஒருவனிடம் பெருஞ் செல்வத்தைப் பரிசாகப் பெற்றுத் திரும்பும் கூத்தர் முதலியோர் வழியிலே எதிர்ப்பட்ட இரவலரைக் கண்டு, அக்கொடையாளியின் பெருமையைக் கூறி, அவனிடம் சென்று தாம் பெற்றதுபோல் பெருஞ் செல்வம் பெறுமாறு வழிப்படுத்துதலே இந்த நூல் வகையின் கருத்து. ஆறு-வழி; படை-படுத்துதல். ஏனைய ஐந்து பாட்டுக்களில் மதுரைக்காஞ்சி நிலையாமையை ஓர் அரசனுக்கு அறிவுறுத்தி, இவ்வுலகில் வாழும் நாட்களை உயர்ந்த லட்சியங்களை மேற்கொண்டு இனிதாகக் கழித்தல் வேண்டும் என வற்புறுத்துகிறது. குறிஞ்சிப்பாட்டு ஓர் ஆரிய அரசனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்தும் பொருட்டு இயற்றப்பட்டது என்று சரித்திரம் வழங்குகிறது. இப்பாட்டுக்களுள் சில அகப்பொருளையும் சில புறப்பொருளையும் பற்றியவை. அகம் என்பது காதல் பற்றிக் கூறும் பகுதி; புறம் என்பது அறமும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைக் கூறும் பகுதி.

பாண்டியருள் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும், சோழருள் கரிகாற் பெருவளத்தானும், தொண்டைமான் இளந்திரையனும் பத்துப்பாட்டிற் புகழப்பட்டிருக்கின்றனர்.

எட்டுத் தொகையாவன: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. இவற்றை,

நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஐங்குறுநூ (று)
ஒத்த பதிற்றுப்பத் (து), ஓங்கு பரிபாடல்,
கற்றறிந்தார் ஏத்தும் கலியே, அகம், புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை

என்ற செய்யுளால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு.

கலித்தொகை, அகநானூறு எண்ணும் ஐந்து நூல்களும் அகப்பொருள் பற்றியவை; ஏனைய மூன்றும் புறப்பொருள் பற்றியவை. ஐங்குறுநூற்றில் ஐந்நூறு செய்யுட்களும், பதிற்றுப்பத்தில் நூறு செய்யுட்களும், பரிபாடலில் எழுபது செய்யுட்களும், கலித்தொகையில் நூற்றைம்பது செய்யுட்களும் உள்ளன. ஏனைய நூல்கள் ஒவ்வொன்றிலும் நானூறு செய்யுட்கள் உள்ளன. கலித்தொகை கலிப்பாவாலும், பரிபாடல் பரிபாட்டாலும் இயன்றன. மற்றை ஆறு தொகை நூல்களும் ஆசிரியப் பாவால் இயன்றன. அகம் பற்றியவற்றுள் ஐங்குறு நூறு, திணை ஒவ்வொன்றிற்கும் நூறுவீதம், குறிஞ்சி, பாலை, மருதம், முல்லை, நெய்தல் என்ற ஐந்து திணைகளுக்குமாக ஐந்நூறு செய்யுட்கள் கொண்டது. புறம் பற்றிய நூல்களுள், ஒவ்வொரு சேரனுக்கும் பத்துச் செய்யுள் வீதம், பத்துச் சேர-அரசர்களுக்கு உரிய நூறு செய்யுட்கள் கொண்டது பதிற்றுப்பத்து. எட்டுத் தொகை நூல்களுள் பரிபாடலுக்கு ஒரு தனிப்பட்ட சிறப்பு உண்டு. அதிலுள்ள பாட்டுக்கள் பண்முறையால் தொகுக்கப்பெற்று உரிய பண்களுடன் பாடப்பெற்று வந்தவை. கலித்தொகையிலுள்ள தாழிசைகள் இசையோடு பாடுதற்கு ஒத்தனவா யுள்ளன.

எட்டுத் தொகை

தொகை நூல் ஒவ்வொன்றிலும் உள்ள செய்யுட்கள் பல புலவர்களால் பாடப்பெற்றவை. அப்புலவர்கள் ஓரிடத்தவரல்லர்; ஓரினத்தவரல்லர்; ஒரு காலத்தவருமல்லர்; ஒரு சமயத்தைச் சார்ந்தவருமல்லர். அவர்களைக் கணக்கிட்டு 'நானூற்று நாற்பத்தொன் பதின்மர்' என்று களவியல் உரை கூறும்.

பல புலவர்களால் பாடப்பெற்றன தொகை நூல்கள்

சில புலவர்களுடைய பெயர்கள் காணப்படவில்லை. ஒருவருக்குக் 'கல்பொரு சிறு நுரையார்' என்று பெயர். அவர் இயற்றிய செய்யுளில்,

> கல்பொரு சிறுநுரை போல
> மெல்ல மெல்ல இல்லா குதுமே

(குறுந். 290)

என்று வந்துள்ளது. இங்கே காணும் உவமானத்தொடரினின்றும் அவருக்குப் பெயர் எழுந்துள்ளமை வெளிப்படை. ஆசிரியர் காலத்தே அவர்க்கு வழங்கிய இப் புனைபெயர் பிற்காலத்தும் வழங்கி அதுவே பெயராக முடிந்திருக்கலாம். அல்லது அவர் பெயர் மறைந்துபோன பிற்பாடு, செய்யுளின் தொடரினின்றும் ஒரு பெயர் பிற்காலத்தாரால் கொடுக்கப்பட்டும் இருக்கலாம். சில பெயர்கள் முற்கூறியபடியும், சில பெயர்கள் பிற்கூறியபடியும் தோன்றியிருத்தலும் கூடும். உண்மை இதுவென்று இப்போது நாம் தெரியக்கூடவில்லை. இங்ஙனம் புனைபெயருள்ளவர்கள் சுமார் இருபத்தைந்து ஆசிரியர்கள். இவர்களை நீக்கிப்போலும் களவியல் உரைகாரர் கணக்கிட்டது.

பெண்பால்-புலவர்கள்

பெயர் தெரிந்த புலவர்களுள் சுமார் இருபத்தேழு பெண்பால் - புலவர்கள் காணப்படுகின்றார்கள். அதாவது நூற்றுக்கு ஆறு விழுக்காடு கணக்காகின்றது. பொதுமக்களிடையே கல்வி பரவாத முற்காலத்து இவ்வளவாகப் பெண்பால்-புலவர் இருந்தமை பாராட்டுதற்கு உரியது. இவருள்ளே ஔவையார், வெள்ளி வீதியார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், பாரிமகளிர் முதலியோர் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்கள்.

தமிழிலே தொகை நூல்கள் மிகப் புராதன காலத்துத் தானே தொகுக்கப்பட்டமை போல, கிரேக்க மொழியிலும் மிகப் பழைய காலத்தில் 'அந்தாலஜி' என்று கூறப்படும் தொகை நூல் தொகுக்கப்பட்டுள்ளதென அறிகின்றோம். கிரேக்கத் தொகை நூலின்[1] வரலாற்றைக் குறித்து ரிச்செர்ட் கார்நெட் என்ற ஆசிரியர் விளக்கமாக எழுதியிருக்கின்றனர். அந்தாலஜி என்ற சொல்லுக்குப் பூந்துணர் என்று பொருள். சுமார் கி. பி. 90-ல் மிலீகர் என்பவரால் இத்தொகை நூற் தொகுக்கப் பெற்றதாம். இத் தொகை நூற் செய்யுட்கள், தெய்வங்களையும், புகழ் பெற்று விளங்கிய அரசர் முதலிய பெரியோர்களையும்,

1. Encyclopaedia Brittanica: Anthology.

பெரு நிகழ்ச்சிகளையும் பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. சுருங்கச் சொல்லல், பொருள் ஆழமுடைமை, நவின்றோர்க்கு இனிய நன்மொழி புணர்த்தல், பொருளின் ஒருமை என்ற குணங்கள் இவற்றிலே நன்கு விளங்கின என்று சொல்லப்படுகிறது. இவ்வகை இயல்புகளோடு பொருந்திய கிரேக்கத் தொகை நூல் புறநானூறு என்னும் தமிழ்த் தொகை நூலோடு பெரிதும் ஒப்பிடற்பாலதாய் உள்ளது. மிலீகரது தொகை நூலுக்குப் பின் நான்கு தொகை நூல்கள் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றின. இவைகளெல்லாம் அந்தாலஜி என்ற பெயராலேயே வழங்கின. இறுதியில் தொகுக்கப்பட்டது ஜஸ்டினியன் என்னும் அரசன் (கி. பி. 483—565) காலத்திலாகும். இந்தத் தொகை நூலிலே காதற் செய்யுட்கள் பல துறைகளாகப் பகுக்கப்பட்டுச் சேர்க்கப் பெற்றுள்ளன என்று கூறப்படுகிறது. இதனேடு தமிழ்த் தொகை நூல்களுள் அகப்பொருள் கூறுவனவாய் அமைந்துள்ள நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்ற ஐந்தும் ஒப்பிடத்தக்கன.

தொகை நூல்களும் கிரேக்க அந்தாலஜிகளும்

பழைமையிலும், பொருள் அமைதியிலும், செய்யுள் நயத்திலும் மாத்திரமேயன்றி, வேறு சில அமிசங்களிலும் இந்த இரு மொழிகளிலும் உள்ள தொகை நூல்கள் ஒப்பிடற்கு உரியன. கிரேக்க நாகரிகம் நீடித்திருந்த காலத்தில் அதன் நிலைமை பலபடியாக மாறிவந்திருக்கின்றது. இம் மாறுபாடுகளுக்கு இடையேயும் கிரேக்கத் தொகை நூல் கிரேக்கர்களுக்குப் புத்துயிர் கொடுத்து உதவிய அமிர்த சஞ்சீவினியாய் நீடித்து நிலைத்து வந்திருக்கின்றது. இதுவே போன்றுள்ளன தமிழ்த் தொகை நூல்களும். இரண்டிலும் பழைய நாகரிகங்களும் பழக்க ஒழுக்கங்களும் பிரதிபலித்துக் காண்கின்றன. பிற்காலத்து எழுந்த இலக்கியங்களின் நெறியை வரம்பு கட்டுதற்கும் இத்தொகை நூல்கள் உதவின. இவ்வாருகப் பலபடியாலும் இரு தேசத்துத் தொகை நூல்களும் ஒன்ருேடு ஒன்று உவமிக்கக் கூடியனவா யுள்ளன.

தொகை நூல்களின் பயன்

9

சங்க இலக்கியங்கள்-II

சங்க இலக்கியப் பொருள்கள்

சங்க இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ள பொருள்கள் காதலும், போர் முதலிய புற நிகழ்ச்சிகளுமாம். தொகை நூல்கள் எட்டில் ஐந்து நூல்கள் காதலைப் பற்றியனவே. இந்த ஐந்து நூல்களினும் 1850 செய்யுட்கள் அடங்கியுள்ளன. பத்துப் பாட்டிலும் மூன்று நெடிய பாட்டுக்கள் காதல் பற்றியனவாம். போர் முதலிய புற நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்ட நூல்கள் பதிற்றுப்பத்து, புறநானூறு என்ற இரண்டேயாகும். இவற்றில் அடங்கிய செய்யுட்கள் 500. பரிபாடல் என்ற நூல் தெய்வங்கள், வையை, மதுரை இம்மூன்றையும் பற்றியதாகும். இந்நூலிலும் காதல் பற்றிய பகுதிகள் பல உள்ளன.

வீரமும் காதலும்

காதலும் போரும் நமது பண்டைத் தமிழ் இலக்கியங்களுக்கு மட்டும் தனித்துரிய பொருள்கள் என்று நினைத்தல் தவறு. கிரீக், லத்தீன் முதலிய பிற மொழிகளிலுள்ள பண்டைச் செய்யுட்களும் இவ் விஷயங்களைப் பற்றியே பெரும்பாலும் அமைந்துள்ளன. வீரமும் காதலுந்தான் பண்டைக் காலத்து லட்சியங்கள்.

காதல் விஷயங்களை 'அகம்' என்பதும் போர் முதலிய புற நிகழ்ச்சிகளைப் 'புறம்' என்பதும் தமிழ் வழக்கு.

அகப் பகுதியை எடுத்துக்கொள்வோம். இது ஒருவனும் ஒருத்தியும் தம்முளே காதல்கொண்டு மணம் புரிந்து இல்வாழ்வு நடத்துகின்ற செய்திகளைப் பல படியாக வகுத்துக் கூறுவது. இப் பகுதிக்குரிய செய்யுட்களை நாம் வாசித்தால், பண்டைக் காலத்துத் தமிழ் மக்களது இல்வாழ்வும் உயர்ந்த லட்சியங்களும் நன்கு புலனாகும். காதல் என்பது கேவலம் மிருகப் பிராயமான உணர்ச்சியன்று. காதலுக்குக் கங்குகரை இல்லை; ஒரு நெறியில் நிற்பினும், எல்லையற்றுப் பரந்து பெருகித் தோன்றுவது. இக் கருத்து எவ்வளவு அழகாகக் கூறப்பட்டிருக்கிறது பாருங்கள் :

காதலின் இயல்பு

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆரள வின்றே; சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

(குறுந். 3)

இவ்வகையான காதல் நிகழ்வதற்கு ஏதாவது குடும்பத் தொடர்பு அல்லது உறவு முறை இருத்தல்வேண்டுமென்ற நியதியே இல்லை. உள்ளத்தைக் கயிறுகொண்டு கட்டிச் சிறையிடுதல் ஏலுமா? ஒரு காதலன் தன் காதலியிடம் கூறுவதைக் கேளுங்கள் :

காதல்-தொடர்பு

யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே!

(குறுந். 40)

'எனது தாயும் உனது தாயும் ஒருவருக்கு ஒருவர் யாராவர்? என் தந்தையும் உன் தந்தையும் ஒருவருக்கு ஒருவர் என்ன முறையினர்? ஒரு முறையும் இருப்பதாகத் தெரியவில்லையே. நானும் நீயும் எப்படி ஒருவரை ஒருவர் அறிந்தோம்? நமது அன்புடை நெஞ்சங்கள், பயிரிடு

வதற்குப் பக்குவமான செம்புலத்திற் பெய்த நீர்போல, கலந்து விட்டனவே!'

காதல் நிகழும் சந்தர்ப்பத்தைப் பிற்காலத்து நூல்கள் விரித்துச் சொல்வதை நீங்கள் கேட்டிருக்கலாம். தன்னிகரில்லாத தலைவன் ஒருவன் தனது துணைவர்கள் உடன்வர வேட்டைமேற் செல்வான் என்றும், தன்னிகரில்லாத் தலைவி ஒருத்தி தனது துணைவியர்கள் உடன்வரச் சோலையில் விளையாடுதற்குச் செல்வாள் என்றும், உடன் வந்தோர் தம்தம் தொழில்மேற் பிரிந்து செல்லத் தலைவனும் தலைவியும் தன்னந் தனியராய் ஒருவரை ஒருவர் எதிர்ப்படுவார் என்றும், அவ்வாறு கண்ட இடத்துக் காதல் நிகழும் என்றும் இந்நூல்கள் ஓசை நிரம்பிய சொற்களால் அலங்காரமாக விரித்துக் கூறும். இது முற்றும் நாடகக் காதலேயாகும். இயற்கைக் காதல் தோன்றிய சந்தர்ப்பத்தைப் பாருங்கள்:

நாடகக் காதல

சுடர்த்தொடீஇ, கேளாய்! தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி, மேலொர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன்!' என வந்தாற்கு
அன்னை,
' அடற்பொற் சிரகத்தால் வாக்கி, சுடரிழாய்,
உண்ணுநீர் ஊட்டிவா' என்றாள்; என யானும்
தன்னை அறியாது சென்றேன்; மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலிய, தெருமந்திட்டு,
'அன்னாய், இவனொருவன் செய்ததுகாண்!'
என்றேனா,
அன்னை அலறிப் படர்தர, தன்னை யான்,

'உண்ணுநீர் விக்கினான்' என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ, மற்றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்
கூட்டம்
செய்தான் அக் கள்வன் மகன் !

(கலித். 51)

இயற்கைக் காதல்

காதலி தெருவில் விளையாடுவது; காதலன் அங்கு வந்து குறும்பு செய்வது; அவன் காதலி வீட்டுக்கு வந்து உண்ணும் நீர் வேண்டுமென்று பொய் சொல்லி அவளைக் காண முயல்வது; காதலியின் அன்னை களங்கமின்றி அவளை நீர் கொடுத்து வரும்படி ஏவுவது; வந்திருப்பவன் இன்னானென்று அறியாது காதலி நீர் கொண்டு வருவது; அவன் அவளுடைய முன் கையைப் பற்றி அழுத்துவது; எதிர்பாராத இச்செயலாலே அவள் திடீரென்று கூச்சலிடுவது; கூச்சல் கேட்டு அன்னை அலறிக்கொண்டு வருவது; நிகழ்ந்ததை மறைக்க எண்ணி அவன் நீர் விக்கினான் என்று மகள் கூறுவது; நீர்விக்காதபடி அன்னை அவன் முதுகைத் தடவிக் கொடுப்பது; தடவும்போது காதலியைக் கடைக் கண்ணால் நோக்கி இடையிடையே புன்னகைகள் செய்து அப்புன்னகைகளால் அவள் உட்குறிப்பையும் உடன்பாட்டையும் தான் அறிந்ததாகப் புலப்படுத்துவது: இக் காட்சிகளெல்லாம் நம் மனத்தை விட்டு நீங்க முடியுமா? இம்முறையில் ஆராக் காதல் கொண்டவள் எப்பிறப்பிலும் அவனையே காதலனாக அடையவேண்டும் என்று கருதுவது எத்தனை இயல்பானது! அவள் உறுதிப்பாட்டைக் கேளுங்கள்:

இம்மை மாறி மறுமை ஆயினும்
நீஆ கியர்எங் கணவனை
யான்ஆ கியர்நின் நெஞ்சுநேர் பவளே

(குறுந். 49)

இவ்வுறுதிப்பாடுடையவள் தன் காதலனை மணம் புரிந்து இன்பவாழ்வு வாழவேண்டுமென்று யார்தான் விரும்பமாட்டார்கள்?

இருவருக்கும் மணம் நிகழ்கின்றது. இல்லறத்தில் அன்பு நிரம்பிய இன்ப உலகில் இவர்கள் வாழ்கின்றார்கள். இங்கே ஓர் அன்புக் காட்சியைப் பாருங்கள் :

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்
தான் துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந் தன்று ஒண்ணுதல் முகனே.

(குறுந். 167)

இல்லறத்தில் ஓர் அன்புக் காட்சி

அகமுடையாள் ஒருநாள் சமையல் செய்தாள்; அவள் செல்வக் குடியிலே பிள்ளைக்கலி தீர்க்க வந்த பெண்கொடி. அருமையாக, செல்வமாக வளர்ந்தவள்; இதற்குமுன் வீட்டு வேலை செய்தறியாதவள்; ஆதலால் தொட்ட இடமெல்லாம் இடர்ப்பாடாக இருந்தது; அதி காலையில் எழுந்து நீராடித் தூய ஆடையுடுத்துச் சமையல் தொடங்கினாள்; முற்றிய தயிரைத் தன் மெல்லிய விரலாற் பிசைந்து பக்குவப் படுத்தினாள்; அதற்குள் அவளது ஆடை சிறிதே கட்டு நெகிழ்ந்தது; அவசரத்தில் அதனைக் கை கழுவாதே இறுக உடுத்துக் கொண்டாள்; பின்பு தாளிக்கத் தொடங்கினாள்; தாளிதத்தில் எழும் நறும்புகை அவள் தெளிந்த கண் களிலே குப்பென்று பட்டது; கண் கரித்தது; எனினும் கண்ணைத் துடைத்துக் கொள்ளவில்லை பக்குவம் தவறி விடுமென்று அஞ்சி. இங்ஙனம் பக்குவப்படுத்திய இனிய புளிப்பையுடைய குழம்பை உணவிலிட, 'என்ன ருசி!, என்ன ருசி' என்று சொல்லிக் கணவன் உண்டனன்; அதனைக் கண்டவுடன் அகமுடையாள் முகமானது புதியதொரு சோபை பெற்றது: உள்ளக் களிப்பானது அவளுடைய முகத்திலே சிறு புன்னகையாக நடன மாடியது.

இக்காட்சி நம் இதயத்தைப் பிணித்து விடுகிறது. அன்பு இருக்குமானுல், எல்லாம் இன்பமயமே என்ற பேருண்மை நமக்குப் புலப்படுகின்றது. இது ஒருபுறம். தன் கணவனுக்குப் பொருள் வருவாய் குறைந்து நிற்கும் நிலைமையில் செல்வக் குடியிற் பிறந்த ஒருத்தி எவ்வாறு தனது உணவையும் குறைத்துச் சிக்கனஞ் செய்கிருள் பாருங்கள் :

பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை யேந்தி
புடைப்புறத் தாற்றுப் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென் ரோக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம் பொலிப்ப த்தத்துற்று
அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரீஇ மெலிந் தொழியப் பந்த ரோடி
ஏவல் மறுக்குஞ் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந் தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கு அறல் போலப்
பொழுதுமறுத்து உண்ணும் சிறுமது கையளே.

(நற். 110)

“தேன் கலந்த தீம்பாலுணவை ஒரு பொற்கிண்ணத்தி லேந்தி உண்ணு என்று சொல்லிச் செவிலித்தாய் வற் புறுத்தவும், உண்ணுது இல்லத்தின் முற்றத்தேயுள்ள பந்தரைச் சுற்றிச்சுற்றி யோடித் தாயின் ஏவலை மறுத்துச் சிறு விளையாட்டுச் செய்த இச் சிறு பெண்ணுக்கு இந்த அறிவும் இந்த ஒழுக்கமும் எங்கிருந்து வந்தன? இவற்றை எப்பொழுது தெரிந்துகொண்டாள்? தனது கணவனது குடி வறுமை யுற்றுவிட்டதென உணர்ந்ததும், உண்ணவேண்டும் நேரத்து உண்ணுது, பொழுது மறுத்துண்டு சமர்த்தா யிருக்கிருளே! தன் தந்தை தனது நிலையை உணர்ந்து

காதலியின் அறிவும் ஒழுக்கமும்

அனுப்பிய பொருள்களை யெல்லாம் சிறிதும் பொருட்படுத்தவில்லையே!' என்பது இதன் கருத்து.

வாழ்விலே இன்பமும் துன்பமும் கலந்துதான் காணப்படுகின்றன. 'துன்பமுற்றவர்க்கலால் - இன்பமில்லை!' என்று கூடத் தமிழ்க் கவிகள் சொல்லுகிறார்கள். எப்பொழுதும் இன்பக் கனவுலகத்திலே மகிழ்ந்து வாழ்தல் கூடுமா? தன் ஆருயிர்த் துணைவியைப் பிரிந்து காதலன் செல்ல வேண்டியதாகிறது. இந்நிலையிலே தலைவிக்குத் துன்பம் சகிக்க முடியவில்லை. அவள் வருந்துதலைப் பாருங்கள்:

தலைவனைப் பிரிந்த தலைவி

யாம் எம் காதலற் காணே மாயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே

(குறுந். 290)

'ஆற்றுநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது; குமிழிகளும் நுரைகளும் சுற்றி, ஓடி வட்டமிட்டு வருகின்றன; ஆற்றின் ஓரத்திலே ஒரு பாறை; இப்பாறையின் மீது ஒரு சிறு நுரை மெல்ல மெல்ல மோதுகிறது; மெல்ல மெல்ல இல்லையாய் அழிகிறது. இச்சிறு நுரையைப் போல, வருத்தம் நிரம்பிய நெஞ்சோடு கூடிய நான் சிறிது சிறிதாக உயிர் தேய்ந்து அழிவு எய்துகிறேன்' என்பது பொருள். எத்தனை அழகிய உவமம்! இதனைப் பாடிய புலவர்க்குக் 'கல்பொரு சிறுநுரையார்' என்றே பெயர் வழங்கி விட்டது!

இங்ஙனமாக, இல்வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது. சங்க இலக்கியங்களில் இதைப்போன்று எத்தனையோ அழகிய சித்திரங்களைக் காணலாம். பண்டைக் காலத்துச் சமுதாய வாழ்வில் ஒரு பெரும் பகுதியான இல்வாழ்வு இன்றும் நம் உள்ளத்தைக் கனிவிக்கின்றது; இன்றும் நம்மால் போற்றத்தக்கதாயுள்ளது; இன்றும் நமக்கு லட்சிய வாழ்வாக விளங்குகின்றது.

இல்வாழ்வு லட்சிய வாழ்வு

சமுதாய வாழ்விலும், கல்வியிலும், கவித்துவத்திலும் சிறந்த லட்சியங்களை மேற்கொண்டு, தமக்கும் தமிழ்நாட்டிற்கும் என்றும் இறவாப் பெரும்புகழ் படைத்துக் கொண்ட பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள் இல்வாழ்க்கையில் இன்பந் துய்த்தலோடு மட்டும் அமைந்து விடவில்லை. அக்காலத்துச் சமுதாய நிலையும் அரசியல் நிலையும் அங்ஙனம் அமைந்து விடுதற்கு இடமும் கொடுக்கவில்லை. சமுதாயத்தையும் அரசியலையும் எப்பொழுதும் பாதுகாக்க வேண்டியதிருந்தது. நாட்டை எப்பொழுதும் போருக்கு ஆயத்தமாக வைத்திருக்கவேண்டும் அவசியம் ஏற்பட்டிருந்தது. தமிழ் மக்கள் வீரத்திற் குன்றுதவர்களாக இருந்தார்கள். ஆகவே வீர வாழ்க்கையிலும் அவர்கள் சிறந்த லட்சிய புருஷர்களாக விளங்கினார்கள். பெண்டிருங்கூட இவ்வீர வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார்கள். ஒருத்தி செயலைக் காணுங்கள்:

சமுதாய வாழ்வும் அரசியல் நிலையும்

மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து களத்து ஒழிந் தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பொருநரை விலங்கி ஆண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று முயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே.

(புறம். 279.)

முந்தின நாள் நிகழ்ந்த போரிலே இவளுடைய தமையன் யானையைக் கொன்று வீழ்த்தித் தானும் மடிந்தான்; நேற்றைப் போரிலே இவள் கணவன் பகைவர்களை மேல் முனைந்து வரவொட்டாது தடுத்து ஓட்டுவித்து தானும் அழிந்தான்; இன்றோவெனின் போர்ப்பறை கேட்டதும் தனது ஒரே மகனை அன்போடு உயிருறத்தழுவி, வேலைக் கையிற்

வீர வாழ்க்கை

கொடுத்து, வெண்மையான உடை உடுத்து, குடுமிக்கு எண்ணெயிட்டு வாரிமுடித்துப் போர்க்களத்துக்குச் செல்லவிடுகின்றாள். இவளன்றோ வீரத்தாய்! இவளை யொத்த வீரத்தாயரன்றோ பண்டைத் தமிழகத்தின் புகழை வளர்த்தவர்கள். இவ் வீரத்தாயரிடம் பால் குடித்து வளர்ந்த ஆண்மக்கள் எத்தனை சிறந்த வீரர் களாய்த் திகழ்ந்திருத்தல் வேண்டும்! ஒருவன் செயலை நோக்குங்கள் :

வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்துவாள் வலத்தன் ஒருவ னாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்கு
ஆழி யனையன் மாதோ

(புறம் 330)

'பகையரசனது சேனைசமுத்திரமானது அலைமேல் அலை யாய் மோதிப் பரந்தெழுந்து தன் சேனையை நெருக்கித் தாக்க, தான் ஒருவனாகவே வலது கையில் வாளேந்தித் தன்னைக் கடந்து அச் சேனைசமுத்திரம் செல்லாதபடி தடுத்து ஒரு வீரன் நிற்கின்றான். இந்நிலையில் அவன் சமுத்திரத்திற்குக் கரைபோலத் தோன்றுகிறான். இவ னது வீரம்தான் என்ன!' என்பது இதன் கருத்து. இத் தகைய வீரவாழ்க்கைச் சித்திரங்கள் பலவற்றைச் சங்க இலக்கியங்களிலே காணலாம். இவ்வீரவாழ்க்கை இப் பொழுதுங்கூட நமக்குப் பேருணர்ச்சியை உண்டுபண்ணி நமக்கு லட்சிய வாழ்வாக அமைந்திருக்கின்றது.

நட்பு வாழ்க்கை

பகைவர்மீது போர் தொடுத்து நிகழ்த்தும் வீர வாழ்க்கை இங்ஙனமாக, பண்டைத் தமிழ் மக்கள் நட்பாடல் செய்த அருமை பெரி தும் பாராட்டிப் போற்றத் தக்கது. பின் வரும் புறநானூற்றுச் செய்யுள் நோக்கற்குரியது :

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய ஆயினும், தொடை புணர்ந்(து)

அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றி யாங்(கு) என்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பால ராகுபவே

(புறம் 218)

இது பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ் சோழனுக்கும் இருந்த நட்பினைக் கண்டு கண்ணகனார் என்ற புலவர் பாடியது. 'இனம் இனத்தோடு' என்ற பழமொழியின் கருத்து இச்செய்யுளோடு ஒப்பிடத்தக்கது.

சொற்செறிவும் ஆற்றலும் அமைந்த கவி

சான்றோர் வெவ்வேறு இடங்களில் தோன்றி வாழ்ந்தபோதிலும், ஒருவரோடு ஒருவர், நெருங்கிய கேண்மை கொள்வர் என்பது செய்யுளின் கருத்து. இதற்கு ஓர் உபமானம் தரப்படுகிறது. பொன்னும், பவளமும், முத்தும், இரத்தினமும் ஒன்றினின்று ஒன்று வெகு தூரத்தில் தோன்றியபோதிலும், விலை மிக்க நல்ல அணிகலம் என்று அமைக்குங் காலத்து அவை ஒரு கோவையிற் பொருந்திச் சேருகின்றன என்பது உபமானம். இதன் அழகும் நயமும் அறிந்து இன்புறத்தக்கன. 'சாலார் சாலார் பாலராகுபவே' என்பது சொல்லியொழிக்க வேண்டியதாதலாலே, அவ்வடியை இலேசாக உச்சரித்து விட்டுவிடுதல் வேண்டும். உபமானம் செல்லும் வரையும் எதுகை மோனை நயங்களால் செய்யுளின் அடிகள் சிறந்து விளங்குவதும், அது முற்றியபின், கருத்தின் தனி ஆற்றலே துணையாக, மோனை முதலிய நயமின்றியும் பேரழகுபடக் கடைசி இரண்டு அடிகள் அமைந்திருப்பதும் புலவரின் கவித்வ சக்தியை அறிவுறுத்துகின்றன. கருத்துக்கு ஏற்ற சொற்கள், சுவைத்துத் தேர்ந்தெடுத்த சொற்கள், கட்டுரைச் சுவைபட அமைந்த சொற்செறிவு, எளிமையும் ஆற்றலும் படைத்த செய்யுள் நடை, கம்பீரமான ஓசைநயம், பொருள் செல்லும் கதியும், செய்யுளின் கதியும், ஒன்றை ஒன்று தழுவி நிற்கும் அமைதி—இவை அனைத்தும் இச்செய்யுளில் விளங்குகின்றன. இவ் இயல்புகள் சங்கச் செய்யுள்களுள் பெரும்

பாலனவற்றிற் காணப்படுகின்றன. இத்தகைய செய்யுட் செல்வம் நம்மவரால் என்றும் போற்றுதற்கு உரியது.

சங்க இலக்கியக் கவிஞர்கள்

இங்கே காட்டிய செய்யுட் சித்திரங்களிலெல்லாம் கருத்தின் எளிமையும் நேர்மையும் உண்மையும் ஆத்ம குணங்களாக விளங்குகின்றன. சங்க காலத்துக் கவிஞர்கள் இயற்கை உண்மையைச் சித்திரிப்பதில் ஆர்வமுடையவர்கள். தெளிந்த அறிவுக்கு எட்டாத மயக்கப் பொருள்களிலே மனத்தைச் செல்லவிட்டு அவர்கள் குருட்டாட்டம் ஆடவில்லை. மிகைபடக் கூறுதலை அவர்கள் பெரும்பாலும் மேற்கொள்ளவில்லை. மக்கள் வாழ்வை அழகு செய்வனவாக எவையெல்லாம் உளவோ அவை எல்லாவற்றின் மீதும் பேரார்வம் கொண்டிருந்தனர். அவர்கள் கையாண்ட தமிழ் அவர்களது கருத்துக்களை வெளியிடுவதற்கு ஏற்ற இனிய அழகிய கருவியாக வாய்ந்திருந்தது. சுவைத்துச் சுவைத்துத் தேர்ந்தெடுத்த சொற்கள்; பொருள் ததும்பும் தொடர்கள்; கருத்தோடு பிணைந்து இயலும் இனிய இசை; அழகு நிரம்பிய வடிவங்கள்; உணர்ச்சி ததும்பும் செய்யுட்கள் : இவை யாவும் செறிந்தவை சங்க இலக்கியங்கள். 'நவில்தொறும் நூல் நயம்போலும்' எனத் திருவள்ளுவர் கூறியுள்ளது இந்த **இலக்கியங்களைக்** கருதியே போலும்!

செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்னும் பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே!

என்று தேசீய கவி பாரதி பாடிய பாவின் ஆழ்ந்த கருத்து இப்போது நமக்கு ஒருவாறு புலனாகின்றது.

10

****

ஜைனரும் இலக்கியமும்

தற்காலத்தில் தமிழ் நாட்டில் சைனர்கள் அங்கங்கே அருகிக் காணப்படுகின்றனர். சென்னையிலும் காஞ்சீ புரத்திலும் சித்தாம்பூரிலும் கும்பகோணத்திலும் திண்டிவனத்திலும் மன்னார்குடியிலும் இவர்கள் ஓரளவு கணிக்கத்தக்க தொகுதியினராக வாழ்ந்து வருகின்றனர். தமிழ்க் கல்வியில் முன்னணியில் நிற்பவராக இவர்களில் பெரும்பாலாரைக் கூற முடியாது. தம்மைச் சூழ்ந்துள்ள பிற சமுதாயங்களினின்றும் இவர்களைப் பிரித்து அறிவது எளிதல்ல. ஆனால் 10 அல்லது 12 நூற்றாண்டுகளுக்கு முன்னர் இவர்கள் இருந்த நிலைமை மேற்கூறியதற்கு முற்றும் மாறாக இருந்தது. இவர்களுடைய சமயம் உச்ச நிலையை அக்காலத்தில் எய்தியிருந்தது. இவர்களுடைய கல்வி அறிவு அனைவராலும் போற்றப்பட்டது. இவரது பள்ளிகள் ஆசார சீலங்களுக்கு உறைவிடமாய் ஞானத்தின் பீடமாய் விளங்கின. இவர்கள் தமிழ் மொழிக்குச் செய்துள்ள உபகாரம் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் என்றும் போற்றுதற்குரியது.

சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்னர் வைதிக சமயங்களாகிய சைவ வைஷ்ணவ மதங்களும் மேம்பாடுற்று தமிழ் மக்களிடையே பரவியிருந்தன. இச் சமயங்களைப் பெரிதும் போற்றிப் பரப்பி வந்தவர்கள் பெரும்பாலும் அந்தணர்களே. அரசர்கள் இவர்களைப் பின்பற்றி நின்றனர். இவ்வந்தணர்களும் தமது சீலாசாரங்களாலும் கல்விப் பெருமையினாலும் தமிழ் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தனர்.

ஆகவே, வைதிக சமயமும் ஜைன சமயமும் ஒன்றோடொன்று இகலிப் போட்டியிட்டு நின்றன. மன்னன்

எப்படி மன்னுயிர் அப்படி என்பது ஒரு பெரிய உண்மை. இரண்டு சமயத்தவர்களும் தங்கள் தங்கள் சமயத்திற்குச் சார்பாக இருக்கும்படி அரசர்களை வசப்படுத்த முயன்றனர். பொதுமக்களைத் தங்கள் அறிவாற்றலினாலும், ஒழுக்க மேம்பாட்டினாலும், மந்திர தந்திரங்களாலும் தங்கள் சமயத்தைத் தழுவும்படி தூண்டினர். சமயப் போர் ஞானசம்பந்தர், அப்பர் இவர்கள் காலத்தில் தமிழ் நாட்டில் மிகுதியாக நிகழ்ந்தது. முடிவில் வைதிக சமயங்கள் வெற்றி பெறலாயின. சைன சமயம் க்ஷீண தசை அடைந்தது.

வைதிக சமயங்களுக்கு ஊன்றுகோலாக இருந்த அந்தணர்களுக்கும் சைனர்களுக்கும் கொள்கையில் பல வேறுபாடுகள் உண்டு. அவற்றுள் இரண்டு வேறுபாடுகளைச் சிறப்பாகக் கூறலாம். முதலாவது, உயிர்க் கொலை நிகழ்ந்த வேத வேள்வியை சைனர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. 'அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத் துண்ணாமை நன்று' என்றனர் வள்ளுவர். அதனை நிந்தனையும் செய்தார்கள் என்பது ஞான சம்பந்தர் திருவாக்குகளால் அறியலாம். இரண்டாவது பிறப்பினால் மக்களுக்குள் வேற்றுமையில்லை என்றனர்.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்
பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

என்று வள்ளுவர் கூறினர். மூலக்கொள்கை இவ்வாறிருப்பினும் வெகு விரைவில் சைனர்கள் பிறப்பினால் மக்களுக்குள் உயர்வு தாழ்வு உண்டு என்ற கொள்கையை மேற்கொண்டு விட்டனர். இதனால் இந்து சமுதாயத்திலுள்ள இனப்பகுப்பு இவர்களை எவ்வளவாகப் பாதித்து விட்டதென்பது நன்கு புலப்படுகிறது. அன்றியும் வைதிக சமயத்தினரைப் போலவே இவர்களும் முற்பிறப்பு மறுபிறப்பு முதலியன உண்டு என்ற கொள்கை உடையவர்கள். இக்கொள்கையை மேற்கொண்டால் பிறப்பினால் வேற்றுமையை ஒத்துக்கொண்டே தீரவேண்டுமென்பதை எளிதில் உணரலாம். ஆயினும் சைனர்களுடைய மூலக் கொள்கை முற்றும் பயனற்றுப் போகவில்லை. உயர்ந்த

குலத்தினராகப் போற்றப்படும் அந்தணரினத்தை ஒருவன் தன் செவ்விய ஒழுக்கத்தால் எய்துதல் கூடும் என்றனர். அந்தணராதல் பிறப்புப்பற்றி யன்று; ஒருவனது ஒழுக்கம் பற்றியதே எனக் கூறுவதால் இது விளங்கும்.

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

என்பது தமிழ் வேதம். இதனால் சாதியின் கடூரமான தன்மை நிலை தளர்ந்துவிட்டது.

மேலே குறித்த இரண்டு வேறுபாடுகளினாலும் இலக்கியம் பெற்றுள்ள நன்மைகள் இங்கே கவனித்தற்குரியன. வேத வேள்வியின் நிந்தனையும் ஒழுக்கச் சிறப்பும் அவைகள் பற்றிய கதைகள் பல தோன்றுவதற்குக் காரணமாயின. கதைகளின் சிருஷ்டி தத்துவத்தை இயக்கி வந்த பெருஞ்சக்திகளாக இவை பரிணமித்தன. இவை முற்றுப் பெறுவதே கதைகளின் நோக்கமாகவும் அமைந்தது. கதைகளின் உட்பொதி பொருளும் இவை தாமேயாக முடிந்தது. யசோதர காவியம் என்ற நூலைப் பற்றிப் பலரும் அறிவார்கள். இக் காவியத்தின் கதை வேள்வியில் உயிர்ப்பலி கொடுத்தல் தீய செயல் என்ற சைனக் கொள்கையை வற்புறுத்துவதற்கே தோன்றியதாகும். ஒழுக்க நூல்கள் பலவற்றை இயற்றியவர்களும் சைனர்கள் என்பது பிரசித்தம்; இதுபற்றி வள்ளுவர்,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்று கூறினர். திருக்குறள், நாலடியார், சிறுபஞ்சமூலம், ஏலாதி, அறநெறிச்சாரம் முதலிய நீதி நூல்களின் ஆசிரியர்கள் சைனர்கள் என்பது நாம் உணரத்தக்கது.

பல பிறப்பு உண்டு என்ற கொள்கையும், ஒரு பிறப்பின் நிகழ்ச்சிகள் அதற்கு முன்னுள்ள பிறப்புக்களில் செய்த கருமங்களின் விளைவே என்ற கொள்கையும் வைதிக சமயத்திற்கும் சைன சமயத்திற்கும் பொதுப்பட உரியனவே. ஆனால் சைனர்கள் தருக்கத்தில் மிகுந்த

ப்பயிற்சியுடையவர்கள். இவர்களுடைய 'சப்த பங்கி' நியாயம் ஒன்றே இதற்குப் போதிய சான்று. காரணம் உண்டேல் காரியம் உண்டு; நம் கண்ணெதிரே நிகழுங் காரியங்களுக்கெல்லாம் முற்பிறப்புக்களில் காரணங்கள் இருத்தல் வேண்டும். இக் காரணங்களை நுட்பமாகக் கூறுதலும், முற்பிறப்புக்களின் நிகழ்ச்சிகளை விரிவாக உணர்த்துதலும், கருமங்களின் விளைவை அனுபவித்தற்குரிய இடமாகிய உலக விவரங்களை கடைபோக அறிவித்தலும் ஜைன நூற்கள் மேற்கொண்ட முக்கிய நோக்கங்களாகும். இவை பற்றிக் கூருத ஜைனக் கதைகளே இல்லை என்று கூறலாம். எனவே இவையும் கதையின் உட்பொதி பொருளாகவும் இடையிற் கலந்துவரும் பொருளாகவும் அமைந்துவிட்டன. இவற்றின் பொருட்டே கதை நூல்கள் எழுந்தன என்று கூறலாம்.

முற்பிறப்பு நிகழ்ச்சிகள்

பிறப்புக்கள் பற்றிய இக்கொள்கைகளால் வேறெரு விளைவும் உண்டாயிற்று. உப கதைப் பெருக்கம் இதனுல் விளைந்தது. ஒன்றிற்குள் ஒன்ருய்க் கதைகள் பெருகின. ஆங்கிலத்தில் "பாக்ஸிங் ஆப் ஸ்டோரிஸ்" என்று கூறுவது இவ்வகைக் கதை முறையையே. பஞ்ச தந்திரக் கதைகள் இம்முறையைப் பின்பற்றி அமைந்தனவே. ஒரு சிறிய உதாரணம் தருகிறேன். 'நாய் தேவனுயிற்று' என்று இலக்கணங்களில் உதாரணம் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதை சீவக சிந்தாமணியில் குணமாலையாரிலம்பகத்தில் வருகிறது. சீவகன் நீர் விளையாட்டுக் காணச் சென்றனன். அவ்விழாவில் அந்தணர்க்கு ஆக்கிவைத்த சோற்றுத் திரளில் ஒரு நாய் வாய் வைத்து விட்டது. அந்தணர்கள் அந் நாயை அடித்து ஓட்ட, அது ஓடி ஒரு குளத்தில் விழுந்து விட்டது. அப்பொழுது ஒரு குடிகாரன் வந்து தன் நாயைக் கொன்றுவிட்டதாகக் கூறிக் கலகம் விளைத்தான். சீவகன் கலகத்தைத் தீர்த்து குற்றுயிராய்க் கிடந்த நாயைக் கண்டதும் கண்ணீர் விட்டு, பஞ்ச நமஸ்கார மந்திரத்தை நினைத்தால் தெய்வ உடம்பு எய்துவாய் என்று கூறி, அம் மந்திரத்தை அதன் செவியில் ஓதினன். ஓதிய

உபகதைப் பெருக்கம்

தும் நாயுடம்பு நீங்கித் தெய்வ உடம்போடு ஓர் அமரன் தோன்றினான். அவன்தான் சுதஞ்சணன் என்னும் வித்யா தர வேந்தன் என்றும் தனக்கு உரிய தெய்வ உடம்பைத் தந்த நன்றிக்குத் தான் மிகவும் கடப்பட்டவனென்றும் சீவகன் துன்பமுற நேர்ந்தால் தன்னை நினைத்தவுடன் தான் வந்து உதவுவது திண்ணம் என்றும் கூறி விடை பெற்று மறைந்தான். இது குணமாலையாரிலம்பக் கதை யில் பிறப்புப்பற்றிய ஓர் உட்கதை. உட்கதையின் உட் கதையாய் வருவன ஸ்ரீ புராணத்தில் பல காணலாம்.

தருக்கத்தில் சைனர்கள் சிறந்து விளங்கினார்கள் என்று மேலே கூறினேன். வாத நூல்கள் பலவும் இவர் கள் இயற்றினார்கள். பொதுவாக இந்நூல்கள் கற்போருக் குக் கடினமாயும் சுவை முதலிய நயங்கள் ஒன்றேனும் இல்லாததாயும் இருப்பது இயல்பு. இவற்றில் இந்நயங்களை எதிர்பார்ப்பது மலட்டுப் பசுவைக் கறந்து பால் பருக நினைப் பது போலத்தான். ஆனால் இவற்றிலும் சைனர்கள் இலக்கியச் சுவையை உண்டுபண்ணினார்கள். இவ்வகை நூல்கள் எத்தனையோ முற்காலத்தில் இருந்தன. தற் போது எஞ்சி நிற்பது நீலகேசி ஒன்றே. இதனை நோக்கி னால், கதையென்ற அளவில் சுவையற்றதான ஒரு பொருளை எடுத்துக்கொண்டு பலவகைச் சுவைகளையும் வர்ணனைகளையும் அலங்காரங்களையும் புகுத்தி இலக்கிய மாக அமைக்கவல்லவர்கள் சைனர்கள் என்பது விளங்கும். குண்டலகேசி என்ற பௌத்த நூலின் மறுப்பாகவே நீல கேசி தோன்றியது. இதனால் வாத நூல்களை இலக்கிய மாக அமைக்கும் முறையில் பௌத்தர்களும் வல்லவர் களா யிருந்தமை புலப்படும்.

வாத நூல்கள்

தருக்கத்திற்போலவே இலக்கணம் அலங்காரம் முத லிய துறைகள் பலவற்றிலும் சைனர்கள் பெரும் பயிற்சி பெற்றுப் பேராற்றல் வாய்ந்தவரா யிருந்தார்கள். இவற்றால் இவர்களது மொழி யுணர்ச்சியும் இலக்கிய உணர்ச்சியும் பெருஞ் சிறப்பு எய்தின. வடமொழி, பிரா கிருதம் முதலிய பன்மொழி—அறிவும் இவர்களுக்குப்

இலக்கண நூல்கள்

பெருமை அளித்தன. இம்மொழிகளிலும் தமிழிலும் இலக்கணங்கள் பலவற்றை இவர்கள் இயற்றியுள்ளார்கள், தமிழ் மொழிக்கு விளக்கு எனப் போற்றப்படும் பேரிலக்கணத்தைச் செய்த தொல்காப்பியர் ஒரு சைனர். யாப்பருங்கலத்தையும் அதன் அருமையான விருத்தியுரையில் காணப்படும் இலக்கணங்களில் பெரும்பாலானவற்றையும் இயற்றியவர்கள் சைனர்களே. இவ்வகை இலக்கணக் கல்வியை நன்கு பயன்படுத்தி இலக்கியத்தைத் தனிப்பட்ட ஒருகலையாகச் செய்த பெருமை சைனர்களுக்கே உரியது.

இலக்கிய செல்வங்கள்

தமிழ் மொழியில் இலக்கிய சிரோரத்னங்களாக உள்ளன ஐந்து நூல்கள். அவை சிந்தாமணி, கம்பராமாயணம், பெருங்கதை, சிலப்பதிகாரம், திருக்குறள் என்பவை. அவற்றுள் நான்கு நூல்களின் பெருமையைக் குறித்து ஒரு புலவர்

திருத்தக்க மாமுனி
சிந்தாமணீ கம்பர்
விருத்தக் கவித்திறமும்
வேண்டேம் உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக்
கூறேம் குறளனுகேம்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு

என்று கூறினர். இந்நான்கு நூல்களையும் கற்று அனுபவியாது விட்டால் ஒருவன் குருடனுக்கு சமானமானவனென்றும், அவனுக்குச் சூரியன் எந்தத் திசையில் உதித்தாலும் அல்லது உதிக்காமற் போனாலும் ஒன்றுதான் என்றும் இச்செய்யுள் கருதுகின்றது. மேற்கூறிய ஐந்து நூல்களுள் கம்பராமாயணம் ஒன்று தவிர ஏனைய நான்கும் சைனர்கள் நமக்குத் தந்த இலக்கியச் செல்வங்களாம். இலக்கியக் கலையைச் சைனர்கள் எவ்வாறு வளர்த்து வந்தார்கள் என்பதை இங்கே கூறியவற்றால் ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

11

பதினாறும் நூற்றாண்டில் இலக்கியம்*

பதினாறும் நூற்றாண்டு நமது தேச சரித்திரத்தில் எவ்வளவு முக்கியமோ அவ்வளவாக நமது இலக்கிய சரித்திரத்திலும் அது முக்கியமாயுள்ளது. இக்காலத்தில் விஜய நகரத்து அதிபதியாகிய கிருஷ்ணதேவ ராயரும் அவரது வழி வந்தோர்களும் நேர்முகமாகவும் பிரதிநிதிகள் மூலமாகவும் நமது நாட்டில் பெரும் பகுதியை ஆண்டுவந்தனர். பிரதிநிதிகளுள் முக்கியமானவர்களாகத் தஞ்சையில் ஆண்டுவந்த நாயக்க அரசர்களையும் மதுரையில் ஆண்டுவந்த நாயக்க அரசர்களையும் குறிப்பிடுதல் தகும். இவ் அரசர்கள் முதலிய அனைவரும் புய வலியால் நாட்டினைப் பேணி வளர்த்து வந்தனர். வட மொழியினையும், தமிழ் மொழியினையும், தம் தாய்மொழியாகிய தெலுங்கினையும், பாரபக்ஷமின்றி இவர்கள் ஆதரித்தனர்.

பதினாறும் நூற்றாண்டில் தமிழ் நாடு

திருநெல்வேலிப் பிரதேசத்தில் பழைய பாண்டிய அரசர்களின் கிளைஞர்களாகக் கருதத்தக்க அரசர்கள் சிலர் ஆட்சி புரிந்துவந்தனர். இவர்களுள் முக்கியமான

---

*மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள், சேது ஸமஸ்தான மஹாவித்வான் ரா. ராகவையங்காரவர்கள், திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் இராவ் ஸாகிப் மு. ராகவையங்காரவர்கள், எஸ். அநவரதவிநாயகம் பிள்ளையவர்கள், இலக்கண விளக்க பரம்பரை சோமசுந்தர தேசிகரவர்கள் முதலிய அறிஞர்கள் செய்துவந்த ஆராய்ச்சியின் பயனாலேயே இந்நூற்றாண்டுத் தமிழிலக்கிய சரிதம் ஒருவாறு புலனாவதாயிற்று. தேசிகரவர்கள் 'தமிழ்ப் புலவர்கள் வரலாறு : பதினாறும் நூற்றாண்டு' என்ற ஒரு நூலும் எழுதியுள்ளார்கள். இவ் அனைவர்க்கும் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

வர்கள் அதிவீரராம பாண்டியன், வரதுங்கராம பாண்டியன் முதலியோர். தமிழ் வேந்தர்களாயிருந்த சேர வமிசமும் சோழ வமிசமும் இக்காலத்து அருகிப் போயின. தமிழ் மொழிக்கு வேறு ஆதரவில்லாமையை உணர்ந்து திருநெல்வேலிப் பாண்டியர்கள் தமது தாய் மொழியை மிக்க சிரத்தையுடன் போற்றி வந்தார்கள். ஒரு சிலர் தாமே சிறந்த கவிஞர்களாகவும் விளங்கினர். நாட்டிலும் அமைதி பரவிவரலாயிற்று. அங்கங்கே போர்கள் சில நடந்துவந்த போதிலும் அவையெல்லாம் பெருங் குழப்பம் உண்டு பண்ணத் தக்கனவாயில்லை. மேலும் இப் போர்கள் விஜயநகரத்து அரசர்கள் மேற்கொண்டன ஆதலால், தமிழ் நாட்டில் அவைகளால் பீடை ஏற்படவில்லை. அமைதி நிரம்பியிருக்குங் காலத்தில் கல்வியும் புலமையும் ஒருங்கு பிரகாசிப்பதற்கு இடம் உண்டல்லவா? அரசாங்க விஷயங்களில் தலையிடாது, தத்தம் ஆன்ம லாபத்தின் பொருட்டும் புகழின் பொருட்டும் உழைப்பதற்குப் புலவர்களுக்குத் தக்க வசதி ஏற்பட்டிருந்தது.

திருநெல்வேலிப் பாண்டியர்கள்

அன்றியும் சமயச் சார்பான ஸ்தாபனங்களும் இக்காலத்தில் உண்டாயின. இந்த ஸ்தாபனங்களால் சமய உணர்ச்சியும், சமய நூற் கல்வியும், சமயத்திற்கு உரிய இலக்கியங்களின் வளர்ச்சியும் நாடெங்கும் போற்றப்பட்டன. திருவாவடுதுறை ஆதீனமும், தருமபுர ஆதீனமும், காஞ்சீபுரம் ஞானப்பிரகாசர் ஆதீனமும், சூரியனார் கோயில் ஆதீனமும், வீர சைவ மடங்களும் இக்காலத்தேதான் தோன்றி மேம்பாடுற்றன. ஆதீனங்களைச் சார்ந்த சிஷ்யர்களும் அங்கங்கே தங்கியிருந்து சமய நூல்களை விருத்தி செய்தனர். வைஷ்ணவ சமயத்தினரும் ஜைனரும் புலமையிற் சிறந்து, தத்தம் சமயத்திற்கு உரிய நூல்களையும் நிகண்டு முதலியவற்றையும் இயற்றித் தமிழ் இலக்கியத்தை வளமுறச் செய்தனர்.

சமயச் சார்பான ஸ்தாபனங்கள்

பதினாறும் நூற்றாண்டில் தமிழ் இலக்கியங்கள் செழித்தோங்கிய வரலாறு இதுவேயாம் என்பது ஒரு சில

உதாரணங்களை நோக்கினுல் தெற்றெனப் புலனும். கி. பி. 1509-ல் விஜயநகர ராஜ்யத்தைக் கிருஷ்ணதேவ மகாராயர் ஆளத் தொடங்கி 22-வருஷங்கள் அரசுபுரிந்தார். இவரது தாய்மொழி தெலுங்கு; தெலுங்கு மொழியிலே இவர் தாமே காவியம் இயற்றியிருக்கின்ருர். ஆனுல் பிற மொழிகளையும் இவர் தக்கபடி ஆதரித்து வந்தனர். இவரது ஆஸ்தானத்தில் குமார சரஸ்வதி யென்ற ஒரு தமிழ்ப் புலவரும் இருந்தனர். அரிதாஸர் என்ற பாகவத சிரோமணி ஒருவர் அரிகண்டபுரம் என்னும் நகரிலே திருமாலைப் பிரதிஷ்டை செய்து கிருஷ்ணதேவ ராயரது அன்புக்குப் பாத்திரராஞர். இந்த அரிதாசர் இருசமய விளக்கம் என்ற ஓர் அரிய தமிழ் நூலைச் செய்தனர். இந் நூலில் காணப்படும் கடவுள் வாழ்த்து, சரித்திர நிகழ்ச்சி ஒன்றை உட்கொண்டுள்ளமை கவனித்தற்கு உரியது :

கிருஷ்ணதேவ மகாராயர் ஆதரவு

கிரிபோல் விளங்கிக் கிளரும்புயக் கிட்ணராயன்
தரைமீது சிங்காத் திரியிற்செயத் தம்ப நாட்ட
வரமா தரவா லளித்தேவட கூவ மேவும்
கருமா மணிவண் ணனைநீடு கருத்தில் வைப்பாம்

தமக்குரிய வைஷ்ணவ மதத்தினரை ஆதரித்தது போலவே சைவ சமயத்தினரையும் கிருஷ்ணதேவ ராயர் ஆதரித்து வந்திருக்கிருர். காஞ்சீபுரம் ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் ஆதீனத்தில் குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்த தத்துவப் பிரகாச ஞானப்பிரகாசர் என்பார் இவ்வரசர் பெருமாஞற் பெரிதும் போற்றப்பட்டவர். மஞ்சரிப்பா என்னும் ஒருவகைப் பிரபந்தத்தால் இக் குருமூர்த்தி அரசரைப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். இங்ஙனமே ஜைன சமயத்தினரையும் கிருஷ்ணதேவ ராயர் அபிமானித்து வந்திருக்கின்றனர். சூடாமணி நிகண்டு என்று தற்காலத்தில் வழங்கும் நிகண்டு நூலை இயற்றியவர் மண்டல புருடர் என்னும் ஜைனர். இவர் கிருஷ்ணதேவ ராயரை,

[1]படைமயக் குற்ற போதும்
படைமட மொன்றிலாதான்
மடைசெறி கடகத் தோளான்
மதிக்குடை மன்னர் மன்னன்
கெடிமன்னர் வணங்குந் தாளான்
கிருட்டின ராயன் கைபோற்
கொடைமட மென்று சொல்ப
வரையாது கொடுத்த லாமே

எனப் புகழ்ந்து கூறியிருக்கின்றார். முதல் மூன்று அடிகளில் இராயரது வென்றித்திறமும் இறுதியடியில் அவரது கொடைச் சிறப்பும் புகழப்படுகின்றன. கொடையைக் கூறுமிடத்து,

திடமொழி யம்பற் சேந்தனை யேய்ந்த
கொடைமடம் வரையாது கொடுத்த லாகும்
9: 71:

என்று திவாகரர் கூறியதனையே பின்பற்றித் தம்மைப் பாதுகாத்து வந்த அரசர் பெருமான் எவ்வகையான வரையறையுமின்றி மேகம் போலப் பொருள் முதலியன சொரிந்து தன்னை நோக்கி வாழும் புலவர்களையும் பிறரையும் தலையளி செய்து வந்தார் என்ற செய்தியைச் செய்ந்நன்றி மறவாது விளக்குகின்றார்.

மேலே பெயராற் சுட்டிய தமிழ்ப் புலவர்களையேயன்றி வேறு பல புலவர்களையும் கிருஷ்ணதேவ ராயர் ஆதரித்து, தமிழ் இலக்கியத்தை வளம்படுத்துள்ளார்.

முற்கூறிய அரசர் பெருந்தகைக்குப் பின் அரசு புரிந்த சதாசிவதேவ மகாராயர் காலத்தில் தஞ்சையில் பிரதிநிதியாக ஆட்சி புரிந்தவன் கிருஷ்ணம ராசையன். இவன் சகம் 1483-ல் (கி. பி. 1561) 'திருவாரூர் ஞானப் பிரகாச பண்டாரத்தைப்' பரதேசி முத்திரையும் கணக்கெழுத்தும் அடைத்துக் கொள்ளும்படி செய்வித்து

1. வரையா மரபின் மாரிபோலக்-கடா அ யானைக் கழற்காற் பேகன்-கொடைமடம் படுத லல்லது படைமடம் படான்பிறர் படைமயக் குறினே (புறம். 142.)

அதன் பொருட்டு அப்பண்டாரத்திற்குச் சர்வமானியம் அளித்தான்' என்று சிக்கல் நவநீதப் பெருமாள் கோயில் கர்ப்பக் கிருகத்திலுள்ள கல்வெட்டு (No. 104 of 1922) கூறுகின்றது. இங்கே குறித்த பண்டாரம் கமலை ஞானப் பிரகாசர் என்று பெயர் சிறந்து விளங்கிய பெரியோரா வர். இவர் புலமை வாய்ந்தவரா யிருந்ததோடு, சித்தாந்த சாஸ்திரப் பயிற்சி சோழ நாட்டில் பரவிச் சிறத்தற்குக் காரணராகவும் இருந்தனர். இவரது சிஷ்யர்களுள் ஒருவர் தருமபுர ஆதீனத்து முதற் பீடத்தில் எழுந்தருளியிருந்த குரு ஞானசம்பந்தர். வேறொரு சிஷ்யர் திருவொற்றியூர் ஞானப்பிரகாசராவர். இவர் சிவஞானசித்தியார் பரபக்கத்திற்கும் சங்கற்ப நிராகரணத்திற்கும் ஆராய்ச்சி செறிந்த அரிய உரைகள் இயற்றி யிருக்கின்றனர். திருவொற்றியூர்ப் புராணம் இயற்றியவரும் இவரே. இன்னும் ஒரு சிஷ்யர் சேது புராணம் இயற்றிய நிரம்பவழகிய தேசிகர். திருவுத்தர கோசமங்கைப் புராணம் செய்த மாசிலாமணிச் சம்பந்தரும் இவரது சிஷ்யரேயாவர். இங்ஙனமாக, கமலை ஞானப் பிரகாசரும் அவரது சிஷ்யர்களும் சைவ சமயத்தின் பொருட்டும் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் பொருட்டும் பெரிதும் உழைத்து வந்திருக்கின்றனர். குரு ஞான சம்பந்தரது சிஷ்யருள், பூகோள விலாசம் இயற்றிய மருதூர் ஆபத்தாரணரும் ஒருவர். நிரம்பவழகிய தேசிகரது சிஷ்யர்களுள் சம்பந்த முனிவர் என்பவர் திருவாரூர்ப் புராணத்தையும், ஞானக்கூத்தர் என்பவர் திருவையாற்றின் மஹாத்மியத்தைக் கூறும் பஞ்சநதிப் புராணத்தையும் இயற்றினர்கள் என்பது இங்கே குறிக்கத்தக்கது.

கமலை ஞானப் பிரகாசர் : சிஷ்யர்கள்

ஆதீனங்களாலும் சாஸ்திர உபதேசம் செய்துவந்த ஆசாரியர்களாலும் நாட்டில் பெருகிய சமய உணர்ச்சி பிறிதொரு காரணத்தால் தென்பாண்டி நாட்டில் வலிவு பெறத் தொடங்கிற்று. துருக்க ராஜ்யமாயிருந்த மதுரை, வீர கம்பண உடையாரால் பதினாலாம் நூற்றாண்டின் இறுதியில் விஜயநகரத்து அரசர்களின் பிரதிநிதிகள் கைவசமாயிற்று. இப் பிரதிநிதிகளின் வலிமை மிக மிக,

பாண்டியர்களின் வலிமை குறையத் தொடங்கிற்று. கடைசியாகப் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியர்களுக்கும் மதுரைக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாது போயிற்று. திருநெல்வேலிப் பிரதேசத்தில் இவர்கள் சிற்றரசர்களாய் ஒதுங்கி வாழ்ந்து ஆட்சி புரிந்தனர். அரசாங்கக் கருமங்கள் மிக்கில்லாமையால் இவ் அரசர்கள் சமய அநுஷ்டானங்களை மேற்கொண்டு புலமைத்துறையில் தங்கள் கருத்தைச் செலுத்தினர்.

அதிவீரராம பாண்டியர்

இங்ஙனம் செலுத்தியவர்களுள் முக்கியமாக எடுத்துக் கூறத்தக்கவர் அதிவீரராம பாண்டியர். இவர் சுவாமிதேவர் என்பவரைக் குருவாகக் கொண்டு சைவ நெறியிலே சிறந்து விளங்கினர். தாமே பெரும் புலவராயிருந்ததோடு, புலவர்கள் பலரையும் ஆதரித்து வந்தனர். இவர் இயற்றிய நைடதத்தை அறியாதார் இல்லை. இன்று வரை அந் நூல் நம்மவர்களால் பெரிதும் பாராட்டிப் படிக்கப்பெற்று வருகின்றது. கூர்ம புராணம், காசி கண்டம் முதலியனவும் இவர் இயற்றியனவே.

இப் பாண்டியரது புகழ் நாடெங்கும் பரந்தது. இவரது திருமுன்பு தமது புலமைத் திறத்தைக் காட்டிப் பரிசில் பெற்றுச் சென்ற புலவர்கள் பலராதல் வேண்டும். சேறைக் கவிராச பிள்ளை என்பவர், தமது நாடாகிய தொண்டை நாட்டிலிருந்து வெகு தூரத்திற்கு அப்பாலிருக்கும் தென்காசி சென்று, அங்கே அரசரது முன்னிலையில் தமது புலமையைப் புலப்படுத்திப் பரிசில் பெற்ற சந்தர்ப்பம் ஒன்று தமிழ் நாவலர் சரிதை தெரிவிக்கின்றது. இப்புலவர் தாம் திருக்காளத்திநாதர் உலாவை இயற்றியவர்.

வரதுங்கராம பாண்டியர்

அதிவீரராமருக்குப் பின் அவரது பெரிய தந்தையாரது மகனாராகிய வரதுங்கராம பாண்டியர் ஆட்சி புரிந்தனர். இவரும் பெரும் புலவராக விளங்கியவர். இவரது பத்தினியாரும் புலமை சான்றவராயிருந்தார் என்பது கன்னபரம்பரைச் செய்தி. இதனை ஆதரிப்பதற்கு,

என்னையவர் அறமறந்தும் யான் அவரை
மிகநினைந்திங் கிருந்து வாட
முன்னைவினைப் பயன்தானோ அப்பிறப்பிற்
செய்ததவ முடிந்த வாறோ
கன்னன்மதன் அபிராமன் வரதுங்க
ராமனியற் காசி நாட்டில்
அன்னவயற் குருகினங்காள் இனியெவ்வா
றுயிர்தரித்திங் காற்று மாறே.

என்ற செய்யுளைத் தேவியார் பாடியதாகக் கூறுவர். இவ் அரசராற் பாடப்பெற்ற நூல்களுள் மிகப் பிரசித்தமானவை திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, வெண்பா அந்தாதி முதலியனவும், பிரமோத்தர காண்டமும் ஆம்.

இவ் அரசரது ஆஸ்தான வித்வானாகக் காசிக்கலியன் கவிராயர் என்பவர் விளங்கினர். மேலும் இவ் அரசரது அவைக்களத்திலே ஐயம்பெருமாள் சிவந்த கவிராசர் புரூரவ சரிதை என்னும் காவியத்தை அரங்கேற்றினர்.

16–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொண்டை நாட்டிலும் பிற இடங்களிலும் கிருஷ்ண தேவ மகாராயர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்துத் தமிழ் இலக்கியங்களை வளர்த்தமை முதற்கண் கூறினோம். இந்நூற்றாண்டின் இடைக்காலத்தில் சோழ நாட்டிலும் பிற இடங்களிலும் சமயத் தலைவர்கள் முதலியோர் தமிழ் இலக்கியங்களையும் சமயப் பயிற்சியையும் பெருக்குவித்தமையை அடுத்து நோக்கினோம். இந் நூற்றாண்டின் கடைக்காலத்திற் பாண்டிய நாட்டிலும் பிற இடங்களிலும் சிற்றரசர்கள் முதலியோர் தமிழில் இலக்கிய வளர்ச்சி கருதி நூல்கள் இயற்றினமை கண்டோம். இங்ஙனமாக இந்நூற்றாண்டில் தமிழ் இலக்கியங்கள் பல இடங்களிலும் பல வகையினும் சிறந்து தோன்றின. ஆராய்ச்சிப் பெருகப் பெருக, இன்னும் பல புலவர்கள்

இலக்கிய சரிதத்தின் இன்றியமையாமை

இக்காலத்து வாழ்ந்தார்களாகக் காணுதல் கூடும். ஆனால் இதுகாறும் தெரியவந்த புலவர்களது வரலாறுகளை ஒருசேரத் தொகுத்து உணர்ந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

ஒவ்வொரு காலத்தில் தோன்றிய நூல்களுக்கும் அக்காலத்து அரசியல் நிலை, சமுதாய நிலை முதலியவற்றிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பது ஈண்டு எழுதியவற்றால் ஒருவாறு விளங்கக் கூடும். இவ் உண்மையை உணர்ந்து தமிழ் இலக்கிய சரித்திரம் எழுதப்பெற வேண்டும். இப் பணியை மேற்கொண்டு தமிழ் அறிஞர்கள் இலக்கிய சரிதம் எழுத முற்படவேண்டுவது மிக இன்றியமையாததாகும்

12

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலக்கியம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கில அரசாட்சி தமிழ்நாட்டில் நிலைபெறத் தொடங்கிற்று. கலகங்களும் குழப்பங்களும் அங்கங்கே நிகழ்ந்தன. ஆனால், இவற்றை அடக்கி, அமைதி உண்டாவதற்குரிய முயற்சிகளைத் துரைத்தனத்தார் திறமையுடன் செய்துவந்தனர். இந் நூற்றாண்டின் இறுதிக்குள் தமிழ்நாடு முழுமையும் பூரண அமைதி நிலவலாயிற்று. துரைத்தனத்தார் அதிகாரமும் எங்கும் பரவி, நாட்டின் அபிவிருத்திக்குக் காரணமாயிற்று.

தமிழ் நாட்டில் ஆங்கில ஆட்சி

தமிழ் மக்களின் நன்மையைப் பெரிதும் போற்றி வந்த அரசினர் அவர்களுடைய கல்வி விஷயங்களையும் கவனிக்கலாயினர். கிழக்கு இந்தியக் கம்பெனியார்தாம் அரசாட்சியை நடத்திவந்தனர். இவர்களுடைய வியாபாரத்தொழிலும் ஆட்சி முறையும் செம்மையாக நடைபெறுவதற்குத் தமிழும் ஆங்கிலமும் தெரிந்த பல உத்தியோகஸ்தர்கள் வேண்டியிருந்தார்கள். இக்காரணத்தால் நாட்டின் பொதுக் கல்வியை இவர்களே மேற்கொள்ள நேரிட்டது. நாட்டில் பல இடங்களிலும் கலாசாலைகளை ஏற்படுத்தினார்கள். ஆங்கிலக் கல்வி எங்கும் பரவத் தொடங்கிற்று. தமிழ் மக்கள் ஆர்வத்தோடு இப் புது மொழியைக் கற்றுவரலாயினர். தமிழ்க் கல்வியும் பல புதிய துறைகளில் நிகழ ஆரம்பித்தது. ஆங்கில மக்களும் தமிழைக் கற்கத் தொடங்கி, புதிய நூல்களை

இயற்றி, புதிய பயிற்சி முறைகளையும் வகுத்தார்கள். கலாசாலை மாணவர்க்குரிய நூல்கள் பல வெளிவருவதற்கு இப்பொழுது தருணம் வாய்த்தது. நாட்டின் பொதுக் கல்வியை அரசினராயுள்ளோர் முதன்முதலாகப் பேணியது இப்போதுதான்.

கல்வி இலாகாவின் மூலம் தமிழை வளர்த்ததேயன்றி, வேறு வகையாகவும், தமிழுக்குக் கம்பெனியார் நன்மைபுரிந்தனர். தமிழ் வித்துவான்களைச் சென்னையில் ஒருங்குகூட்டிக் கல்விச் சங்கம் ஒன்று நிறுவினர். இச்சங்கம் தோன்றுவதற்கு முக்கிய காரணமாயிருந்தவர்கள் கர்னல் மக்கென்ஸியும் சென்னையில் கலெக்டராயிருந்த எல்லிஸ் துரையும் ஆவார்கள். பஞ்சதந்திர வசனத்தின் ஆசிரியரான வித்துவான் தாண்டவராய முதலியார் இச்சங்கத்தில் சிறந்து விளங்கியவருள் ஒருவர். பண்டை நூல்களைப் பரிசோதித்துத் திருத்தமான முறையில் அச்சிட்டு வெளியிட வேண்டும் என்பதே இச்சங்கத்தின் முழு நோக்கம். திருக்குறள் முதலிய பெரு நூல்கள் பல இங்ஙனம் வெளிவந்தனவாம்.

கல்விச் சங்கத்தின சேவைகள்

அரசினரைப் போலவே கிறிஸ்தவ மதப் பாதிரிகளும் தமிழைப் போற்றி வரலாயினர். இப்பாதிரிகள் தமிழ்நாட்டில் கிறிஸ்தவ மதத்தைப் பரவச்செய்தலில் மிகவும் ஊக்கத்தோடு முயன்று வந்தனர். இவர்கள் தங்நலம் என்பது சிறிதும் இன்றி, உற்றார் உறவினரையெல்லாம் மறந்து, ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலிருந்து கடலைக் கடந்து இங்நாட்டுக்கு வந்து, தமிழ்நாட்டில் தாழ்ந்த வகுப்பாரிடையே தம்முடைய குடிவாழ்க்கையை வைத்துக் கொண்டு, கஷ்டப்பாடுகளையும் எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது இடையறாது உழைத்து வந்தனர். தங்கள் மதம் வெளியிலே பரவுவதற்குத் தமிழ்க் கல்வியும் ஆங்கிலக் கல்வியும் அவசியம் என்பதைத் தொடக்கத்திலிருந்தே நன்கு உணர்ந்துகொண்டனர். வேண்டும் பொருள்களைத்

பாதிரிமார்களும் தமிழும்

தங்கள் நாட்டிலுள்ள செல்வவான்களிடமிருந்து பெற்று, கல்வி ஸ்தாபனங்களை ஏற்படுத்தினர். இந் நன்முயற்சியில் அரசினரது ஒத்துழைப்பையும் பெற்று வந்தனர். இவ் வாருகப் பொதுக் கல்வியின் அபிவிருத்திக்கு உதவிய தோடு அமைந்துவிடாமல், இப்பாதிரிகள் தாங்களும் தமிழ்மொழியைக் கற்று, மொழி வளர்ச்சியைப் பேண லாயினர். போப் ஐயர் முதலானோர் குறள், நாலடி முதலிய நீதி நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர். ஒரு சிலர் பைபிள் முதலிய கிறிஸ்தவ நூல்களை ஆங்கிலத்தி லிருந்து தமிழில் பெயர்த்தனர். இன்னும் சிலர் புதிய முறையில் இலக்கண நூல் முதலியவற்றைப் புதிதாக எழுதினர். **கால்டுவெல்** என்பவர் தமிழ் மொழியையும் பிற திராவிட மொழிகளையும் கற்று, திராவிட மொழி களின் ஒப்பிலக்கண நூல் ஒன்று எழுதினர். ஐரோப்பிய நாடுகளில் வழங்கிய விஞ்ஞான சாஸ்திரங்களைத் தமிழ் மக்களும் அறிந்து பயன்பெற வேண்டுமென்று கருதி 'கெமிஸ்தம்' (இரசாயன சாஸ்திரம்), 'மனுஷவங் காதி பாதம்' (உடற்கூற்று நூல்) முதலியவற்றை அமெரிக்கப் பாதிரிகள் யாழ்ப்பாணத்திலே தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டனர். இம் முயற்சிகளோடு அமையாது, இப் பாதிரிகள் பல தமிழ் அறிஞர்களையும் தூண்டி நல்ல நூல்களை எழுதுவித்து வெளியிட்டனர்.

இவற்றையெல்லாம்விடச் சிறந்த பேருபகாரத்தை இப் பாதிரிமார்கள் நமக்குச் செய்திருக்கிருர்கள். அது என்னவென்ருல், அச்சு வித்தையை நமது நாட்டில் நிறுவி யதுதான். பழங்காலத்தில் நூல்களை ஓலையில் எழுத் தாணிகொண்டு கையால் எழுதிவந்தார்கள். முதலாவது, இது மிக்க சிரமமான காரியம் என்பது எளிதில் உணரத் தகும். இரண்டாவது பெருவாரியாகப் பிரதிகளை இயற்ற முடியாது. கம்பராமாயணம் முதலிய நூல்களில் ஒரு பிரதியை எழுதி முடிப்பதற்கு ஓர் ஆண் டேனும் வேண்டுவதா யிருந்தது. ஒவ் வொரு பிரதியையும் எழுதியபின் ஒப்பிட் டுச் சரிபார்ப்பதும் அவசியமா யிருந்தது. நன்ருக எழுதக் கூடியவர்களும் அங்கங்கே ஒரு சிலர்தாம் இருந்தார்கள். அவர்களைக்கொண்டு நூல்களை எழுது

அச்சு யந்திரம்

வித்து முடிப்பதற்குப் பணச்செலவும் மிகுதியாக நேரிட்டது. ஆகவே, வித்துவான்களிடத்தும் கல்வியில் ஆவலுள்ள செல்வர்களிடத்தும்தான் நூற் பிரதிகள் கிடைக்கக்கூடியவையா யிருந்தன. மூன்றாவது, எழுதி முற்றுவித்த நூல்களைச் சேமித்துவைப்பது மிகவும் கஷ்டமான காரியமாயிருந்தது. ஓலைகளைப் பூச்சிகள் எளிதில் அரித்துவிடும்; அவ்வாறு அரித்து விடாதபடி காப்பாற்றுவது எளிதில் முடிவதன்று. ஒருவாறு காப்பாற்றிய போதிலும் ஓலைகள் காலக் கிரமத்தில் பொடிப் பொடியாய் உதிர்ந்து அழிந்துவிடக் கூடியனவே. இந்த அழிவைத் தடுப்பதற்கு வழியே இல்லை. கடைசியாக, ஓலைகளில் உள்ள எழுத்துக்கள் ஒரே மாதிரியான வரிவடிவத்தோடு இருப்பனவல்ல. இடத்துக்கு இடம், காலத்துக்குக் காலம் வரிவடிவங்கள் மாறிக்கொண்டே வந்திருக்கின்றன. இம் மாறுபாடுகள் அனைத்தும் சுவடிகளில் காணப்படுதல் இயல்பே. இதனால் அரிதிற் சேமித்து வைக்கப்பெற்ற ஏட்டுப் பிரதிகளை வாசித்துத் தெரிந்துகொள்ளுதல் ஒரு சிலருக்கே இயலுவதாயிருந்தது.

அச்சிட்ட முதல் தமிழ்ப் புத்தகம்

ஆயிரக்கணக்கான பிரதிகளை அழகிய எழுத்துக்களில் மிகச் சுருங்கிய காலத்தில் வெளியிட்டு, நாட்டில் பல இடங்களிலும் பரவும்படி செய்து, நூல்கள் அழிந்துவிடாதபடி காப்பதற்கு அச்சு யந்திரம் நிருமிக்கப்பட்டது. இந்த யந்திரம் ஜெர்மனி தேசத்தினரான **கூடென்பர்க்** என்பவரால் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் அமைக்கப்பட்டது. இங்கிலாந்தில் வெஸ்ட்மினிஸ்டரில் **காக்ஸ்ட்டன்** என்பவர் கி. பி. 1475-ல் முதன் முதலாக அச்சுக்கூடம் ஸ்தாபித்தனர். தமிழ்ப் புத்தகம் ஒன்று பாதிரிகளால் கி. பி. 1575-ல் முதன்முதல் அச்சிடப்பட்டது. ஆனால் 19-ம் நூற்றாண்டில்தான் நமது தமிழ்நாட்டில் அச்சுத் தொழில் நிலைபெறத் தொடங்கியது. கிறிஸ்தவப் புத்தகங்களை வெளியிட்டுப் பரவச்செய்வதற்கு இது அவசியமாயிருந்தது.

நூல்களை வெளியிடும் இப் புதுமுறையைக் கையாளுவதில் தமிழ்நாட்டுத் தமிழ் அறிஞர்களும் பின்வாங்கவில்லை. ஆனால், பழைய நூல்களை அச்சிட்டுக் காப்பாற்றுதலில்தான் அவர்கள் மனம் முற்படச் சென்றது. திருக்குறள் மூலமும், நாலடியார் மூலமும் 1812-ல் வெளிவந்தன. வித்துவான் தாண்டவராய முதலியார், விசாகப் பெருமாளையர், மழவை மகாலிங்கையர், களத்தூர் வேதகிரி முதலியார் முதலானவர்கள் இத்துறையில் ஆரம்பத்தில் உழைத்துவந்தவர்கள். குறள், நாலடியார், தாயுமான சுவாமிகள் பாடல், திருவிளையாடற் புராணம், அரிச்சந்திர புராணம், கலிங்கத்துப் பரணி, தேவாரம், பெரிய புராணம், கம்ப ராமாயணம், பாரதம், நைடதம், சூடாமணி நிகண்டு, திவாகரம், நன்னூல் முதலியன 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பதிப்பிக்கப்பட்டன. அதன் பிற்பகுதியில் ஆறுமுக நாவலர், தாமோதரம் பிள்ளை, டாக்டர் சாமிநாதையர் என்ற மூவரும் பதிப்பாளருள் சிறந்து விளங்கினார்கள். இவர்களுள் நாவலர் சைவ புராணங்களையும், சைவ சாஸ்திரங்களையும், பிற சைவ நூல்களையும் திருத்தமுற அச்சிட்டு, சைவ உலகத்துக்கு மட்டிலும் நன்மை புரிதலை மேற்கொண்டனர். தாமோதரம் பிள்ளை தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும், சங்க நூலுள் ஒன்றாகிய கலித்தொகையையும், சூளாமணி முதலிய சில இலக்கியங்களையும் பதிப்பிட்டு, தமிழ் உலகத்துக்கு நன்மை புரிவதை மேற்கொண்டனர். டாக்டர் சாமிநாதையர் சங்க நூல்களையும், இலக்கணங்களையும், ஐம்பெருங் காவியங்களையும், புராணங்களையும், பிரபந்தங்களையும் மிக நீண்டகாலமாக ஆராய்ந்து, பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் செவ்விய முறையில் பதிப்பிட்டு, சைவ வைஷ்ணவ—உலகிற்கும், இலக்கிய—உலகிற்கும், தமிழாராய்ச்சி—உலகிற்கும் நன்மை புரிதலை மேற்கொண்டனர்.

பழைய நூல்கள் புதிய புத்தகங்களாயின

இவர்கள் அனைவரும் பண்டைப் பெருநூல்கள் இறந்து படாதபடி பாதுகாத்த பெரியோர்கள். இனி, புது நூல்களை இயற்றியவர்களை நோக்குவோம். இவர்

களுள் முற்காலத்து வழங்கிவந்த தமிழ் இலக்கிய நெறியைக் கடைப்பிடித்து நூல்களை இயற்றியவர்கள் ஒருசிலர். மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை ஸ்தல புராணங்கள் பல இயற்றினர். கி. பி. 14ம் நூற்றாண்டிலிருந்து இவ்வகைப் புராணங்கள் இயற்றப்பெற்றபோதிலும், 19-ம் நூற்றாண்டிலே இவை பெருவாரியாகப் பிறந்தன. பல ஊர்களுக்கும் நூதனமாகப் புராணங்கள் ஏற்பட்டன. இவற்றில் காவியரஸமும் ஒரு சிறிது இருந்தமையினால், சமயப்பற்றுள்ள மக்களும் பிறரும் இவற்றைக் கற்றுவந்தனர். ஆனால், எல்லாப் புராணங்களும் ஓரே நெறியிலே சென்று அறிவைச் சலிப்புறச் செய்தமையாலும், இவற்றில் காணப்பட்ட காவிய ரஸம் அதிகச் சிறப்பின்றி இருந்தமையாலும், இவைகள் நாளடைவில் மதிப்பிழந்து போயின. எனினும் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த புலவர்களுள் ஒருவர்.

ஸ்தல புராணங்கள்: மீனாட்சி சுந்தரம் பிள்ளை

பழைய நெறியைப் பின்பற்றியவர்களுள் மற்றொருவர் இராமலிங்க சுவாமிகள். இவரது பாடல்கள் தோத்திர முறையை அனுசரித்தவை. எளிமையும், இனிமையும், அழகும் இவற்றில் ததும்புகின்றன. கல்நெஞ்சையும் கனிவிக்கும் இச் செய்யுட்கள் பண்டிதரும் பாமரரும் ஒருங்கே பாடி இன்புறுதற்கு உரியவை. இவற்றின் இசையின்பம் இவற்றுக்குத் தனிச்சுவையைத் தந்துகொண்டிருக்கிறது.

இராமலிங்க சுவாமிகள்

இந்நூற்றாண்டின் இறுதியில் 'இரக்ஷணிய யாத்திரிகம்' என்ற கிறிஸ்தவ காவியத்தைக் கிருஷ்ண பிள்ளை இயற்றினர். இதுவும் செய்யுள் அமைப்பில் பழைய நெறியை மேற்கொண்டது. கம்பராமாயணச் செய்யுளின் நடையையும் அதன் சிறந்த போக்கையும் அனுசரித்தே இந்நூல் அமைக்கப்பட்டதென்று ஆசிரியர் கூறுகின்றனர். ஆங்கிலத்தில் ஜான்

கிறிஸ்தவ கவிஞர் எச். ஏ. கிருஷ்ண பிள்ளை

பன்யன் இயற்றிய 'பில்க்ரிம்ஸ் ப்ராக்ரெஸ்' என்ற நூற் பொருளேயே மேற்கொண்டது இக்காவியம்.

எளிய இனிய கவிதை

செய்யுள் நெறியில் பழமையைத் தழுவி, தம்காலத்து நிகழ்ச்சியை அமைத்துப் பாடிய நூல் பஞ்சலட்சணம் என்பது. இதனை இயற்றியவர் வில்லியப்ப பிள்ளை. தாது வருஷத்தில் (1876) நிகழ்ந்த பஞ்சத்தின் கொடுமையே இந் நூற் பொருள். இந்நூல் பொதுமக்கள் விரும்பும் எளிய நடையில் உள்ளது. நகைச் சுவை மிக்கது. நூலின் அமைப்பிலும் கருத்திலும் ஆசிரியரது திறமை நன்கு புலப்படுகிறது.

கீர்த்தனைக் கதைகளும் காலக்ஷேபங் களும

பாமர மக்கள் கேடு அனுபவித்தற்குரிய எளிய இனிய கீர்த்தனைக் கதைகள் இந் நூற்றுண்டிற்கே தனித்து உரியனவாம். தஞ்சையில் அரசுபுரிந்த மகாராஷ்டிர மன்னர்களின் ஆதரவில் இக் கதைகள் பெருகின. பொதுஜனங்களும் இவைகளை மிகவும் பாராட்டி அனுபவித்து வந்தார்கள். கதாகாலக்ஷேபங்கள் எங்கும் நிகழ்ந்தன. இவற்றிற்குரிய நூல்களிலே காதுக்கினிய சங்கீதமும், மனத்துக்கு இனிய புண்ணிய கதையும் ஒன்ருக அமைந்திருந்தன. இந்நெறியில் தோன்றியவற்றுள் சிறப்பாக யாவரும் அறிந்தது நந்தனர் சரித்திரக் கீர்த்தனை. இதனை இயற்றியவர் கோபாலகிருஷ்ண பாரதியார்.

இசையுடன் கூடிய நாடகங்கள்

கீர்த்தனைக் கதைகளோடு நெருங்கிய தொடர்புடையன 19-ம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் இடைப்பகுதியிலும் தோன்றிய நாடகங்கள். இவைகளும் பொது மக்களைக் கருதியே இயற்றப்பட்டன. இவற்றில் சங்கீதமும் நடிப்பும் முக்கிய அமிசங்களாய் இருந்தன. முதன் முதலில் ஊர் மக்கள் அனைவரும் திரண்டு இருத்தற்குரிய இடங்களில் நாடகம் நடிக்கப்பெற்றது. பின்னர் நடிப்புக்கெனவே நாடக அரங்கு ஏற்பட்டது. இவ்வகையான நாடகங்களிற் சிறந்தன இராமச்சந்திர கவிராயர் இயற்றிய சகுந்தலை நாடகமும்,

பாரத் விலாசமும், ரங்கப்பிள்ளை இயற்றிய அரிச்சந்திர நாடகமுமாம். தஞ்சையில் வாழ்ந்த கோவிந்தசாமி ராவ் என்பவர் நடிகர் தொகுதிகளை நெறிமுறையே பயிற்று வித்து, மேல்நாட்டு முறையில் நாடகங்களை நடத்தி வந்தனர். இவரே சாவித்திரி நாடகம் முதலியவற்றை இயற்றினர். 1872-ல் டம்பாச்சாரி விலாசத்தைக் காசி விசுவநாத முதலியார் எழுதினுர். இவையே தற்கால நாடகங்களுக்கு வழிகாட்டிகள்.

கீர்த்தனை ரூபமாய் அமைந்த நாடகங்களைக் குறித்து மேலே கூறினோம். ஆங்கில அறிவு பெருகப் பெருக, மேல் நாட்டு முறைகளில் நாடகங்கள் எழுதவும் நடிக்கவும் பெற்றன. இவ்வகை நாடகங்களுள் கீர்த்தனை என்பது பெரும்பாலும் கிடையாது. சம்பாஷணை முறையினுலும், நடிப்புத் திறமையினுலும், கதையின் ரஸத்தினுலும் சங்கீதத்தின் துணையின்றியே சுவைபெறும்படி நாடகத்தை அமைப்பதே தகுதியெனக் கருதப்பட்டது.

இம்முறையில் இயற்றப்பட்ட நாடகங்களில் முதன் முதல் தோன்றியவை மொழிபெயர்ப்புக்களாகும். ஆங் கிலத்தில் **ஷேக்ஸ்பியர்** எழுதிய 'வெனிஸ் வர்த்தகன்' என்ற நாடகம் 1872-ல் மொழிபெயர்க்கப்பட்டது. ஆங்கிலக் கதை ஒன்றை தழுவி மனோன்மணீயம் என்ற நாடகத் தைத் திருவனந்தை சுந்தரம் பிள்ளை இயற்றினர். இது முழுவதும் அகவற்பாவால் அமைந்தது; நடிப்பதற் கன்றிப் படிப்பதற்கென்றே எழுதப்பட்டது. இன்றுவரை வெளிவந்துள்ள இலக்கிய நாடகங்களுள் இதுவே முதன்மை பெற்று விளங்குகிறது. ஆங்கில முறையையும் வடமொழி முறையையும் பின்பற்றி ரூபாவதி, கலாவதி என்ற நாடகங்கள் தோன் றின. இவற்றை இயற்றியவர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார். இவற்றில் செய்யுளும் வசனமும் கலந்து வந்துள்ளன; கையாண்டுள்ள நடையும் உயரிய நடை யாகும். நடிக்கும் நோக்கம் ஒன்றையே கொண்டு இயற்கையான நடையில் எழுந்த நாடகங்கள் லீலாவதி சுலோசனை முதலியன. இவற்றை இயற்றியவர் பம்மல்

மனோன் மணீயமும் பிற நாடகங்களும்

சம்பந்த முதலியார். ஐம்பது நாடகங்களுக்கு மேல் இவர் எழுதியுள்ளார்.

இங்கே கூறிய நாடக முதலியன பொது மக்களுடைய உகப்பையே முக்கிய நோக்கமாகக்கொண்டன. 19-ம் நூற்றாண்டின் இறுதியில் மக்கள் உள்ளத்தில் தேசீய உணர்ச்சி குடிபுகத் தொடங்கியது. இதன் பயனாகத் தமிழ் மொழி ஒரு நூதன சக்தியைப் பெற்றது. தமிழ்ச் செய்யுள் நூதன முறைகளையும் நூதன உருவங்களையும் கையாண்டது. கவித்துவத்தில் புதிய நோக்கங்களும், புதிய உத்வேகங்களும் நிரம்பின. இவற்றால் தமிழ் மொழிக்கு உண்டான நன்மைகள் மிகப் பல. தேசீய இயக்கத்தில் தோன்றிய கவிஞர்களை நாம் 'தேசீய கவிகள்' எனக் கூறுதல் தகும். இத்தொடர்க்குத் தேசாபிமானத்தைப் பற்றிய பாடல்களை இயற்றியவர்கள் என்று சுருங்கிய பொருள் கொள்ளலாகாது. தேசீய இயக்கத்தின் காரணமாக நாட்டில் நிகழ்ந்த மறுமலர்ச்சியில் தோன்றிய கவிஞர்கள் என்றே பொருள் கொள்ளவேண்டும். இக்கவிஞர்களுள் தலைசிறந்தவர் சுப்பிரமணிய பாரதியார். இவருடைய பாடல்களில் கருத்தழகும், ஆற்றலும், எளிமையும், இசை நயமும், தொடரின்பமும் ஒருங்கு அமையக் காண்கிறோம். இவர் 20-ம் நூற்றாண்டுக்கு உரியவரே ஆவர். இவரவ்வளவு சிறந்த கவிஞர் தமிழ் உலகில் சில நூற்றாண்டுகளாகத் தோன்றியதில்லை.

தேசீய எழுச்சியால் தோன்றிய மறுமலர்ச்சி

அரசினர் ஆதரவு பற்றியும், பொதுக் கல்வியின் இயல்பு பற்றியும், கிறிஸ்தவ சமயத்தாரின் தூண்டுதல் பற்றியும், ஆங்கிலம் முதலிய பிறமொழி உணர்ச்சியின் பயன்பற்றியும், வசன நூல்கள் பெருகவேண்டும் என்ற கருத்து இந் நூற்றாண்டில் தோன்றுவதாயிற்று. முற்காலத்தில் மணிப்பிரவாள நடையில் அமைந்த ஒரு சில நூல்களும், இலக்கணம், காவியம் முதலியவற்றின் உரைகளும், சிலப்பதிகாரம் முதலிய காவியங்களில் இடையே பயின்றுள்ள உரை

தமிழில் வசனம் உயரிய நிலையைப் பெற்றது

நடைப் பகுதிகளும் தவிர, வேறு வசனங்கள் கிடையா. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வசன நூல்கள் இன்றி யமையாதன என்ற கருத்து நாளடைவில் வலி பெறலா யிற்று. இராமாயணமும் மகாபாரதமும் வசனத்தில் தோன்றின. கந்தசாமிப் புலவர் 1822-ல் தரும நூல் என்ற சட்ட நூல் ஒன்றை எழுதி வெளியிட்டனர். தாண்டவராய முதலியார் பஞ்சதந்திரத்தையும், கதா சிந்தாமணியையும் இயற்றினர். அரிச்சந்திரன் கதை, நளன் கதை முதலிய பல பழங்காலக் கதைகளும் அச்சில் வெளிவந்தன.

வசன நூல்களில் கதைகளே முதன்முதலில் மக்களை வசீகரித்தன. இக் கதைகளுள் முக்கியமானது பிரதாப முதலியார் சரித்திரம் என்ற அற்புத சம்பவக் கதை. இவ்வகைக் கதையை ரொமான்ஸ் (**Romance**) என்று ஆங்கிலத்தில் கூறுவர். இதனை இயற்றியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை. இதன் பின்னர் கமலாம்பாள் சரித்திரமும், பத்மாவதி சரித்திரமும் தோன்றின. இவற்றின் ஆசிரியர்கள் முறையே ராஜம் ஐயரும், மாதவையரும் ஆவார்கள். இவை இரண்டும் இயற்கை வாழ்க்கைக் கதைகள். இவ்வகைக் கதைகளை நாவல் (**Novel**) என்று ஆங்கிலத்தில் கூறுவர்.

அற்புத கதையும் நாவலும்

சிறு கதைகளும், கட்டுரைகளும் அருகிக் காணப்பட்டன. ஜனவிநோதினி, விவேக சிந்தாமணி முதலிய பத்திரிகைகளில் இவ்வகை வசனங்கள் வெளிவந்தன.

19-ம் நூற்றாண்டின் முக்கிய சிருஷ்டி என்று சொல்லத் தகுவது பத்திரிகை—உலகம். முதன் முதலில் மக்களுடைய கல்வி அறிவு பெருகவேண்டும் என்ற கருத்தோடு இப் பத்திரிகைகள் தொடங்கப்பட்டன. இடையிடையே இலக்கியம், மதம் முதலியவற்றைப் பற்றிய வாதப் பிரதிவாதங்களும் கண்டனங்களும் இவற்றில் வெளியிடப்பட்டன. முதன் முதல் தோன்றிய பத்திரிகைகளுள் முக்கியமானது தினவர்த்தமானி யாகும்.

இது சென்னையிலிருந்து 1856-ல் வாரப் பத்திரிகையாக வெளிவந்தது. சென்னைக் கல்வி இலாகாவிலிருந்து 1870-ல் ஜனவிநோதினி என்னும் பத்திரிகை பிரசுரிக்கப்பட்டது. மாதப் பத்திரிகைகளுள் இதுதான் முதலாவது தோன்றியது. பின்பு, செய்திப் பத்திரிகையாகிய 'சுதேச மித்திரன்' 1882-ல் தொடங்கப்பெற்றது. செய்திப் பத்திரிகைகள் நாளடைவில் பிரபலமடைந்தன. தேசீய உணர்ச்சி நாட்டில் பெருகப்பெருக, இச் செய்திப் பத்திரிக்கைகள் மிகவாகப் பெருகின. போயர் யுத்தம், வங்காளப் பிரிவினை, தேசீய இயக்கம், ருஷிய-ஜப்பானிய யுத்தம், ஐரோப்பிய மகா யுத்தம், மகாத்மா காந்தியின் தேசீயக் கிளர்ச்சி, அதன் விளைவு: இவைகளெல்லாம் பத்திரிகைகளைப் பொதுமக்கள் நாடிப் படிக்கும்படி செய்தன.

பத்திரிகைகளின் அரிய சேவை

ஜனவிநோதினி முதலிய மாதப் பத்திரிகைகளில் வெளிவந்தவற்றுள் முக்கியமானவை மொழிபெயர்ப்புக் களும் விஞ்ஞான சாஸ்திர விஷயங்களும். மொழிபெயர்ப்புக்களால் பிறமொழி ஆவலும் உணர்ச்சியும் நம்மிடையே மிகுந்தன. விஞ்ஞான சாஸ்திர விஷயங்களால் உண்மையான அறிவை நாம் அடைவதற்கு முடிந்தது.

19-ம் நூற்றுண்டில் வேறொரு துறையிலும் முயற்சி தொடங்கப் பெற்றது. தமிழ் மொழியில் முதலாவதாக (1732) அகராதி இயற்றியவர் **வீரமா முனிவர்**. இது பெரும்பாலும் நிகண்டுகளை அகராதி ரூபத்தில் அமைத்திட்டதே யாகும். இதனை விரிவுபடுத்தி 1842-ல் யாழ்ப்பாண அகராதி இயற்றப்பட்டது. ஆனுல் இந்த அகராதியில் வடமொழி அகராதிகளினின்றும் சொற்கள் மிகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இவை இரண்டிலும் அங்கங்கே வழங்கும் வழக்குச் சொற்கள் சேர்க்கப்படவில்லை. வழக்குத் தொடர்களும் இவற்றிலே காணக்கிடையா. சொற்களின் பொருளும் திட்டமாக வரையறுக்கப்படவில்லை. 1830-ல் **ராட்லர்** என்பவர் தொடங்கிய தமிழ்-ஆங்கில அகராதி

அகராதிகள்

யில்தான் வழக்குச் சொற்கள், வழக்குத் தொடர்கள், பொருள் வரையறை முதலியவை திட்டமாக அமைந்துள்ளன. இம்முறையில் இன்னும் சிறந்த அகராதி **வின்ஸ்லோ** என்பவர் இயற்றிய 'தமிழ்-ஆங்கில அகராதி' யாகும். இது 1862-ல் வெளிவந்தது.

இவ்வாறு 19-ம் நூற்றாண்டில் நிகழ்ந்த பெரு முயற்சிகளே தற்காலத்தில் பல துறைகளிலும் நமது அறிவு விருத்தியடைந்து இலக்கியம் பெருகுவதற்குக் காரணமாயுள்ளன.

13

நூதன ஆங்கிலப் பேரகராதி*

1929, ஏப்பிரல் மாதம், 19-ந் தேதி ஆங்கில மொழி வழங்கும் உலகனைத்தும் பாராட்டுதற்குரிய ஒரு பெரு நாளாகும். மொழி-நூல் ஆராய்ச்சிவல்ல அறிஞர்கள் அனைவரும் இம் மங்கள தினத்தைப் பொன்னே போற் போற்றுவர். இந்தத் திருநாளன்று ஆக்ஸ்பர்ட் ஆங்கில அகராதியின் இறுதிப் பகுதி வெளியிடப் பெறுகின்றது.

தொடக்கமும் முடிவும்

1838-ல் துணை நூலாகத் தொடங்கிய இப்பேரகராதி 1884 ஏப்பிரல் மாதம் பிரசுரமாகத் தலைப்பட்டது. அக்காலம் முதல் 44-வருஷங்களாக இதன் பகுதிகள் வெளிவந்துகொண்டே யிருக்கின்றன. 1897-ம் வருஷத்தில் அகராதியின் 'வயிரவிழா' (Diamond Jubilee) கொண்டாடினர். அப்பொழுது விக்டோரியா மகாராணியாருக்கு இவ் அரிய சொற் கருவூலம் உரிமையாக்கப் பெற்றது. உரிமை உரையிலே 'அம்ம! இது முற்றுறுதல் கூடுமாயின் பெரிதும் சிறந்ததொரு செயலாக அமையும்' எனப் பொருள்படும் ஷேக்ஸ்பியரது நன்மொழி வரையப் பெறலாயிற்று. பெருமையிற் சிறந்த இவ் அரிய நூல் இன்று இனிது முற்றி ஜியார்ஜ் அரசரின் திருக்கரங்களில் அளிக்கப் பெறுகின்றது.

இப்பெருநூல் காலகதியில் பற்பல கோலம் சமைந்து சொற்கள் நடனஞ் செய்யும் அரங்கமாக விளங்குகின்றது.

---

* 1929 ஏப்பிரல் மாதத்தில் எழுதி வெளியிட்டது.

நாள்தோறும் பல துறைகளிற் புதிது புதிதாகத் தோன்றிக்கொண்டிருக்கும் சொற்களின் பிறப்பகமாகவும் திகழ்கின்றது. இங்ஙனமாதலின், 44-ஆண்டுகளாகப் பகுதி பகுதியாக இது வெளியாகிக் கொண்டிருந்தது என்பதில் சிறிதும் வியப்பதற்கில்லை. மக்களின் ஆயுளில் இக்காலம் நீண்டதாகத் தோன்றினும், ஒரு மொழியின் ஆயுளை நோக்குமிடத்து மிகச் சிறியதொரு காலம் என்றே இதனைக் கொள்ளல் வேண்டும். எனவே, மிக நீண்டதாகக் கருதும் காலக்கழிவை ஒரு பொருட்டாக எண்ணாது எல்லா வகையானும் நிறைவுடையதாய் நூல் முற்ற வேண்டும் என்பதொன்றே மனங்கொள்ளுதற்கு உரியது. நூலின் நிறைவினை வேண்டி அனுபந்தம் ஒன்று வெளியிடப்பெறும். இதன்கண் அதிபாலிய தசையிலுள்ள சொற்களும் இடம் பெறுவனவாகும். இவ் அனுபந்தம் ஆங்கில அகராதிப் பகுதிகள் அனைத்தையும் பெற்றுக் கொண்டோர்க்கு இறுதியில் அளிக்கும் இனிய விருந்தாகும் என்பது கூறவேண்டா.

சொற்களின் அரங்கு

மொழிநூற் கழகத்தின் உறுப்பினர்களும் அதனைச் சார்ந்த உபகார சீலர்களுமே அகராதிக்குரிய விஷயங்களைப் பெரும்பாலும் உதவியவர்களாவர். இங்ஙனம் உதவப் பெற்ற விஷயங்களை யெல்லாம் அகராதி முறையில் தொகுத்து ஒழுங்குபடுத்தற்கும் பிரசுரஞ் செய்தற்குமாக 3 லட்சம் பவுன்கள் செலவாயிருக்கின்றன. இப்பெருஞ் செலவை ஆக்ஸ்பர்ட் சர்வகலா சங்கத்தினர் பொறுத்து வந்தனர். 1905-ம் ஆண்டில் பொற்கொல்லர் கழகத்தினர் அகராதியின் ஆறுவது பகுதிச் செலவிற்கு 5,000 பவுன் உதவினார்கள்.

உழைப்பும் செலவும்

இவ் அகராதியின் சரிதம் முழுவதும் இடைவிடாத உழைப்பினாலும் சலிப்பறியாத மனவொருமையாலும் நிரம்பியிருந்தது. இதன்பொருட்டுத் தம்மையே தத்தம் செய்து முயன்று வந்தவர் ஒருவர் இருவரல்லர். பல அறிஞர்கள் தங்கள் ஆயுள்-காலத்தையும் ஆத்ம சக்தியையும் இவ் அகராதி ஒன்றற்கே உரிமையாக்கினர்.

அகராதியின் சரிதம் அதில் வெகு காலமாய் உழைத்து வந்த ஒருவரால் ஒருவாறு 'டைம்ஸ்' பத்திரிகையில் சென்ற மே மாதம் வெளியிடப்பட்டது. அவர் எழுதுங் காலத்தில் அகராதி விரைவில் முற்றுப்பெறுந் தருவாயில் இருந்தது. இன்று பல வருஷ காலமாகச் செய்துவந்த உழைப்பின் பலன் முழுதுங் கைகூடி அகராதி முற்றுப் பெறுகின்றது.

உலகிலுள்ள அகராதிகளி லெல்லாம் தலைசிறந்து விளங்கும் இந்நூலின் அச்சுப் பிரசுரம் 1884-ம் ஆண்டில் தொடங்கிய போதிலும், 1879-ம் ஆண்டிலேயே டாக்டர் ஜே. ஏ. எச். மர்ரே என்னும் நிபுணர் இவ் வேலையை ஆரம்பித்தனர் என்று கூறுவர். ஆனால், உண்மையை நோக்குமிடத்து 1858-ம் வருஷம், ஜனவரிமீ 7-ம் தேதி யன்று அகராதி அச்சு வேலை தொடங்கப்பெற்றது எனக் கூறல்வேண்டும். இத் தேதியில் டீன் ட்ரெஞ்ச் என்ப வரது முன்னிலையில் சம்பூரணமான நூதன அகராதி இயற்றப்படல் வேண்டுமென மொழி நூற் கழகம் தீர் மானித்தது. இத்தீர்மான காலத்திலிருந்து இப்பொழுது 70 வருஷங்கள் ஆகின்றன. நூல் இனிது நிறைவேறுவ தற்குமுன் இடையூறுகள் பல காலகதியில் விளைந்தன.

டாக்டர் மர்ரே, நூலின் தொடக்கத்தில் பதிப்பாசிரி யராய் இருந்த கோலரிட்ஜ் என்ற இருவரையும் இழக்க நேரிட்டது. 1858-ம் ஆண்டில் அகராதி இன்ன வடிவிலே முடிவாக உருப்பெற்றுப் பரிணமிக்கும் என ஒருவராலும் எண்ணுதற்கு அரியதா யிருந்தது. பிரகிருதி விசித் திரங்கள் நாள் தோறும் கண்டுபிடிக்கப் பட்டுவந்தன; எத்தனையோ யுத்தங்கள் குறுக்கிட்டன; யந்திர விசேடங்கள் தோன்றிக்கொண்டே யிருந்தன. இவை களைக் கனவிலும் நினைத்தறியாத காலத்தில் அகராதி இன்ன அளவாக அமையும் என்று கொண்ட கருத்து உண்மையினின்றும் எத்துணை வழுவியிருக்க வேண்டு மென்பது கூறவும் வேண்டுமா? கோலரிட்ஜ் இரண்டு வருஷ காலத்தில் அகராதியின் முதற்பகுதியை நிச்சய மாய் வெளியிடக்கூடும் என்று எண்ணியிருந்தனர்.

அகராதியின் வரலாறு

அன்றியும் அகராதிச் சொற்கள் முழுமைக்கும் 60,000 கடிதத்துண்டுகள் வைப்பதற்குத் தக்க அறைப் பெட்டி ஒன்று போதும் என நினைத்து அவ்வாறே ஒரு பெட்டியும் அமைத்து வைத்திருந்தனர்.

பின்னர், மிகச் சுருங்கிய சொல்லளவுள்ள ஓரெழுத்திற்கே அவ்வகைப் பெட்டி ஒன்று வேண்டியதா யிருந்தது 1861-ம் வருஷத்தில் கோலரிட்ஜ மரணமாயினர். அவரோடு உழைத்து வந்த பர்னிவல் என்பவரிடம் அகராதி வேலைப் பொறுப்பு முழுவதும் சார்ந்துவிட்டது. இவர் சொற்கள் திரட்டுவதிலும் கைம்மாறு கருதாது உழைப்பதற்குத் தக்க உதவிப் பதிப்பாசிரியர்களைத் தெரிந்து கூட்டுவதிலும் பெரிதும் முயன்று வந்தனர். பின் சில காலமாக அகராதியைக் குறித்து யாதொன்றும் கேட்கப்படவில்லை. டாக்டர் மர்ரே பதிப்பாசிரியராக அமர்ந்த பின்னரே அகராதியின் பெயர் மறுபடியும் தொனிக்கலாயிற்று. அவரது நிரம்பிய கல்வியறிவும் பிறபிற தகுதிகளும் பெரிதும் அனுகூல காரணங்களாய் அமைந்தன. அவர் இவ்வேலையை மேற்கொண்ட காலத்தே, அகராதி இப்போது முடிவாக வெளிவந்திருக்கும் அளவில் சரி நேர்பாதியிலே முற்றக்கூடும் எனக் கருதப்பட்டது. ஆனால், நூல் பெரிதும் விரிந்து விடவுங் கூடும் என்றெண்ணி அதற்குத் தக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

1882—ம் வருஷத்தில் அகராதி பிரசுரத்திற்குத் தயாராகிவிட்ட தென்றும், 40—பக்கங்கள் அச்சில் உள்ளன என்றும் டாக்டர் மர்ரே பகிரங்கப் படுத்தினர். இதன் பின் இரண்டு வருஷம் கழித்து அகராதியின் முதல் பகுதி வெளியிடப் பெற்றது. பன்னிரண்டு வருஷ காலத்தில் அகராதியின் பிரசுரம் முடியக் கூடும் என டாக்டர் தாமே எண்ணியிருந்தனர். ஆனால், அகராதி ஒருவரது மதிப்பிற்கும் அடங்காது பெருகி வளர்ந்து கொண்டே வந்தது. 'Set' என்ற ஒரு சொல்லின் பல வேறு பொருள்களைத் திருப்திகரமாக முறைப்படுத்தி

அகராதியின் அளவு

அமைப்பதற்கு நாற்பது மணி நேரம் சென்றதாம், இச் சொல்லுக்கு 51 தனிப் பொருள்கள் இருந்தன ; இதனடியாக 'Set out' முதலிய 83 சொற்றொடர்கள் வழக்கில் அமைந்துள்ளனவாகக் காணப்பட்டன. இச்சொல்லைக் காட்டினும் மிகக் கடினமானது அகராதியில் இல்லை என்று டாக்டர் மர்ரே கருதினர். வெப்ஸ்டர் அகராதியில் இச் சொல்லின் பொருள் இரண்டு பத்திக்குமேல் காணப்படுகிறது. வெளிவந்திருக்கும் ஆங்கிலப் பேரகராதியில் 18-பக்கங்களுக்கு மேலாக இச் சொல்லின் பொருள் நடைபெறுகின்றது; முக்கியமான பொருட் பகுதியின் அளவு 154 ஆகும். இவ் உதாரணத்தால் அகராதியின் விரிவும் முயற்சியின் கடுமையும் அருமையும் ஒருவாறு விளங்கலாம். ஒரு சிறிய சொல்லின் பொருளால் அகராதியின் வேலை எவ்வளவு தடைப்படும் என்பதும் எளிதில் புலனுகின்றது.

பிரசுரத்திற்கு அகராதி தயாராகி முடிந்தபொழுது மொழி நூற் கழகம் எடுத்துவந்த உழைப்பு நின்று விட்டது. எனினும், பிரசுரம் முற்றும் அளவும் அக் கழகம் காட்டி வந்த ஆதரவு அளவிடுந்தரத்தன்று. 1928-ம் வருஷம் ஜனவரி மாதம் 18-ம் தேதி கூடிய அக்கழகக் கூட்டத்தில் அடியிற் கண்ட விவரத்தை அனியன்ஸ் என்பவர் தெரிவித்தனர்.

1858-ம் வருஷம் ஜனவரி மீ 7-ம் தேதி நிகழ்ந்த கூட்டத்தில் முன் உத்தேசித்தபடி அகராதி அனுபந்தம் ஒன்று வெளியிடுவதற்கு மாருக, இக்கழகத்தின் சார்பில் 'நூதன ஆங்கிலப் பேரகராதி' இயற்றி வெளியிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மான காலத்திற்கு 70 ஆண்டுகளின் பின்னர், 1928-ம் வருஷம் ஜனவரி மீ 5-ம் தேதியன்று, ஆங்கிலப் பேரகராதியின் இறுதிப்பகுதி அச்சுக்கூடத்திற்கு அனுப்பப்பட்டது. கிளாரெண்டன் பிரஸ் அதிகாரிகளின் ஆதரவில் டாக்டர் மர்ரே பதிப்பாசிரியராக இருந்த ஐம்பதாவது வருஷத்தில் இப் பேரகராதி முற்றுப் பெறுவதாயிற்று.

இப் பேரகராதியின் பதிப்பாசிரியர்களுக்கு உதவியாளர்கள் செய்து வந்த நன்முயற்சியே பெரிதும் துணைநின்று பயன்புரிந்துவந்தது. டிரெஞ்சு என்னும் அறிஞர் 76 உதவியாளர்களைத் திரட்டினர். அந்நிய நாடுகள் பலவற்றினின்றும் உதவியாளர்கள் பலர் துணைபுரிந்தார்கள். பிரிட்டிஷ் தீவுகளில் மாத்திரம் அங்கங்கேயுள்ள முக்கிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் உதவியாசிரியர்கள் பற்பலர் இருந்து அகராதி வேலையில் முயன்று வந்தனர். இம் முறையில் கணக்கற்ற கடிதக்கட்டுகள் பதிப்பாசிரியர்களுக்குப் பல இடங்களினின்றும் வந்துகொண்டேயிருந்தன. இவற்றுள் ஒன்று மாத்திரமே தவறிவிட்டது. இதில் 'Pa' என்று தொடங்கும் பகுதி அடங்கியிருந்தது. அயர்லந்து தேசத்துக்கு இந்தக்கட்டு போயிருப்பதாகத் தெரிந்து, அங்கு முயன்று நோக்கியதில், கடிதங்கள் அனைத்தும் தீயெரிப்பதற்குப் பயன்பட்டொழிந்தன என்று அறியவரலாயிற்று. இதைத் தவிர, வேறு இரண்டொரு நஷ்டங்களும் நேர்ந்தன. ஆனால், இவைகள் அத்துணை கவனிக்கத்தக்கன அல்ல.

உதவியாளர்கள்

அச்சுத்திருத்தமும் (proof-reading) அகராதியில் நியமனம் பெறாத மற்றையோர்களே பெரும்பாலும் செய்துவந்தனர்.

அகராதியின் பதிப்பாசிரியர்களில் கோலரிட்ஜ், பர்னிவல் என்ற இருவரையும் குறித்து முன்னரே கூறினோம். ஸர் ஜேம்ஸ் மர்ரே 1915-ம் ஆண்டில் மரணமடைந்தனர். இவரது காலத்தில் அகராதியில் நேர்பாதி இயற்றி முடிந்தது. டாக்டர் ஹென்றி பிராட்லி எட்டு எழுத்துக்களின் சொற்பகுதியை ஆராய்ந்து வெளியிட்டனர். டாக்டர் க்ரெய்கி மூன்று எழுத்துக்களின் சொற்பகுதிகளைப் பதிப்பிடுவதில் உதவி செய்து வந்து, பின் தாமாகவே ஆறு அல்லது ஏழு எழுத்துக்களின் சொற்களை வெளியிட்டனர். மிஸ்டர் ஸி. டி. அனியன்ஸ் 1895-ம் ஆண்டில் அகராதியின் பதிப்புக் கழகத்தில்

பதிப்பாசிரியர்கள்

சேர்ந்து மர்ரேயுடனும் பிராட்லியுடனும் தொழில் புரிந்து வந்தனர். பின் இவரே நூலின் பல பகுதிகளை இயற்றி வெளியிட்டனர்.

பிரசுர முறை

இப் பெரு நூலைப் பிரசுரித்து வந்த முறை பெரிதும் போற்றத்தக்கது. அங்கங்கே படைபோல் திரண்டு வேலை செய்து வந்த உதவியாளர்கள் அளவொத்து அமைந்த கடிதத் துண்டு களிலே சொற்பிரயோகங்களைக் குறித்து அனுப்புவர். பதிப்புக்கழகத்தைச் சார்ந்த பல் அறிஞர் கள் இக் கடிதத் துண்டுகளை முறைப்படுத்தி ஒப்புநோக்கி ஆராய்ந்து தொகுத்து வைப்பார்கள். இவ்வித ஆராய்ச் சிக்கு எத்தனையோ ஆதார நூல்களைச் சோதிக்கும்படி நேரிடும். பின்னர் சொல்லும் பொருளுமாகத் தெளிவு படுத்தி எழுதப்பெற்றுப் பதிப்பாசிரியர்க்கு முன் வருவ தாகும். இதன் பின்னர், அங்கீகாரம், பரியாலோசனை, அர்த்த நிச்சயம் முதலியன நிகழும். முடிவில் அச்சிடுதலும் அச்சுத் திருத்தமும் நடைபெறும். இவ்வகை வேலை முறையில் இருந்துவந்த உழைப்பும் அல்லற்பாடும் சொல் லுந் தரத்தன அல்ல.

ஆங்கில மொழியின் கருவூலம்

எவ்வகையால் நோக்கினும் தலைசிறந்து விளங்கும் இந்நூதன ஆங்கிலப் பேரகராதியின் கண்ணே 4,14,825 சொற்களும் 5,00,000 சொற்பொருள் இலக்கணங்களும், 18,27,304 சொற் பிரயோகங்களும் உள்ளன. 12 நூற் றூண்டுகளாக நிகழ்ந்த சொற்களின் சரி தம் ஆராயப்பெற்றுள்ளன. 'S' என்ற எழுத்துப்பகுதியே மிகப்பெரிய பகுதியாகும். இதில் 57,428 சொற்கள் உள் ளன. 'X', 'Y', 'Z' என்ற மூன்று எழுத்துக்களும் சேர்ந்த பகுதியில் 4,746 சொற்கள் உள்ளன.

மொழிபேணும் முறை

கல்வி அறிவிலும் நாகரிகத்திலும் முதிர்ந்து விளங் கும் ஒரு நாட்டிலுள்ளார் தங்கள் மொழிச் செல்வத்தை ஒரே சிந்தையாய் அரிதின் முயன்று போற்ற வேண்டும் முறையினை இந்த அகராதியின் சரிதம் நன்கு விளக்குகின்றது.

14

தமிழ் அகராதி

அகராதி என்றால் என்னவென்று இப்போது எல்லாருக்கும் தெரியும். சிறுவர்கள்கூட எழுத்துப் போட்டி முதலியவற்றிற்கு விடை எழுதுவதற்காக ஏதேனும் ஓர் அகராதியை எடுத்து வைத்துக்கொண்டு ஒரு மூலையைத் தேடிப்பிடித்து உட்கார்ந்து பார்க்கிறார்கள். அகராதி வைத்திருப்பவனும் இக்குழந்தைகளால் பெரும்பாடு படுகிறான். அவனை 'மாமா, மாமா' என்று ஆசைப் பெயரிட்டழைத்து அகராதிப் புஸ்தகத்தை எப்படியாவது வாங்கிக்கொண்டு போய் வைத்திருந்து பல நாள் கழித்து இதழ் இதழாகக் கிழிந்த நிலைமையில் கொண்டு வந்து திரும்பக் கொடுக்கிறார்கள்; அதுவும் கொடுப்பதாயிருந்தால்—கொடுக்கக்கூடிய நிலைமையில் இருந்தால். இவ்வாறு சிறு குழந்தைகளிலிருந்து பெரிய மனிதர்கள்வரை இப்பொழுது மிக்க ஆசையோடு போற்றி வருகிற அகராதி சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழில் ஏற்படவில்லை என்பது நம்மில் பலருக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணலாம்.

தமிழருக்கு அகராதி புதிது

முதன் முதலில் தமிழில் அகராதியை இயற்றியவர் இத்தாலி தேசத்திலிருந்து நமது நாட்டுக்கு வந்து கிறிஸ்து சமயத்தைப் பரப்புவதற்குப் பெரு முயற்சிகள் செய்த ஒரு பாதிரியார். அவர் பெயர் கான்ஸ்டன்ஷியுஸ்

சென்னை அகில இந்திய ரேடியோவில் 1938 ஸெப்டம்பர் மாதம் 5-ஆம் தேதியன்று செய்த பிரசங்கம்.

பெஸ்கி என்பது. ஆனால், நமது நாட்டில் அவரை வீரமா முனிவர் என்று வழங்கிவந்தார்கள். அவர் சன்னியாசி போலக் காஷாயம் தரித்து இங்கே வாழ்ந்துவந்தார். தமிழ் மொழியிலே கிறிஸ்து சமயம்பற்றி இலக்கியச் சுவையுள்ள சிறந்த நூல்களை இயற்றி அவற்றின் மூலமாகத் தமிழ் மக்களைத் தமது சமயத்திலே சேர்ப்பிக்க எண்ணினார். அந் நோக்கத்தைக் கொண்டு தமிழ்மொழியை நன்கு பயின்று இலக்கணங்களையும் ஒருவாறு கற்றுப் பண்டிதராயினார். நிகண்டுகளை மனப்பாடம் பண்ணி ஞாபகத்தில் வைப்பது சிரமமாக இருந்ததனாலே அவற்றை அகராதியாகச்செய்து விடுவது நலம் என்று எண்ணி, 'சதுரகராதி' என்று வழங்கும் அகராதியை முதன் முதலில் இயற்றினார். இந்த அகராதியை இயற்றியது கி. பி. 1732-ல்.

முதன் முதலில் அகராதி இயற்றியவர் வீரமா முனிவர்

வீரமா முனிவர் அகராதி இயற்றுவதற்கு முன் தமிழ் மக்களுக்குச் சொற்களின் பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டும் அவசியமே ஏற்படவில்லையா? இக் கேள்வி எழக் கூடியதே. தமிழ் இலக்கிய சரித்திரத்தை எடுத்துக்கொண்டால் இந்தவிதமான அவசியம் ஏற்படாத காலமே கிடையாது என்று சொல்லிவிடலாம். இலக்கியம் என்று சொன்னாலே, அது சாமானிய மக்கள் பேசும் வழக்கு-மொழியினின்று சிறிதேனும் வேறுபட்ட நடையில் அமைந்திருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். ஆகவே இலக்கியச் சொற்கள் எல்லாம் சாதாரண மக்களுக்குத் தெரிந்தவையாய்த்தான் இருக்கும் என்று கூறமுடியாது. தெரியாத வார்த்தைகளும் அக்கூட்டத்தில் இருக்கத்தான் வேண்டும். இவற்றின் பொருளைத் தெரிந்து கொள்வதற்கு எவையேனும் நூல்கள் இருந்தனவா!

அகராதிக்கு முந்திய கருவி நூல்

சொற்பொருள் உணர்த்தும் கருவி நூல்கள் இருந்தன என்பதும், அவற்றை 'நிகண்டு' என்ற பெயரால்

வழங்கினர் என்பதும் நாம் அனைவரும் அறிந்தனவே.

நிகண்டு

இப்பெயர் வடமொழிப் பெயராயிற்றே; தமிழில் இக் கருவிநூலுக்குப் பெயர் இல்லையா? இப்படிச் சிலர் கேட்கலாம். தமிழ்ப் பெயரும் உண்டு. 'உரிச்சொற்பனுவல்' என்பது அப்பெயர். நெருடான இத்தமிழ்ப் பெயர் நாளடைவில் மறைந்துவிட்டது. நிகண்டு என்ற பெயரே தமிழாகி நிலைத்துவிட்டது.

நிகண்டுகள் இருக்கும்போது அகராதி தோன்றுதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது?-என்று கேட்கலாம். இவ் இரண்டு வகைப்பட்ட நூல்களும் அமைந்துள்ள முறையின் வேறுபாடே தக்க காரணமாகும். முதலாவது, நிகண்டுகள் செய்யுளில் அமைக்கப்பெற்றிருக்கும்; செய்யுளின் பொருள் விளங்குவது எத்தனை கஷ்டம் என்பது சொல்ல வேண்டுமா? இரண்டாவது இவ்வகை நிகண்டு நூல்களில் தெய்வப்பெயர்கள், மக்கட் பெயர்கள் முதலாகிய பல தொகுதிகளிலே வார்த்தைகள் அமைந்திருக்கும். ஒரு சொல்லுக்குப் பொருள் தெரியவேண்டுமானால் அச்சொல் இவற்றுள் எந்தத் தொகுதியைச் சார்ந்த

அகராதி தோன்றிய காரணம்

தென்று தெரியவேண்டும். அதன் பிற்பாடு அந்தத் தொகுதி முழுவதையும் வாசித்தாலல்லாமல் பொருள் கண்டு பிடிப்பது இயலாது. மூன்றாவதாக, மனப்பாடம் செய்வதற்கென்றே அமைந்தன இந்நிகண்டு நூல்கள். மனப்பாடஞ் செய்வது எவ்வளவு சிரமமான காரியமென்பது நாம் நன்றாக அறிவோம்! அகராதியிலே என்றால், ஒவ்வொரு சொல்லும் அ, ஆ முதலிய நெடுங்கணக்கின் எழுத்து வரிசையிலே அமைந்திருக்கும். இவ்வரிசை தெரிந்தால் அகராதியில் எந்தச் சொல்லையும் எடுத்துப் பொருள் தெரிந்து கொள்ளலாம். எழுத்துவாசனை யுள்ளவர்களில் இந்த எழுத்து வரிசையைத் தெரியாதவர்கள் உண்டோ? இத்தனை எளிதாக இருப்பதனால்தான் நான் முதலிலே கூறியபடி குழந்தைகள் கூட அகராதிகளை உபயோகப் படுத்துகிறார்கள்.

அகராதியைப்போல எளிதாக நோக்கியுணரக்கூடிய முறையிலே நிகண்டுகளை மாற்ற வேண்டும் என்று நம் முன்னோர்களுக்குத் தோன்றவில்லையா?—என்று நீங்கள் கேட்கலாம். அவர்களும் அவ்வாறு மாற்றுவதற்கு மிகவும் முயற்சி செய்திருக்கிறார்கள் என்பது நிகண்டுகளின் சரித்திரத்தை நோக்கினால் விளங்கும். இம்முயற்சி முதன் முதலில் ஒரு சொல்லுக்கு உரிய பல பொருள்களையும் எடுத்துக் கூறும் 11-ஆவது நிகண்டுப் பகுதியிலேதான் நடைபெற்றது. முதற்படியாக இத் தொகுதியிலே செய்யுட் சுவையின் பொருட்டு ஏகதேசமாகச் சொற்கள் எதுகையிலே வைக்கப்பட்டன. இம் முறையைத் திவாகர நூலின் ஏட்டுப்பிரதிகளிற் காணலாம். அடுத்தபடியாக, இச் சொற்களைக் ககர எதுகை சகர எதுகை முதலிய பகுதிகளாகப் பாகுபாடு செய்து, எதுகையை வைத்துக்கொண்டே சொற்களைச் சிறிது முயன்று எடுக்கக்கூடிய முறை கையாளப் பட்டது. இம்முறையைச் சூடாமணி நிகண்டிலே காணலாம். மூன்றும்படியாக, சூடாமணி நிகண்டிலே காணப் பட்ட குறைகளை நீக்க முயற்சி செய்தார்கள். ஓர் எதுகையிலே பிறிதோர் எதுகைச் சொல் வந்து கலத்தல், செய்யுளுக்கு வேண்டி அநாவசியமான அடைமொழிகளைச் சேர்த்துச் சொல்லின் பொருளைக் கருகவைத்தல் என்றவையே அக்குறைகள். இக்குறைகள் இல்லாமல் செய்யப் பட்ட நிகண்டுகள் நாநார்த்த தீபிகை முதலியன. இம் முறையும் திருப்திகரமா யில்லாததனாலே, நான்காம் படியாக, அகராதி முறை அரைகுறையாகக் கையாளப்பட்டது. இந்நான்காம் முறையைக் கொண்டெழுந்த முதலாவது நூல் 'அகராதி நிகண்டு.'

(நிகண்டுகளை எளிதாக்கும் முயற்சிகள்)

இந்த அகராதி நிகண்டைச் செய்தவர் சிதம்பர ரேவணசித்தர் என்ற வீரசைவர். நூல் செய்த காலம் கி. பி. 1594. இந்த ஆண்டிற்குமுன் அகராதி என்ற சொல் தமிழ் மொழியில் இல்லை. நல்ல சுபமுகூர்த்தத்தில் இப் பெயரை இவர் இட்டிருத்தல் வேண்டும்!

(அகராதியின் தோற்றம்)

ஏனென்றால் இப் பெயர்தான் இப்பொழுது நிலைத்து விட்டது.

அகராதி நிகண்டிலே பல குறைகள் இருந்தன. அகரத்திலே தொடங்கும் சொற்களை ஒரு பொருளுடையன, இரு பொருளுடையன, முப்பொருளுடையன என்பவை முதலாகப் பகுத்து, முதலெழுத்து மாத்திரம் அகராதி வரிசைக்குரியபடி அமைத்து இந்நூல் செய்யப் பட்டது. ஆதலால் அகரத்தில் தொடங்கும் ஒரு சொல் லின் பொருள் தெரியவேண்டுமானால் அச் சொல்லுக்கு எத்தனை பொருளுண்டென்பது முதலில் தெரியவேண் டும்; பிற்பாடு அத்தனை பொருளுடைய பகுதியில் அச் சொல்லைத் தேடிப் பிடிக்கவேண்டும்.

அகராதி வரிசையில் அபிவிருத்தி

இக் குறைகளை நீக்கி, ஒரு பொருள், இரு பொருள் முதலிய பாகுபாடுகளை யொழித்து, அகராதி வரிசையை மேன் மேலும் அபிவிருத்தி செய்த நூல்கள் பல்பொருட் சூளாமணி, பொதிகை நிகண்டு முதலிய நிகண்டுகளாம். காலக்கிரமத்தில் மற்றக் குறைகளெல் லாம் ஒழிந்தபோதிலும், அகராதி வரிசையை முழுதும் கையாளாத குறை இருந்தே வந்தது. அகராதி முறைப் படி, அங்கம் என்ற சொல் அரசன் என்பதற்குமுன் வர வேண்டும். இந்நிகண்டுகளில் அரசன் என்பதற்குப்பின் அங்கம் காணப்படும். முதல் எழுத்தில் மாத்திரம் அகர வரிசையைப் பின்பற்றிய நூல்களில் இது போன்ற குறைகள் இருக்கும். முதல் இரண்டு எழுத்துக்களில் அகராதி வரிசையைப் பின்பற்றிய நூல்களில் அங்குலி என்பது அங்கம் என்பதற்கு முன் காணப்படும். இவை போன்ற குறைகளெல்லாம் ஒழிந்த பிற்பாடுதான் அகராதி தோன்றிற்று.

அகராதி நிகண்டு என்பதில் அகராதி என்பது ஓர் அடைமொழி என்பதை நாம் மறந்துவிடலாகாது. அகாரம் ஆதிய வரிசையிலே சொற்களை அமைத்த நிகண்டு என்பதே இதன் பொருள். தற்காலத்தில் அக ராதி என்ற நூற் பெயரால் நாம் கொள்ளும் கருத்தை,

'அகராதி மோனைக் ககராதி யெதுகை' என்ற பெயரால் ஒரு தமிழ் நூல் விளக்குகிறது. அகராதி என்ற சொல்லை நூற் பெயராக முதல் முதலில் அமைத்தவர் வீரமா முனிவரே. இந்த அகராதி என்ற பெயரோடு 'ஏபிஸிடேரியம்' (**Abecedarium**) என்ற ஆங்கில நூற் பெயரை ஒப்பிடலாம்.

அகராதி என்ற பெயர்

அகராதி வரிசையைப்பற்றி இதுவரை கூறினேன். இனி, அகராதியில் சேர்க்க வேண்டிய சொற்களைப்பற்றிக் கவனிப்போம். இலக்கியங்களிலே வருகிற கடினமான சொற்களை மாத்திரம் சேர்க்கவேண்டும் என்ற கருத்து முற்காலத்து இருந்தது. நிகண்டுகளிலே காணப்படும் சொற்களில் பெரும்பாலானவை இவ்வகைக் கடின பதங்களேயாகும். இக்கருத்து இப்போது மாறிவிட்டது. நிரம்பிய, உத்தமமான அகராதியில், ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களும் காணப்படுதல் வேண்டும் என்பதே இப்போதுள்ள அகராதியாளர்களுடைய கருத்து. இதனால் அகராதி என்பது பொருளை மாத்திரம் உணர்த்துகிற கருவிநூல் என்ற கொள்கை மாறி, இந்த இயல்போடு ஒருமொழியின் ஆரம்ப காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் ஆகரமாகவும் அது விளங்குதல் வேண்டும் என்ற கொள்கை இப்போது நிலைபெற்று விட்டது. ஆனால் இந்நோக்கம் நிறைவேறுதலிலே பலவகையான இடையூறுகள் உண்டு. முதலாவது எல்லாச் சொற்களையும் ஒருவரோ, ஒரு சில கூட்டத்தாரோ தெரிந்துகொள்ளுதல் ஏலாது. ஒரு மொழியிலே பயின்றுவரும் எல்லாப் பிரதேசத்தாரும், இனத்தாரும், சாதியாரும், தொழிலாரும், பருவத்தாரும் அகராதியின் மேன்மையான நோக்கங்களையும் முறைகளையும் உணர்ந்து ஒத்துழைத்தாலன்றி ஓர் உத்தம அகராதி இயற்ற முடியாது. ஆக்ஸ்பர்ட் ஸர்வ கலாசாலையிலிருந்து வெளியிடப்பட்ட நூதன ஆங்கில அகராதி (**The New English Dictionary**) ஒன்றே இங்ஙனம் இயன்ற ஓர் உத்தம அகராதி என்று ஒருவாறுகக்

பொது அகராதிகள்

கூறலாம். உத்தம அகராதியின் இயல்பு இவ்வாறிருக்க, நம் நாட்டில் ஒரு சிலர், 'இந்த அகராதி இலக்கிய அகராதியா? வழக்கியல் அகராதியா? மரபு அகராதியா? குறுநில அகராதியா? எல்லாமா? இன்றேல் ஒவ்வொன்றில் கொஞ்சமா?' என்று கேட்கிறார்கள்! இவர்களுக்கு அகராதியின் உண்மை இயல்பு தெரிந்தால் இவ்வாறு கேட்கமாட்டார்கள். இரண்டாவது இடையூறு: அகராதி எல்லையின்றி விரிந்து, விலை அதிகரித்துப் பெரும்பாலாரது கைக்கு எட்டாததாய் முடிந்துவிடும் என்பதே.

சிறப்பகராதிகள்

இக்காரணங்களால், பொது அகராதி தவிர, தொழில் பற்றியும், சாஸ்திரம் பற்றியும், இடம் பற்றியும், காலம் பற்றியும் விரிவான அகராதிகள் பற்பல உண்டாக வேண்டும். இவற்றிலேதான் சொற் பொருளை விரிவாகப் படங்கள் முதலிய உபகரணங்களால் விளக்க முடியும். எனவே ஒவ்வோர் அகராதியும் அது மேற்கொண்டுள்ள நோக்கத்திற்கு இணங்க அமைக்கப் பெறுதல் வேண்டும். சாதாரணமாக வழங்கும் அகராதிகளில் மேற்குறித்த பலவகைச் சொற்களுள் சில மிகுந்தும் சில குறைந்தும் இருத்தல் இயல்பே.

வரலாற்றுக்கு ஏற்பச் சொல் பிரிதல்

இவ்விடத்தில் வேறொரு விஷயமும் கவனிக்கவேண்டும். ஒரு சொல்லானது பார்வைக்கு ஒன்றாகத் தோன்றிய போதிலும் சொல் வரலாற்றினைக் கருதுமிடத்துப் பல சொற்களாக இருக்கும். உதாரணமாக அகம் என்பதை எடுத்துக் கொள்ளுங்கள். இச்சொல் अहं, अग, अघ, அஃகம் என்ற பல சொற்களிலிருந்து வந்த பல பொருள்களையுடையது. இவ் வரலாற்றுக்கு ஏற்க, அகம் என்பதைத் தனித்தனிச் சொல்லாகக் கொள்ளவேண்டும்.

இன்னும் ஒன்று: பேச்சுவழக்கிலே பதங்கள் உச்சாரணம் திரிந்து வழங்குதல் சர்வசாதாரணம். இலக்கியங்களில் வந்துள்ள சொல்லைத் 'திருந்திய' சொல் என்றும், பேச்சில் உச்சாரணம் திரிந்து வழங்கும் சொல்

லைக் 'கொச்சைச் சொல்' என்றும் கூறுவது மரபு. இவ்வாறு கொச்சையாய் வழங்கும் சொற்களும் அகராதியில் இடம் பெறுதல் வேண்டும். இவற்றைத் திருந்திய வடிவம் என்று கொள்ளுதல் கூடாது; இலக்கியங்களில் இவற்றை வழங்கலாமென அகராதி அனுமதிப்பதாகக் கொள்ளுதலும் கூடாது. பேச்சு வழக்கிலுள்ள சொற்களுக்கும் பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம்.

பேச்சு வழக்கிலுள்ள திரிந்த சொற்களைச் சேர்த்தல்

இனி அகராதியிற் கொடுக்கப்பட வேண்டும் பொருளைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சதுரகராதி முதலியவற்றில், நிகண்டுப்பொருளை வேறு விளக்கமின்றி அப்படியே கொடுத்துவிடுவது வழக்கம். உதாரணமாக, வேற்றிசைப்பாவின் பொருள் 'சருக்க முடிவினும், இலம்பக முடிவினும், விருத்த நடையது' எனக் காணப்படும். ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்குமானால், அப்பொருள்களையும் அகராதிக்கிரமத்தில் கொடுப்பது வழக்கம். உதாரணமாக, திகிரி என்ற சொல்லின் பொருள்கள் உருளை, சக்ராயுதம், தண்டசக்கரம், திரிகை, தேர், பண்டி, மலை, மூங்கில், வட்டம் என அகராதி வரிசையிற் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சொல்லின் வரலாற்றினை உணர்ந்தும்' இலக்கியங்களில் சொற்பொருள் வந்துள்ள வரலாற்றினை உணர்ந்தும் பொருள்களைக் காலக்கிரமமாக முறைப்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இவ்வாறு சொற்பொருள்களையும் வியுத்பத்தி முதலியனவற்றையும் நன்றாக ஆராய்ந்து செய்யக் கூடுமானால், அது ஒவ்வொரு சொல்லுக்கும் ஜாதகம் கணிப்பதுபோல் ஆய்விடும். இன்ன காலத்தில் இன்ன இடத்தில் ஒரு சொல் பிறந்தது, இன்ன காலத்தில் இன்ன காரணத்தால் இன்ன வகையில் பொருள் மாறுபட்டது, இன்ன காலத்திற்குப் பின் மறைந்துவிட்டது: என ஒரு சொல்லின் ஜீவிய சரித்திர முழுதும் அகராதியிற் காணவேண்டும். நூதன ஆங்கில அகராதியில் இவ்விவரங்கள் யாவும் கொடுக்கப்

சொற்பொருள் அமைக்கும் முறை

பட்டுள்ளன. இங்ஙனம் அகராதி இயற்றுவதற்குத் தக்க மொழி-ஆராய்ச்சி வேண்டும். நமது நாட்டில் மொழி-ஆராய்ச்சி இன்னும் குழந்தைப்பருவத்திலே இருக்கிறது. போலி ஆராய்ச்சிகளே பரவியிருக்கின்றன. இவ் ஆராய்ச்சிகளை விநோதார்த்தமாகக் கொண்டு சுவைத்துக் களிக்கலாமேயன்றி உண்மையெனக் கொள்ளுதற்கில்லை. திருந்திய மொழி ஆராய்ச்சியினால் உண்மை காணக்கூடிய இடங்களில் சொற்பொருளைக் காலக்கிரமத்தில் ஒழுங்குபடுத்திக் கொடுப்பது அகராதியாளர் கடமை. இயலாத இடங்களில் இயைபுபற்றிப் பொருள்களைக் கொடுக்க வேண்டும். இதுவும் இயலாத இடங்களில் பெருவழக்கினுள்ள பொருள் யாது? அடுத்தபடியாகவுள்ள பொருள் யாது? என்று வழக்கின் பெரும்பான்மை சிறுபான்மை பற்றிப் பொருள்களைக் கொடுக்க வேண்டும். இப்படியாகப் பலவகைப்பட்ட நியமங்களை மேற்கொண்டு உரிய பொருள்களைக் கிரமப்படுத்துதல் அவசியமாகும்.

பொருள் விளக்கும் உதாரணங்கள்

இப் பொருள்களைத் தெளிவு பெற விளக்க வேண்டுமானால் மேற்கோள்களால் மட்டுமே அது முடியும். காலத்தால் முற்பட்ட மேற்கோள்களின் மூலமாய் விளக்குதலே நேர்மையான முறை. இலக்கியங்களையும் மற்ற நூல்களையும் கால முறைப்படி ஒழுங்குபடுத்தி வைத்துக்கொண்டு, முக்கியமான நூல்களுக்கெல்லாம் சொல்லகராதி தயார் செய்தபின், அகராதி வேலையைத் தொடங்குதல் வேண்டும். இவ்வாறு தொடங்கி முடித்தற்கு மிக நீண்ட காலம் செல்லும். உதாரணமாக, நூதன ஆங்கிலப் பேரகராதியைச் செய்து முடிப்பதற்குச் சுமார் 70 வருஷ காலம் வேண்டியதாயிருந்தது. அதற்குப் பல்லாயிரக் கணக்கில் ஆங்கில அறிஞர்கள் உதவி செய்தார்கள். இவ்வாறு பெரிய நோக்கங்கொண்டு செய்யாத வரையில், மேற்கோள்கள் முதலிய விஷயங்களில் குறை இருந்துகொண்டே இருக்கும். அடுத்தபடியாகச் செய்யத் தக்கது யாது? சிறந்த நூல்களிலிருந்து சந்தர்ப்பத்தால் பொருள் விளங்குமாறு உரிய மேற்கோள்களைக் கொடுப்பது ஒன்றே இயலும்.

மேற்குறித்த முறைகளையும் மற்ற நியமங்களையும் இயன்றவரை கைக்கொண்டு தமிழ் லெக்ஸிகன் என்னும் பேரகராதி வெளிவந்துள்ளது. இவ்வகை அகராதி தமிழ்மொழியின் உணர்ச்சிக்கும் அதன் வளர்ச்சிக்கும் இன்றியமையாத பெருங்கருவி என்பதை அறிந்து, நேர்ந்த இடையூறுகளைப் பொருட்படுத்தாது, ஏராளமான செலவில் அதனை இயற்றுவித்து வெளியிட்ட சென்னை ஸர்வ கலாசாலையாரது பெருஞ்செயல் என்றும் பாராட்டுதற்கு உரியது.

தமிழ் லெக்ஸிகன்

15

தமிழும் அகராதியும்

அகராதி என்ற பெயர் முதன் முதலில் காணப்படுவது கி. பி. 1594-ல் தோன்றிய 'அகராதி நிகண்டு' என்ற நூலின் பெயரிலேதான் என்று முந்திய கட்டுரையில் கூறப்பட்டது. இதன் ஆசிரியர் சிதம்பர ரேவணசித்தர் என்னும் வீர சைவப் புலவர். இவர் இட்ட பெயரே இப்போது 'டிக்ஷனரி' என்று ஆங்கிலத்தில் கூறும் நூலுக்குரிய தமிழ்ப் பெயராய் அமைந்துவிட்டது.

அகராதி என்ற பெயர்

அரிச்சுவடியிலுள்ள எழுத்து முறைப்படியே சொற்களை அமைப்பதுதான் அகராதி முறை. இது நமக்கு மிக எளிதாகத் தோன்றுகிறது. ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வளர்ந்து வந்திருக்கிற தமிழ் இலக்கிய சரித்திரத்தில், இம்முறை 16-ம் நூற்றாண்டின் இறுதியில்தான் முதன்முதல் புலப்படுகிறது. அப்பொழுதும் இது அரைகுறையாய்த்தான் கையாளப்பட்டது. சொல்லின் முதல் எழுத்து முறையையே ஆசிரியர்கள் நோக்கி வந்தனர். உதாரணமாக அறிவன், அடியான், அருள், அவன், அஃது, அமர் முதலிய சொற்களை முதல் எழுத்தாகிய அகரம் ஒன்றையே கருதி, அவற்றை ஒரு முறையில் நிறுத்தினர்; இரண்டாவது முதலிய எழுத்துக்களைக் கருதினார்களில்லை. இந்த முறையை அகராதி நிகண்டில் காணலாம். இதனால் அகரத்தில் தொடங்கும் ஒரு சொல்லை, குறித்த ஓரிடத்தில் கண்டுபிடிப்பது எளிதாயில்லை. இரண்டாவது எழுத்தையும் நோக்கிச் சொற்களை முறைப்படுத்திய நூல் ஒன்று சுமார் நூறு ஆண்டுகளின் பின் தோன்றியது.

அகராதி முறை

முதன் முதல் கையாண்ட அகராதி முறை

இதன் பெயர் 'அகராதி மோனைக் ககராதி எதுகை' என்பதாகும். இம்முறையிலேயும் ஒரு சொல்லைக் குறித்த இடத்தில் கண்டுபிடிப்பதற்கு வழி இல்லாமலிருந்தது. முதன் முதலில் சொற்களின் எழுத்துக்கள் அனைத்தையும் நோக்கி அகராதி அமைத்தவர்கள் ஐரோப்பியப் பாதிரிகளே ஆவர். 17-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய வியாபாரிகளும் பாதிரிமார்களும் மிகுதியாகத் தமிழ் நாட்டிற்கு வரத் தொடங்கினர். தமிழ் மக்களைக் கிறிஸ்தவர்களாக ஆக்குவதற்குப் பெருமுயற்சி செய்தனர். முக்கியமான இடங்களில் பாதிரிமார்கள் கிறிஸ்தவக் கோயில் கட்டி, அங்குள்ள மக்களோடு மக்களாய் வாழ்ந்து, தங்கள் மதத்தைப் பரப்பத் தொடங்கினர். தமிழ் மக்களுக்குக் கிறிஸ்தவமத உண்மைகளைத் தமிழ்மொழியிலே போதிக்க வேண்டுமென்று இவர்கள் கருதினுர்கள். ஆகவே இவர்கள் தாமும் தமிழ் கற்கவேண்டுவது மிகஅவசியமாய் முடிந்தது. கற்பதற்குக் கருவி நூலாக அகராதி ஒன்று இயற்ற வேண்டுவதும் இன்றியமையாத தாயிற்று. எனவே, தமிழில் முதன் முதலில் அகராதி தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவர்கள் இப் பாதிரி மார்களே ஆவர்.

பாதிரிமார்களால் விளைந்த நன்மைகள்

அந்நிய மொழிக்கு உரியோராகிய பாதிரிமார்கள் அகராதி இயற்றப் புகுந்தது ஒரு நல்ல அதிருஷ்டம் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில், சில நன்மைகள் இதனுல் விளைந்துள்ளன. முதலாவது, பிற மொழிகளில் அகராதிகள் செப்பமாக அமைந்துள்ள முறையைத் தமிழ் அகராதியிலும் கையாள முடிந்தது. இரண்டாவது, பாதிரிமார்களுக்குத் தமிழ் புதியமொழி ஆகையினுலே, இம் மொழியிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் இவர்கள் பொருளுணர வேண்டியவர்களா யிருந்தனர். ஆகவே, கடின பதம், எளிய பதம் என்ற வேற்றுமையின்றி, எளிய பதங்களுக்குங் கூடப் பொருள் விளக்கவேண்டுவது அவசியமாயிற்று. உதாரணமாக நான், அது, வீடு முதலிய சொற்களையும் அகராதியில் விளக்க வேண்டியதாயிற்று. மூன்ருவது, நூல் வழக்கிலன்றி, சாதாரண மக்

கள் பல பிராந்தியங்களிலும் வழங்கி வந்த சொற்களும் அகராதியில் இடம் பெற்றன. தமிழ் கற்ற பண்டிதர்கள் இவ்வழக்குச் சொற்களிற் பலவற்றை, இழிசன வழக்கு என்றேனும், வழூச்சொல் என்றேனும் ஒதுக்கி விடுவார்கள். ஆனால் அந்நிய நாட்டுப் பாதிரிகள் இவ்வாறு ஒதுக்க முடியாது. அவர்கள் சாதாரண மக்களோடு, அதிலும் கல்வி பெறாத கீழ்த்தர மக்களோடு, பழகி வந்தார்கள். அம் மக்கள் பேசுவதை உணர்வதும், அவர்கள் வழங்கும் சொற்களை உணர்வதும் அவசியம். எனவே அவ்வழக்குச் சொற்களும் அகராதியில் இடம் பெற்றன. இவ்வாறாக, தமிழ் மக்களுள் பல இனத்தாரும் வழங்கும் சொற்கள் எல்லாம் அகராதிகளில் அமைவதற்கு இப் பாதிரிகளே வழிகாட்டியா யிருந்தார்கள்.

பாதிரிமார் அகராதி வேலை மேற்கொண்டது ஒரு நல் அதிருஷ்டமே

கி. பி. 1679-ல் தமிழ்ப் போர்த்துக்கீசிய அகராதி ஒன்று ப்ரொ இன்ஸா என்ற பாதிரியாரால் இயற்றப்பட்டது; ஆனால் இவ்வகராதி இப்போது மறைந்துவிட்டது. இதனை அடுத்துத் தோன்றியது பிரசித்திபெற்ற சதுரகராதி யாகும். இதுவே தமிழில் முதன்முதல் பிறந்த அகராதி என்று சொல்லலாம். இதனை இயற்றியவர் தைரியநாதஸ்வாமி என்றும், வீரமா முனிவர் என்றும் பெயர் வழங்கிய (**Father Beschi**) பெஸ்கி யாவர். இவர் இத்தாலி நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து, கிறிஸ்துமத போதனை செய்து வாழ்ந்த ஒரு பாதிரியார். கி. பி. 1710-ல் இந்தியாவிற்கு வந்தார்; 1747 முடிய மதபோதனை செய்யும் கடமையில் ஈடுபட்டார்; சில காலம் திருச்சியில் சந்தாஸாகிபுக்கு மந்திரியாகவும் இருந்தனர். தமிழிலே பேரார்வம் கொண்டு, அதனைச் சுப்பிரதீபக் கவிராயர் முதலிய தமிழ் அறிஞர்களிடத்தே நன்கு கற்று, பல நூல்கள் செய்யுளிலும், வசனத்திலும் இயற்றினர். தமிழ் நாட்டுச் சன்னியாசிகள் போலவே தாமும் வேஷந்தரித்து, தமிழ் மக்கள் போற்ற, வாழ்ந்துவந்தனர். இம் முனிவர் இயற்றிய செய்யுள் - நூல்களில் மிகவும்

தமிழில் பிறந்த முதல் அகராதி

சிறந்து 'தேம்பாவணி' என்று கூறுவர். 'ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம்', 'கொடுந் தமிழிலக்கணம்' முதலிய இலக்கண நூல்களும் இவர் இயற்றியவை. இவரது சதுரகராதியே நாம் இங்கே கவனித்தற்குரியது.

சதுரகராதி

சதுரகராதி என்றால் நான்கு வகைப்பட்ட அகராதி நூல் என்று பொருள். நான்கு வகையாவன : (1) பெயரகராதி, (2) பொருளகராதி, (3) தொகையகராதி, (4) தொடையகராதி. பெயரகராதியில், ஒரு சொல்லுக்குரிய பல பொருள்கள் கொடுக்கப்பட்டிருக்கும். பொருளகராதியில், ஒரு பொருளுக்குரிய பல பெயர்களும் காணப்படும். தொகையகராதியில், இருசுடர், முக்குணம், நாற்பொருள் என்பன போல நூல்களில் தொகையாக வழங்கப்பட்டுள்ளனவற்றிற்கு விளக்கம் காணலாம். தொடையகராதியில் செய்யுட்கு வேண்டும் எதுகைச் சொற்கள் (**rhyming words**) வரிசையாய் அமைக்கப்பட்டுள்ளன.

நிகண்டுகள் : திவாகரம்

இந்நூலில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டுவது ஒன்று உண்டு. அகராதிகள் தோன்றுவதற்கு முன் அவற்றின் ஸ்தானத்தில் உதவிய நூல்கள் நிகண்டுகளாகும். இந் நிகண்டுகள் மனப்பாடம் செய்வதற்கு என்று ஏற்பட்டன. சுமார் கி. பி. 8-ம் நூற்றாண்டிலிருந்து இவற்றின் வரலாறு நமக்குத் தெளிவாயுள்ளது. 'நிகண்டு' என்ற வட சொல்லுக்குத் 'தொகுதி' என்று பொருள். முதன்முதல் தோன்றிய நிகண்டு திவாகரம் ஆகும்.

திவாகரம் முதலிய நிகண்டுகளில் தெய்வம், மக்கள், விலங்கு, மரம், இடம், பல்பொருள், பண்பு, செயல், ஒலி முதலிய 12 தொகுதிகளாகப் பெயர்கள் வகுத்துக் கூறப்படுகின்றன. இவ்வகை நிகண்டுகளில் முக்கியமானவற்றிலுள்ள சொற்களையெல்லாம் திரட்டிச் சதுரகராதி தந்துள்ளது. ஆகவே நிகண்டுகளைக் கற்று மனப்பாடஞ் செய்யவேண்டும் அவசியம் இல்லாமல் ஒழிந்தது.

இவ் அகராதி இயற்றப்பட்டது கி. பி. 1732-ல். ஏடுகளில் இது பிரதிகள் செய்யப்பெற்றுத் தமிழ்நாடு முழுவதும் பரவியது. ஆங்கிலத்தில் டாக்டர் ஜான்ஸன் தமது அகராதியை 1755-ல் இயற்றி வெளியிட்டனர். இதற்குச் சுமார் 25 ஆண்டுகட்கு முன்பாகவே, சதுரகராதி தோன்றியதாகும். தமிழ்ச் சொற்களுக்குத் தமிழில் பொருள் விளக்கும் பெயரகராதியில் சுமார் 12,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் இரண்டாம் தொகுதி (பொருளகராதி) 1819-ல் அச்சிடப்பட்டது. நூல் முழுதும், 1824-ல் ரிச்சர்டு கிளார்க் என்பவரது உத்தரவின்பேரில், தாண்டவராய முதலியார், இராமச்சந்திர கவிராயர் என்ற இரண்டு வித்துவான்களாலும் பரிசோதித்துப் புதுக்கப்பெற்று, வெளியிடப்பட்டது; கிழக்கிந்திய கம்பெனியாரின் நிர்வாக சங்கத்திற்கு உரிமையாக்கப்பட்டது.

சதுரகராதி வெளியீடு

கடைசியிற் குறிப்பிட்ட செய்தியால், பாதிரிமார்கள் செய்துவந்த இம்முயற்சியில் ஆங்கிலேய துரைத்தனத்தாரும் கலந்துகொண்டு, உதவி புரிந்தார்கள் என்பது புலனாகும். துரைத்தனத்தாருக்கு வியாபாரத்துறையிலும், அரசியல் துறையிலும், பல படியாகத் தமிழ்நாட்டுப் பொதுமக்களோடு பழகிவந்த முறையிலும், தமிழ், ஆங்கிலம் இரண்டையும் ஒருசேரக் கற்றவர்கள் தேவையாயிருந்தனர். ஆகவே, இரண்டு மொழியையும் கற்பவர்களுக்குப் பயன்படும்படியாக இருமொழி யகராதி (Bilingual Dictionary) தோன்ற வேண்டும் அவசியம் உண்டாயிற்று. பெப்ரீஷியஸ், ப்ரெய்ட் ஹெப்ட் என்ற இரண்டு ஜெர்மன் பாதிரிகள் தமிழ் – ஆங்கில அகராதி யொன்றை 1779-ல் இயற்றினர். இதில் 9,000 சொற்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு சொல்லின் கீழும் பல வழக்குத் தொடர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. 185 பக்கங்களுள்ள ஒரு சிறு நூலாகச் சென்னையில் இது வெளியிடப்பட்டது. இது "தமிழும் இங்கிலேசுமா யிருக்கிற அகராதி" என்று இதன் முதற்

துரைத்தனத்தார் ஆதரவு

பக்கம் குறிப்பிடுகின்றது. தமிழ் மொழியை 'மலபார் மொழி' என்று ஐரோப்பியர் வழங்கி வந்தனர் என்றும் இம் முதற் பக்கத்தால் அறிகிறோம். பெப்ரீஷியஸ் தம் நண்பர் ஒருவர் கடன் வாங்கியதற்குப் பிணையாளியாய் நின்றிருந்தார். கடன் தீராமையினாலே, இவர் சிறை வாசம் செய்ய வேண்டியதாயிற்று. தமிழ் – ஆங்கில அகராதியை இயற்றிக் கொடுத்த வருவாய் கொண்டு அந்தக் கடனைக் கொடுத்து, சிறையினின்றும் மீண்டார்.

பெப்ரீஷியஸ் அகராதியால் தோன்றிய அகராதி முயற்சி

பெப்ரீஷியஸ் இயற்றிய அகராதி ஒரு சிறு நூல் என்றேன். எனினும் தமிழ் நாட்டிலும், யாழ்ப்பாணத்திலும் அகராதி பற்றிய முயற்சி தொடர்ந்து நடப்பதற்கு இது ஒரு தூண்டுகோலாய் உதவியது. சுமார் 1833-ல், யாழ்ப்பாணத்து அமெரிக்கன் - மிஷன் அதிகாரிகள் தமிழ் அகராதி ஒன்றும், தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றும் ஆங்கில-தமிழ் அகராதி ஒன்றும் இயற்ற வேண்டும் என்று ஏற்பாடு செய்தனர். திஸ்ஸெரா, பெர்ஸிவல் பாதிரியார் முதலியவர்களின் துணைகொண்டு, ரெவரெண்ட் நைட் என்பவர் இவ் அகராதிகளுக்குரிய சொற்களைத் திரட்டி வந்தனர். நைட்டின் மரணத்தால் 1838-ல் இவ்வேலை நின்றுபோய்விட்டது.

யாழ்ப்பாண அகராதி

ஆனால் இத் தொகுப்பு வேலை வீண்போகவில்லை. இதனை ஆதாரமாகக் கொண்டு, யாழ்ப்பாணத்தில் சந்திரசேகர பண்டிதர் ஒரு தமிழ் அகராதி இயற்றி முடித்தனர். இதற்கு, சென்னை களத்தூர் வேதகிரிமுதலியார் ஒருஅனுபந்தமும் சேர்த்தனர். ரெவரெண்ட் ஸ்பால்டிங் என்பவரால் 1842-ல் இது வெளியிடப் பட்டது. யாழ்ப்பாண அகராதி என்றும், மானிப்பாய் அகராதி என்றும் வழங்கியது இதுவே. தமிழ் மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் அடக்க முயன்ற அகராதிகளில் இதுவே முதலாவது. இதில் சுமார் 58,500 சொற்கள் அடங்கியுள்ளன. தமிழில் நூல் வழக்கிலாவது, உலக வழக்கிலாவது பயின்றுள்ளனவா என்பதை நோக்காமல், வட

மொழி அகராதிகளினின்று சொற்களைத் தாராளமாய்ச் சேர்த்துவிட்டனர். இதனை ஒரு பெருங்குறை என்றே சொல்ல வேண்டும்.

அமெரிக்கன் மிஷன் அதிகாரிகள் தொடங்கிய மற்றை அகராதிகளும் வெளிவரலாயின. ஆங்கில-தமிழ் அகராதி வேலை ஹச்சிங்க்ஸ் பாதிரியாரால் மீண்டும் நடைபெற்றது. இவ் அகராதியை 1842-ல் உவின்ஸ்லோ பதிப்பித்தனர். இதற்குச் சில ஆண்டுகட்கு முன்னர், சுமார் 1830-ல் தமிழ்-ஆங்கில அகராதி ஒன்று டாக்டர் ராட்லர் என்பவரால் இயற்றப்பட்டது. இதனைத் திருத்தம் செய்வதற்கு இரண்டு தமிழ் முனிஷிகளையும், ஹார்க்னெஸ். ராபர்ட்ஸன் என்பவர்களையும் நியமனம் செய்தனர். முற்பகுதி கவர்னர் ஜெனரல் பெண்டிங்க் பிரபுவிற்கு உரிமையாக்கப் பட்டு 1834-ல் வெளிவந்தது. ராபர்ட்ஸன் இறந்துபோகவே டெய்லர் பாதிரியாரும், வேங்கடாசல முதலியாரும் இவ் அகராதி வேலையை மேற்கொண்டனர். இவர்களால் இரண்டாம் பகுதி 1837-லும், மூன்று, நான்காம் பகுதிகள் முறையே 1839, 1841-லும் அச்சில் வெளிவந்தன. இவற்றில் 1425 பக்கங்களும், 36,900 சொற்களும் உள்ளன. இவ் அகராதி மிகவும் பயனுடையது. யாழ்ப்பாணத்தில் வழங்கும் பல சொற்கள் இதிற் சேர்க்கப்படவில்லை என்பது ஒரு குறை என்பர்.

ஆங்கில-தமிழ் அகராதியும் தமிழ்-ஆங்கில அகராதியும்

ராட்லர் அகராதி வெளிவந்த சில காலத்திற்குப் பின்னர், தமிழ்-ஆங்கில அகராதிக்காக யாழ்ப்பாணத்து அமெரிக்கன் மிஷன் சார்பில் தொகுக்கப்பட்ட சொற்களை உவின்ஸ்லோ சென்னையில் 1862-ல் பதிப்பித்தனர். இப்பதிப்பு வேலையில் பல சிறந்த வித்துவான்கள் பலவாறு உதவி செய்து வந்தனர். இவர்களில் இராமாநுஜ கவிராயர், விசாகப் பெருமாளையர், வீராசாமிச் செட்டியார் முதலிய அறிஞர்களை இங்கே குறிப்பிடல் தகும். இவ் அகராதியில் 67,452 சொற்கள் உள. இரு வகை வழக்கிலுமுள்ள சொற்கள் மிகக் கூட்டப்பட்டன;

உவின்ஸ்லோ அகராதி

பல வகையான சாஸ்திரச் சொற்கள் விளக்கப்பட்டன; ஆசிரியர்கள், புலவர்கள், வீரபுருஷர்கள், தெய்வங்கள் முதலியோர்களின் பெயர்களும் இதிற் சேர்க்கப்பட்டன.

மேற்குறித்த அகராதிகளே யன்றி, தமிழ்-லத்தீன் அகராதிகளும் தோன்றின. பெஸ்கி தாமும் சுமார் 1742-ல் இவ்வகை அகராதி யொன்று இயற்றினர். 1744-ல் தமிழ்-பிரெஞ்சு அகராதி யொன்றும், போர்த்துகீய-லத்தீன்-தமிழ் அகராதி யொன்றும் இவரே இயற்றி முடித்தனர்.

தமிழ்-லத்தீன் அகராதி முதலியன

பெஸ்கி, ராட்லர், உவின்ஸ்லோ என்ற மூவர் இயற்றியவைகளைப் பயன்படுத்தி ஆர். பி. குரி என்ற பாதிரியார் ஒரு தமிழ்-லத்தீன் அகராதி இயற்றி நாகப்பட்டணத்திலிருந்து 1867-ல் வெளியிட்டனர். இவ்வாறே தமிழ்-பிரெஞ்சு அகராதிகள் வேறு சிலவும் வெளிவந்துள்ளன.

உவின்ஸ்லோ அகராதி மிகவும் பெரிய நூல்; எல்லோருக்கும் உதவக்கூடியதல்ல. ஆகவே அடக்கமான

சிறு அகராதிகள்

சிறு அகராதிகள் இயற்றுவதில் ஒரு சிலருக்கு நோக்கம் எழுந்தது. ஜி. யு. போப் பாதிரியார் இவ்வகைச் சிற்றகராதி ஒன்றை 1859-ல் இயற்றி வெளியிட்டனர். பொதுக் கல்வி அதிகாரியின் உத்திரவின்பேரில் ஒரு சிற்றகராதி 1870-ல் தயாரிக்கப்பட்டது. இதனைத் திருந்திய நல்ல பதிப்பாக 1888-ல் மல்லாகம் விசுவநாத பிள்ளை பதிப்பித்தனர்.

பேரகராதிகளுக்கும், சிற்றகராதிகளுக்கும் இடைப்பட்டதாய், பொது மக்களது தேவைக்கு உதவுவதாய், ஓர் அகராதி வேண்டப்படுவதாயிற்று. இத் தேவையை நிரப்ப, 1897-ல் தரங்கம்பாடி (**Tranquebar**) அகராதி

தரங்கம்பாடி அகராதி

தோன்றியது. இது பெப்ரீஷியஸ் அகராதியை ஆதாரமாகக்கொண்டது. ஒரு முக்கியமான முறையையும் இது கையாண்டது. டாக்டர் க்ரால் என்பவர் தமிழில் முக்காலத்தும் வரும் வினைவிகற்பங்களை யெல்

லாம் நன்கு ஆராய்ந்து வினையடிகளை 13 வகையாகக் கணக்கிட்டிருந்தனர். இவ்வகையை இவ் அகராதியும் மேற்கொண்டு, ஒவ்வொரு வினையடியையும் அது எவ் வகையைச் சார்ந்தது எனக் குறிப்பிட்டுச் சென்றது. இதனால் வினை விகற்பங்களை யெல்லாம் அகராதியில் கொடுக்கவேண்டும் அவசியம் இல்லாமற் போயிற்று. இப்படிச் சிறந்த முறையைக் கையாண்டதோடு, வழக் கொழிந்த சொற்கள், அருகிய சொற்கள் முதலியவற்றை யும் இவ் அகராதி நீக்கிவிட்டது. இதில் 11,590 சொற்களும், 21,305 தொடர்கள் முதலியனவும் அடங்கி யுள்ளன.

இங்ஙனமாக, இரு மொழி அகராதிகள் பல படி யாய்த் திருத்தமடைந்து பெருகின. ஆனால், ஒருமொழி யகராதி விருத்தியடையாது ஒரு நிலையிலேயே வெகுகாலம் நின்றுவிட்டது. யாழ்ப்பாண அகராதி ஒன்றுதான் பயன் பட்டு வந்தது. அதனையும் பதிப்பாளர் களும், பிரசுரகர்த்தர்களும் பாழாக்கி வந் தனர். அச்சுப் பிழைகள்கூடத் திருந்தப் பெருமல் இன்றும் பதிப்புக்கள் வெளிவந்த வண்ணமாயுள்ளன. இதற்கு ஒரு விலக் காக, நா. கதிரைவேற் பிள்ளை இயற்றி வெளியிட்ட அகராதியைச் சொல்லலாம். இவர் 40 வருஷங்களுக்கு முன் விளங்கிய ஒரு சிறந்த தமிழ்ப் பண்டிதர்; யாழ்ப் பாண நாட்டினர்; ஆறுமுக நாவலர் சிஷ்ய பரம்பரை யைச் சார்ந்தவர்; தமிழ் நாட்டில் சைவப் பிரசாரமும், தமிழ்ப் பிரசாரமும் செய்து வந்தவர். இவரும்கூட, தமது பிரசுரகர்த்தர்கள் தம் அனுமதியின்றிப் பதிப்புக்களை மோசடியாய் வெளியிட்டுப் பிழைகளைப் பெருக்கிவந்தனர் என்று முறையிட்டு எழுதியுள்ளார்.

கதிரைவேற் பிள்ளை தமிழகராதி

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் நீதிபதியாயிருந்த ஸி. டபிள்யு. கதிர்வேற் பிள்ளை ஒரு சிறந்த பேரகராதி வெளியிடவேண்டி, அதற்குரிய முயற்சிகளைச் செய்தனர். அகராதியிலும் ஒரு பகுதியை இவர் எழுதி முடித்தனர். ஆனால் நூல் முற்றுப்பெறுவதற்கு முன், இவர் மரண மடைந்தனர். பின்னர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால்

இவ் அகராதி ஒருவாருக முற்றுப் பெற்றது. இந்தக் காரணத்தால், தமிழ்ச் சங்க அகராதி என்று இதனை வழங்குவர். இதில் நூற்றுக்கணக்கான வடசொற்கள் புதியவாகச் சேர்க்கப்பட்டன. பல தமிழ் இலக்கியங்களினின்றும் தக்க மேற்கோள்கள் கொடுக்கப்பட்டன. சொற்களின் வடமொழி மூலங்களும் காட்டப்பட்டன. வட்மொழிச் சொற்கள் அனைத்தையும் சேர்த்தாலன்றி, தமிழகராதி பூர்த்தியாகமாட்டாது என்ற கொள்கையுடையவர் நீதிபதி கதிர்வேற் பிள்ளை. இதனுல், வடமொழிச் சொற்கள் ஏராளமாய் நுழைந்து, இவ் அகராதிக்கு ஒரு குறையை உண்டாக்கிவிட்டது. ஆங்கில அகராதியில் லத்தீன் சொற்கள் அனைத்தையும் புகுத்திஞல் அகராதி முறையோடு முரணுமல்லவா?

தமிழ்ச்சங்க அகராதி

இத் தமிழ் அகராதி ஒருபுறம் இருக்க, தமிழ் ஆங்கில அகராதி பலவகையில் செப்பமடைய இடமிருந்தது. **முதலாவது**, சங்க இலக்கியம் முதலிய ஆதார நூல்கள் பல உவின்ஸ்லோவுக்குப் பின்னரே அச்சில் வெளிவந்துள்ளன. அவற்றை நன்கு பயன்படுத்துவது அவசியமாயிற்று. **இரண்டாவது**, சொற்களுக்குப் பொருள் எழுதுவதில் உவின்ஸ்லோ முதலியோரது அகராதிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நயமிருந்தது. இந்நயங்கள் அனைத்தையும் ஒருங்கு கொணர்ந்து அவற்றை இன்னும் ஒழுங்காக விருத்தி செய்வது அவசியமாயிருந்தது. **மூன்ருவது** சொற்பொருள்களை அமைப்பதில் சில நியமங்களைக் கையாளுவதும் அவசியமாயிற்று. தமிழ் அகராதி நூல்கள் பலவும் பொருள்களையுங்கூட அகராதிக் கிரமத்தில் அமைத்தன. இது தவருகும். வரலாற்று முறையிலும், இயலாத இடங்களில் கருத்துத் தொடரும் முறையிலும் இவற்றை அமைக்க வேண்டுவது இன்றியமையாத தாகும். **நான்காவது**, சொல்லுக்குப் பொருளாகப் பரியாயச் சொற்களைக் கொடுப்பது போதாது. சொல்லுக்கு உரிய பொருளின் லட்சணத்தையும் வரையறை செய்யவேண்டும். இவ்வாறு

முற்பட்ட அகராதிகளில் உள்ள குறைபாடுகள்

செய்யும் வழக்கமே தமிழ் அகராதிகளில் பெரும்பாலும் இல்லாமலிருந்தது; பரியாயச் சொல்லைக் கூறுவதுதான் லட்சணமாகக் கருதப்பட்டது. தமிழ்-ஆங்கில அகராதிகளிற் கொடுக்கப்பட்டுள்ள லட்சணங்களும் ஒவ்வொரு வகையில் பிழைபாடு உடையனவாயிருந்தன. இக் குறைகளெல்லாம் நீங்கவேண்டுவது அவசியமாயிற்று. **ஐந்தாவது**, சொல்லின் பிறப்பைக் குறித்து அகராதியாளர்கள் பெரும்பாலும் கவனஞ் செலுத்தியதே இல்லை. வடமொழி மூலங்கள் சிலவற்றிற்குத் தரப்பட்டிருந்தன. பிற திராவிட மொழிகளினின்று பிறப்பொத்த சொற்கள் காட்டப் பெறவில்லை. **ஆறுவது**, மேற்கோள் காட்டுவதில் தகுதியான நியமங்கள் கையாளப்படவில்லை. தக்க நியமங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கோள் கொடுப்பது அவசியமாயிருந்தது.

மேற் குறித்த அமிசங்களிலெல்லாம் திருத்த மெய்தியது சென்னை ஸர்வகலா சங்கத்தார் வெளியிட்டுள்ள 'தமிழ் லெக்ஸிகன்' ஆகும். இதுவும், அரசினர் ஆதரவில் **சான்ட்லர்** என்ற அமெரிக்கன் மிஷின் பாரதியாரால் தொடங்கப்பெற்று, தமிழ் வித்துவான்கள் உதவிகொண்டு, ஆங்கிலமும் தமிழும் கற்ற வித்துவான்களால் முற்றுப்பெற்றது. இதில் குறைகளே இல்லை என்றுவது, இதனோடு அகராதி வேலைக்கு முற்றுப்புள்ளி வைத்தாயிற்று என்றுவது நினைப்பது தவறு. இதிலும் பல குறைகள் உள்ளன. அகராதி வேலை மேலும் மேலும் நடைபெற்றுக்கொண்டே செல்லவேண்டியது தான்.

தமிழ் லெக்ஸிகன்

மொழியின் வளர்ச்சி நமது வாழ்க்கை வளர்ச்சியைப் பொறுத்தது. இம் மொழி வளர்ச்சிக்கு சொல்லின் வளர்ச்சி ஓர் சிறந்த அறிகுறியாயுள்ளது. நமது வாழ்க்கை வளமுறுவதானால் சொற்கள் பெருகிக்கொண்டு தான் செல்லும். அகராதி வேலைக்கும் முடிவில்லை. குறைபாடுகளைத் திருத்துவதும், சொற்களுக்கு ஜாதகம் கணிப்பதும், புதுச் சொற்களைச் சேர்ப்

அகராதி வேலைக்கு முடிவு இல்லை

பதும், சாஸ்திர சங்கேதமொழி-அகராதிகளையும், கொடுந் தமிழ், திசைச்சொல்பற்றிய அகராதிகளையும், சொல்-உற் பத்தி அகராதிகளையும் இயற்றுவதும் தமிழ்மொழி வளர்ச் சிக்கு இன்றியமையாத பெருஞ் செயல்களாகும். இவ்வேலை கள் இடையீடின்றி நடைபெறுவதற்குரிய முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் உள்ளம் இதிலே செல்லுவதாக!

16

****

கூத்தும் இசையும்

சமீப காலத்தில் கூத்தும் இசையும் பற்றி ஆந்திர நாடு, தமிழ் நாடு, கேரளம் முதலிய தென்னாடுகளில் பெரு முழக்கம் கேட்கிறது. நூல்களில் இவற்றைக் குறித்து எழுதி வருகிறார்கள். சொற்பொழிவுகள் இவைபற்றி நிகழ்கின்றன. பல்கலைக் கழகங்களும் இவ்விரண்டையும் ஆராய்ந்த வண்ணமா யிருக்கின்றன. இவைபற்றி மநாடுகள் நடைபெறுகின்றன. இரு கலைகளிலும் வல்ல ஆடவரும் பெண்டிரும் பல இடங்களிலும் கச்சேரி நடத்தி, மக்களை இன்புறுத்தி, தமக்கும் இக் கலைகளுக்கும் பெரும் புகழ் தேடி வருகிறார்கள். ரேடியோ நிலையங்களும், இக் கலைகளை - முக்கியமாக இசைக் கலையைச் - சிறந்த பாடக பாடகிகளின் இசைக் கச்சேரி மூலமாயும் இசைத் தட்டுக் களின் மூலமாயும் எல்லா இடங்களிலும் மக்கள் நுகர்ந்து இன்புறுமாறு செய்து வருகின்றன.

சென்ற இரண்டு நூற்றாண்டுகளாகக் கேரள தேச மக்கள் கூத்து, இசை என்ற இரு கலைகளையும் மிக்க சிரத் தையுடன் போற்றி வருகிறார்கள். கேரள அரசர்களிற் சிலர் அழகிய கீர்த்தனங்களை இயற்றி இசைக்கலையை வளர்த்துள்ளார்கள். சுவாதித் திருநாள் மன்னரவர் களின் கீர்த்தனங்களை உதாரணமாகக் கூறலாம். ஓர் அரசர் நடனக் கலைக்குரிய பரத நூலொன்று இயற்றியுள்ளார். பாலராம வர்ம மஹாராஜா அவர்கள் இயற்றிய பால ராம பரதம் என்ற வடமொழி நூலை இங்கே குறிப்பிடுகிறேன். சிறந்த இசை நிபுணர்களை இக் கேரளதேசத்து மன்னர்கள் தங்கள் ஆஸ்தானத்தில் வைத் துப் போற்றி வந்திருக்கிறார்கள். கோபிநாத் தங்கமணி,

கேரளமும் கூத்தும்

லலிதா-பத்மினி முதலியோர்கள், நடனக் கலையில் இந் நாட்டினர் சிறந்து விளங்குவதைக் குன்றின் மேலிட்ட தீபம்போல் எங்கும் தெரியும்படி செய்து வருகிறார்கள்.

இன்றைய கேரளம் இவ்வாறாக, பண்டைக் கேரளத்தில் இவ்விரு கலைகளின் நிலைமையும் எவ்வாறிருந்தது என இனி நோக்குவோம். பண்டைக் கேரளம் என்றால் எக் காலத்துள்ள கேரள மென்பதை நாம் வறையறை செய்து கொள்ளுதல் நலம். முதன் முதலாக அசோக சக்கரவர்த்தியின் (கி. மு. 270-232) இரண்டாம் சிலைத் திருவாணையில் கேரள தேசம் குறிக்கப்பட்டிருக்கிறது. இதனோடு சேர்த்துக் கூறப்படும் சோழ, பாண்டிய தேசங்களைப் போல, இதுவும் தமிழ் நாட்டின் ஒரு பிரிவே யாகும். தனிப்பட்ட ராஜ்யமா யிருப்பினும், இத்தேசத்தில் வழங்கியது தமிழ் மொழியே; இங்கு வாழ்ந்தவர்களும் தமிழ் மக்களே யாவர். இதற்குச் சான்றுகள் மிகப் பலவாயுள்ளன. அவற்றை யெல்லாம் இங்கே விவரிக்கும் அவசியம் இல்லை. கேரளரைச் சேரர் என்பது தமிழ் வழக்கு. இக் கேரள மக்களுக்குப் பல நூற்றாண்டுகளாகத் தமிழே தாய் மொழியாயிருந்தது. பிராதேசிக வழக்குகள் சிறிது சிறிதாகப் புகுந்து காலகதியில் பெருகுவனவாயின. கி. பி. 10-ம் நூற்றாண்டளவில் சேர நாட்டினரின் தமிழ் செந்தமிழிலிருந்து பெரிதும் வேறுபடத் தொடங்கியது. மலையாள மொழி என ஒன்று தோன்றத் தொடங்கியது. இந் நீண்ட காலமெல்லாம் சேர நாட்டில் வழங்கியவை தமிழ் நாடு அனைத்திற்கும் பொதுவாகிய கூத்தும் இசையுமே யாகும்.

இவ்வாறு பொதுவாய் அமைந்த பண்டைக் கலைகளைக் குறித்துச் சிறிது தெரிந்து கொள்ளுதல் நலமாகும். அக் காலத்தில் கூத்தர் என்றும், பாணர் என்றும், விறலியர் என்றும், மூன்று வகுப்பினர் இருந்தனர். இவருள் கூத்தர் என்பவர் கூத்து நடத்தியும் கூத்து ஆடியும் வந்தனர். விறலியர் என்பவர் பாடியாடி வந்த பெண்கள். பாணர் யாழ் முதலியன வாசித்து வந்த இசைகாரர். இம் மூவருள் கூத்தரும் விறலியருமே கூத்து என்னும் கலைக்கு உரியவர்கள். கூத்து என்பதன்

கூத்தர். பாணர். விறலியர்.

பொருளைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும் இது ஆங்கிலத்தில் 'டான்ஸ்' என்று கூறுவதனையே முற்காலத்தில் குறிக்கும். பிற்காலத்தில் இக்கலை இழிநிலை அடைந்துவிட்டது. இக் காரணத்தால் பலவகையான இழி பொருள்களும் இதற்குத் தற்காலத்தில் ஏற்பட்டுள்ளன. கூத்தியர் என்ற சொல் தற்காலத்தில் வைப்பாட்டிகள். என்ற பொருளில் தொண்டை நாட்டில் வழங்குகின்றது. இக்கலையைப் புனருத்தாரணம் செய்யும் முயற்சி சமீப காலத்தில்தான் நிகழ்ந்தது. இதன் பிற்பாடுதான் கூத்து என்பதனை நல்ல பொருளில் வழங்கிவரத் தொடங்கியிருக்கிறோம்.

கூத்தர்களுக்கு நிலைத்த இருப்பிடம் யிருந்ததாகத் தெரியவில்லை. பல ஊர்களுக்கும் சென்று அவ்வூராருடைய ஆதரவில், ஏதேனும் ஒரு பொதுவிடத்தில் தம் கூத்தை நிகழ்த்தி வந்தனர். கூத்து நிகழும் இடத்திற்கு 'ஆடு களம்' என்று பெயர் வழங்கினர்.

'கூத்தர் ஆடுகளம் கடுப்ப'

என்பது புறநானூறு (28) ஆடுகளத்திற்குக் கூத்தர்கள் தம் சுற்றத்தோடு சென்று பாட்டுகள் பாடி, அப்பாடல் களுக்கு ஏற்க அபிநயத்து ஆடுவது வழக்கம்.

கண்ணுளங் கடும்பு....
ஆடலு மொல்லார் தம்பாடலும் மறந்தே

(புறம். 153)

கோடியர் பெருங்கிளை வாழ
கலிமாப் பொழிந்தனர்

(பதிற். 42)

இக் கூத்தர்கள் கூத்து நடத்தும்போது, முழவு, பறை முதலியன கொட்டுதலும் யாழ் வாசித்தலும் உண்டு.

கோடியர் முழவின் முன்ன ராடல்
வல்லா னல்லன்

(பதிற். 56)

பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்

(புறம். 164)

என்பன சான்றுகள். கண்ணுளர் கோடியர், வயிரியர் என்பன 'கூத்தர்' என்பதன் பரியாயச் சொற்கள். சங்கச் செய்யுட்களில் கூத்தர், கூத்து என்பன அருகியே காணப் படுகின்றன. மற்றைப் பரியாய பதங்களே மிகுதியாயுள் ளன. இக் கூத்தர்கள் இவ்வாறு பல ஊர்களுக்கும் சென்ற சமயமும் அறிதற்குரியது. எங்கேனும் ஏதேனும் விழா நடக்கும்போது செல்வது உண்டு.

'மள்ளர் குழீஇய விழவி னானும்...
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை'

என்பது குறுந்தொகை (31) கூத்தருள் ஒரு வகை யார் பொருநர் எனப்படுவார். இவர்கள் நெல் அறுவடை யாகும் சமயத்தில் களம் சென்று ஏர்க்களம் பாடுவார். இன்னும் இவர்கள் ஓர் அரசன் போர்க்குச் சென்று வெற்றியுடன் திரும்பிய காலையில், போர்க்களத்தைப் புகழ்ந்தும் இவர்கள் பாடுவார்கள். இவ்வாறு செல்வ தைத் தவிர, அரசர்கள், குறுநில மன்னர்கள் வள்ளல் கள் முதலியோர்களிடப் சென்று, தங்கள் கலை வன்மை யைக் காட்டிப் பரிசு பெற்று மீளுதலும் முற்காலத்துப் பெருவழக்கா யிருந்தது. பத்துப் பாட்டிலுள்ள ஆற்றுப் படைகள் இதற்குச் சான்று. 'மலைபடுகடாம்' என்ற பாட்டிற்குக் 'கூத்தராற்றுப் படை' என்பதும் ஒரு பெயர்.

சேர நாட்டிலும் இக்கூத்தர்கள் சென்று தங்கள் கலைத்திறமையை அங்குள்ள அரசர்களிடம் புலப்படுத் திப் பரிசு பெற்றுள்ளார்கள். இது.

கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்தும்
தண்கடல் நாடன ஒண்பூங் கோதைப்
பெரு நாளிருக்கை.

என்ற மதுரைக் காஞ்சியால் (523-5) விளங்கும்.

கோதை-சேரன். சுமார் கி. பி. 3-ம் நூற்றாண்டில் இப் பாட்டு இயற்றப்பட்டது. அக் காலத்தில் சேர நாட்டில் தமிழ் நாட்டிலுள்ள நடனக் கலையே வழங்கி வந்த தென் பதற்கு மேற்கூறிய பாடற் பகுதி சிறந்த சான்றாகும்.

கூத்து இங்ஙனமாக, இனி அக்காலத்து இசையை நோக்குவோம். இக் கலையினால் பண்டை மக்களை இன் புறுத்தி வந்தார்கள் பாணர் எனப்படுவார். பாணர் என்ற சொல்லுக்கே பாடுவோர் என்று பொருள். இவர்கள் பழங்குடி மக்களுள் ஒரு வகையினர்.

'துடியன் பாணன் பறையன் கடம்பனென்று'
இந்நான் கல்லது குடியுமில்லை.

என்பது புறம் (335). இவர்கள் இசைப் பாணர், யாழ்ப் பாணர், எனப் பலவகையினர், யாழ்ப்பாணரும் சிறு பாணர், பெரும்பாணர் என இருவகைப் படுவர். சிறியதொரு யாழ்வகையைக் கருவி யாகக் கொண்டு வாசிப்பவர் சிறுபாணர்; பெரியதொரு யாழ் வகையைக் கருவியாகக் கொண்டு வாசிப்பவர் பெரும்பாணர். குழலர், பாணர் முதலிய இசைகாரர் என இவர்களை அடியார்க்கு நல்லார் (சிலப். 5, 37 உரை) குறிப்பிடுகின்றார். இவர்களுடைய குடியிருப்பு மதுரை முதலிய பெரிய நகரங்களில் தனிப் பட அமைந்திருந்தது.

அக்காலத்து இசை

'அழுந்துபட் டிருந்த பெரும்பாண் இருக்கையும்' என்பது மதுரைக்காஞ்சி (342).

இவர்கள் வாசித்து வந்த யாழின் அமைப்பு நமக்கு நன்றாகப் புலப்படவில்லை. யாழுறுப்புக்கள் சில பெரும் பாணாற்றுப் படையில் (5-15) கூறப்படுகின்றன. இவற் றாலும் பிற குறிப்புக்களாலும் இது சிறந்த ஓர் இசைக் கருவி என்பது புலப்படுகிறது. பெரும்பாலும் வீணையைப் போன்றதொரு கருவியாகவே இது இருத்தல் வேண்டும்.

இப் பாணர்கள் அரசர்கள், வள்ளல்கள் முதலியோ ரிடம் சென்று தம் இசைநயத்தால் அவர்களை இன்புறுத்தி

அவர்கள் கேட்டு இன்புறும்படியாகச் செய்து அவர்களால் பொற்பூ முதலிய பரிசுகள் பெற்று மீண்டனர். அன்றியும் அரசர்களது நாளோலக்கத்தில் ஓர் அங்கமாகவும் இவர்கள் விளங்கினர்.

சிறுபாணாற்றுப் படைக் காலத்தில் (சுமார் கி. பி. 325) இசைக் கலை சீரியவோர் நிலையிலிருந்ததென்று ஊகிக்கலாம்.

இப் பாணர் குடும்பங்கள் சேர நாட்டிலும் வாழ்ந்து இசைக் கலையை வளர்த்து வந்தார்கள். பாணர் ஜாதி பண்டைக் காலத்தில் இந் நாட்டிலிருந்தது. இவர்கள் தொழில் மந்திரவாதம் என்பர் கே. எம். பணிக்கர். இது பிற்காலத்தில் இவர்கள் கைக்கொண்ட தொழிலாக இருக்க வேண்டும்.

வெகு சீக்கிரத்தில் இவ் விரண்டு கலைகளும் ஒரு நூதன பரிஷ்காரம் எய்தத் தொடங்கின. இப் பரிஷ்காரம் பெரும்பாலும் ஆரியர் தொடர்பு மிகுந்ததனால் உளதாயிற்று. இக் கலைகள் பற்றி நூதனக் கருத்துக்கள் எழுந்தன. தேவர்கள் வேண்டிக்கொள்ள பிரம்மா நாட்டியக் கலையைச் சிருஷ்டித்தனரென்றும், அவருடைய ஆணையின் படி,—பரதமுனி நாட்டிய'சாஸ்திரத்தை இயற்றினரென்றும், நாட்டியக் கலைக்குத் தெய்வத் தன்மையை ஏற்றுவராயினர். முன்பு விறலியரா யிருந்தவர்கள் இப்பொழுது கணிகையராய் நாட்டியத்தை நிகழ்த்துவராயினர். இவர்களுக்கும் தெய்விகத் தொடர்பு கற்பிப்பது அவசியமாயிற்று. இந்திரனது சபையில் ஊர்வசி நர்த்தனமாடிக் கொண்டிருக்கும் பொழுது, அவளும் இந்திர குமாரனாகிய ஜயந்தனும் ஒருவரை யொருவர் விழைந்தனர். இதனைக்கண்ட அகஸ்தியர் சாபமிட, ஊர்வசி மண்ணிற் பிறந்து கணிகையர் குலத்தின் முதல் மங்கையாய் மாதவி யென்ற பெயருடையளாய்ப் பிறந்தாளாம். இவள் வழி வந்தவளே கோவலன் காதற்கணிகையாகிய மாதவி யென்று சிலப்பதிகாரம் கூறும் (3, 1-6) நாட்டியக்

இரண்டு கலைகளின் பரிஷ்காரம்

கலையைப் போலவே, இசைக்கலையும் தெய்விகத் தொடர்பு உடையதாகக் கருதப்பட்டது. நாரதர் யாழாசிரியராகக் கொள்ளப் பட்டார்.

'நாரதன் வீணை நயந்தெரி பாடலும்......

என்பது சிலப்பதிகாரம் (6, 18). தேவ ஜாதியாராகிய கந்தருவர்களும் இசைக் கலைக்கும் யாழுக்கும் உரியரா யினர். இவர்களை,

'துறையமை நல்யாழ்த் துணைமையோர்'

எனத் தொல்காப்பியம் கூறும். (களவியல்-1) காலக் கிரமத்தில் தோன்றி வளர்ந்த இக்கருத்துக்களைப் பரத நாட்டிய சாஸ்திரம் அறுதி செய்து முத்திரையிட்டது என்று கூறலாம். இதன் காலம் கி. பி. 4-ம் நூற்றாண் டாகும்.

இக் கலைகளின் மதிப்பு நாளடைவில் உயர்ந்து கொண்டே வந்தது. தெய்வங்களும் இவற்றின் வசீகர சக்திக்கு உட்பட்டு, அவைகளே ஆடவும் பாடவும் செய் தன என்று நம்மவர்கள் கற்பிக்கத் தலைப் பட்டனர். சிவன், திருமால், முருகன், உமை முதலிய தெய்வங்கள் இங்ஙனம் ஆடின ஆடல்கள் பதினொன்றென்பர்.

'கடையம் அயிராணி; மரக்கால்
விந்தை; கந்தன்
குடை துடி; மால் அல்லியமல்
கும்பம்-சுடர் விழியால்
பட்டமதன் பேடு; திருப்பாவை;
அரன் பண்டரங்கம்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து.

இப் பதினோராடலும் இத் தெய்வங்களின் சரித்திரத் தில் ஒவ்வோர் நிகழ்ச்சியின் போது இவைகள் ஆடியன வாகக் கருதப்பட்டன. இவற்றை மக்கள் கண்டு களிக்கு மாறு கூத்தர்கள் அபிநயித்துக் காட்டினர். தெய்வங்கள்

ஆடிய நிலையில் செம்பினாலும் சிலையினாலும் உருவங்கள் அமைத்துக் கோயில்களில் நிறுவி மக்கள் வழிபட்டும் வந்தனர். சிதம்பரத்திலுள்ள நடராஜ விக்கிரகம் இத்தகையது; இங்குக் குறித்தனவெல்லாம் 6-ம் நூற்றாண்டளவில் நிகழ்ந்தன. நாட்டியக் கலை இங்ஙனம் போற்றப்பட, இசைக்கலை அரசர்களால் மிகவும் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டது. பல்லவ அரசனான மகேந்திர வர்மன் (7-ம் நூற்றாண்டு) ஒரு சங்கீத நூலை இயற்றி அதனைச் சிலையில் செதுக்கி வைத்துள்ளான்.

கோயில்களும் கூத்தும்

ஆறும் நூற்றாண்டிலிருந்து பல நூற்றாண்டுகளாகத் தென்னாட்டில், கோயில் அமைக்கப்பட்டு வந்தன. சைவம், வைஷ்ணவம் முதலிய மதக் கிளர்ச்சிகளும் இக் காலத்தில் தோன்றின. கோயில்கள் கூத்து நிகழ்தற்குரிய இடமாக அமைந்தன. சைவ முதலிய சமயங்கள் இக் கூத்துக்களை மதச்சார்பு உடையனவாக்கின. திருவாய் மொழிப் பாசுரங்களை அபிநயித்துக் காட்டுதல் பெரு வழக்காயிருந்த தென்பது இங்கு அறியத்தக்கது. இவ்வாறு அபிநயத்துடன் பாடுவோர் அரையர் என்று அழைக்கப் பட்டனர்.

திருவாய் மொழியின் காலம் சுமார் 10-ம் நூற்றாண்டு. 6-ம் நூற்றாண்டிலிருந்து இக்காலம் வரை தமிழ் நாடுகளிற் கோயில்கள் அமைந்ததைப் பின்பற்றி, கேரள நாட்டி லும் சுமார் 10-ம் நூற்றாண்டளவில் கன்னியாகுமரி, சுசீந்தரம், திருவாட்டாறு, அனந்தசயனம், திருக்காட் கரை முதலிய இடங்களில் கோயில்கள் இயற்றப்பட்டன. இக்கோயில்கள் சிலவற்றில் கூத்தம்பலம் ஒன்றிருந்தது. இங்கே கூத்துக்கள் நிகழ்ந்து வந்தன.

கோயில்களுக்குள் தெய்வ சந்நிதியில் கூத்தர், பாணர் முதலியோர் செல்லுதல் இயலாது. ஏனெனின், இவர்கள் இழிகுலத்தினராகக் கருதப் பட்டனர்: திருப்பாணாழ்வாரும், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரும் இங்ஙனம் இழிகுலத்தவரே என்பர். எனவே, இவர்களது உரிமையாயிருந்த கலைகளை உயர்ந்த குலத்தினர் கையாளத்

தொடங்கினர். இவற்றின் விளைவாகக் கூத்து கணிகையரிடத்தும், இசை அக்கணிகையர்களிடத்தும், யாழாசிரியன் குழலாசிரியன் முதலியோரிடத்தும் அடைக்கலம் புகுந்து விட்டன. கூத்தரும் பாணரும் தொன்று தொட்டு வந்த தங்கள் குலத் தொழிலை அறவே கைவிட வேண்டியதாயிற்று. பூர்வ சமுதாயத்தில் அவர்களது நிலைமை சீர்குலைந்து விட்டது. தலைவன் தலைவியர்க்கிடையில் தூது சென்று அவர்களைச் சமாதானப் படுத்துவதுதான் இவர்கள் தொழிலாய் முடிந்தது. தலைவனைச் சார்ந்து வாழும் ஏவலாளர் போல் ஆகி விட்டனர். தொல்காப்பியர் இந் நிலைமையைத் தெளிவுறக் கூறியுள்ளார்.

> பாணன் பாடினி...கூத்தர் விறலியர்
> யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப (வாயில்-தூது)

சோழ பாண்டிய நாடுகளில் கூத்தரும் பாணரும் 10-நூற்றுண்டில் பெரும்பாலும் மறைந்து விட்டனர். இவர்களுக்குரிய கூத்து வகைகளுள் ஒன்றைச் சாக்கையர் என்ற ஒரு வகுப்பினர் நிகழ்த்தி வந்தனர்.

சாக்கையர்

இக்கூத்து வகை புராண இதிகாசக் கதைகளைத் தழுவி வருவது. சாக்கையர் 10-ம் நூற்றுண்டின் இறுதியிற் பிறந்த தமிழ் நாட்டுத் தமிழ்ச் சாசனங்களில் குறிக்கப் படுகிறுர்கள். உதாரணமாக,

> 'குமரன் சீகண்டன் என்ற சாக்கையன் திருவாவடுதுறை யாழ்வாரின் புரட்டாசித் திருவிழாக் காலத்து ஆறங்கம், ஆரியக் கூத்து ஆட நித்ய போகம் ஆகிய சாக்கைக் காணி......'

என்பது பரகேசரி இராசேந்திர சோழன் சாசனம். இவ் வகையினரைக் குறித்து,

> 'வள்ளுவன் சாக்கை யெனும் பெயர் மன்னர்க்கு
> உள்படு கருமத் தலைவர்க் கொன்றும்'

எனத் திவாகரம் (11, 28) கூறுவதனுல், இவர்கள் வள்ளுவரோடொப்பத் தாழ்ந்த பிறப்பினரே யாவர்.

இவர்கள் கூத்தாடுவதைக் குறித்து இங்கிகண்டும் பண்டை இலக்கியங்களும் யாதும் கூருமையினுலே, மிகப் பிற்பட்ட காலத்தே இத் தொழிலை இவர்கள் மேற்கொண்டனர் என்று கருதலாம். இங்ஙனம் புதிய தொழிலிற் பிரவேசித்து, அதனையே தமது குலத்தொழிலாகக் கொண்ட பின்னர் இவர்கள் உண்மையிலே பண்டைக் கேரளம் என்று சிறப்பித்துக் கூறத்தக்க மலையாள நாட்டிலும் சென்று பல இடங்களில் குடியேறினர். இவர்களைக் கொச்சி ஜனசங்கியைப் பத்திரம் 'பரதேசிகள்' என்றே குறிப்பிடுகிறது. மலைநாடு சென்றதும் இவர்களது குலமும் அந்தணர் தொடர்புடையதாகக் கருதப்பட்டது. கோயிலுள்ளே கூத்தம்பலத்தில் கூத்து நடத்துவதும் புராண இதிகாசங்களிலிருந்து வடமொழிச் சுலோகங்களை யெடுத்துச் சொல்லி வியாக்கியானம் செய்வதும் அந்தணர் பிறப்பைச் சார்ந்தார்க்கன்றி, ஏனையோர்க்கு இயலாதல்லவா? ஆனுல், அந்தணர் இவர்களைத் தங்கள் குலத்தினர் என்று ஒத்துக்கொள்ளவில்லை. எனவே, அந்தணர் குலப்பெண்ணுக்கும் க்ஷத்திரியனுக்கும் பிறந்தாரது மரபைச் சார்ந்தவரென்று சாக்கையர் கருதப்பட்டனர். இந்த வம்சம் அடியற்றொழியும் சமயத்தில், இதைச் சார்ந்து கற்பிற் தவறிய ஓர் அந்தணப் பெண்ணுக்கும் அந்நிய குலத்தான் ஒருவனுக்கும் பிறந்த ஒருவனது வம்சத்தினராக இவர்களைக் கருதினர்.

பிற்கூறிய குலமொன்று பறையூரில் வாழ்ந்து வந்தது. இக் குலத்தவ னொருவனைச் சிலப்பதிகாரம்,

'பாத்தரு நால்வகை மறையோர்
பறையூர்க் கூத்தச் சாக்கையன்'

எனக் குறிக்கின்றது. இவன் ஆடிய கொட்டிச் சேதம் என்னும் ஒரு கூத்தினைச் சேரன் செங்குட்டுவன் கண்டு களித்தனனென்று இக் காவியம் கூறும். திரிபுர தகனத்தில் வென்றிக் களிப்பினுல் சிவன் உமையாளுடன் ஆடிய கூத்து கொட்டிச் சேதம் எனப்படும். முதன் முதலாகச் சாக்கையரைப் பற்றிய குறிப்பு சிலப்பதிகாரத்தில்தான்

காணப்படுகிறது. மேலே குறிப்பிட்ட சாசனத்திற்கு இந்நூல் மிக முற்பட்டதெனக் கொள்ளுதல் இயலாது ; ஒரு நூற்றாண்டு முற்பட்ட தாகலாம்.

கேரள தேசத்துக் கூத்துக்களில் முதன்முதலாகத் தெரிய வருவது இச் சாக்கையரது கூத்தேயாம். சாக்கையரைத் தற்காலத்தில் சாக்கியார் என்பர். இவர்கள் கூத்தினை ஸ்ரீ. வி. நாகமய்யா அவர்கள் நன்றாக விவரித்துள்ளார்கள்.

சாக்கியார் கூத்து

கோவிலினுள்ளே கூத்தம்பலத்தில் ஓர் உயர்ந்த திண்ணையின் நடுவில் மூன்றுகாற் பீடத்தில் சாக்கியார் இடையிலும் காலிலும் சதங்கை கட்டிக் கொண்டு அமர்ந்திருப்பர். அவர் அணிந்துள்ள சரிகைத் தலைப்பாகையும் ஜடையும் வசீகரமாகவே இருக்கும். அவரது வலப் பக்கத்தில் அவரது மனைவி நங்கியார் வெள்ளுடை யுடுத்துத் தலைமுடியை முன் கொண்டையிட்டு அழகாக விளங்குவாள். அவள் சாக்கியார் பாடும்போது கைம்மணி யடிப்பாள். எல்லாரும் சிரித்து மகிழ்ந்து ஆரவாரிக்கும் வேளையிலும் அவள் இதழில் புன்னகை போலும் தவழ்வதில்லை. இருவருக்கும் சற்றுப் பின்னால் ஒரு நம்பியார் முழவு கொட்டுவார். ராமாயணம், பாரதம், பாகவதம், புராணம் இவற்றிலிருந்து ஏதேனும் ஒருபொருள் பற்றிச் சாக்கியார் பிரசங்கிப்பார். இடைவிடாது 3 அல்லது 4 மணி நேரம் ஸமஸ்கிருத சுலோகங்களையும் மலையாள சுலோகங்களையும் எடுத்துக் கூறி வியாக்கியானித்த வண்ணமா யிருப்பர். இடையிடையே வேடிக்கைப் பேச்சுக்களும் நிகழும். இக் கூத்திற்கு வருவோர் நிச்சப்தமாய் முழுக் கவனத்துடன் கேட்டு மகிழ்ந்திருப்பர். சாக்கியார் பேசும்போது யாரும் குறுக்கிட்டுப் பேசுதல் கூடாது.

இது தற்காலத்து வழங்கும் கதா காலக்ஷேபம் போலுள்ளது. இதற்கும் சிலப்பதிகாரம் கூறும் கூத்திற்கும் யாதொரு தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. காலகதியில் இம் மாறுபாடு நேர்ந்திருக்க வேண்டும்.

இச் சாக்கியார் கூத்தேயன்றி வேறு பல கூத்துக்களும் பண்டைக் கேரளத்தில் வழங்கின. இவற்றுள் 'சாஸ்திரக்களி' என்பது ஒன்று. இக் களி ஆயுதப்பயிற்சி முறையைப் பின்பற்றித் தோன்றியிருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். இதில் கலந்து கொள்ளுபவர்கள் பெரும்பாலும் படை வீரர்கள். அந்தணர்களுக்குப் பிராதான்னியம் ஏற்பட்ட பின்பு இக்களி மதம் பற்றியும் சமுதாயம் பற்றியும் சில புதிய அம்சங்களைப் பெற்றுள்ளது. ஈசுவரப் பிரார்த்தனைக்கும் இது பயன்படுவதாயிற்று. புண்ணியச் செயலாகவும் இது கொள்ளப் பட்டது.

சங்கக்களி என்றும் ஒரு களி தோன்றிற்று. இது நம்பூதிரிமார்கள் நாடு வாழிகளோடு பகைத்துக்கொண்ட போது, அந்நாடு வாழிகளைப் பரிகசிப்பதற்கு ஏற்பட்ட தென்பர். மிமாம்சா பண்டிதர்கள் பௌத்தர்களைத் தோல்வியுறச் செய்யக் 'கோஷ யாத்திரை' போவார்களென்றும், அவ்விதம் போகும்போது தோன்றியதே சங்கக்களி என்றும் வேறு சிலர் சொல்லுவார். ஏழாமத்துக் களி என்று ஒரு கூத்தும் இருந்தது. இதனைச் சாஸ்திரக் களியின் ஒரு சுருக்கம் என்று சொல்லலாம். ஆனால், இதில் நகைச் சுவை மிகமிக அதிகரித்திருக்கும்.

மிகப் பிரசித்திபெற்ற கூத்துக்களில் கதைகளியை முற்படக் கூறுதல்வேண்டும். இதனை 16-ம் நூற்றாண்டில் கொட்டாரக்கரை ராஜா தோற்றுவித்தனர் என்பர். கதைகளி என்ற பெயருக்கேற்பக் கதை நாட்டியமும் நாடகமுமாகக் காட்டப்படும். ஆனால், இந் நாடகத்தில் பேச்சு என்பது இல்லை. வெறும் ஊமைக் களிதான் எனினும், பின்னணியாகச் சங்கீதம், பாட்டு முதலியன நிகழும். ராமாயணத்திலிருந்தேனும் மகாபாரதத்திலிருந்தேனும் ஒரு நிகழ்ச்சியை இக் கதைகளில் காட்டுவர். கதை களியைத் தொடங்குவதற்குமுன் அந்தி வேளையில் கேளிக் கொட்டு என்பதைக் கொட்டி ஊராருக்கு அறிவிப்பர். மக்கள் திரண்டு கூடியதும் வந்தன சுலோகமும், தோடையமும் திரைக்குப் பின்னால் நிகழும். பின்னர்

கதைகளி

மத்தளம் முதலியன வாசிக்கும் புறப்பாடு நிகழும். இதில் கதைகளியில் கலந்துகொள்பவர்கள் திரையைவிட்டு வெளிவருவதாக இருக்கும். கதைகளியில் கலந்துகொள்பவர் 12 நாட்டியக்காரர்களும் 4 பாடகர்களும் 4 முழவுக்காரர்களும் ஆவர். பின்னர் மேளப்படை நிகழும். அதில் செண்டை கொட்டுபவனுக்கும் மத்தளம் கொட்டுபவனுக்கும் போட்டி நிகழும். அதுவே 3 மணி நேரம் நடைபெறும். இது முடிந்ததும் நாட்டியக்காரர்கள் தங்கள் நாட்டியத்தை நிகழ்த்துவார்கள். இது 5 மணி நேரம் நடைபெறும். இவர்கள் எல்லோரும் விநோதமான உடை உடுத்தியிருப்பர். இதிலுள்ள சங்கீதம் உயர்ந்த தரத்ததாய் இருக்கும் என்று கூற முடியாது.

திருவாதிரைக்களி

ஆட்டக் கதை கி. பி. 1733-ல் கோட்டயத்துத் தம்பிரான் தொடங்கியது என்பர். இதில் நடிப்பவர்களே சம்பாஷணையின் மூலம் சுவையுண்டாகும்படி செய்வார்கள். பெண்களுக்கென்று தனிப்பட்ட கூத்தும் உண்டு. இதனைத் திருவாதிரைக்களி என்பர். இதில் பெண்கள் நடுவில் தீபத்தை வைத்துச் சுற்றிவந்து ஆடுவர். திருவாதிரைக் களியும் பலவகைப்படும்.

பண்டைக் கேரளத்தில் சங்கீதத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்கு யாதொரு சான்றும் இல்லை. ஆனால் பொதுப்பட நோக்குமிடத்து இக்கலை அக்காலத்தில் ஒரு சிறந்த நிலையில் இருந்ததென்று சொல்வதற்கில்லை.

கலைகளைப் போற்றவேண்டும் என்ற முயற்சி தற்காலத்தில் தோன்றியுளது. இதனால் பண்டைக் கேரளத்திலிருந்த கூத்தும் இசையும் புத்துயிர் பெற்றுத் தழைத்தோங்கி வருகிறது. இவை மேன்மேலும் சிறந்தோங்குக.

17

நாடகக் கலையின் வரலாறு

ஒரு கதையை எடுத்துக்கொண்டு, அதில் வரும் பாத்திரங்களுக்கெல்லாம் நடிகர்களை அமைத்து, உரையாடல்களாலும், செயல்களாலும் அக்கதைப் பொருளைப் பலர் காண அரங்கத்தில் நடித்துக் காட்டுவது நாடகம் என்று இக்காலத்தில் நாம் கூறுகிறோம். முற்காலங்களில் எது நாடகத்தின் இயல்பு என்று கருதப்பட்டது என்பதை ஒரு சிறிது நோக்குவோம்.

முத்தமிழ்

இயல், இசை, நாடகம் என்று தமிழ் மூன்று வகைப் படும் என்பது மரபு.

இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழெனா
வகைப்படச் சாற்றினர் மதியுணர்ந்தோரே

(பிங்கலம் VI அனுபோக.)

என்றனர் பிங்கலர் தமது நிகண்டு நூலில். 12-ம் நூற்றாண்டில் கம்பர் 'முத்தமிழ்த்துறையின் முறை போகிய' என்றார். 10-ம் நூற்றாண்டினரான நம்பியாண்டார் நம்பி

வெண்முத் தவிழ்வயல்சூழ் வீங்குபுனற் காழியே
ஒண்முத் தமிழ் பயந்தான் ஊர்

(ஆளுடை. மும்மணி 23.)

என்று பாடியுள்ளார். 7-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த நாவுக்கரசர்

மூலநோய் தீர்க்கு முதல்வன் கண்டாய்
முத்தமிழும் நான் மறையும் ஆனான் கண்டாய்

என்று அருளிச் செய்தனர். தொகை நூல்களுள் இறுதியில் தொகுக்கப்பட்ட பரிபாடலிலே,

தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம்
[பொருப்பன்
பரிமா நிரையிற் பரந்தன்று வையை

என வருகின்றது. இத்தொகை நூலகத்தே 'நல்லாள் கரை நிற்ப நான் குளித்த பைந்தடத்தில்' என 'நான்' என்னும் சொற் பிரயோகம் வந்துள்ளமையால் இது 6-ம் நூற்றாண்டளவில் தொகுக்கப்பட்டது எனக் கொள்ளுதலே பொருத்தமாம். இப்போதுள்ள தமிழ் நூல்களுள், மும்மைத் தமிழ் பற்றிய இப் பிரயோகமே காலத்தால் முற்பட்டது எனத் தோன்றுகிறது. முந்திய சங்க நூல்களில் முத்தமிழ் என்ற பாகுபாடு அறவே காணப்படவில்லை. தொல்காப்பியத்திலும் இப் பாகுபாடு ஓரிடத்தும் குறிக்கப்படவில்லை என்பது அறியத்தக்கது. இவற்றை யெல்லாம் நோக்குமிடத்து, தமிழ் மூவகைப் பட்டது என்ற கொள்கை கி. பி. 5-ம் நூற்றாண்டளவில் தோன்றி யிருக்கவேண்டும் என்று முடிவு கட்டலாம்.

ஆனால் முத்தமிழ்களுள் ஒன்றான 'நாடகம்' என்பது இந்நூற்றாண்டிற்கு முன்புள்ள நூல்களிலும் காணப்படுகிறது. தொல்காப்பியத்தில்,

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்

(பொருளதி. 53)

என இச் சொல் எடுத்தாளப்படுகிறது. இதற்கு நச்சினார்க்கினியர் 'புனைந்துரைவகை' எனப் பொருள் விரித்தனர். இளம்பூரணரும் இப் பொருளினையே பிறிதொரு வகையால் கூறினர். தற்காலத்துக் கருத்துப்படி அமைந்த நாடக நூல்கள் பெருவரவினவாகி, அவற்றிலுள்ள வழக்கு நன்குணரப்பட்ட பின்னரே இந்தச் சூத்திரம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

'நாடகம்' என்பதன பொருள்

இதன்கண் உள்ள நாடகம் ஆங்கிலத்தில் 'Drama' என்று கூறப்படுவதாகும்.

இப் பொருளின் வேறுபட்ட ஒரு பொருளில் நாடகம் என்ற சொல், பத்துப் பாட்டில் வருகின்றது. பெரும் பாணாற்றுப் படையில்,

> நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த
> விசி வீங்கு இன்னியங் கடுப்ப

பழைய பொருள்

என உருத்திரங் கண்ணனார் பாடுகின்றார். இங்கே நாடகம் என்பது கூத்து; அதாவது ஆங்கிலத்தில் 'Dance' என்று கூறப்படுவதாகும். இக்கூத்தினை நாட்டியம் என நாடகத்தினின்றும் வேறு பிரித்துக் குறியீடு செய்தல் நலம். நாட்டியத்திற்கு மகளிரே உரியராதல் இங்கே கவனிக்கத் தக்கது. இவ் ஆசிரியரோ பட்டினப் பாலையில் 'பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்' என்றனர். இந்த இடத்திலும் 'நாட்டியம்' என்ற பொருளிலேயே வழங்கியிருத்தல் வேண்டும். முத்தமிழ் நூல் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் சிலப்பதிகாரத்தில் மூன்றாம் காதையில் மாதவியின் நாட்டியமே விரித்துரைக்கப் படுதலாலும், அவள் போன்றார் * நாடகக் கணிகையர் எனப் பெயர் பெறுதலாலும், இயல், இசை, நாடகம் என்ற மூவகையில் நாடகம் என்பது நாட்டியமே ஆதல் வேண்டும். இளங்கோ அடிகளும் 'நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து' (III, 158) என்றே உரைத்தனர். தமிழில் நாடகம் என்ற சொல்லிற்கு இதுவே முதல் முதலில் ஏற்பட்ட பொருள் என்பது 8-ம் நூற்றாண்டளவில் தோன்றிய திவாகரத்தாலும் அறியலாகும். இந் நிகண்டிலே,

* வேசியர்களுள் கீதம், வாத்தியம், நிருத்தம் முதலிய 64 கலைகளிலும் வல்லவர்களாய், ரூப குண சீலங்களில் சிறந்தவர்களாயுள்ளவர்கள் அத்தகுதிபற்றிக் 'கணிகை' என்ற பெயர்பெற்று, அவைக்களத்தில் ஆசனத்திற்கு உரியராவர் (வாத்ஸ்யாயனர், காமசூத்திரம் 1, 3, 20).

நடமே நாடகம் கண்ணுள் நட்டம்
படிதம் ஆடல் தாண்டவம் பரதம்
ஆலுதல் தூங்கல் வாணி குரவை
நிலயம் நிருத்தம் கூத்தெனப் படுமே

(IX. 191)

என வருகின்றது. பிங்கலரும் மூவகைத் தமிழையும் முதலிலே கூறி, அவற்றை முறையே விளக்குகின்ற இடத்து நாடகத்தைக் கூத்து, அதாவது, நாட்டியம், எனவே கொண்டு பலவகை நாட்டியங்களையும் உணர்த்தினர். ஆகவே **நாடகத் தமிழ்** என்பது நாட்டியத்திற்குரிய இலக்கண இலக்கியங்களே யாகும்.

இங்ஙனமாயின், தற்காலத்து வழங்கும் நாடகம் (Drama) எப்பொழுது தமிழ் நாட்டு வழக்கிற் புகுந்தது? இதன் வரலாறுதான் யாது?

நாட்டிய வகைகளுள் **விநோதக் கூத்து** என்பது ஒன்று உண்டு. இதனை, 'கொடித்தேர் வேந்தரும், குறுநில மன்னருமாக வுடையோர் பகைவென்றிருந்த இடத்து விநோதங் காணுங் கூத்து' என விளக்கினர் அடியார்க்கு நல்லார். எனவே, சிற்சில விசேஷ காலங்களில் அரசர்களின் முன்பு அவர்களால் ஆதரிக்கப்பட்டு இந் நாட்டியங்கள் நடைபெறுவது வழக்கமாயிருந்தது. மிகவும் பழைய காலத்தில் அரசர்கள் மகளிரது நாட்டியத்தை ஆதரித்து வந்தனர் என்பன முன் காட்டிய பெரும்பாணாற்றுப்படையின் அடிகளால் உணரலாகும். விறலியர் பாணருடன் அரசரது அவைகளுக்குச் சென்று பாடிக் கூத்து நிகழ்த்தி, அரசர்களை மகிழ்வித்து வந்தனர். இது சங்ககால இலக்கியங்களில் பரக்க வழங்கிய செய்தி. அரசர் முன்பிலே மட்டுமின்றி விழா முதலிய காலங்களில் பொதுமக்கள் பலரும் கண்டு மகிழுமாறும் மகளிர் நாட்டியம் ஆடிவந்தனர். இந்நாட்டியம் ஆடுவதற்கு உரிய ஓர் இனத்தார் பண்டைக் காலத்தில் இருந்தனர். இவ்விஷயங்கள்,

நாட்டியம் நிகழ்ந்த இடங்கள்

மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டும் காணேன் மாண்தக் கோனை
யானும் ஓர் ஆடுகள மகளே என்கைக்
கோடீர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலும் ஓர் ஆடுகள மகனே

என்ற குறுந்தொகைச் செய்யுளால் (31) அறியலாம்.

இவ்வகைக் கூத்து, தொடக்கத்தில், மிக்க எளிமையாகவும், சில பல அமிசங்களில் அநாகரிகமாகவும்தான் இருத்தல் கூடும். நாளடைவில் இதுவே படிப்படியாகச் செம்மை அடைந்திருத்தல் வேண்டும். 6-ம் நூற்றாண்டில் நிகழ்ந்த வைதிக சமயக் கிளர்ச்சிதான் இச் சீர் திருத்தத்திற்கு அடிகோலியது. தேவாரம் முதலியனவும், பரிபாடலும் நமக்குத் தெரிவிக்கின்றபடி, இசையானது மிகவும் அபிவிருத்தியுற்றது. காட்சிக்கு இன்பம் தந்த நாட்டியமானது அதனோடு கலந்து வந்த இசைப் பாட்டுக்களால், கேள்விக்கும் இன்பம் தருவதாயிற்று. சாந்திக் கூத்தின் ஒருவகையாகிய அவிநயக் கூத்திற்குக் 'கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய்யும் பலவகைக் கூத்து' என இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. இது தற்காலத்தில் 'அபிநயம்' என்று கூறுவதனை ஒத்தது. இசையும் நாட்டியமும் இதில் ஒருங்கே விளங்குகின்றன.

நாட்டியத்தின் வளர்ச்சி.

வைதிக சமயக் கிளர்ச்சியினால் இசைப்பாட்டுப் பெரிதும் பிரசாரம் எய்தியது எனக் கூறினேன். இசைப் பாட்டினால் நாட்டியம் சிறப்புற்றது என்பது எளிதில் ஊகிக்கத்தகும். சமயக் கிளர்ச்சியினால் நாட்டியம் ஒழுங்காக நடைபெறுவதற்கு இடவசதியும் ஏற்படலாயிற்று. திருக்கோயில் முற்றமே தக்க அரங்காக முடிந்தது. முன்பெல்லாம் அரசரது விருப்பத்தையும் பொது மக்கள் திரளாகக் கூடும் சமயசந்தர்ப்பத்தையும் பொறுத்து நாட்டியம் நடைபெற வேண்டிய

சமயக் கிளர்ச்சியால் கலையின் வளர்ச்சி

தாய் இருந்தது. அரசரது அவைகளில் பொதுமக்கள் சென்று நாட்டியம் கண்டு மகிழ்தல் கூடுவதில்லை. திருக்கோயில்கள் தோன்றிய காலத்தில் விழா முதலியவற்றால் பொதுமக்களின் மனத்தைக் கவரவேண்டியது அவசியமாயிற்று. நாட்டியமும் நாடகமும் இங்ஙனம் கவர்தற்கு உரிய ஏதுவாயின. அரசன் முதலாக ஆண்டி யீறாக இவற்றை அனுபவித்து மகிழ முடிந்தது. கோயிலில் இங்ஙனம் நடந்தது என்பது கல்வெட்டுக்களால் நன்கு புலனாகின்றது. சில நாடகமகளிர் தமது ஏழாவதாண்டு முதல் ஐந்து ஆண்டு நாட்டியத்திற் பயின்று அரசன் முன்பு தமது திறத்தினைக் காட்டி, அவனால் அபிமானிக்கப் பெற்றுத் தலைக்கோல் என்ற பட்டம் பெற்றுத் தம் தொழிலிற் புகுந்தனர். இது மாதவியின் சரித்திரத்தால் நன்கு உணரப்படும். இளங்கோ அடிகள் தாமே இம் மரபைக் கட்டுரைத்துக் கொண்டனர் என்றல் தவறு. அவர் காலத்து வழங்கிய மரபினையே அவர் கூறியவராவர். இம்மரபு கல்வெட்டுக்களாலும் ஆதரிக்கப்படுகிறது. திருவாரூர்க் கோயிலில் ஒரு நாடக மகள் தனது நாட்டிய வித்தையை அரசன் முன்பாக அரங்கேற்றி, '**பூங்கோயில் நாயகத் தலைக்கோலி**' என்ற பட்டம் பெற்றனள் என்று சோழர் காலத்ததாகிய ஒரு கல்வெட்டு (548 of 1904) கூறுகிறது. இங்ஙனமாக, கோயில் விழாக்களில் ஒரு முக்கிய அமிசமாய் நாட்டியம் அமைந்து பொது மக்களை இன்புறுத்திற்று.

நாட்டியத்தால் விளைந்த இவ் இன்பம் சிற்றளவினதே யாகும். பாட்டும், அபிநயமும் நீடித்துச் செல்வன அல்ல. அன்றியும் அதன் நுட்பமான கலை நயங்களை முற்றும் உணர்வதும் கடினமாகும். ஆகவே இதனால்மட்டும் மக்கள் மனம் திருப்தி யடையவில்லை.

நாட்டியத்தின் மேம்பட்டது நாடகம்

நீடித்து நிகழ்வதாய், எளிதில் இன்பம் பயப்பதாய், நாட்டியக்கலையோடு நெருங்கிய தொடர்புள்ளதாய் அமைந்த கலையை மக்கள் அவாவினர். இவ் அவாவின் பயனாய்க் கதை தழுவிவரும் நாட்டியம் ஏற்பட்டது. சாந்திக்கூத்தின் வகையாகிய 'நாடகம்' கதையைத் தழுவி

வரும் கூத்து என்று அடியார்க்கு நல்லார் விளக்கியிருப்பது நாம் இங்கே உணரத்தக்கது. இதனால் நாம் தற்காலத்தில் கொள்ளும் கருத்தின்படி நாடகம் அமைந்துவிட்டது என நினைத்தல் தவறு ஒரு நடிகையே ஒரு கதையைப் பின்பற்றி, அதில் வரும் பல பாத்திரங்களையும் தானே மேற்கொண்டு, பாட்டுக்களாலும் அபிநயங்களாலும் கதையை நிகழ்த்தி, முற்றுவித்தல் கூடும். இதனைத்தான் 'நாடகம்' என முதன் முதலிற் கூறினர் என்று கொள்ள இடமுண்டு. எங்ஙனமாயினும் இது 'நாட்டியம்' என்ற பொருளினின்று கதையை நடித்துக் காட்டும் கூத்து எனப் பொருள் மாறியது. தற்கால நாடகத்திற்குச் செல்லும் வழியில் ஒரு முக்கியமான 'மைல் கல்' என்று இதனைக் கொள்ளலாம்.

இவ்வகை நாடகக் கூத்தினின்றும் எளிதிலே பிறந்ததாகும் தற்கால நாடகம். பல நடிகர்கள் கதா பாத்திரங்களின் வேஷம் பூண்டு கதையை நடிப்பதே நாடகம். நாட்டியத்திற்கு உதவியது போலவே, இம் முற்றிய நாடகத்திற்கும் திருக்கோயில்கள் பெரிதும் உதவின. வைதிக சமயங்கள் நாடகத்திற்கு உரிய கதைப் பொருளைத் தந்தன. இந்த வைதிக சமயங்கள் வடிவெடுத்து வந்தன போன்று விளங்கிய திருக்கோயில்களின் முற்றம், நாடகம் நடிக்கும் அரங்காகப் பயன்பட்டது. இது கற்பிதமன்று; உண்மையே என்பது கல்வெட்டுக்களால் அறியலாகும். முதல் இராஜராஜன் (கி. பி. 985-1017) தனது தலைநகராகிய தஞ்சையில் பிருகதீசுவரர் கோயில் எடுப்பித்தான். இக் கோயிலில் 'இராஜ ராஜேஸ்வர நாடகம்' என்ற ஒரு நாடகம் ஆண்டுதோறும் நடிக்கப் பட்டு வந்தது என்று ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது (S. I. I. II. p. 306; 120 of 1931). இந் நாடகம் பிருகதீசுவரர் கோயில் கட்டிய வரலாற்றையும், அரசனது அருஞ் செயல்கள் சிலவற்றையும் அமைத்திருத்தல் வேண்டும். இது தோன்றிச் சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பின், அதாவது கி. பி. 1119-ல் கமலாலய பட்டர் என்பவர் பூம்புலியூர் நாடகம் என ஒரு நாடகம் இயற்றி அரசனால்

நாடகம் இருந்ததற்குச் சான்றுகள்

இறையிலி நிலம் பெற்றார் எனத் தென்னாற்காட்டுக் கடலூரில் உள்ள கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. இந்நூல் இத் தல மகிமையை நாடக வடிவிற் கூறுவதாக அமைந்திருத்தல் வேண்டும். நாடகங்களுக்கும் வைதிக சமயத்திற்கும், கோயில்களுக்கும் இருந்த தொடர்பு இங்குக் காட்டிய உதாரணங்களால் தெளிவாகும். 10-ம் நூற்றாண்டளவில் தமிழ் நாடகங்கள் இருந்தன என்பது உண்மை. முதல் நாடகம் தோன்றியது பெரும்பாலும் 10-ம் நூற்றாண்டிற்குச் சிறிது முன்பாக இருக்கலாம்.

பழைய நாடக நூல்கள்

மேற்கூறியவாறு சில நாடகங்கள் தோன்றினும், இவ்வகை நூல்கள் தமிழ்நாட்டில் செழித்து வளர்ந்தனவாகத் தெரியவில்லை. நம் தமிழிலுள்ள பிரபந்தங்களின் இயல்புகளை உணர்த்தும் நூல் 'பாட்டியல்' எனப்படும். இந்தப் பாட்டியல்களில் உழத்திப் பாட்டு (பள்ளு), குறத்திப்பாட்டு (குறவஞ்சி) என்ற இரண்டு தவிர வேறு நாடக நூல்கள் காணப்படவில்லை. இவ்விரண்டு நூல்களும் கோயில்களோடு தொடர்புடைமை முக்கூடற் பள்ளு, குருகூர்ப் பள்ளு, குற்றாலக் குறவஞ்சி முதலிய நூல்களால் நன்கு விளங்கும். இவைகள் 17-ம் நூற்றாண்டில் தோன்றின.

கீர்த்தனைகளின் தோற்றம்

இசைப் பாட்டுக்கள் நாளடைவில் வளமுற்றுக் கீர்த்தனங்கள் செழித்துப் பெருகின. குற்றாலக் குறவஞ்சியில் கீர்த்தனைப் பாட்டுக்களைக் காணலாம். இக் கீர்த்தனங்களால் நாடகங்களும் வளமுற்றன. 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீகாழி **அருணசலக் கவிராயர்** என்ற கவிஞர் இராம நாடகக் கீர்த்தனை என்ற நூலை இயற்றினர். இதுமுதல் கீர்த்தனை வடிவில் நூல்கள் இயற்றப் பெறலாயின. கதா காலக்ஷேபத்திற்குச் சில பயன்பட்டன; சில நாடகங்களாக நடிக்கப்பட்டன. பாரதக் கீர்த்தனை, பெரிய புராணக் கீர்த்தனை, நந்தன் சரித்திரக் கீர்த்தனை, திருவிளையாடல் கீர்த்தனை முதலியனவும், சகுந்தலை நாடகம், அரிச்சந்திர நாடகம் என்பனவும் நாடகத்திற்கு உதாரணங்களாம்.

வடமொழி நாடகங்களையும் மேல்நாட்டு நாடகங்களையும் தழுவிய தமிழ் நாடகங்கள்

19-ம் நூற்றாண்டில் மேனாட்டுக் கல்வி நாட்டில் பரவத் தொடங்கிற்று. ஆங்கிலம் கற்றார் பலராயினர். இவர்களுள் ஒருசிலர் வடமொழி நாடக இலக்கணங்களையும் முறைகளையும் பின்பற்றி நாடகங்களை இயற்றினர். வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இவர்களுக்குள்ளே தலைமை வாய்ந்தவர். நாடகம் பற்றி இவர் கொண்ட கொள்கைகளை இவரது நாடக இயலிற் காணலாம். இவர் இயற்றிய நாடகங்கள் உயரிய செந்தமிழ் நடையில் எழுதப்பெற்றன. இடையிடையே கீர்த்தனை வடிவில் பாடல்கள் அமைந்துள்ளன. ஆகவே இவரது நாடகங்களை நடிப்பதற்குச் சங்கீதப் பயிற்சி அற்பமாயிருந்தாலும் போதியதாகும். வேறு சிலர் வடமொழி நாடகங்களைத் தழுவுவதில் விருப்பின்றி, ஷேக்ஸ்பியர், ராஸீன், மோலியர் முதலிய மேனாட்டு நாடக ஆசிரியர்களைப் பின்பற்றி நாடகம் இயற்றலாயினர். ஆசிரியர் சுந்தரம் பிள்ளை இவர்களுள்ளே தலைசிறந்தவர். இவர் இயற்றிய 'மனோன்மணீயம்' நாடகங்களில் தனிச் சிறப்புடையதாக என்றும் விளங்கக்கூடியது.

நடிகராயுள்ள நாடக ஆசிரியர்

தற்காலத்து நாடகங்கள் இல்லாத குறையை நீக்கியவர் திரு. பம்மல் சம்பந்த முதலியார். இவர் தமிழில் இயற்றிய நாடகங்களிற் பெரும்பாலானவை எளிய வசன நடையில் உள்ளன. 'லீலாவதி சுலோசனை', 'மனோகரா' முதலியவற்றால் இவர் திறமை நன்கு விளங்குகின்றது. இவர் நடிகராகவும் இருந்தமையால் நாடக நயங்களைக் கூர்ந்துணரும் திறம் பெரிதும் வாய்ந்தவர்.

வருங்காலத்தில் நாடகக் கலை மிக மேம்பட்டு விளங்கலாம் எனத் தோன்றுகிறது.

18

தமிழில் நாட்டிய நூல்கள்

உத்தேசமாக 1930-முதல் நமது தமிழ்நாட்டில் நாட்டியக் கலையைக் குறித்து ஒரு புதிய ஆவல் தொடங்கியுள்ளது. அதற்கு முன் பல ஆண்டுகளாக இந்தக் கலை புறக்கணிக்கப்பட்டு வந்தது. நாட்டியக் கச்சேரி என்றால் பலரும் அருவருப்புக் காட்டி வந்தனர். ஜமீந்தார் முதலிய பிரபுக்களின் மாளிகைகளில் திருமணம் முதலிய விசேஷ காலங்களில் இக்கலை ஒருவாறு போற்றப்பட்டு வந்தது என்று கூறலாம். இதனைக் கற்பித்துவந்த நடன ஆசிரியர்களும் இதில் பயிற்சி பெற்றுவந்த தாசிகளும் மதிப்பை இழந்து எண்ணிலும் மிகச் சுருங்கிவிட்டனர். இக்கேவல நிலையினின்று தப்பி இக்கலை வெளியேறியது ஓர் அற்புத நிகழ்ச்சியேயாம். இக்கலையின் அருமையையும், காண்போருக்கு மகிழ்ச்சி அளிப்பதில் இணையற்றிருக்கும் தன்மையையும் நம்மவர்கள் ஒருவாறு உணரலாயினர். மேல் நாட்டில் 'டான்ஸ்' (Dance) என்பது ஒரு பெரிய கலையாகப் போற்றப்பட்டு வருவதைத் தெரிந்து அந் நாட்டுக் கலையைக் காட்டிலும் மிகச் சிறந்து விளங்குகிற நமது நடனக் கலையையும் போற்றவேண்டும் என்னும் ஆவல் இயற்கையாய்த் தோன்றக் கூடியதுதானே? தாசி இனத்தவர்களே யன்றிப் பிற பெண்களும் அக் கலையில் ஈடுபட்டுப் பயிற்சிபெறத் துணிந்தனர். இதற்குரிய பயிற்சி அளிக்க, தக்க கலா மந்திரங்களும் அங்கங்கே தோன்றுவன ஆயின. சிறுபெண் குழந்தைகளும் இப்பயிற்சியைப் பெறுவதற்கு வேண்டும் வசதிகள் சாதாரண கலாசாலைகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எங்கும் பெண்களிடையில் நாட்டியக்கலை அபிமானிக்கப்பட்டு வருகிறது.

நமது ஆடவர்களில் பலரும் இக்கலையை மிகவும் ஆதரித்து வருகிறார்கள். நாட்டியக் கச்சேரிக்கு முன்பிருந்த அவமதிப்பு இப்பொழுது முற்றும் நீங்கிவிட்டது. உதயசங்கர்போன்ற ஒருசிலர் நமது நாட்டியக் கலையின் பெருமையை மேல் நாட்டினருக்கும் உணர்த்தி வருகின்றனர்.

நாட்டியக் கச்சேரிக்கு இருந்த அவமதிப்பு நீங்கியது

இந்நிலைமையில் நாட்டியம் பாற்றிய நூல்களைக் குறித்துத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசை இப்பொது கலா ரஸிகர்கள் அனைவருக்கும் உண்டாயிருக்கிறது. வடமொழியிலும் தென்னிந்திய மொழிகளிலும் இக்கலையைக் குறித்துத் தோன்றியுள்ள நூல்கள் மிகப் பலவாம். பல நூல்கள் காலகதியில் அழிந்து போய் விட்டன. இப்போது அகப்படும் நூல்களையேனும் காப்பாற்றி வெளிப்படுத்துதல் நம்மவர்கள் மேற்கொள்ள வேண்டிய பெருங்கடமைகளுள் ஒன்றாகும்.

நமது நாட்டில் கலைகளும் சாஸ்திரங்களும் தெய்வங்களால் முதன்முதல் இயற்றப்பட்டு வெளி வந்தவை என்பது ஒரு பெருங் கொள்கையாகும். இது நமது மூதாதையர்கள் இக்கலை முதலியவற்றை எவ்வாறு போற்றி வந்தார்கள் என்பதைப் புலப்படுத்கிறது. அவற்றை பக்தி-சிரத்தையுடன் கற்கவேண்டும் என்பதையும்அவற்றைப் பிற்கால சந்ததிகள் பெருமையாக மதித்து எப்பொழுதும் பாராட்டிவரும் கடப்பாடுடையவர்கள் என்பதையும், இக்கடப்பாட்டினின்றும் ஒருபொழுதும் தவறலாகாது என்பதையும் இக்கொள்கை வற்புறுத்துகிறது. நாட்டியக் கலை இக் கொள்கைக்கு விலக்கன்று. நாட்டியப் பெருநூல் இயற்றியவர்களின் வரிசையில் அரன், உமையாள், பிரும்மா, விஷ்ணு, விநாயகர், சுப்பிரமணியர், நந்திகேசர், இந்திரன், வியாழன் முதலிய தேவர்களும், அகத்தியர், நாரதர், வசிஷ்டர், தெத்திலர், பரதர் முதலிய முனிவர்களும், அர்ச்சுனன், அனுமான், கோகிழன், வாணாசுரன், இராவணன் முதலியோர்களும் கூறப்பட்டுள்ளார்கள். இவ் விவரங்கள்

ஆதி மூல பாரதம்

சுமார் கி. பி. 17-ம் நூற்றுண்டளவில் தோன்றிய 'ஆதி மூல பரதம்' என்ற ஒரு தமிழ் நூலில் காணப்படுகின்றன. நாட்டிய நூலின் வரலாற்றுக்கு இவை பெரும் பயன் விளைப்பன அல்ல.

சிலப்பதிகாரம்

சிலப்பதிகார காவியத்திலிருந்துதான் தமிழிலுள்ள நாட்டிய நூல்களைக் குறித்துச் சிற்சில விவரங்கள் திட்டமாக நம்பத்தக்கனவாய் நமக்குத் தெரிய வருகின்றன. அக்காவியத்தில், "நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து" (III. 40) என வருகின்றது. இது வடமொழிப் பரத நாட்டிய நூலை யேனும், அதைத் தழுவி இயற்றப்பட்ட தமிழ்ப் பரத நூலையேனும் குறித்ததாகலாம். இக்காவியத்திற்கு உரை இயற்றிய அடியார்க்கு நல்லார் சுமார் கி. பி. 14-ம் நூற்றுண்டின் இறுதியில் வாழ்ந்தவர். இவர் தமது உரையில் பன்னிரண்டு நாட்டிய நூல்களைக் குறித்துள்ளார். அவை வருமாறு :—

1. பரதம்
2. அகத்தியம்
3. முறுவல்
4. சயந்தம்
5. குணநூல்
6. செயிற்றியம்
7. இசை நுணுக்கம்
8. இந்திர காளியம்
9. பஞ்ச மரபு
10. பரத சேனுபதீயம்
11. மதிவாணனுர் நாடகத் தமிழ் நூல்
12. கூத்த நூல்

மற்றும் நூல்கள்

இவற்றுள் முதலிரண்டு நூல்களும் இறந்தன என்று குறிக்கப்பட்டுள்ளன (உரைப்பாயிரம் பக். 9). அகத்தியம், செயிற்றியம் என்ற இரண்டிலிருந்தும் சில சூத்திரங்களை இளம்பூரணர் தமது மெய்ப்பாட்டியலுரையில் எடுத்தாண்டுள்ளார். இவ்வுரையாசிரியர் காலத்தில் அகத்தியத்திலிருந்து சில சூத்திரங்கள் கிடைத்தனபோலும். 'முறுவல்' முதலாகவுள்ள நான்கு நூல்களிலிருந்து சில சூத்திரங்கள் தான் கிடைக்கின்றன என எழுதினர். சயந்தம், செயிற்றியம் என்பன யாப்பருங்கலவிருத்தி எழுதிய குணசாகர

முனிவராலும், செயிற்றியனர் வழிநூல் பேராசிரியரா லும் (பொருள், மெய், உரை) மேற்கோளாகத் தரப்பட் டுள்ளன. 'இசை நுணுக்கம்' முதலிய ஐந்து நூல்களும் தாம் உரை எழுதுவதற்கு உதவிய நூல்கள் எனத் தெரி விக்கின்றனர். இறுதியிலுள்ள கூத்தநூல் இவரால் இரண்டு இடங்களில் (பக். 29, 155) காட்டப்பட்டுள் ளது. இந்நூல் இறையனர் களவியல் உரையிலும் (சூ. 40. மேற்கோள்) வருகின்றது. அடியார்க்கு நல்லார் காலத்தில் இந்நூல் முழுதும் அகப்பட்டதா என்பது அறி யக்கூடவில்லை. இவர் காலத்தில் உளவாயிருந்த பத்து நாட்டிய நூல்களுள் ஒன்றேனும் தற்காலத்திலுள்ள தாகப் புலப்படவில்லை.

பரதத்தைக் குறித்து ஒரு சில விவரங்கள் தெரிய வருகின்றன. 'ப' பாவத்தையும், 'ர' ராகத்தையும், 'த' தாளத்தையும் உணர்த்தும். இதனல் நாட்டிய நூலுக் குப் பரதம் என்ற பெயர் வழங்குவதாயிற்றென்பர்.

'பாவமொ டகாரந் தாளமிம் மூன்றும்
பகர்வதால் பரதமென் றுரைப்பர்'

என்றனர் அரபத்த நாவலர். இந்நாட்டிய நூலைச் செய்த வர் இக்காரணத்தாலேயே பரத முனிவர் எனப்பட்டார் என்றும் கொள்வர். இவ்வாருயின் பரத முனிவருக்கு உரிய பெயர் யாது? கலாக்ஷேத்திரத்தினின்றும் வெளி யிடப் பெற்ற பரதசேனபதீயத்தில்,

வீர வல்லபன் விவித நாட்டியத்தையும்
அவற்றின தடைவும் வாத்திய அளவும்
கண்டு அரன் பரத முனிப்பெயர் கருணையில்
கொண்டு அங்கு உமைக்கு உபதேசித்தனன்

என வருகின்றது. இதன் உரையில், 'வீரவல்லபாச்சாரி யன்......சிவபெருமானல் பரதமுனிவன் என்னும் சிறப்புத் திருநாமம் பெற்று உஷாதேவிக்கு உபதேசித்தான்' எனப் பொருள் தரப்படுகின்றது. ஆகவே, பரத முனிவரின்

பெயர் வீர வல்லபாச்சாரியர் என்பது புலனாகின்றது. இது பரத சாஸ்திரம் வல்லவர்களால் ஆராய்தற்குரியது.

இப் பரதமுனிவர் இயற்றிய நாட்டிய நூலைப் பின் பற்றிப் பல நூல்கள் வடமொழியில் தோன்றியுள்ளன. நந்தி பரதம், சங்கீத ரத்னாகரம், சங்கீத சுதாநிதி என்ற மூன்று வடமொழி நூல்களையும் இங்கே குறிப்பிடலாம். இவற்றுள் நந்தி பரதம் கிரந்த லிபியில் அச்சிடப் பெற்றுத் தென்னாட்டில் வழங்குகிறது. சங்கீத ரத்னாகரம் சாரங்க தேவரால் கி. பி. 13-ம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றதாகும். சங்கீத சுதாநிதி கி. பி. 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோவிந்த தீக்ஷிதர் இயற்றிய சங்கீத சுதா என்னும் நூலாகவே இருத்தல் கூடும்.

இனித் தற்காலத்தில் அகப்படக் கூடிய சில தமிழ்ப் பரத நூல்களை நோக்குவோம்:

தற்காலத்தில் அகப்படக்கூடிய பரத நூல்கள்

1. **மகா பரத சூடாமணி:** இதனைச் சாரங்க தேவர் இயற்றியதாகக் கலாக்ஷேத்திரத்துப் பரத சேனாபதீயம் கூறுகிறது. இது சாரங்க தேவரது சங்கீத ரத்னாகரத்தின் மொழி பெயர்ப்பாகவே இருத்தல் கூடும். இவ் ஆசிரியர் இயற்றியதாக '**மகாபரதம்**' என்ற நூலொன்றும் உளதாகத் தெரிகிறது.

2. **அபிநய தர்ப்பணம்**
3. **அபிநய தர்ப்பண விலாஸம்**
4. **இசைமரபு**
5. **பாவராக தாளம்**

இந் நான்கனுள் முதலிரண்டு நூல்களிலிருந்து சில பகுதிகள் பரதசேனாபதீயப் பதிப்பாசிரியரால் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. இவற்றைக் குறித்து, "இந் நூலின் குறிப்புரை என்ற தலைப்பின் கீழே புதியவனவாகச் சில செய்திகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றை எழுதுவதற்குத் துணையாக இருந்த நூல்கள் அபிநயதர்ப்பணம், அபிநய தர்ப்பண விலாஸம், இசைமரபு, கச்சபுட வெண்பா, சுத்தானந்தப் பிரகாசம், தாள சமுத்திரம்,

பாவராக தாளம், மகாபரத சூடாமணி என்பனவாகும்." என்று இவர் எழுதுகின்றார். இதனால் இந்நூல்கள் அனைத்தும் இவர்களிடம் உள்ளன என்று கருதலாம்.

6. சுத்தானந்தப் பிரகாசம் : இந்நூலை டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தங்கள் சிலப்பதிகாரப் பதிப்பில் பல இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார்கள். இதன் பிரதி அவர்களிடம் உண்டென்பது தெளிவு. என்னிடமும் ஒரு பிரதி இருக்கின்றது. இந்நூலை இயற்றியவர், பெயர் முதலியன அறியக்கூடவில்லை. சில பகுதிகள் கிரந்தத்திலும் சில பகுதிகள் தமிழிலுமாக இந்நூல் அமைந்திருக்கிறது.

7. ஆதிமூல பரதம்: இதற்கு இரண்டு பிரதிகள் என்னிடம் உள்ளன. இதன் பெயர் ஆதிமூல பரதாகம சித்தாந்தம் என்றும் கூறப்படுகிறது. இதில் சங்கீத ரத்னாகரத்தை ஆசிரியர் குறிப்பிடுகிறார். எனவே இந்நூல் கி.பி. 13-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டுத் தோன்றியதென்பது உறுதி. பெரும்பாலும் கி. பி. 16 அல்லது 17-ம் நூற்றாண்டில் தோன்றியதாகலாம்.

இனி, அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்ட சில நாட்டிய நூல்களும் உள்ளன. இவற்றுள் இப்போது தெரிந்தன:—

1. பரத சாஸ்திரம்
2. பரத சேனாபதீயம்
3. சபா ரஞ்சித சிந்தாமணி

அச்சிடப்பட்ட நாட்டிய நூல்கள்

1. பரத சாஸ்திரம் : பரத சாஸ்திரம் திருப்பெருந்துறையைச் சார்ந்த அரபத்த நாவலரால் இயற்றப்பெற்றது. இதற்குத் தில்லையம்பூர் சந்திரசேகர கவிராஜ பண்டிதர் ஓர் உரை செய்திருக்கின்றனர். நூலும் உரையும் கி. பி. 1876-ல் சென்னைத் தண்டையார்பேட்டை லக்ஷ்மி விலாஸ அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன. இதன் ஆசிரியர் அரபத்த நாவலரை 'கங்கைகுல திலகன்' என்றும், 'புலவர் சிரோமணி' என்றும் முகவுரை தெரிவிக்கின்றது. இந்நூலுள் 298 செய்யுட்கள் உள்ளன.

2. பரத சேனுபதீயம்: இது அடியார்க்கு நல்லார் காட்டும் பரத சேனுபதீய நூலன்று. முற்பட்ட பரத சேனுபதீயம் ஆதிவாயிலார் இயற்றியது; வெண்பாவில் அமைந்தது. பிற்பட்ட பரத சேனுபதீயம் சென்னை அடையாறு கலா க்ஷேத்திரத்தின் வாயிலாக ஸ்ரீ எஸ். கலியாண சுந்தரையரால் வெளியிடப்பட்டது. இந்நூல் முழுவதும் அகப்படவில்லை. பாயிரத்தில் ஒரு பாகமே இப்போது அச்சில் வெளிவந்துள்ளது. இதனை இயற்றியவர் 'பரத சாஸ்திரம்' என்ற ஒரு நூலைத் தாம் இயற்றியதாகக் கூறுகின்றனர் (பக். 19). இப் பரத சாஸ்திரம் அரபத்த நாவலர் இயற்றிய நூலாக இருத்தல் கூடும். இது உண்மையாயின் பரத சேனுபதீயத்தை இயற்றியவரும் இவரேயாவர். திருவிளையாடல் புராணத்தில் வரும் ராஜசேகர பாண்டியனை (பக். 40) இவர் குறித்தலால் அப்புராண காலமாகிய கி. பி. 18-ம் நூற்றாண்டின் முற்பகுதிக்குப் பிற்பட்டவர் ஆவர்.

3. சபா ரஞ்சித சிந்தாமணி: இதனை இயற்றியவர் திருநெல்வேலியிலிருந்த பரத வித்வான் கங்கைமுத்துப் பிள்ளை. இது 1910-ம் வருஷம் ஜனவரி மாதம் திருநெல்வேலி நூருல் இஸ்லாம் அச்சுயந்திரசாலையில் பதிப்பிக்கப் பெற்றது. இதனைச் 'சங்கீத பரதநாட்டிய சார சங்கிரகம்' என்றும் ஆசிரியர் வழங்குகின்றார். இதில் சில பரத சாகித்தியங்களும் ஸ்வரப்படுத்தித் தரப்பட்டுள்ளன.

அச்சில் வெளி வாராதனவற்றுள் 'ஆதிமூல பரதம்' மிக விரிந்த நூலாக உள்ளது. நாட்டியக் கலையில் பயிற்சி பெற விரும்புவோர்க்கு இந்நூல் பெரிதும் பயன்படுவதாகலாம்.

19

மதனநூல் வரலாறு

பசியும் காமமும் உயிரினங்களுக்கு இயற்கையிலேயே அமைந்தவை. ஆதலால், நமது புராதன அறிஞர்கள் உறுதிப் பொருளாவன தர்மார்த்தகாமம் என்று மூன்ருகக்கொண்டு, இவற்றைத் திரிவர்க்கம் என்று கூறினர். பின்னர், மோட்சத்தையும் இவற்ருேடு சேர்த்துப் புருஷார்த்தம் நான்கு என்று அறுதியிட்டனர். தமிழில் இந்நான்கையும் அறம், பொருள், இன்பம், வீடு என்று கூறுவார்கள்.

திரிவர்க்கம்

இந்நான்கினையும் பற்றி நமது மூதாதையர்கள் நன்கு ஆராய்ந்து வந்திருக்கிருர்கள். மோட்சத்தைப் பற்றியுள்ள விசாரமும் நமது தேசத்தில்தான் பூரணத்வம் பெற்றது. 'மேலை நாட்டுத் தத்துவ சாஸ்திரம் முடிகின்ற இடத்திலே இந்திய தத்துவ சாஸ்திரம் தொடங்குகிறது' என்று ஓர் அறிஞர் கூறியுள்ளார். இது மிகவும் உண்மை. தர்ம சூத்திரங்களும் மனு முதலியோர்கள் இயற்றிய தர்மசாஸ்திரங்களும் பல்வேறு வகைப்பட்ட பொருள்களையும் பற்றி மிக விரிவாகக் கூறுவனவாய் உள்ளன. இவை ஒப்புயர்வு அற்றன. பிருஹஸ்பதி, கௌடில்யர் முதலியோர்கள் அர்த்த சாஸ்திரத்தைப் பற்றி மிகுதியும் ஆராய்ந்து மிகச் சிறந்த நூல்களை இயற்றியிருக்கிருர்கள். இவை அவர்கள் அரசியலில் நிபுணர்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. கடைசியாக, இன்பத்தைப் பற்றிக் கூறும் காமசாஸ்திரங்கள் மேலை நாட்டில் நாகரிகக் கதிர் நுழைந்து பிரகாசிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே இயற்றப் பெற்

புருஷார்த்தமும் நமது தேசமும

றுள்ளன. இவை மிக நுட்பமான விஷயங்களையும் தெரிவிக்கின்றன. ஆனால், நமது இந்திய நாகரிகம் தற்காலத்தவர்களுடைய பார்வையிலிருந்து மறைந்து விட்டது. அதிலுள்ள மிக விரிந்த இலக்கியங்களிற் பல இப்போது இறந்துபட்டன. அவற்றைக் குறித்து நமக்கு ஒன்றும் தெரியமாட்டாது. அவைகளெல்லாம் மறைந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாய்விட்டன. இப்பொழுது சில சில சிதலங்களே சான்றுகளாகக் கிடைக்கின்றன. இச்சான்றுகளைக் கொண்டு தொடர்ச்சியாக இலக்கிய வரலாறு எழுதுதல் இயலாது. என்றாலும், காம நூல்கள் சம்பந்தப்பட்ட அளவில் ஒருவாறாகச் சுருங்கிய வரலாறு மட்டும் எழுத இங்கே முற்பட்டுள்ளேன்.

காம சூத்திரத்தில் வரும் முன்னூல்கள்

இப்போது கிடைப்பனவற்றுள் மிகமிக முற்பட்ட காமநூல் வாத்ஸ்யாயனர் இயற்றிய காம சூத்திரமே யாகும். இந்நூலிலிருந்து நந்திகேசுவரர் ஓராயிரம் அதிகாரங்களில் மிக விரிந்த காமநூல் இயற்றினார் என்று தெரியவருகிறது. இவ்விரிந்த நூலுக்கு உத்தாலக வமிசத்தில் பிறந்த சுவேத கேது 500 அதிகாரங்களில் சங்கிரகம் ஒன்று அமைத்தார். இச்சங்கிரகத்தைப் பாஞ்சால தேசத்து வாசியான பப்ரவ்வியர் நூற்றைம்பது அதிகாரங்களில் ஒரு சுருக்கம் செய்தனர். இவ் அதிகாரங்கள் ஏழு அதிகரணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை சாதாரணம், ஸாம்ப்ர யோகிகம், கன்யா ஸம்ப்ர யுக்தகம், பார்யா அதிகாரிகம், பாரதாரிகம், வைஸிகம், ஔபநிஷதிகம் என்பன. இவை முறையே பொது விஷயங்கள், கலவி, கன்னியை விழைதல், மனைவியொடு வாழ்க்கை, பிறனில் விழைதல், வேசியர் இயல்பு, மருந்தீடு என்பவற்றை உணர்த்துவன.

இவற்றுள், வேசியர் இயல்பைக் குறித்து மகத ராஜ்யத்தின் தலைநகராக இருந்த பாடலிபுரத்திலுள்ள வேசியர்களின் வேண்டுகோளின்படி தத்தகாச்சார்யர் என்பவர் ஒருதனி நூல் எழுதினர். பின்னர், பொது விஷயங்களைக் குறித்துச் சாராயனர் தனிப்பட ஒரு நூல் இயற்றினர். பின்னர், சுவர்ண நாபர் கலவியைக் குறித்து ஒரு

தனி நூல் இயற்றினர். கன்னியரை மணத்தல் குறித்து கோடகமுகர் என்பவரும், மனைவியொடு வாழ்தலைக் குறித்துக் கோநர்த்தரும், பிறனில் விழைதலைக் குறித்து கோணிகாபுத்ரரும், மருந்துகளைக் குறித்துக் குசுமாரரும் தனித்தனி நூல்கள் இயற்றினர்.

வாத்ஸ்யாயனர் காலத்திலேயே பப்ரவ்வியருடைய நூல் கிடைப்பது அருமையாய்ப் போய்விட்டது. சுவேத கேதுவும் நந்தியும் எழுதிய நூல்கள் தனித்தனி விஷயங் களைப் பற்றியன. ஆதலினாலே, அவர்கள் கூறியன எல்லாவற்றையும் சுருக்கி, காம சூத்திரம் என்று சொல்லு கிற சிறு நூலிலே அமைத்தனர். இந்நூலில் ஏழு அதி கரணங்களும் 36 அதிகாரங்களும், 64 பொருள்களும் அடங்கியுள்ளன.

நந்தியைக் குறித்து நமக்கு யாதும் தெரியமாட்டாது. அவரைச் சிவபெருமானது கணமுதல்வர் என்று கூறுவர்.

நந்தி

சிவபெருமான் பார்வதியோடுகூடி சிருஷ்டி முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் காம சாஸ்திரத்தைச் சொல்லி னராம். இப்புராணக் கதையை விடுத்து, நந்தி காம சாஸ்திரத்தைப் பற்றி எழுதிய ஒரு மனிதன் என்று கொள்ளுதலே நேரிது. ஆனால், இப்புராணக் கதையினால் மிகமிகப் பழங்காலத்திலேயே காம நூல்பற்றிய பொருள் களை நம் மூதாதையர்கள் அறிந்திருந்தார்கள் என்பது விளங்கும். மத்திய வேத காலத்திலேயே முறைப்பட அமைந்த காமநூல் ஒன்று இருந்திருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.

அருணன் என்பவரது பௌத்திரரும் உத்தாலகரது புத்திரருமாகிய சுவேதகேது உண்மையாகவே வாழ்ந்த

சுவேதகேது

ஒரு சரித்திர புருஷர் என்று கொள்ள லாம். சாந்தோக்ய உபநிஷத்தில் (V. 2) கேகயர்கள் அரசனான அசுவபதிக்கு உத் தாலகர் உபதேசித்த வரலாறு ஒன்று காணப்படுகிறது. இந்த உபநிஷத்திலேயே உத்தாலகரது புத்திரரான சுவேதகேதுவின் பெயரும் காணப்படுகிறது. பாஞ்சால

தேசத்தில் நிகழ்ந்த ஒரு கூட்டத்திற்குச் சென்று, பஞ்சாக்னி வித்தையைப் பற்றி (VI. 1) வாதம் புரிந்ததாகத் தெரியவருகிறது. பிருஹதாரண்ய உபநிஷத்திலும் (VI. 2) சுவேதகேதுவின் பெயர் கேட்கப்படுகிறது. மகாபாரதத்திலும் (ஆதி. 122, 9-21) ஒரு வரலாறு காணப்படுகிறது; உத்தாலகர் என்ற பெயருள்ள ஒரு பெரிய ஞானி இருந்தாராம். அவருடைய புத்திரரான சுவேதகேது தம் பெற்றோர்களுடன் உட்கார்ந்துகொண்டிருந்தார். அப்பொழுது ஒரு பிராமணன் அவருடைய மாதாவின் அருகில் வந்து, அவளது கையைப் பற்றிக் கொண்டு போய் விட்டான். தந்தை இது வழக்கந்தான் என்றும் ஒரே ஜாதியைச் சேர்ந்த பல புருஷர்களோடு ஒருத்தி புணர்வது தர்மத்துக்கு விரோதம் இல்லை என்றும் சொன்ன பொழுது சுவேதகேதுவுக்குப் பெருங்கோபம் உண்டாய் விட்டது. பிற்பாடு, அவர் அன்னியரோடு கலவி செய்பவர்கள் பாவச் சேற்றில் அழுந்துவார்கள் என்றும், சமுதாயத்திற்கே தீங்கு இழைப்பவர்கள் என்றும், தனது கணவன் தன்னை விரும்பிய காலத்தில் அவனுக்கு இணங்காத ஸ்திரீயும் அவ்வாறே ஒரு பாவச் செயல் புரிந்தவளாவள் என்றும் வற்புறுத்தி விதி செய்தாராம். இதனால், விவாகம் பற்றிச் சில நியதிகளைச் சுவேதகேது ஏற்படுத்தினார் என்பது விளங்கும். இவர் காமநூல் ஒன்று பெரும்பாலும் இயற்றி யிருக்கலாம் என்று நாம் ஊகிக்கக்கூடும்.

பப்ரவ்வியர்

பப்ரவ்வியருடைய நூல் வாத்ஸ்யாயனருடைய காலத்தில் இருந்தது. அந்நூலை நோக்கி வாத்ஸ்யாயனர் தம் நூலை எழுதினார் என்பதும் காம சூத்திரத்தால் விளங்குகிறது. ஆனால், பப்ரவ்வியரைக் குறித்து நமக்கு யாதொன்றும் தெரியமாட்டாது.

தத்தகாச்சார்யர்

காம சூத்திரத்தினின்றும், அதன் உரையாகிய ஜயமங்களத்தினின்றும், மதுரையிலிருந்து, மகத ராஜ்யத்தின் தலைநகராகிய பாடலி புத்திரத்தில் வந்து குடியேறிய ஒரு பிராமணனது புத்திரர் தத்தகர் என்பது விளங்குகிறது. இவர் பிறந்தவுடன் தாய் மரித்துவிட்டாள். எனவே, இவ

ருடைய தந்தை இவரை ஒரு பிராமணப் பெண்ணுக்குத் தத்தமாகக் கொடுத்துவிட்டார். இக்காரணத்தால் இவருக்குத் தத்தகர் என்று அவள் பெயரிட அப்பெயராலே இவர் உலகினர்க்குத் தெரிய வந்தனர். இவர் கற்க வேண்டியவை பலவும் கற்ருர். உலக நிலைகளையும் கற்க வேண்டும் என்று விரும்பினுர். இவற்றைக் கற்பதற்கு வாழ்க்கைத் துறைகள் பலவற்றிலுமுள்ளவர்கள் வந்து கூடுகின்ற வேசியர் இல்லங்களுக்குச் சென்ருல் எளிதில் முடியும் என்று கருதினர். ஆகவே அவ்வேசியர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று உலக நிலைகள் பலவற்றையும் அறிந்து வேசியர்களது தந்திரங்களையும் வீரசேனை முதலிய பல பெண்களிடமிருந்து தெரிந்து கொண்டார். தத்தகரைக் குறித்து வேருெரு கதையும் வழங்குகிறது. இதை நம்புவதற்கு இல்லை. இவரது நூலும் இப்போது மறைந்து விட்டது. சிற்சில சூத்திரங்கள் மட்டும் வீரேசுவர தத்தர் எழுதிய தூர்த்த விட ஸம்வாதம் என்ற பாணத்திலும், அவரது புத்திரர் ஈசுவரதத்தர் இயற்றிய பத-ததித்கா என்ற பாணத்திலும் காணப்படுகின்றன. சூத்திரகர் இயற்றிய பத்மப்ராப்ருத: என்ற பாணத்தில் 'தத்தக சூத்திரம் ஓம் என்று தொடங்குகிறது' என இகழ்ச்சியாய்க் குறிக்கப்படுகிறது. கி. பி. 380-ல் கங்க வமிசத்து அரசனுன இரண்டாவது மாதவ வர்மன் தத்தக சூத்திரத்திற்கு ஒரு வியாக்கியானம் எழுதினுன். இந்த வியாக்கியானத்தின் ஒரு பகுதி கிடைத்துள்ளது. அதில் இரண்டே பதங்கள் அல்லது அதிகாரங்கள் உள்ளன. இப்பதங்கள் ரக்த-விரக்த வேசியர்களைக் குறித்தும் சயனுேபசாரத்தைக் குறித்தும் கூறுகின்றன. சில அறிஞர்கள் இது வியாக்கியானம் அல்ல என்றும் தத்தக சூத்திரத்திற்கு ஒரு சங்கிரகம் என்றும் கருதுகிருர்கள்.

காம நூலின் பொருள் பற்றி தனித்தனி நூல் இயற்றியவர்கள் சிலர் உண்டென்று முன்னுர்க் குறித்தோம். அவர்கள் சாராயனர், சுவர்ணநாபர், கோடகமுகர், கோநர்த்தர், கோணிகாபுத்திரர் என்பவர்கள். இவர்களைக்குறித்து நாம் யாதும் அறியோம். இவர்கள் இயற்றிய நூல்களிற்

ஏனையோர்

சில கி. பி. 12-ம் நூற்றூண்டுவரையில் கிடைப்பனவாயிருந்தன என்று ஊகிக்கக்கூடும். குசுமாரர் மருந்துகளைப் பற்றி எழுதிய நூலைப் பின்பற்றி எழுந்த வழி நூலின் ஒரு பகுதி இப்போது அச்சில் உள்ளது. குசுமாரரை முனிவர் என்றும், அவரது நூலை உபநிஷதம் என்றும் கூறுதலால், அவர் பெரும்புகழ் வாய்ந்தவராயிருத்தல் வேண்டும். இப்போது கிடைக்கின்ற பகுதி தானும் சுலோகத்தில் எழுதப்பட்டுள்ளது. கி. பி. 10-ம் நூற்றூண்டிற்கு முற்பட்டது.

வாத்ஸ்யாயனர்

வாத்ஸ்யாயனரது காம சூத்திரம்தான் இப்போது முற்றும் கிடைக்கும் காம நூல்களுள் காலத்தால் முற்பட்டது. வாத்ஸ்யாயனரது காலத்தைக் குறித்துப் பலவேறு அபிப்பிராயங்கள் உள்ளன. அது பற்றிப் பலரும் விவாதம் செய்திருக்கின்றூர்கள்.

வாத்ஸ்யாயனர் காலம்

மஹேச்வர சந்திரபால் வெளியிட்ட கல்கத்தாப் பதிப்பில், நூலின் ஆரம்பத்தில் சில சுலோகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை வியாக்கியனம் இயற்றியவரே எழுதியன என்று கூறுகிறூர். இந்த சுலோகங்களில், 'த்வி—வேதாக்ஷி' என்பது காமசூத்திரம் இயற்றிய காலமாக ஒரு சுலோகம் உணர்த்துகிறது என்பர். இந்தத் தொடர் கலியுகம் 2424 என்று பொருள்படும் எனப் பதிப்பாசிரியர் கூறுகிறூர். இக்காலம் கி. மு. 677 ஆகும். ஆனுல், இந்த சுலோகங்கள் வேறு எந்த ஏட்டுப் பிரதியிலும் காணப்படவில்லை. வியாக்கியானம் இயற்றியவர் கி. பி. 13-ம் நூற்றூண்டில் இருந்தவர்; விஷயங்களை கவனமாய் ஆராய்ந்து எழுதும் இயல்புள்ளவர்; இவர் தமக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட எழுதப்பட்டது எனத் திட்டமாய் ஒரு காலத்தைக் குறிப்பாரோ என்பது பெரிதும் ஐயப்பாட்டிற்கு இடமாயுள்ளது. இக்காலம் பற்றிய கொள்கைக்கு மாருக திரு. K. G. சங்கர அய்யர் வேறொரு காலத்தைக் குறித்துள்ளார். இவர் கருத்தின்படி காமசூத்திரம் கி. பி. 350-ல் எழுதப்பட்டிருக்க வேண்டும். வடமொழி இலக்கிய சரிதம் எழுதிய கிருஷ்ணமாச்சாரி

யார் கி. மு. 4 அல்லது 3 ம் நூற்றூண்டில் வாத்ஸ்யாயனர் வாழ்ந்தவராகக் கருதுகின்றனர். இவர் காம சூத்திரத்தில் குந்தள சாதகர்ணி குறிக்கப் பட்டுள்ளமையையே காரண மாகத் தருகின்றனர். மத்ஸ்யபுராணமும் கலியுகராஜ விருத்தாந்தமும் இக்குந்தள சாதகர்ணி ஆந்திர வமிசத்துப் பதின்மூன்ருவது அரசன் என்று குறிக்கின்றன. ஆசிரியர் H. C. சக்லதார் இவ்விஷயங்களை விரிவாகவே ஆராய்ந்து கி. பி. 3-ம் நூற்றூண்டின் இடைப்பகுதியில் இருந்தவர் எனத் துணிகின்ருர். ப்ரொபஸர் ஜால்லி, கௌடில்யர் கி. பி. 3-ம் நூற்றூண்டினர் என்றும் வாத்ஸ்யாயனர் 4-ம் நூற்றூண்டினர் என்றும் அறுதியிடுகின்ருர்.

காளிதாஸரும் சுபந்துவும் வாத்ஸ்யாயனரது பெயரைக் குறிப்பதோடு அவர் நூலிலிருந்து மேற்கோள்களும் கொடுத்துள்ளார்கள். வாத்ஸ்யாயனரைப் பூர்வ காலத்திலிருந்த ஒரு முனிவர் எனக் காளிதாஸர் குறிப்பிடுகிருர். ஆதலால், காளிதாஸர் காலத்திற்கு ஒரு நூற்றூண்டேனும் முன்பாக வாத்ஸ்யாயனர் வாழ்ந்தவராக வேண்டும் என்று ஆசிரியர் சக்லதார் தம் கொள்கைக்குக் காரணம் காட்டுகின்ருர். காளிதாஸரது காலம் பலவாருக விவாதிக்கப்பட்டு வந்த போதிலும், பெரும்பாலும் அவரைக் கி. பி. 4 அல்லது 5-ம் நூற்றூண்டினராகக் கொள்ளுகின்றனர்.

காமசூத்திர வியாக்கியானங்கள்

காமசூத்திரத்திற்கு க்ஷேமேந்திரர் வாத்ஸ்யாயன சூத்திரஸாரம் என்று ஒரு சங்கிரகநூல் இயற்றியுள்ளார். இதைத்தவிர ஐந்து வியாக்கியானங்களும் உள்ளன. 1. ஜயமங்களம்: இதனை இயற்றியவர் யசோதரர் அல்லது சங்கராரியர். 2. கந்தர்ப்ப சூடாமணி: இதனை இயற்றியவர் வீரபத்திரதேவர். 3. பாஸ்கர நரஸிம்ஹன் இயற்றிய ஒரு வியாக்கியானம். 4. மல்லதேவன் இயற்றிய ஒரு வியாக்கியானம். 5. ஆசிரியர் பெயர் அறியப்படாத ஒரு வியாக்கியானம்.

இவற்றுள் ஜயமங்களம்தான் மிக விரிவாகவும் திருப்திகரமாகவும் உள்ளது. இதைச் சங்கராரியர் அல்லது சங்கராச்சாரியர் இயற்றினர் எனப் பலரும் கூறு

வர். ஏனென்றால், கௌடில்யரது அர்த்த சாஸ்திரத்திற்கும், காமந்தகரது நீதி சாஸ்திரத்திற்கும், பட்டி காவியத்திற்கும், ஈசுவர சாங்கிய சப்தசதி முதலானவற்றிற்கும் ஜயமங்களம் என்ற பெயரோடு வியாக்கியானங்கள் இயற்றியவர் சங்கராரியர். ஆதலின் யசோதரர் பிரதி செய்தவர் என்றே கருதப்படுகிறார். ஒரு சிலர் சங்கராரியரை ஸ்ரீ சங்கராச்சாரியார் என்றும் கருதுகின்றார்கள். ஆனால் இது உண்மையாக இருக்க முடியாது. இந்த வியாக்கியானம் கோக்கோகர் இயற்றிய ரதிரகஸ்யத்தின் காலமாகிய 12-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டதன்று.

பகேல அரச வமிசத்தில் ராமச்சந்திர தேவரின் புத்திரரான வீரபத்திர தேவர் என்னும் அரசர் சுலோக முறையில் 'கந்தர்ப்ப சூடாமணி' என்று பெயரிட்டு காம சூத்திரத்திற்கு ஒரு வியாக்கியானம் எழுதியுள்ளார். இவ் வியாக்கியானத்தின் காலத்தை சம்வத் 1633 என்று அவரே குறிப்பிட்டுள்ளார். ஆகவே, 1577-ல் இந்த வியாக்கியானம் எழுதப்பட்டது. காசியில் வாழ்ந்தவரும் சர்வேஸ்வர சாஸ்திரியின் சிஷ்யரும் ஆகிய பாஸ்கர நரஸிங்க சாஸ்திரி ராஜா ப்ரஜலால் என்பவரது ஆதரவிலே கி. பி. 1788-ல் சூத்திர விருத்தி என்ற பெயரோடு ஒரு வியாக்கியானம் எழுதியுள்ளார்.

மல்ல தேவரது வியாக்கியானத்தின் காலத்தைக் குறித்து நமக்கு யாதும் தெரியமாட்டாது. க்ஷேமேந்திரரது வாத்ஸ்யாயன சூத்திர ஸாரத்தினின்றும் அவரது ஔசித்திய விசார சர்ச்சையிலும் ஜயோதிரீஸ்வரரது நூலிலும் மேற்கோளாக காட்டப்பட்ட போதிலும் அவ் வியாக்கியானம் இப்பொழுது அகப்படவில்லை.

தாமோதர குப்தரது குட்டனீ மதம்

காலமுறைப்படி காமசூத்திரத்திற்கு அடுத்ததாகச் சொல்லக்கூடியது தாமோதர குப்தர் இயற்றிய குட்டனீ மதமாகும். இவர் காஷ்மீர தேசத்து கார்க்கோடக வமிசத்தவரான ஜயாபீடதேவர் என்னும் அரசருடைய (கி. பி. 779-813) பிரதம மந்திரியா யிருந்தார். இதற்கு சம்பளீமதம் என்று வேறொரு

பெயரும் உண்டு. இது 1600-சுலோகங்களால் கதை வடிவில் அமைந்த நூலாகும். நல்ல வடமொழி நடையில் எழுதப்பட்டுள்ளது. மனவுறுதி அற்ற இளைஞர்களை வசீகரித்து நாசப்படுத்துவதற்கு தாசியர்கள் கையாளும் கலைகளையும், தந்திரங்களையும், வஞ்சனைகளையும் நன்ருக உணர்த்துகின்றது. காமசூத்திரத்தின் ஆருவது அதிகரணத்திலுள்ள விஷயங்களே இதில் கூறப்படுவன. தாமோதர குப்தர் இயற்றின என்று சில ஆசிரியர்களால் காட்டப்படும் சுலோகங்கள் குட்டனீ மதத்தில் காணப்பெருமையால் அவர் வேறு சில நூல்களையும் இயற்றியிருத்தல் கூடும் என்று ஊகிக்கலாம்.

இந் நூலுக்கு அடுத்தபடியாக நாம் கூறவேண்டியது நாகரஸர்வஸ்வம் என்பதாகும். இதனை இயற்றியவர் பத்மஸ்ரீ அல்லது பத்மஸ்ரீஜ்ஞாந என்ற பௌத்த ஸந்நியாசி. இவர் குட்டனீ மதத்தைக் குறிப்பிடுகின்ருர். கி. பி. 1351ல் இயற்றப்பட்ட சாரங்கதர பத்ததி இவர் நூலை மேற்கோளாக எடுத்துக் காட்டுகின்றது. ஆதலால் நாகரஸர்வஸ்வம் 10 அல்லது 11-ம் நூற்ருண்டில் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

பத்மஸ்ரீ

வாத்ஸ்யாயன சூத்திரஸாரம் என்ற வியாக்கியானத்தை இயற்றிய க்ஷேமேந்திரர் சமய மாத்ருகை என்ற மதன நூலையும் இயற்றியிருக்கிருர். இவர் 11-ம் நூற்ருண்டில் வாழ்ந்தவர். இவர் காஷ்மீரத்தில் 1029 முதல் 1064வரை அரசு புரிந்து வந்த அனந்தன் என்பவரது அரசவையைச் சிறப்பித்து விளங்கியவர். அபிநவ குப்தரிடம் கல்வி பயின்றவர். இவரை வியாஸ தேவர் என்றும் அழைப்பர். இவரது தந்தை பிரகாசேந்திரர் அந்தணர்களைப் பெரிதும் ஆதரித்து வந்தனர். க்ஷேமேந்திரர் முதலாவது சைவராக இருந்து, பிற்பாடு சோமாச்சாரியர் என்பவரது பிரேரணையினுல் வைஷ்ணவராக மாறிவிட்டனர். இவர் இயற்றிய நூல்களுள் இப்பொழுது தெரிந்தவை முப்பத்திரண்டு. சமய மாத்திருகை என்பதன் பொருள் வேசியின் நித்திய

க்ஷேமேந்திரர்

பூஜா நூல் என்பதாகும். இதுவும் குட்டனீ மதத்தைப் போல கதைவடிவில் அமைந்த நூலே.

இதன் ஆசிரியரை அடுத்து வந்தவர் கோக்கோகர். இவர் பரிபத்ரர் என்பவரது வழியில் தோன்றியவர். இவரது தந்தையின் பெயர் கத்திய வித்தியாதரர் அல்லது வைத்திய வித்தியாதரர். இவருடைய பாட்டனுர் பெயர் தேஜோகர். இவர் இயற்றிய நூல் ரதிரகஸ்யம் என்ற பிரசித்திபெற்ற நூல். இதுதான் அநங்க ரங்கத்திற்கு முதல் நூலாக அமைந்தது. ஜயமங்களம் என்ற காம சூத்திர வியாக்கியானத்தில் (II, I, 20) ரதிரகஸ்யத்திலிருந்து ஒரு சுலோகம் (III. 8) கொடுக்கப்பட்டுள்ளது. ஆதலால் ரதிரகஸ்யம் ஜயமங்களத்திற்கு முற்பட்டதாகும். பத்ர வாகுவின் கல்ப சூத்திரத்திற்கு ஜிநப்பிரவாஸூரி எழுதிய வியாக்கியானத்தில் ஜயமங்களம் மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளது. ஜிநப்பிரவாஸூரியின் காலம் கி. பி. 1307. பத்மஸ்ரீக்கு கோக்கோகர் பிந்தியவர் என்பதற்கு சான்று இல்லாமல் போனுலும், ஆராய்ச்சியாளர்கள் இவரைப் பிற்பட்டவர் என்று கொண்டுள்ளார்கள். எங்ஙனமாயினும், கோக்கோகர் 12-ம் நூற்றுண்டிற்குப் பிற்பட்டவர் அல்லர் என்பது தேற்றம். இவரது ரதிரகஸ்யத்திற்கு நான்கு வியாக்கியானங்கள் உள்ளன. அவற்றை இயற்றியவர்கள் காஞ்சிநாதர், அவஞ்ச ராமச்சந்திரர், கவிப்பிரபு, ஹரிஹரர் என்பவர்கள். ஹரிஹரர் இயற்றிய வியாக்கியானத்திற்கு, சிருங்கார ரஸபந்தப் பிரதீபிகை என்று பெயர்.

கோக்கோகர்

விஜய நகரத்து அரசனுன இம்முடி ப்ரௌட தேவ ராயர் (கி. பி. 1422—40) என்பவர் ரதிரத்னப் பிரதீபிகை என்ற ஒரு நூலே இயற்றியுள்ளார். அதில் சில பகுதிகளே K. ரங்கசாமி அய்யங்கார் என்பவர் ஆங்கில மொழிபெயர்ப்போடு மைசூரிலிருந்து வெளியிட்டுள்ளார். இப்போது கிடைக்கும் பகுதிகள் சம்போகம் முடிய உள்ளன. பிற்பட்ட பார்யாதி காரிகா, பரதாரிகம், வைஷ்கம் முதலியன கிடைக்கவில்லே. இந்நூலேப்

இம்முடி ப்ரௌட தேவராயர்

பதிப்பித்தவர் இது ஸம்பூர்ணமாகக் கிடைத்துள்ளது என்று கருதியது பிழையாகும். ப்ரௌடதேவர் ரதிரகஸ்யத்தைப் பின்பற்றி யிருக்கிறார். இந்நூலுக்கு ஒரு வியாக்கியானம் என்றுகூட இதனைக் கொள்ளலாம்.

பின்பு வந்த ஆசிரியர்கள்

கவிசேகர ஜ்யோதிரீசுரர் ஐந்து அதிகாரங்களில் ஒரு நூலை இயற்றி அதற்குப் பஞ்சசாயகம் என்று பெயரிட்டார். இவரது காலம் தெரியவில்லை. ஆனால், க்ஷேமேந்திரரைத் தமக்கு முற்பட்ட ஆசிரியர்களுள் ஒருவராகக் குறிப்பிடுகின்றார். வியாஸ ஜனார்த்தனர் என்பவர் காமப்பிரபாவம் என்ற ஒரு நூலை இயற்றியுள்ளார். கர்ணன் என்னும் அரசனுடைய புத்திரனான அநூப சிங்கன் என்பவனது ஆதரவில் இந்நூலை இயற்றினார். இது அநங்கரங்கத்தின் ஒரு சாயைபோல அமைந்துள்ளது. மதன—ஆகமத்தைக் குறித்து வேறு சில நூல்களும் தோன்றியுள்ளன. அவற்றுள் கி. பி. 1457-ல் அனந்தன் என்பவர் இயற்றிய காம சமூகத்தையும், கத்ரருத்ரர் என்பவர் இயற்றிய ஸ்மார தீபிகையையும், ஜயதேவர் இயற்றிய ரதிமஞ்சரியையும், ஹரிஹரர் இயற்றிய ரதி ரகஸ்யத்தையும் இங்கே கூறலாம்.

அநங்கரங்கம்—காலமும் ஆசிரியரும்

ஆமத்கான் லோடியினுடைய புதல்வனான லாட்கான் என்ற அரசனது பிரீதியின் பொருட்டு கல்யாணமல்லர் அநங்க ரங்கத்தை இயற்றினார். இவர் கலிங்க தேசத்து அந்தணர். ஒரிஸாவில் அரசாண்ட லாடதேவர் என்ற புனைபெயருள்ள அநங்க பீமதேவரது அவைக் குழாத்தைச் சேர்ந்தவர். கல்யாணமல்லர் குறிப்பிடும் லாட்கான் இன்னாரென்று நிச்சயிக்க முடியவில்லை. ஆனால் 'வகீ-அட்இ-முஷ்டகி' என்ற ஒரு சரித்திர நூலிலிருந்து லாட்கானின் தந்தையாகிய ஆமத்கான் லோடி, ஜமால்கான் லோடி என்பவனது புத்திரன் என்றும், ஜான்பூரை ஆளும்படி ஆமத்கான் நியமிக்கப் பட்டவன் என்றும், ஜமால்கான் சுல்தான் சிக்கந்தர் (கி.பி. 1488—1517) காலத்தவன் என்றும் தெரிய வருகின்றன. எனவே, இங்கே குறித்த லாட்கான் 16-ம் நூற்

ருண்டின் ஆரம்பத்தில் இருந்தவன் என்று கொள்ளலாம். அநங்கரங்கத்தை மொழிபெயர்ப்புடன் பிரசுரித்த ஸர் ரிச்சர்டு பர்ட்டன் லாட்காஃனப் பற்றிக் கூறியிருப்பன சில ஒத்துக்கொள்ளத் தக்கவை என்று தோன்றவில்லை.

அநங்க ரங்கத்தின் பிரசாரம்

முஸ்லிம் அரசனது ஆதரவில் அநங்கரங்கம் இயற்றப் பட்டதனுல் அது மிகவும் பிரசாரம் எய்தியது. பாரசீக மொழியிலும் அரபி மொழியிலும் துருக்கி மொழியிலும் அது மொழிபெயர்க் கப்பட் டிருக்கிறது. முஸ்லிம்கள் மொழி யில் லிஸ்ஸத்-அல்-நிஸா (மகளிர் இன் பம்) என்று வழங்கப்படுகிறது. உருது மொழிபெயர்ப்பும் ஒன்று உண்டு. இவற்றிலிருந்து வங்காளி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு ஸம்போக ரத்நாகரம் என்ற பெயரால் வெளிவந்துள்ளது. இதனைக் கல்கத்தாவிலிருந்து மதன் மோகன் டே என்பவர் **1851**-ல் பதிப்பித்தனர். இம்மொழி பெயர்ப்புக்களில் எல்லாம் இந்நூல் கோக்கோகர் அல்லது கோக பண்டிதர் இயற்றிய தாகக் கூறப்படுகிறது. விநோதமான ஒரு கதையும் எழு தப்பட்டுள்ளது: காமத்தீயினுல் வருந்திக் கொண்டிருந்த பெண் ஒருத்தி தனது கட்டுக் கடங்காத காம உணர்ச்சி யைத் தணிப்பதற்கு ஒருவரையும் காண முடியாதவளாய் இருந்தாள். அவள் தான் உடுத்திருந்த புடவைகளையெல் லாம் தூர எறிந்துவிட்டுத் தன்னை திருப்தி பண்ணக் கூடிய ஒருவன் அகப்படும் வரையில் நிர்வாணமாகவே உலகம் முழுவதும் சுற்றுவது என்று சபதம் செய்து கொண்டாள். இந்த நிலையில் கோக பண்டிதர் சேவித்து வந்த அரசனது கொலுமண்டபத்தை அடைந்தாள். அங் குள்ளவர்கள் பலரும் வெட்கம் இல்லையா என்று அவளைக் கேட்க அவள் அந்தக் கொலு அறையில் ஒருவன்கூட மனிதன் இல்லையே என்று கூறினளாம். அரசனும் அவன் குழுவினரும் பெரிதும் வெட்கம் அடைந்தார்கள். ஆனல், கோக பண்டிதர் கைகூப்பி இவ் அரக்கியை நான் வசப்படுத்துவேன்; அதற்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டார். பின்னர், அவர் அவளை வீட்டிற்கு அழைத்துச் சென்று, அவளோடு

சம்போகம் செய்து கலவிப் போரில் அவள் இழைத்துக் கதறும்படி செய்தனர். பின்னர், இப்பண்டிதர் அவளு டைய புயங்களிலும் கால்களிலும் தங்க ஆணிகளை ஏற்றி அரசன் முன்னிலையில் கொண்டு வந்தனர். அங்கே அவள் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு இனிமேல் எப்பொழு தும் புடவை உடுத்திக்கொண் டிருப்பதாக வாக்குறுதி செய்தாள். இவ் வெற்றி எவ்வாறு கிடைத்தது என்று அரசன் கோக பண்டிதரை வினவ, அவர் கலவியின் நுட்பமான செயல்களை யெல்லாம் எடுத்துக்கூறித் தனது கதையை முடித்தனர்.

19-ம் நூற்றுண்டில் அநங்கரங்கத்தின் கைப் பிரதிகள் இந்தியாவிலும் சீனதேசத்திலும் ஜப்பான் தேசத்திலும் பரவின. ஆங்கிலத்தில் 1855-ல் காம சாஸ் திரம் என்ற பெயரால் அது மொழிபெயர்க்கப் பட்டுள் ளது. ஆங்கிலப் பதிப்பிலிருந்து இஸிடோர் லிஸோ என் பவரால் அடுத்த ஆண்டில் பிரஞ்சில் மொழிபெயர்க்கப் பட்டது. ஆங்கிலப் பிரதிகள் அனைத்தும் செலவான பிற்பாடு காஸ்மாப்பாலி (Cosmopoli) என்ற நகரத்தி லுள்ள பிரசுரகர்த்தர் ஒருவர் புதுக்கியும் திருத்தியும் ஒரு பதிப்பு வெளியிட்டனர். பிற்பாடு பாரிஸ் நகரத்தி லுள்ள சார்லஸ் காரின்டன் (Charles Carington) என் பவர் காஸ்மாப்பாலிப் பதிப்பைப் போன்று ஒரு பதிப்பு வெளியிட்டனர். பின்னர், பலரும் பதிப்பிடத் தொடங் கினுர்கள். ஜர்மன் மொழியில் வான் ரிச்சர்டு ஸ்மித் (Von Richard Schmidt) என்ற பெருங் கல்வியாளர் ஒரு மொழிபெயர்ப்பு இயற்றினர்.

அநங்கரங்கமும் ரதிரகஸ்யமும்

அநங்கரங்கம் என்பது காமதேவன் நடனசாலை என்று பொருள்படும். அநங்கன் என்றுல் சரீரமில்லா தவன் என்று பொருளாகும். காமன் சிவ பெருமானுல் எரிக்கப்பட்ட சரித்திரம் மிகவும் பிரசித்தமானதே. இந்நூல் கோக்கோகர் இயற்றிய ரதிரகஸ்யத்தைப் பின்பற்றுகிறது. ஆனுல் அவரது முறையைப் பின்பற்ற வில்லை. ரதிரகஸ்யத்தில் பதினைந்து அதிகாரங்கள் உள் ளன; அநங்கரங்கத்தில் பத்து அதிகாரங்களே உள்ளன.

பாரதாரிகம் என்ற பகுதி மிக மிகச் சுருக்கி இந்நூலில் உணர்த்தப்படுகிறது. மருந்துகளைப்பற்றியும் வேசியர்கள் முறையைப்பற்றியும் கூறும் அதிகாரங்கள் இவ்விரண்டிலும் அறவே நீக்கப்பட்டுள்ளன.

இவ்விரண்டு நூல்களுள் அநங்கரங்கம் மிக எளிய நடையில் இயன்றது. இதனால்தான் இந்நூல் பல இடங்களிலும் பரவுவதாயிற்று. இரண்டையும் ஊன்றிக் கற்போர்க்குச் சிலபல வேறுபாடுகள் வெளியாகும். கொக்கோகத்தின் கருத்துக்கள் சிலவற்றை அநங்கரங்கம் தவருக உணர்ந்து கொண்டது என்று நினைக்க இடமுண்டு. பஞ்ச சாயகமும் இவ்வாறே தவருக உணர்தலால் இது அநங்கரங்கத்திற்குப் பிற்பட்டுத் தோன்றிய நூலாகும் என்று தோன்றுகிறது. காமப் பிரபோதம் என்பது அநங்கரங்கத்தின் ஒரு சாயையே என்பது முன்னுலேயே கூறியுள்ளோம்.

தமிழ்க் கொக்கோகம்

கோக்கோகர் இயற்றிய ரதிரகஸ்யம் தமிழில் கொக்கோகம் என வழங்குகிறது. தமிழ்மொழி பெயர்ப்புச் செய்தவர் பதினாரும் நூற்ருண்டினரான வரதுங்கராம பாண்டியர், இதனை

நலங்கூர் மகளிர் இளமைஎனும்
நளிர்வா ரிதியிற் கொக்கோகன்
வலங்கூர் மதன கலையென்னும்
மலைமந் தரத்தை நடுநிறுவி
இலங்கக் கடையப் பேரின்பம்
என்னும் அமிர்தம் பிறந்ததனைத்
துலங்கும் இளைஞர் எனும்தேவர்
துய்த்துக் காமப் பசிதணிப்பார்.

விதிமுன் னுளோர் வடமொழியால்
விரித்தும் வகுத்தும் முறைமுறையே
துதிகொண் டிடச்சொல் காமநூ
லதனைத் தொகுத்தான் கொக்கோகன்

புதிய அமிர்தம் என அதனைத்
தமிழாற் புகன்றான் புகழ்வழுதி
மதிவெண் குடையோன் வரதுங்க
ராம னென்னும் மன்னவனே.

என்று வரும் செய்யுட்களால் அறியலாம். இந்நூலுக்கு வீரநாதன் என்பவர் இயற்றிய செம்மையான பழைய உரை ஒன்று உண்டு.

கொக்கோக நூலை முதன் முதலில் அச்சிட்டு வெளிப்படுத்தியவர் கொற்றமங்கலம் இராமசாமிப் பிள்ளை.

தமிழ்க் கொக்கோக வெளியீடுகள்

இவர் 1838-ல் ஒரு பதிப்பும் 1839-ல் ஒரு பதிப்பும் வெளியிட்டனர். பல வருஷங்களுக்குப்பின்னர், சௌமிய வருஷம் புரட்டாசி மாதம் மதன நூல் என்ற ஒரு நூலும் சேர்ந்து ஒரு பதிப்பு வெளிவந்தது. பிற்பாடு பலரும் பல பிழைகளுடன் அச்சிட்டனர். இராமசாமிப் பிள்ளை அவர் தாமே எழுதிய ஒரு உரையுடன் பதிப்பித்திருக்கின்றனர். வீரநாதன் உரை இது வரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. அறிஞர்களுக்கு மாத்திரம் பயன்படக் கூடிய பதிப்பு ஒன்று வெளி வருதல் அவசியமாகும்.*

*இவ்வரலாறு த்ரிதிபிநாத ரேய் Tridibnath Ray, M. A., B. L., என்பவர் 1944-ல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்ட அநங்கரங்கத்தின் முன்னுரையைத் தழுவி எழுதப்பட்டது.

20

இலக்கியத்தில் மொழி வழக்கு

தற்காலத்தில் இலக்கியங்கள் பெருகி வருகின்றன. கலாசாலைக் கல்வி நாளுக்கு நாள் அபிவிருத்தி யடைந்து வருகிறது. ஆண்பாலரும், பெண்பாலரும் கல்விகற்று வருகிறார்கள். ஆங்கிலக் கல்வியினால், மேலைநாட்டு நாகரிகமும், அங்கு வழங்கும் இலக்கியங்களும், அங்கு நிலவி வரும் நூதனக் கருத்துக்களும் நமது வாழ்க்கையையும், கல்வி முறையையும் நெறிப்படுத்தி வருகின்றன. நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் நமது இதயத்தில் பெரிதும் இடம் பெற்று விட்டன. ரவீந்திரநாத தாகூர், சுப்பிரமணிய பாரதி முதலிய பெருங் கவிஞர்கள் தோன்றி இலக்கியத்தில் புது நெறிகளை வகுத்து நூதனக் கருத்துக்கள் வெள்ளமிட்டோடச் செய்துள்ளனர். நமது வீடுகளில் நூல்கள் வாசித்துப் பொழுதுபோக்கும் மக்களும்—முக்கியமாகப் பெண்பாலரும்—அதிகரித்து விட்டனர். இவர்கள் பசியைக்கூடப் பொருட்படுத்துவதில்லை. ருசிகரமான சம்பவங்கள் நிறைந்த இலக்கியங்களை வாசிப்பதில் அத்தனை ஈடுபடுகின்றனர். இச் சூழ்நிலையில் இலக்கியம் செழித்து வளர்வது வியப்பாகுமா?

நூல்களை வாசிப்போரின் எண்ணிக்கை அதிகரித்தல்

இங்ஙனம் தோன்றும் இலக்கியங்கள் பலதரத்தின. செய்யுட்கள் முதலாகச் சிறு கதைகள் ஈருக, பத்திரிகைகளிலும் தனி நூல் வடிவிலும் வெளிவருவன அனைத்தும் இலக்கிய வகையைச் சார்ந்தனவே. இவற்றை எழுதி வருபவர்களும் பலதரத்தினரா யுள்ளார்கள். தமிழ் மொழியையும் முற்காலத் தமிழ் இலக்கியங்களையும் கற்

றுப் புதிய இலக்கியங்களை இயற்றுபவர்கள் மிகச்சிலரே. தற்காலத்துள்ள சிற்றிலக்கியங்களை வாசித்துவிட்டு, அவற்றால் தூண்டப் பெற்றுப் புதிய இலக்கியங்களை இயற்றுபவர்களே பெரும்பாலோர். இப்பெரும்பாலோருள் ஒருசிலர் எழுதியவை சிறந்த இலக்கியங்களாகவும் அமைந்துள்ளன.

புதிய இலக்கியங்களில் சொல்லாட்சியும், நடையும் நமது கவனத்திற்குப் பெரிதும் உரியவாயின. இவை எவ்வாறிருத்தல் வேண்டுமென்பது பற்றிச் சில ஆண்டுகட்கு முன் விவாதம் நிகழ்ந்தது. இவ் விவாதத்தில் வசன இலக்கியமே பெரும்பாலும் கருதப்பட்டது. ஒரு சாரார் பேச்சு வழக்கோடு ஒட்டியே இலக்கிய வழக்கு அமைதல் வேண்டுமென வற்புறுத்தினர். மற்றொரு சாரார் 'இதனை இத்தனை எளிதில் முடிவு கட்ட இயலாது, விஷயம், நோக்கம், வாசகர்களது தகுதி முதலிய பலகாரணங்களால் இலக்கிய வழக்கு வேறுபடும்' என்று கூறினர்.

புதிய இலக்கியங்களில் சொல்லாட்சி

இக்கேள்வியை முடிவுகட்டுதற்கு முன்பு, இலக்கியம், தினசரிப் பேச்சு, விஞ்ஞான நூல்கள் இம் மூன்றிலும் மொழி வழக்கு எவ்வாறு அமைந்துள்ளதென்பதை நோக்குதல் அவசியம். இவற்றில் காணும் வழக்கு வேறுபாடுகளை நுட்பமாய் உணர்ந்தால், பற்பல ஐயுறவுகளும் நீங்கும்; நாம் மேற்கொள்ளுங் கக்ஷியின் உண்மை நிலையும் தெளிவுபடும்; பொருளற்ற வீண் விவாதங்களும் ஒழியும்.

இலக்கியத்திலும், தினசரிப் பேச்சிலும் உள்ள மொழிவழக்கின் வேறுபாடு எளிதிற்புலப்படுதல் அருமை. அதனைப் பிற்பாடு கவனிப்போம். முற்பட இலக்கியத்திலும், விஞ்ஞானத்திலும் உள்ள வழக்கு வேறுபாடுகளை நோக்குவோம். இலக்கியத்தில் உணர்ச்சியும் (**emotion, feeling**), விஞ்ஞானத்தில் கருத்தும் (**thought**) சிறப்பியல்களாமெனப் பொதுப்பட கூறுவர். ஆனால் இலக்கியத்திலும்

இலக்கியம், விஞ்ஞானத்தில் வேறுபாடு

கருத்து உளதென்பதை நாம் மறுக்க முடியாது. இங்ஙனமே உணர்ச்சியும் இலக்கியத்திற்கு மாத்திரம் உரியதன்று. காதலர் இருவர் பேசிக்கொள்ளும் அன்புப் பேச்சில் எவ்வளவோ உணர்ச்சி வெளிப்படுகிறது; விவாதஞ் செய்யும் பொழுதும் எத்தனையோ வகை உணர்ச்சிகள் வெளியாகின்றன! இவைகளெல்லாம் இலக்கியங்கள் ஆகிவிடுமா? எனவே இவ்வேறுபாடு போதியதன்று. எனினும், விஞ்ஞானத்தில் சொல்லாட்சி குறியீடு மாத்திரமாகவே உள்ளது. எதனைக் குறிக்க அது வழங்கப்படுகிறதோ, அதனையே அது குறித்தல் வேண்டும்; பிறிதொன்றினையும் அது குறித்தல் கூடாது. இக்குறியீடு சமிக்ஞை மாத்திரமா யிருத்தலினால் இதற்குச் சமமான குறியீடுகளையும் இப்பொருளுக்கு வழங்கலாம். அன்றியும் குறியீட்டின்மேல், கற்பவர் நோக்கினை ஈர்த்துக்கொள்வதில்லை; உணர்த்தும் பொருள் மீது அந்நோக்கினை எளிதிற் புகவிடும் கருவியாகவே இது அமைகின்றது. இதனோடு கண்ணாடியை ஒப்பிடலாம். கண்ணாடியை விட்டுப் பொருளைக் காண்போம்; கண்ணாடியைக் காண்பதில்லை.

'எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோல்' என்று வள்ளுவர் உவமானம் இங்கே கருதுதற்குரியது.

விஞ்ஞான வழக்கு

இவ்வாறாக, விஞ்ஞான வழக்கில், நியமந் தவறாது ஒழுங்கு நெறியிற்பட்ட குறியூடுகளின் தொகுதியை அமைத்தலே உத்தம இயல்பாக உள்ளது. கணிதம் முதலியவற்றில் இவ்வகைக் குறியீட்டுத் தொகுதியைக் காணலாம். விஞ்ஞான வழக்கோடு ஒப்பிட்டால், இலக்கிய வழக்குச் சில குறைபாடு உடையதாகத் தோன்றும். இருபொருள்படும் பதங்கள் இதில் மிகவா யிருக்கும்

> பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
> பொருளல்ல தில்லை பொருள்.

என்பதில் 'பொருள்' பல பொருள் கொண்ட ஒரு சொல். அறிவு நெறியிற் படாத வழக்குகள் இதில் காணப்படும்.

ஒழுங்கு முறையிற் படாத சொல்வழக்குகளையும் இதில் காணலாம். 'அவன்' என்பதன் பெண்பால் 'அவள்'; இதன்படி 'ஒருவன்' என்பதற்கு 'ஒருவள்' என்பது பொருத்தமாகும்; ஆனால் 'ஒருத்தி' என்பதுதான் வழக்கு. சரித்திர நிகழ்ச்சிகள், சரித்திர ஞாபகச் சின்னங்கள், சரித்திர சூழ்நிலைகள் முதலியவை இலக்கியத்தில் நிரம்பக் காணலாகும். ஒத்துழையாமை, மறியல், சாத்வீக எதிர்ப்பு முதலிய தற்கால வழக்குகளையும், மெய்க்கீர்த்தி, ஜயஸ் தம்பம், வீராபிஷேகம், உந்திபறத்தல் முதலிய இடைக் கால வழக்குகளையும், நடுகல், வடக்கிருத்தல், கொண்டு தலைக் கழிதல் முதலிய பண்டைக்கால வழக்குகளையும் இங்கே உதகரிக்கலாம். இவை குறியீடு மாத்திரமன்று; பலவகை சூழ்நிலைப் பொருள்களும் கொண்டன. அன்றியும் இலக்கிய வழக்கிற் சொற்கள் சுட்டுவது பொருளை மாத்திரமன்று; தாமே பல தொனிப் பொருள்களையும் உணர்த்துகின்றன; இவை பேசுபவன் அல்லது எழுதுபவனது மனநிலையைப் புலப்படுத்துகின்றன. கேட்பவனை வசீகரித்து அவனது மனநிலையை மாற்ற முயல்கிறது. கடைசியாக, ஒலியை யுணர்த்தும் இச்சொற்கள் பலவாறாக அழுத்திக்கூற இடந் தந்து மக்களது கவனத்தை ஒருமுகப் படுத்துகின்றன. யாப்பு, எதுகை, மோனை, செய்யுள் வாய்பாடு முதலியன அனைத்தும் இங்ஙனம் அழுத்தி அழகு பெறக் கூறும் முறைகளேயன்றி வேறல்ல.

தினசரிப் பேச்சு வழக்கு

இனி, தினசரிப் பேச்சு வழக்கை நோக்குவோம். இதனை 'உலக வழக்கு' என்று இலக்கண—ஆசிரியர்கள் கூறும் சங்கேதத் தொடரோடு மயங்கி யுணர்தல் கூடாது. இதிலே சம்பாஷணை முதலிய சமூக வாழ்வும், பேச்சுக்களும், வியாபார முதலிய பல்வேறு வழங்கும் பேச்சுக்கள் இவை யெல்லாம் அடங்கும்.

தினசரிப் பேச்சில் ஒவ்வொரு சொல்லும் உணர்த்தும் பொருள் நமது மனத்தில் எளிதில் பதிவதில்லை. உண்மையில் அப்பொருள் தனிப்படத் தோன்றுவதே இல்லை. ஆனால் ஏகதேசமாகப் பெயர்களும், வினைகளும், மனத்தில் அழுந்திவிடுகின்றன. உதாரணமாக, 'இராமன் வரும்

பொழுது புஸ்தகத்தைக் கொண்டுவருவான்' என்ற வாக்கியத்தில் 'இராமன்' 'புஸ்தகம்' 'கொண்டுவருவான்' என்பவையன்றி மற்றச் சொற்கள் ஆழ்ந்து பதிவதில்லை. மேலும் தினசரிப் பேச்சில் கேட்பவர்களின் நோக்கத்தை நமக்கு இணங்கச் செய்வதும் அவர்களை ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யும்படியாய்த் தூண்டுவதும் முக்கிய விளைவாகும். ஆகவே ஒருவனது கருத்தைப் பிறனொருவனுக்கு தெரிவிப்பதுதான் பேச்சு அல்லது மொழி என்று கூறுதல் அத்தனை பொருத்தமல்ல. விசேஷப் பொருள் யாதும் இல்லாதபடி சாதாரணமாக சமுதாயத்தில் வழங்கும் பேச்சுக்களை உதாரணமாகக் கூறலாம். ஆங்கில மக்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும்பொழுது '**How do you do?**' என்கிறார்கள். இதற்குப் பொருள் யாதொன்றுமில்லை: நமக்குள் சிலர் ஏதேனும் ஒன்றைச்சொல்லத் தொடங்கும் போதும் பேச்சினிடையிலும் 'வந்து, வந்து, வந்து' 'பார்த்தீர்களா' முதலிய சொற்களைக் கூறுகிறார்கள். இவற்றிற்குப் பொருளே இல்லை. இவைபோன்றவைகள் எல்லாம் தினசரிப் பேச்சுத்தானே. பிறருக்குக் கருத்தை உணர்த்துவதுதான் மொழி என்று கொள்வதில் மொழியின் பூர்வ சரித்திரம் அறவே மறைந்து விட்டது. உண்மை நோக்குமிடத்து அதனை ஒருவகை ஆத்ம விகாசம் (**Self-expression**)என்றுதான் சொல்ல வேண்டும்.

மேற்குறித்தவை போலன்றி, இலக்கிய வழக்கில் சில சிறப்பியல்கள் காணப்படுகின்றன. இந்த இயல்புகள் பேச்சு வழக்கில் பெரும்பாலும் இல்லை எனக் கூறலாம். இவற்றை முறையே காண்போம்.

இலக்கிய வழக்கு சிறப்பியல்கள்

இலக்கிய வழக்கில், பலவகையான செய்யுட்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றில் கவிஞன் தனது பாவனையினாலும் பிறநெறிகளாலும் மனத்தில் தோன்றுவனவற்றைச் செய்யுளாக அமைத்து விடுவான். இதில் அவனுடைய உள்ளப்பாங்கு அனைத்தும் நன்றாகப் புலப்படும். இவ்வாறு புலப்படுத்துதல் பேச்சு வழக்கில் கிடையாது. அன்றியும் இவ்வுள்ளப் பாங்கு தொடர்புடையதாய் நெறிப்பட்டுச் செல்லும். இத் தொடர்பும்

நெறியும் பேச்சு வழக்கில் முற்றும் இல்லை என்றே கூறலாம்.

இரண்டாவதாக, இலக்கிய வழக்கில் ஒரு மொழியை எவ்வாறெல்லாம் பயன்படுத்த முடியுமோ அவ்வாறெல்லாம் எழுத்தாளன் பயன்படுத்துவான். பல பொருள்கள் கொண்ட சொல்லை வழங்குவான். முன்பின் முரணைத் தோன்றுவது போல அமைந்த தொடர்களையும் கருத்துக்களையும் இலக்கியங்களில் காணலாம். இடத்துக்குத் தக, சொற்களின் பொருள்கள் மாறுபடுவதும் இதில் புலப்படும். இவற்றையெல்லாம் எழுத்தாளன் ஆழ்ந்து ஆலோசித்து வேண்டுமென்றே வழங்குகிறான். தினசரிப் பேச்சிலுள்ள மொழிவளம் அனைத்தையும் நெறிப்படுத்தி, இலக்கியத்தில் அமைத்துவிடுகிறான். ஒழுங்கு, அமைப்பு, ஒருமைப்பாடு முதலியவையே இலக்கிய வழக்கின் முக்கிய கதியாக உள்ளது.

மூன்றாவதாக, வாசகர்கள் ஏதேனும் ஒரு செயலை மேற்கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்தோடு இலக்கியம் எழுதப்படுதலில்லை. நீதிபற்றிய நூல்கள் இதற்கு ஓர் விலக்காகத் தோன்றலாம். நீதி நூல்களை இலக்கியம் அல்ல என்று ஒதுக்குவதும் இயலாது. ஆனால், அவை இலக்கியப் பண்போடு பிற பண்புகளும் கலந்து வந்தன என்றே நாம் கொள்ளுதல் வேண்டும். தனிப்பட்ட, கலவையற்ற இலக்கியப் பண்பு அவற்றில் இல்லை என்றே முடிவுகட்ட வேண்டும். திருவள்ளுவரது திருக்குறளை ஓர் உதாரணமாக நாம் காட்டலாம். இதில் இலக்கியப் பண்பு சிறந்து விளங்குகிறது என்பதில் ஐயமில்லை. எனினும் இப்பண்போடு பிறபண்புகளும் கலந்துவந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஏதேனும் ஒரு செயலை செய்யும்படி தூண்டும் இடத்தும் இலக்கிய நயம் தோன்றக் கூடும்.

'எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்

இக்குறள் நல்லவற்றை கேட்கும்படி நம்மை ஏவுகிறது. குறளும் நயம் பொருந்தியதாகவே அமைந்துள்ளது.

என்றாலும் இலக்கியப் பண்புமட்டும் இதில் தனிப்படக் காணப்படுகின்றது என்று கூறுதல் இயலாது.

தனிப்பட்ட இலக்கியப் பண்பு

தனிப்பட்ட இலக்கியப் பண்பு யாது என்று வினவலாம். அழகுக் கலையின் ஒரு சார் நுண் கருத்துக்களே இலக்கியக் கலைக்கு உரியவையாகும். இலக்கிய வழக்கும் இவற்றையே பின்பற்றுதல் வேண்டும். அழகுக்கலை பலதுறைகள் உடையன. இலக்கியத்திற்குரிய அழகுக்கலைக் கருத்துக்களில் சில அழகுக் கலையின் மற்ற இனங்களுக்கு பொருத்தமாக இருக்கும். வேறுசில இலக்கியக் கலைகளுக்கு மட்டும் பொருந்துவனவாய் இருக்கும். இலக்கியக் கலைகளின் வகைகளும் கால இயல்புக்கு ஏற்றபடி வேறுபட்டு பெருகிவந்துள்ளன. முற்குறித்த நீதி நூல்களும், கட்டுரைகள், வாழ்க்கை வரலாறுகள் முதலியனவும் இவ்வாறு பெருகி வந்தனவே. இவற்றில் வசன—அலங்காரங்கள் மிகுதியாய் காணப்படும்.

அழகுணர்ச்சிதான் தற்காலத்தில் இலக்கியக்கலையின் உயிர்நாடியாகக் கருதப்படுகின்றது. இந்த அழகுணர்ச்சி இலக்கியப் பொருளில் மாத்திரமன்றி இலக்கிய நடை முதலியவற்றிலும் காணப்படும் என்பதை நாம் மறத்தல் கூடாது.

இலக்கியதநின் தனிச்சிறப்பு

இலக்கியம் குறிக்கும் பொருள்பற்றிய விஷயத்தில் இலக்கியத்தின் தனிச்சிறப்பு மிக நன்றாகப் புலப்படுகின்றது. சிலப்பதிகாரத்தை எடுத்துக்கொள்வோம். இந்த இலக்கியத்தின் பொருள் கண்ணகி—கோவலன் முதலியோரது வரலாறுகள். இப்பாத்திரங்கள் எல்லாம் பாவனைச் சிருஷ்டியே. இவை போன்று ‘கமலாம்பாள்’ ‘பத்மாவதி சரித்திரம்’ முதலியவைகளும் பாவனை சிருஷ்டியே. கமலாம்பாள் சரித்திரத்தில் கதாநாயகிக்குப் பின் வரலாறு இல்லை யென்பது எளிதில் அறியலாம். பல கதாபாத்திரங்களின் வாழ்க்கையில் இடைவிடாது தொடர்ந்து வரும் வரலாறும் பெரும்பாலும் காணுதல் இயலாது.

உதாரணமாக சிறு கதைகளைக் கூறலாம். எப்படி கதாபாத்திரங்களுக்குத் தொடர்ந்த வாழ்வும், எதிர்கால வாழ்வும் இல்லையோ, அப்படியே அவர்களுக்கு இறந்தகால வாழ்வும் இல்லை என்பது அறியத்தக்கது. இங்கே இறந்த கால வாழ்வு என்று குறிப்பிட்டது அப்பாத்திரங்களுக்குரிய குணும்சங்கள். அவர்களின் முன்னோர்களிடமிருந்து பரம்பரையாய் வருதல் போன்ற வரலாற்றினையே உட்கொண்டது. முற்பிறப்பு வரலாறு, வரும்பிறப்பு வரலாறு, பூர்வ வினையின் விளைவு முதலியவை இங்கே கருதப்பட்டன அல்ல. பாத்திரங்கள் கல்பித சிருஷ்டி என்பதை நாம் மிகமிக அழுத்திக்கூற வேண்டும். இது இலக்கியத்திற்குத் தனிச் சிறப்பாயுள்ள ஒரு இயல்பாகும்.

இங்கே கூறிய இலக்கிய இயல்புகளுக்குத் தக்கபடி, முன்குறிப்பிட்ட நோக்கத்தையும் முறையையும் மேற்கொண்டு இலக்கிய வழக்கு நடைபெறுவதாகும். எனவே இதற்கும் தினசரிப் பேச்சு வழக்கிற்கும் வேறுபாடு மிக மிக அதிகமாக உள்ளது என்பது நன்ருகப் புலப்படும்.

21

மதுரையும் தமிழ் இலக்கியமும்

நமது தமிழ் நாட்டிலே மிக்க புகழ்பெற்று விளங்குவன மூன்று பெருங் கழகங்களாகும். ஒன்று, மதுரைப் பெருநகரிலே 1901-ம் வருஷத்திலே ஸ்ரீ பாண்டித்துரைத் தேவர் அவர்களால் நிறுவப்பெற்று இன்றுகாறும் செவ்வனே நடைபெற்று வருகிற மதுரைத் தமிழ்ச் சங்கமாகும். இரண்டாவது, சென்னையில் 1905-ம் ஆண்டில் ஸ்ரீ. ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை முதலியோரால் நிறுவப் பெற்றுப் பலவகையானும் விரிவடைந்து மிக்க ஊக்கத்துடனும் ஆர்வத்துடனும் நடத்தப்பட்டு வருகிற சைவ சிந்தாந்த மகா சமாஜம் ஆகும். மூன்றாவது, தஞ்சையை அடுத்துள்ள கருந்திட்டாங் குடியில் 1913-ம் வருஷத்தில் தோன்றி மிக்க தமிழ்-ஆர்வத்துடன் நடத்தப் பெற்று வருகிற கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஆகும். இவற்றுள், இரண்டாவதாகக் குறிப்பிட்ட சமாஜம் தமிழ் இலக்கியத் துறையிலும் பேருழைப்புபெடுத்துப் பெருந் தொண்டு புரிந்து வருகிறது; எனினும், முதன்மையாகச் சமயச் சார்பு பற்றியதே யாகும். ஏனைய இரண்டு சங்கங்களும் தமிழின் பொருட்டே நிறுவப்பெற்றன. எனினும், பொருள் முட்டுப்பாடு முதலிய பலவகைக் காரணங்களால், குறிப்பிட்ட சிற்சில தமிழ்த் துறைகளில் மாத்திரம் உழைத்து வருகின்றன. உதாரணமாக, தமிழ்க் கலாசாலை நடத்துதல், பத்திரிகை வெளியீடு, அச்சில் வாராத பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தல் முதலிய தொண்டு

மூன்று தமிழ்க் கழகங்கள்

* மதுரைத் தமிழ் இலக்கிய மகாநாட்டில் 18—1—41ல் நிகழ்த்திய தலைமை உரையிலிருந்து எடுக்கப்பெற்றது.

களை இவை ஆற்றி வருகின்றன. இவையெல்லாம் பழமையைப் போற்றுகிற அளவிலே நின்றுவிடுகின்றன. பழைய மரபைக் கைவிடாது, அதனோடு தொடர்புகொண்டு, புதிய புதிய துறைகளில் புத்துணர்ச்சியோடு தமிழ்-இலக்கிய வளர்ச்சியைப் பேணுதல் மிக அவசியமாகும். இப் புதிய துறையைப் பிரசாரம் செய்வதற்கும், இதன் கண்ணே உழைத்து வருவதற்கும் ஒரு புதிய கழகம் வேண்டற்பாலதே யாகும்.

தமிழ் மொழியின் சரிதத்தோடும், தமிழ் இலக்கியச் சரிதத்தோடும் மதுரை மூதூரின் பூர்வ சரிதம் பின்னிக் கிடக்கிறது. தொல்காப்பியனார் காலத்துத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு எல்லை 'வடவேங்கடம் தென்குமரி' என்பர். இப் பரந்துபட்ட பிரதேச முழுவதும் பேசப்பட்ட தமிழ்மொழி—இடம், சமயம், மக்கள் வகுப்பு முதலிய வேறுபாடுகளால் பாதிக்கப்படாது—எங்கும் ஓரே நிலையில், ஒரே முறையில் உச்சாரணபேதஞ் சிறிதுமின்றி வழங்கி வந்ததென்று ஒருவரும் கூறத்துணியார். இப் பேச்சு வழக்கு நூல் வழக்காக மாறும்பொழுது, குறிப்பிட்ட ஓரிடத்து வழங்கும் மொழியே பிரசாரமெய்திப் பொதுப்பட அங்கீகரிக்கப்பட்டு அவ்வகை மொழியில் நூல்கள் பெருகும். மதுரைப் பிரதேசத்தில் வழங்கிவந்த மொழியே இங்ஙனமாகப் பிரசாரமெய்தி அங்கீகாரம் பெற்று நூல்களின் வளர்ச்சிக்குக் காரணமா யிருந்தது. இப் பெருமைக்குக் காரணங்களும் பலவுள. முதலாவது அப் புராதன காலத்திலே மதுரை மாநகர் பெருஞ் சிறப்புற்று விளங்கிற்று; அக்காலத்துத் தமிழ்-நாகரிகத்திற்கு லக்ஷ்ய பூமியாயிருந்தது; அகநாட்டு வாணிபமும் புறநாட்டு வாணிபமும் மிக்க ஊக்கத்துடன் நடைபெற்று வந்தன; பல தேசத்துள்ள மக்களின் கூட்டுறவினாலே மதுரை நகரத்து மக்களின் வாழ்வு நிறைவெய்தி இனிது ஒழுகியது; கல்வி சிறந்தோங்கிற்று; தமிழாசிரியர் மிகப் பலர் தோன்றினார்கள்; அவர்களை ஆதரித்து அவர்கள் இயற்றிய செய்யுட்களைப் போற்றுதற்கு, மதுரையில் ஆண்ட பாண்டிய பரம்பரை பெருவிருப்புற்று முன்வந்

பாண்டி நாடே செந்தமிழ் நாடு

தது. இந்நிலையில் மதுரை மூதூரில் தமிழ் செழித்து வளர்ந்தமை சிறிதும் ஆச்சரியமன்று. அங்கே தோன்றிய நூல்களின் தமிழே பொது அங்கீகாரத்திற்கு உரியது எனக்கொள்ளப்பட்டது. மற்றைப் பிரதேசங்களிலுள்ள புலவர்களும் இம்மதுரைத் தமிழைப் பின்பற்றியே பாடினர். ஆகவே, மதுரைப் பிரதேசத்துத் தமிழே 'செந்தமிழ்' (Standard Tamil) ஆயிற்று. இதனால் இப்பிரதேசம் 'தமிழ் நாடு' (பெரியபுராணம், திருஞான. 652) எனச் சிறப்புற்று வழங்கலாயிற்று. செந்தமிழ்' நிலமாவது யாதெனின்,

சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சவுந்தர பாண்டியன் எனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவரும் தழைத்துஇனி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநாடு என்ப

என்றனர் சங்கரநமசிவாயப் புலவர். பரஞ்சோதி முனிவரும்,

... ...தென்சொல்

மடமகட்கு அரங்கு என்பது வழுதிநாடு அன்றோ

என்று புகழ்ந்தேத்தினர். இவர்களைக் கூறுவான் ஏன்? 9-ம் நூற்றாண்டினரான மாணிக்கவாசகர்,

தண்ணார் தமிழ்அளிக்கும்
தண்பாண்டி நாட்டானை

என்றனர் (திருவாசகம் 8, 10). இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த புலவர்களுங்கூட இக் கருத்துப்படவே பாடுகின்றனர் :

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை

என்பது சிறுபாணாற்றுப்படை.

தமிழ்கெழு கூடல்

என்பது புறநானூறு (58). இங்ஙனமாகத் தமிழ் மொழிச் சரிதத்தோடு இம்மதுரைநகரின் சரிதம் பிணைந்து கிடக்கின்றமை காணலாம்.

மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டி நாட்டிலே பொதிய மலையிலே, 'என்று முள தென் தமிழ் இயம்பி யிசை கொண்ட'வராகிய அகத்திய முனிவர் வாழ்கின்றார் என்பது நம்மவர் நம்பிக்கை. இம்முனிவர்க்கு மாறொருபாகன் ஆதியில் தமிழ்-நூல் உணர்த்தினர் என்பர். முதன் முதலில் தமிழ்ச் செய்யுட்களையும் தமிழ் நூல்களையும் ஆராய்ந்த இடம் மதுரை என்பது தலைச் சங்கம் இங்கே கூடியதென்னும் வரலாற்ருல் உணரப்படும். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், முருகவேள், அகத்தியனுர் முதலியோர் இத் தலைச்சங்கத்தில் தமிழை ஆராய்ந்தார் என்று கூறுவர். இப் பௌராணிக வரலாறு தமிழ் இலக்கியத்தின் தொன்மையினையும் மதுரையின் தொன்மையினையும் நமக்கு நன்கு உணர்த்துகிறது. கடல்கொண்ட கபாடபுரத்துக் கூடியதாகக் கூறும் இடைச் சங்கத்தை விடுத்து, கடைச்சங்கத்தை நோக்குவோமாயின், அதுவும் கூடிய இடம் இம்மதுரையேயாகும். தற்காலத்தே ஆராய்ச்சியாளரிற் சிலர் கடைச் சங்கத்தின் உண்மையைக்கூட ஐயத்தின்பாற் படுத்துகின்றனர். ஆனுல் பாலைக்கலியிலே (35),

மதுரையும் சங்கங்களும்

நிலனுவில் திரிதரூஉம் நீள்மாடக் கூடலார்
புலனுவிற் பிறந்தசொற் புதிதுண்ணும்
பொழுதன்ருே

என வந்துள்ளது. இரண்டாவது அடிக்கு 'அறிவினையுடைய சான்ருேர் நாவிற் பிறந்த கவிகளின் புதுமையைக் கொண்டாடும்' என நச்சினுர்க்கினியர் - பொருள் கூறினர். ஈண்டுக்குறித்த சான்ருேர் கடைச்சங்கத்துச் சான்ருேராகவே இருத்தல் கூடும். அன்றியும், 'மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என கி. பி. 8-ம் நூற்ருண்டுச் சாசனம் ஒன்று கூறுகிறது. ஆகவே, கடைச்சங்கத்தின் உண்மையை ஒப்புக்கொள்ளுதல் பிழையாகாது எனவே தோன்றுகிறது. இச் சங்ககாலத்துப் புலவர்களிற் பலர் மதுரையைப் புகழ்ந்து பாடியுமுள்ளார். 'கூடற்றமிழ்' எனப் பெயர் பெற்ற மதுரைக் காஞ்சியில்,

புத்தே ளுலகங் கவினிக் காண்வர
மிக்குப்புகழ் எய்திய பெரும்பெயர் மதுரை

என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. அகநானூற்றில்,

பாடுபெற சிறப்பிற் கூடல் (231)

எனவும்,

பொன்மலி நெடுநகர்க் கூடல் (253)

எனவும் கூறப்படுகிறது. பரிபாடலில் (19),

புலத்தினும் போரினும் போர்த்தோலாக் கூடல்

என வருகின்றது. அறிவுத்துறையிலும் போர்த்துறையிலும் மதுரைமாநகர் வென்றியோடு விளங்கிற்று. இவ்வாறு கூறப்பட்ட 'மாடமலி மறுகிற்கூடற்' பதியை

பாடல் சான்று பல்புகழ் முற்றிய
கூடல்

(பரிபாடல். 17)

எனக் கடைச்சங்கப் புலவரொருவர் வாயாரப் புகழ்கின்றனர். இப்பதியின் புகழை,

தண்தமிழ் வேலித் தமிழ்நாட் டகம் எல்லாம்
நின்று நிலைஇப் புகழ்பூத்தல் அல்லது
குன்றுதல்உண்டோ மதுரை கொடித்தேரான்
குன்றம் உண்டாகு மளவு

(பரிபாடற்றிரட்டு. 8)

என்று இங்ஙனம் விரித்தனர் பிறிதொரு சங்கப் புலவர். இப் பெரும்பெயர் வாய்ந்த 'மதுரையைப் பற்றி எழுந்துள்ள கடைச்சங்கச் செய்யுட்களும் பலவாம். 'மதுரைக் காஞ்சி' யென்று இந்நகரின் பெயரால் அமைந்துள்ளது அடி நிமிர்ந்த செய்யுளை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். பரி பாடல் என்னும் நூலிலே நான்கு பெருஞ் செய்யுட்கள் இம் மதுரையைப் பற்றியன.

வையை இரு பத்தாறு மாமதுரை நான்கு
செய்யபரி பாடற் றிறம் [என்ப

என்பது பரிபாடலின் அமைதி. சங்கச் செய்யுட்களில் இவையே யன்றி, இந் நகரைப் பற்றிய தொடர்களும் பல

வாம். இங்ஙனமாக, தமிழிலக்கியங்களின் பிறப்பகமாகிய கடைச் சங்கத்திற்கும் இம் மதுரைமாநகர்க்கும் மிகநெருங்கிய தொடர்பு உண்மை காணலாம். கடைச்சங்கப் புலவர்களுள் நடுநாயகமாய் விளங்கியவரும், இறைவன் என்றும் எண்ணாது தாம் உண்மை என்று கண்டதனை நெஞ்சுறுதியுடன் அஞ்சாது கூறிய ஆண்டகையுமாகிய நக்கீரர் இப்பதியினரே ஆவர். 'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்' என இவரை வழங்குவர். அன்றியும் நமது தமிழ் மொழிக்கு இலக்கணம் வரையறுத்த முதற்பெரு நூலாகிய தொல்காப்பியமும் இம் மதுரைப் பேரூரோடு இயைபுடையது எனவே கருதுதற்கு இடமுண்டு. அப்பெரு நூல்,

நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து

அரங்கேற்றப்பட்டது என அந்நூலின் பாயிரத்திலே பனம்பாரனார் கூறுதல் உணரத்தக்கது. பாண்டியனது அவை அவனது தலைநகராகிய மதுரையின் கண்ணதாதல் வேண்டும் எனச் சொல்லவும் வேண்டுமா?

பாண்டிய நாட்டில் நிலவிய சமயங்கள்

இனி, இம்மதுரைப் பேரூரின் சரிதத்தை நீளத் தொடர்ந்து நோக்குவோம். கல்வி இந்நகரில் தழைத்தோங்கியது போலவே சமயவுணர்ச்சியும் தழைத்தோங்கியதெனக் கூறுதல் வேண்டும். முதன்முதலாகப் பாண்டிய நாட்டில் நிலவிய சமயம் வைதிக சமயம் என்று கொள்ளுதற்கே சான்றுகள் உள்ளன.

பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை மினிவர் ஏந்து கை யெதிரே

எனப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் பாடுகிறார். கடைச்சங்க காலத்து அரசாங்கம் ஒப்பிய சமயம் வைதிகசமயமே யாயினும், சைன சமயமும் பௌத்த சமயமும் தமிழ்நாட்டில் அதி புராதன காலத்திலேயே புகுந்துவிட்டன. இவ் இரு சம

யத் துறவிகளும் ஆங்காங்கே வதிந்துவந்து சமயத் தொண்டும் தமிழ்மொழித் தொண்டும் புரிந்துவரலாயினர். தமது அருஞ் செயல்களால் தமிழ் மக்கள் இதயத்தையும் இவர்கள் கவரலாயினர். சிற்சில காலங்களில் சமயம் பற்றிய வாதப் பிரதிவாதங்களும் நிகழலாயின.

> வாதி கை யன்ன கவைக்கதிர் இறைஞ்சி
> இரும்பு கவர்வுற்றன பெரும்புன வரகே
>
> (மலைபடு. 112-8)

என வரகின் முற்றியிரட்டித்த கதிர்களுக்கு வாதஞ் செய்வோனது கையிடத்து இணைந்த விரல்கள் உவமமாகக் கூறப்படுகின்றன. முதலில் சைனசமயம் சமாதான நெறியைக் கைக்கொண்டு தனது கொள்கைகளை அமைதியோடு பரப்பி வந்தது. வள்ளுவப் பெருந்தகையார் இயற்றியருளிய பெருநூலே இதற்குத் தக்க சான்றாகும். இந்நூல் கடைச்சங்க காலத்துக்குச் சில நூற்றாண்டுகள் பிற்பட்டதாகலாம். திருவள்ளுவர் சைனர் என்பது 'மலர்மிசை யேகினான்' என்ற கடவுள் வாழ்த்துச் செய்யுளால் ஐயுறவிற்கு இடனின்றி உணரலாகும். இவர் வாழ்ந்த திருநகர் இம்மதுரையே என்பது இவரைப் 'போதார் புனற்கூடற்கு அச்சு' என ஆன்றோர்கள் கூறுவதால் அறியலாகும். மற்று, பௌத்த சமயமோ எனின், சமாதான நெறியை விடுத்து வாதப்போரால் வெற்றிக் கொள்ளத் துணிந்தது. இவ் இரண்டு மனப்பான்மைகளும் வள்ளுவர் நூலுக்கு இரண்டொரு நூற்றாண்டு பிற்பட்டுத் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற காவியங்களால் நன்கு உணரக் கிடக்கின்றன. சைன காவியமாகிய சிலப்பதிகாரத்தில் வைதிக சமயம் இகழ்ந்துரைக்கப்படவில்லை. பௌத்த காவியமாகிய மணிமேகலையில் 'ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை' முழுவதும் வைதிகக் கொள்கையின் இகழ்ச்சியுரையாகும். இந்நூலில், பிற இடங்களிலும் இவ்வகை இகழ்ச்சிக்குறிப்பு ஒலித்துக் கொண்டே யிருக்கிறது. இவ் இரண்டு காப்பியங்களுள் மணிமேகலை மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் இயற்றியது என்பது இங்கே மனங்கொள்ளத்தக்கது.

நாளடைவில் பௌத்த சமயம் வலிகுன்றிவிட்டது. சைன சமயம் வலிபெருகிக்கொண்டே வந்து இம் மதுரையை முற்றுகையிட்டது. அரசனைத் தன்வயமாக்கி 'அரசாங்கச் சமயம்' என்னும் நிலைமையையும் அடைந்தது. 'மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி' ஆகலின், குடிகளும் இச்சமயத்தைத் தழுவலாயினர். வைதிக சமயம் தன்னுயிரின் பொருட்டாகப் போராட நேர்ந்தது. தொன்மை தழுவி நிற்பவர்கள் பெண்கள்; இவர்களே வைதிக சமயத்திற்கு ஊற்றங்கோலா யிருந்தவர்கள். மதுரையரசனது திருத்தேவியாகிய மங்கையர்க்கரசியாரால் சம்பந்தப் பெருந்தகையார் மதுரை நகர்க்குச் சென்று சைனரை வாதில் வென்று, பாண்டியனை மீட்டு, சைவ சமயத்தை மீண்டும் அரசாங்கச் சமயம் ஆக்கியமை பிரசித்த சரித்திர விஷயமே. மதுரையில் நிகழ்ந்த இச்சமய வெற்றியால் சமயக் கல்வியும் சமய இலக்கியங்களும் வளர்ந்து செழித்தன. இத்திருநகரின் சரிதத்தோடு மீண்டும் தமிழ்க்கல்வி முதலியன தொடர்புற்றுப் பெருகலாயின.

பௌத்த, சைன சமயங்களை வென்று சைவம் நிலை பெறுதல்

ஆனால் சைன சமயம் முற்றும் அழிந்துவிடவில்லை. அரசியற் செல்வாக்கை இழந்தது உண்மை. இதனை ஒரு நன்மை என்றே நாம் சொல்லவேண்டும். ஏனெனின் அச்சமயம் பிற வழிகளிலே பேருழைப்பு எடுத்துவந்தது. சிறந்த தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் இயற்றி அவற்றின் மூலமாகத் தமிழ் மக்கள் இதயத்தைக் கொள்ளைகொள்ள முயன்றது. சூளாமணி என்ற தலைசிறந்த காவியம் இங்ஙனம் தோன்றியதேயாகும்.

சைன சமயத்தின் இலக்கியத் தொண்டு

நாமாண் புரைக்குங் குறையென்னினும்
நாம வென்வேல்
தேமாண் அலங்கற் றிருமால்நெடுஞ்
சேந்தன் என்னும்

தூமாண் **தமிழின் கிழவன்**சுட ரார மார்பிற்
கோமான் அவையுள் தெருண்டார்கொளப்
பட்டதன்றே

இச் செய்யுளில் 'தமிழின் கிழவன்' எனச் சேந்தன் விசேடிக்கப்படுதல் காணலாம். பாண்டியனுக்கே இவ் அடைமொழி உரியதாதல் அவனுக்குரிய 'தமிழ் நாடன்' என்னும் திவாகரப் பெயரால் அறியலாம். ஆதலால், சூளாமணிக் காவியமும் பாண்டியனது அவைக்களத்து அரங்கேற்றப்பட்டமை உணரக் கிடக்கின்றது. இங்ஙனமே சீவகசிந்தாமணி என்னும் பெருங்காப்பியமும் இம் மதுரை மூதூரோடு தொடர்புடையதாகும். இது சைனர்கள் இப் பெருங்காப்பியத்தைக் குறித்து வழங்கும் வரலாற்றினால் தெளியப்படுகின்றது. ஆசிரியர் திருத்தக்க தேவர் சோழர் குலத்து உதித்தவரேயெனினும், பாண்டிவள நாட்டிலுள்ள மதுராபுரியை அடைந்து அங்குள்ள சங்கப் புலவர்களோடு அளவளாவி யிருந்து, அவர்கள் கருத்துப்படியே சிந்தாமணியை இயற்றி அவர்கள் திருமுன்பில் அரங்கேற்றினர் என்ப. இச்சங்கம் கடைச்சங்கமன்று; நீண்ட காலத்திற்குப் பின் இருந்த ஒரு சங்கம் என்று கொள்ளுதல் வேண்டும். மதுரைக்குப் பெரும்புகழ் விளைத்து அப்புகழ் எங்கும் பரிமளிக்குமாறு செய்த 'தமிழ்ச் சங்கம்' மீண்டும் மீண்டும் புத்துயிர் பெற்று, புதிய புதிய நோக்கத்துடனும் புதிய புதிய கோலத்துடனும் தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் நன்கு பேணிப் போற்றி வந்துளது என்பது இப்பிற்காலச் சங்கமும் நமக்குத் தெளிவாய்ப் புலப்படுத்துகின்றது.

சூளாமணியும் சிந்தாமணியும் மதுரையில் அரங்கேறியன

மதுரையில் நிகழ்ந்த சமய வெற்றியால் சமய நூல்கள் பெருகின என்று முன்னர்க் கூறினேன். இச் சமய நூல்களை நாம் நான்கு பெரும் பிரிவாக அமைக்கலாம். முதலாவது பக்தி நூல்கள். இந்தப் பகுதி நூல்கள் சம்பந்த மூர்த்திகளது காலத்திற்குச் சிறிது முன்புதானே தோன்றத் தொடங்கிய போதிலும், அவரது சமய வெற்றிக்குப்

பக்தி நூல்கள்

பின்னரே உரம் பெற்றுத் தழைத்தோங்கலாயின. தமிழ் நாட்டில் பக்த பரம்பரையையும், பக்தி நூற் பரம்பரையையும் உற்பத்தி செய்ததும் இச்சமய வெற்றியே என்று தான் நாம் கொள்ள வேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், ஒன்பது முதலிய திருமுறைகளைப் பாடிய திரு அடியார்கள் முதலியோர்களும், ஆழ்வாராதியர்களும் இந்தப் பக்த பரம்பரையில் உள்ளவர்களே. இன்னோர் அருளிச் செய்த தெய்வப் பாடல்களே பக்திநூற் பரம்பரைக்குப் பெருமையும் புகழும் அளித்திருக்கின்றன.

சமய சாஸ்திரங்கள், காவியங்கள், புராணங்கள்

இரண்டாவதாக, சமய சாஸ்திரங்களைக் கூறுதல் வேண்டும். பக்தியால் எழுந்த திருவாக்குக்களுக்குச் சாஸ்திர சம்மதமான பொருள் வேண்டும்; அன்றியும் சமயங்களும் சாஸ்திர மூலமாகத் தருக்கித்து நிறுவப்பட வேண்டும். இக்காரணங்கள் பற்றியே சமய சாஸ்திரங்கள் தமிழில் தோன்றின. மூன்றாவதாக, நமது பாரத தேச முழுமைக்கும் இலக்கிய மூலதனமாக உள்ள மஹாபாரதம், இராமாயணம் என்ற இதிகாசங்களின் வழித் தோன்றிய தமிழ் நூல்களைக் கூற வேண்டும். இவைகள் ஏற்கெனவே சங்கத்து ஆன்றோர்களால் இயற்றப்பட்டன என்று கொள்ளுதற்குச் சில சான்றுகள் உள்ளன. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும்' என்பது சின்னமனூர்ச் சாஸனத் தொடர். சங்க காலத்து இராமாயணத்தைச் சார்ந்தனவாகக் கொள்ளக்கூடிய சில செய்யுட்கள் பழைய உரைகளால் தெரிய வருகின்றன. ஆனால் இந்நூல்கள் இப்போது மறைந்துவிட்டன. சமய உணர்ச்சி மிக்குப் பரந்து தமிழ்நாடு முழுதும் அலைமேல் அலையாக மோதியடித்து எழுந்த பிற்காலத்தே அவ் உணர்ச்சியின் வேகத்தால் தோன்றிய நூல்களைப் போல, இவைகளால் தமிழ் மக்களை வசீகரிக்க முடியவில்லை. இக் குறைபாட்டினாலேயே இவை வழக்கொழிந்து போயிருக்கலாம். கல்வி மாட்சியும், அறிவின் மாட்சியும், உணர்வு மாட்சியும், உண்மைத் தமிழ் மரபு உணர்ச்சியும், ஈடும் எடுப்புமற்ற கவிதா சக்தியும் வாய்ந்தவர் கம்பர். இவர் இயற்றிய

இராமவதாரமே உண்ணத் தெவிட்டாத தெள்ளமிர்தமாக உள்ளது. இது தமிழ் நாட்டிற் பரந்து பெருகிய பக்தியாற் பிறந்தது என்பது,

படிகொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும்
பக்தி வெள்ளம்

என்று இராமாநுஜ நூற்றந்தாதியில் வரும் அடியினால் உணரலாகும். நான்காவதாக, அடியார்களைக் குறித்தும் புண்ணிய ஸ்தலங்களைக் குறித்தும் எழுந்த புராணங்களைக் கூறுதல்வேண்டும். அடியார்களது பெருமை குறித்தெழுந்த நூல்களுள், திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தையும் குருபரம்பரைகளையும் இங்குக் கூறலாம். புண்ணிய ஸ்தலங்களைக் குறித்தெழுந்த நூல்களைப் பற்றிச் சிறிது கூர்ந்து நோக்குதல் வேண்டும்.

இறைவனே பாண்டி நாடன் ஆனான்

தமிழ் வளத்தாலும் சமய வெற்றியாலும் பெயர் சிறந்து விளங்கிய மதுரை மூதூர் ஒரு புண்ணிய ஸ்தலமாகப் போற்றத் தக்க பெருமையை அடைந்துவிட்டது. இவ்வாறு போற்றப்படுவதற்கு மணிவாசக சுவாமிகளின் சரித்திரம் ஒரு சிறந்த காரணமாயிருத்தல் வேண்டும்.

மதுரைப் பெருநன் மாநகர் இருந்து
குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்
ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண் சுமந்து அருளிய பரிசும்

(கீர்த்தித் திருவகவல்)

என்பன பக்தி பரவசராயுள்ள தமிழ்மக்களுக்குப் பருகியாராத பராவமுதாக இருத்தல் வேண்டும். இறைவன் 'ஆடக மதுரைக்கு அரச'னாகப் போற்றப்பட்டான். பாண்டிய நாடே அவனது பழம்பதியாயிற்று. 'பாண்டிப் பிரான்' (திருவாச-13, 2) 'தென்பாண்டி நாடன்' என்று அவன் பெயர் புனையப்பட்டான்:

சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக்
கூவாய்!

என்பது குயிற்பத்து. ஆனால் பாண்டிய நாட்டைக் 'குமரிநாடு' அல்லது 'கன்னிநாடு' என்பது பழைய தொரு வழக்கு. குமரியம்பெருந்துறை இந்நாட்டிலே இருப்பதாதல் பற்றி இப்பெயர் எழுந்தது. கன்னிநாடு என்ற வழக்குண்மை,

செந்நெறி விளக்குகின்றார்
திருமறைக் காடு சேர்ந்த
நன்னிலை கன்னிநாட்டு
நல்வினைப் பயத்தாற் கேட்டார்

என்ற பெரிய புராணச் செய்யுளால் அறியலாம். இக் கன்னிநாடு எங்ஙனம் இறைவனுக்கு உரிய தாயிற்று? இவ்வினாவிற்கு, தடாதகை என்னும் செழியர்குலத்துப் பெண்ணரசி இறைவனைத் திருமணம் செய்துகொண் டாள் என்னும் வரலாறு தக்க விடை அளிக்கின்றது.

இவ்வரலாற்றினையும் பிற வரலாறுகளையும் தொகுத் துத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் எழுந்தது. இதுபோன்ற தில்லையம்பதி பற்றிக் 'கோயிற் புராணம்' தோன்றிற்று. இங்ஙனமே நாளாவர்த்தியிற் பல ஸ்தலங்கட்கும் ஸ்தலபுராணங்கள் பல இயற்றப்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை ஸ்தலபுராணங்கள் தோன்றியவண்ணமாகவே யிருந்தன. இவ் வகையான ஸ்தலபுராணங்களை மிகுதியாக இயற்றிப் பக்தியைத் தமிழ் மக்களிடையே பெருக்குவதற்கு முயன் றவர்களுள் இறுதியில் வந்தவர்கள் திருவாவடுதுறை ஆதீன வித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்.

ஸ்தல புராணங்கள்

மதுரைமாநகரின் மாஹாத்மியம் ஸ்தல புராணங் களைப் பெருக்குதற்கு மாத்திரம் பயன்பட்டது என்று நினைத்தல் சரியன்று; பிரபந்தங்கள் பல தோன்றுதற்கும் காரணமா யிருந்தது. கோவை, உலா, அந்தாதி, கலம்பகம் முதலியன தோன்றிப் பெருகலாயின. பிற ஸ்தலங்களின் மாஹாத்மியமும் இங்ஙனமே பிரபந்த வகைகள் பெருகுதற்குக் காரணமாயிருந்தன.

பிரபந்தங்களின் வளர்ச்சி

தேவாரம் திருவாசகமாகிய அருட்பாடல்கள் தோன்றும் வரை மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் சுயேச்சாதிகாரிகளா யிருந்தனர். அத்திருப்பாடல்கள் எழுந்த காலத்துக்குப் பின்னர் மூன்று நூற்றாண்டுகளாகப் பாண்டிநாடு சோழராட்சிக்குள் அமைந்து, பாண்டிய மன்னர்கள் தமது சுயேச்சாதிகாரத்தை இழந்தனர். இக்காலத்தேதான் மெய்கண்ட சாஸ்திரமாகிய சமய சாஸ்திரங்களும், இதிஹாசங்களும், பெரியபுராணமும் சோழதேசத்தில் தோன்றின. பாண்டிய மன்னர்கள் மீண்டும் முயன்று சுயேச்சாதிகாரம் பெற்றுச் சோணுடு கொண்ட காலத்துத்தான், மதுரையின் மாஹாத்மியமும் ஸ்தல புராணங்களும் தோன்றத் தொடங்கின. அம்மன்னர்கள் மீண்டும் துலுக்கர் கலாபத்தால் வலியிழந்து பராதீனரா யிருந்த காலத்தே தான் முற்குறித்த பிரபந்த வகைகள் பிரசாரம் எய்தின.

இறுதியில் குறிப்பிட்ட இக்காலத்தில் மதுரையிலே இலக்கியம் பற்றிய ஒரு கிளர்ச்சி எழுந்ததென்று எண்ண இடமுண்டு. தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலியவற்றைக் கற்றற்குப் பலரும் விரும்பியிருக்க வேண்டும். பொதுவாகத் தமிழ்க் கல்விக்குப் பேராதரவு ஏற்பட்டதெனக் கொள்ளுதல் மிகவும் பொருந்தும். எனவே இலக்கண இலக்கியங்களுக்கு உரைகள் இக்காலத்தே வகுக்கப்பட்டன. பேராசிரியர் மதுரையைச் சார்ந்தவராவர் என்று கருதுதற்குக் காரண முள்ளது. நச்சிஞர்க்கினியர் நிச்சயமாக மதுரை நகரினர் என்பது 'மதுரையாசிரியன் பாரத்துவாசி நச்சிஞர்க்கினியன்' என்று அவர் தம்மைக் கூறிக்கொள்வதால் விளங்கும். இவ் உரையாசிரியர்களின் வழியைப் பின்பற்றியே சாஸ்திரங்களும் 'வியாக்கி' முதலியன இயற்றப் பலரும் தொடங்கினர்.

இலக்கண இலக்கிய உரைகள்

காலகதியிலே பாண்டிய வம்சம் சிதைவுற்றது. விஜய நகரத்து அரசர்களின் பிரதிநிதிகளாகிய நாயக்க

அரசர்களின் ஆணைக்கீழ்ப் பாண்டியநாடு அடங்கிற்று.

நாயக்க மன்னரின் தமிழ்த் தொண்டு

இவ் அரசர்கள் பெரும் பக்திமான்களாயிருந்தனர். கோயில் திருப்பணிகளை விசேஷமாகச் செய்தனர். தமிழ் மொழியையும் ஒரு வகையாய் ஆதரித்து வந்தார்கள். எனினும், பாண்டிய அரசர்களைப்போலப் பேருரிமை பாராட்டித் தமிழ்த் தொண்டு இயற்றினர் எனக் கூறமுடியாது. இவர்கள் காலத்தில் தமிழ்ப் பெரும் புலவராக ஒருவரையே எடுத்துச் சொல்லத்தகும். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், சிதம்பரச் செய்யுட் கோவை முதலிய நூல்கள் பலவற்றைப் பழந் தமிழின் நறுமணங் குன்றாது இயற்றிச் சிற்றிலக்கிய வளர்ச்சிக்குப் பேருதவி செய்தனர்.

நாயக்க அரசர் வம்சமும் 18ம் நூற்றாண்டின் முற்பகுதியில் முடிவுற்றது. சேதுபதிகள் சுயேச்சாதிகாரம் பெற்றனர். இவர்களைக் குறித்துப் பற்பல சிறு பிரபந்தங்கள் தோன்றின. பொன்னாங்கால் அமிர்தகவிராயர் இயற்றிய ஒருதுறைக் கோவை இங்கே குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பியரின் ஆதிக்கம்

இக் காலத்திலே மகமதியர்களுக்குச் செல்வாக்கு மிகுந்தது. மகமதியப்புலவர்களும் தமிழில் நூல்கள் இயற்றித் தமிழைப் போற்றிவந்தனர். உமறுப் புலவர் இயற்றிய சீறாப்புராணம் சிறந்த இலக்கியமாக இன்னும் விளங்குகின்றது. ஐரோப்பியர்களும் நமது தேசத்திற்கு வந்து தங்கள் வியாபாரத்தையும் தங்கள் கிறிஸ்து சமயத்தையும் பரப்பி, அரசியல் நிர்வாகத்தையும் கைப்பற்றத் தொடங்கினர். சமய போதனைக்காக நமது நாட்டுக்கு வந்தவர்களுள் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் சிறந்தவர். இவர் தேம்பாவணி யென்னும் காவியத்தை இயற்றியுள்ளார்.

சேதுபதிகளும் தங்கள் சுயேச்சாதிகாரத்தை இழந்து ஆங்கிலேயரின் அரசாங்கத்துக்கு உட்பட்டனர். எனினும், அவர்களுடைய தமிழ்ப்பற்றுச் சிறிதும் குறை

படவில்லை. ஆனால் நம் நாட்டில் தமிழ் நூல்களைக் கற்றுப் பேணுவார் அரியராயினர். தமிழ்நூற் பரப்பின் எல்லையும் அறிந்து கொள்ளற்கு அரியதாய் முடிந்தது. உண்மையில் கற்றறிந்தோர் தம் தொகையும் மிக மிகச் சுருங்கிவிட்டது. இந்நிலையில் செல்வஸ்ரீ பொன்னுசாமித் தேவரவர்கள், ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் போன்ற தமிழ்ப் பெருமக்களை வரவழைத்து, அன்போடு உபசரித்து, அவர்கள் மூலமாகத் திருக்குறள் முதலிய தமிழ்ப் பேரிலக்கியங்களை அச்சுவாயிலாக வெளியிடுவித்தனர். ஸ்ரீ தேவரவர்களது அரண்மனை தமிழுக்குப் புகலிடமாக விளங்கிற்று.

சேதுபதியின் தமிழ்த் தொண்டு

இக்காலத்தே நிகழ்ந்த இரண்டு பெரு நிகழ்ச்சிகளை இங்கே நாம் குறித்தல் மிக அவசியமாகும். முதலாவது, திராவிட மொழிகளின் ஒப்புநோக்கு இலக்கணம் டாக்டர் கால்ட்வெல் என்னும் ஆங்கில அறிஞரால் இயற்றி 1856-ல் வெளியிடப்பட்டது. இதனால் தமிழ்மொழியின் தொன்மையும் பெருமையும் ஆதார பூர்வமாக நன்கு நிறுவப்பட்டன. பிறிதொரு நிகழ்ச்சியாவது, இப்போதுள்ள தமிழ் நூல்கள் அனைத்திற்கும் முற்பட்டதாகக் கருதப்பட்டுவரும் தொல்காப்பியப் பேரிலக்கணம் அச்சில் வெளிவந்தமையாகும். இந்த அரிய நூலை உரையுடன் பதிப்பித்த பேருபகாரி ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களாவர்.

ஒப்பிலக்கணமும் தொல்காப்பிய வெளியீடும்

அச்சின் வாயிலாகச் சில பல நூல்கள் தோன்றவே, தமிழ்க் கல்வியின்மீது தமிழ் மக்களுக்குப் பேரவா எழுந்தது. 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்பது பொய்யாமொழி யன்றோ! மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் சங்க நூல்களை ஒவ்வொன்றாகப் பரிசோதித்து வெளியிடத் தொடங்கினார்கள். இவர்கள் செய்துள்ள பேருபகாரத்தாலே தமிழின் தொன்மையும் தமிழ் மக்களின் நாகரிகமும் யாவரும் விரும்பி ஆராயும் விஷயங்களாய் முடிந்தன.

தமிழ்ப்பெருமக்களின் பேரவா

இவ்வகையான ஆராய்ச்சிகளுக்கு ஆங்கிலக் கல்வி பெரி தும் துணைபுரிந்தது. ஸ்ரீ வி. கனகசபைப் பிள்ளை அவர் களும், மனோன்மணீயத்தின் ஆசிரியர் ஸ்ரீ பி. சுந்தரம் பிள்ளையவர்களும் இத்துறையில் முதன்மையாகக் கூறத் தக்கவர்கள். தமிழ்நூல் ஆராய்ச்சிக்கும், தமிழர் சரித் திர ஆராய்ச்சிக்கும், தமிழ்மொழி ஆராய்ச்சிக்கும், தமிழ் நூல்களின் பாதுகாப்பிற்கும், தமிழ்க் கல்விக்கும் ஒரு பொது நிலையம் அமைக்க வேண்டுவது அத்தியாவசியமா யிற்று.

இவ் அவசியத்தை உணர்ந்து செல்வ ஸ்ரீ பாண்டித் துரைத் தேவரவர்கள் மதுரையிலே தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவியமைத்தார்கள். தங்கள் தமிழ்—ஆர்வத்திற்குப் போக்கிடம் இல்லாது மிகவும் வருந்திக்கொண்டிருந்த தமி ழறிஞர்கள் பலரும் இச்சங்கத்தின் அங்கத்தினரானார்கள். தமிழ்நாடு முழுதும் இச்சங்கத்தை ஆதரவோடு ஏற்றுக் கொண்டது. தமிழுக்குத் தனி உரிமை பூண்டு விளங்கிய இந்த மதுரை மாநக ரிலே இச்சங்கம் நிறுவப்பெற்றுள்ளமை யை எண்ணி எண்ணி அனைவரும் மகிழ்ந் தனர். இச்சங்கத்தை நான்காம் சங்கம் எனப் பலரும் கொண்டாடினர். தமிழ்க் கலாசாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 'செந்தமிழ்' என்னும் பத்திரிகை யொன்று மாதந்தோறும் வெளியிடப்பெற லாயிற்று. இச்சங்கத்தின் முக்கியமான அங்கத்தினர்களில் ஒருவர் ஸ்ரீ. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகளாவர். இவர்க ளிடத்தே ஆங்கிலக் கல்வியும் தமிழ்க் கல்வியும் சிறந்து விளங்கின. தாமே பல நூல்களை இயற்றியதோடு, பல மாணவர்களுக்கு இவர் இயற்றமிழ் ஆசிரியராயும் விளங் கினர். சென்னையில் தமிழ் பற்றிய ஒரு புதுக்கிளர்ச்சி இவர்களால் உண்டாகியது. பலரும் தமிழ் நாடகங்கள் முதலியன இயற்றினர். புதுமுறையிலே செய்யுட்களும் எழுதலாயினர்.

மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபனம்

இவ்வகையான தமிழ்க் கிளர்ச்சியோடு 20-ம் நூற் றாண்டு தொடங்கிற்று. இந்நூற்றாண்டு தொடங்கி 40

வருஷங்கள் ஆகிவிட்டன. நமது தமிழ்மொழியின் நிலை இப்போது எவ்வாறுள்ளது? எங்கும் தமிழில் நூல்கள் எழுதவேண்டும் என்ற ஓர் பரபரப்பு காணப்படுகிறது. ஆண் பெண் என்ற இருபாலரும் நூல் இயற்றும் செயலில் முனைந்து நிற்கின்றார்கள். வெளிவரும் நூல்களில் ஒரு பெரும் பகுதி கதைகளாகவும், குட்டிக்கதைகளாகவும், நாடகங்களாகவும் உள்ளது. ஒரு சிலர் கவிதைகளும் எழுதுகின்றனர். ஆங்கிலம் கற்ற அறிஞர் ஒரு சிலர் சரித்திர வரலாறுகள் முதலியன எழுதி வருகின்றனர். மிக மிகச் சிலரே விஞ்ஞான சாஸ்திரம் முதலியன பற்றி எழுதுகின்றனர்.

அச்சாகிய நூல்களின் பொதுவான குறைகள்

இவைகளே யன்றி, பத்திரிகைகளும் புற்றீசல் போலத் தோன்றுகின்றன. மாணவர்களுக்கு என்றே எழுதப்படும் நூல்கள் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கில் வெளிவருகின்றன. இன்னவை அனைத்திற்கும் பொதுவான ஒரு குறை யாதெனின், இவை பெரும்பாலும் நல்ல தமிழ் நடையில் பிழையில்லாதபடி எழுதப்பட்டிருக்கமாட்டா. தமிழ் மட்டும் கற்றவர்கள் பலரும் நூல்கள் எழுதி வருகிறார்கள். இவர்களிற் பெரும்பாலார் இக்காலத்துத் தமிழில் எழுதுவதில்லை. வழக்கொழிந்த சொற்களையும் வாக்கிய அமைதியையும் கையாண்டு, கற்போருக்குப் பேரிடர் விளைத்து வருகின்றனர். அன்றியும் இன்னோர் எழுதுவதில் விஷயங்கள் இருக்கமாட்டா. விஷய சூனியத்தை மறைப்பதற்காகவே அரிதின் உணரும் சொற்களை இவர்கள் வழங்குகிறார்கள் எனத் தோன்றுகிறது. இந்நிலையில் தமிழ் இலக்கியம் அபிவிருத்தி அடைவதற்கு இடமே இருப்பதாகத் தெரியவில்லை.

இங்கே குறிப்பிட்ட குறைகள் நீங்குவதற்கு வழி யாது? நமது கல்வித் திட்டம் முழுவதும் மாறி யமைந்தாலொழிய நமக்கு விமோசனம் இல்லை என்றுதான் எண்ணுகிறேன். மேற்சுட்டிய நூலாசிரியர்களை இரு வகையாகப் பிரித்துக்கொள்ளலாம். ஒரு வகையாருக்குப் பொதுக் கல்வி யறிவு உண்டு; ஆனால் தமிழறிவு இல்லை. பிற

ஒரு வகையாருக்குத் தமிழறிவு நிரம்ப உண்டு; ஆனால் பொதுக் கல்வியறிவு இல்லை. பொதுக் கல்வியறிவு மட்டும் உடையவர்களுக்குத் தமிழறிவும், தமிழறிவு ஒன்று மட்டும் உடையவர்களுக்குப் பொதுக் கல்வி யறிவும் உண்டாக வேண்டும். தமிழ்க் கல்வி யறிவோடு கூடிய பொதுக் கல்வியே நல்ல பயனை நிலைப்பாக அளிக்கவல்லது. இதற்குப் பொதுக் கல்வியைத் தாய் மொழியாகிய தமிழ் *மூலமாய்ப் போதித்தல் வேண்டும். இங்ஙனமே பொதுக் கல்வியோடு கூடிய தமிழ்க் கல்வியே நல்ல பயனை நிலைப்பாக அளிக்கவல்லது. இதற்குப் பொதுக் கல்வி யறிவு பெற்ற பின்னரே தனித் தமிழ்க் கல்வி போதிக்கப்படுதல் வேண்டும். இவ் இரு வகைக் கல்வியையும் முறையே கவனித்து வரும் அரசாங்கத்தினரும் ஸர்வ கலாசாலையாரும் என்ன செய்திருக்கின்றார்கள் என்பதை இனி நோக்குவோம்.

தமிழ் மூலம் பொதுக்கல்வி அவசியம்

நமது அரசாங்கம் நாம் நல்வாழ்வு வாழ்வதற்குரிய சௌகரியத்தை நல்கியிருக்கிறது. நாட்டில் குழப்பங்கள் யாதும் இல்லாதபடி நன்கு பாதுகாத்து வருகிறது. அந்நிய நாட்டினரால் பெரும்பாலும் நாம் துன்புறாதபடி அரசியல் நலத்தைப் பேணி வருகிறது. ஆனால், கல்வி சம்பந்தமான வரையிலே தமிழ் மக்களின் நலத்தையே முற்றும் கவனித்து நமது அரசினர் செய்யவேண்டும் அனைத்தையும் செய்துவிட்டதாகக் கூறுதல் முடியாது. வெகு காலமாகத் தமிழ்க் கல்வியையே புறக்கணித்து ஆங்கிலத்தில் மோகங்கொள்ளும்படி செய்யும் கல்வி முறையையே அரசாங்கம் நமக்கு வகுத்திருந்தது. நம்மவர்களும் தங்களை ஆங்கிலராகவே பாவிக்கத் தொடங்கிவிட்டனர். ஆங்கில மொழியிலுள்ள நூல்களைக் கற்றுப் பயனடைவது கூட அத்தனை முக்கியமாகப் புலப்படவில்லை. ஆங்கிலச் சொல்லை ஆங்கிலேயன் உச்சரிப்பது போல உச்சரித்துவிட்டால், அதுவே ஆங்கிலக் கல்வியின் பேறெல்லை என்று எண்ணலுற்றனர். இது ஒரு

* இப்பொழுது கல்வித் துறையில் பல சீர்திருத்தங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

புறம் இருக்க, ஆங்கிலக் கலாசாலையிற் கற்றுவந்த பின்னர், அரசாங்க உத்தியோகத்தைத் தவிர வேறு எவ்வகை வேலைக்கும் உதவாதபடி நம்மவர்கள் ஆகிவிட்டனர். நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் நடனமாடுகிறது.

ஆங்கிலக் கல்வியால் விளைந்த அனர்த்தங்கள்

அரசாங்கத்தினர் இக்குறைகளை உணர்ந்து உயர்தரக் கல்வியின் முடிவில் தொழிற் கல்வியும் இருத்தல் வேண்டும் என்று கருதினார்கள். இந்தக் கருத்திற்கு இணங்கக் கல்வி முறையில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. ஆனால் அடிப்படையான சீர்திருத்தம் சில ஆண்டுகட்கு முன்வரையும் செய்யப் பெறவே இல்லை. உலகில் ஓரிடத்துமில்லாத விநோதமான முறையில் இக்கல்வி புகட்டப்பெற்று வந்தது. தாய்மொழியிற் கல்வி கற்பதுதான் உலகிற் கண்ட முறை. தாய்மொழியிற் கல்வி பயிலாது வேற்றுமொழியிற் கல்வி பயில்வது தான் சரியான முறை என்று நமது தமிழ் நாட்டு அறிஞர்களும் அரசியலாளரும் கருத்துக் கொண்டார்கள். இவ் விநோத முறையைக் கையாண்டதனால் நமக்கும் தமிழுக்கும் ஏற்பட்டுள்ள குறைகளுக்கு அளவேயில்லை. தமிழ்க் கல்விக்கும் பொதுக் கல்விக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று ஆகிவிட்டது. தமிழ் ஒன்றுக்கும் உதவாத மொழி யென்று தமிழ் மக்களே சொல்லத் தொடங்கி விட்டனர். பொதுக் கல்வியின் பொருட்டாக அளவிற்கு மிஞ்சிய காலம் செலவழித்த போதிலும், அதனால் அடையும் கல்வி நலம் அளவில் சிறியதாக முடிந்தது. ஒருவன் வருந்திக் கற்ற அச் சிறிய கல்விக்கும் அவன் பிற்கால வாழ்விற்கும் எவ்வகையிலும் யாதொரு சம்பந்தமும் இல்லாது போயிற்று. இறுதியாக, தமிழ் மொழியை உயிரற்றுப் போம்படி இக்கல்வி செய்துவிட்டது. தமிழ் மக்களது அறிவு வறண்டு, அவர்களது உலகம், பொருளும் உயிருமற்றுக் கேவலம் சொற்களால் நிரம்பிய பொய்யுலகம் ஆகிவிட்டது. இப் பரிதாபகரமான நிலையை உணர்ந்து தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் நீடித்த பயனை அளிக்க எண்ணி உயர்தரக் கலாசாலைகளில் நமது தமிழ்

அரசினர் முயற்சி

மொழியிலேயே எல்லாவகைப் பாடங்களையும் கற்பித்தல் வேண்டும் என்று திட்டம் செய்தவர் ஸ்ரீ. ஸி. இராஜகோபாலாச்சாரியார். இவர்களுக்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. ஆனால் இச் சீர்திருத்தம் இன்னும் வேண்டும் அளவுக்கு வந்துவிட்டதென்று நாம் எண்ணுவதற்கில்லை. இச்சீர்திருத்தத்தினால் நாம் சிறிதும் பயனடையாமற் செய்ய வேண்டும் என்று முயற்சிகளும் நடந்து வருகின்றன! இறைவனே நம்மைக் காப்பாற்ற வேண்டும்.

அரசாங்கத்தினர் பொதுக் கல்வியைப் போற்றும் முறை இது. ஸர்வகலாசாலையார் தனித் தமிழ்க் கல்வியைப் போற்றும் முறையைக் கவனிப்பதும் இன்றியமையாதது தான். ஆனால் நான் அதைப்பற்றிப் பேசுதல் முறையன்று. எனினும், இங்கே, ஒரு சில விஷயங்கள் கூறவேண்டுவது அவசியம்.

ஸர்வ கலா சாலையின் முயற்சி

பொதுக் கல்வியை நீக்கித் தமிழ்க் கல்வியை மட்டும் நோக்குவோமாயின், சென்னை ஸர்வகலாசாலையில் தமிழ் ஆராய்ச்சித் துறையொன்று உள்ளது. மேல் நாட்டு விஞ்ஞானம் பற்றியும் கலைபற்றியும் தமிழில் சிறந்த நூல்கள் எழுதுவோர்க்குப் பரிசளிக்கப்படுகிறது. ஆங்கிலத்திலுள்ள சிறந்த நூல்களை மொழி பெயர்ப்பதற்குப் பொருளுதவும் ஆலோசனையுமுள்ளது. தமிழிலே சிறந்த நூல்கள் எழுதுவோர்க்கும் பதிப்பிடுவோர்க்கும் தக்க பொருளுதவி செய்யப்படுகிறது. தமிழ்க் கல்வியில் மேம்பாடு அடைய விரும்புவோர்க்கு வித்வான் B. O. L., M. O. L. முதலிய பரீக்ஷைத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் போதாவெனச் சிலர் கருதலாம். இடம், பொருள், ஏவல் வாய்ப்பின், இன்னும் பல துறைகளிலும் தமிழ்ப்பணி புரிவதற்குத் தடை இராது என்றே நினைக்கிறேன். இது நிற்க B. O. L. முதலிய பரீக்ஷைத் திட்டங்களை நோக்கினால் ஒரு விஷயம் புலனாகும். இத்திட்டங்கள் தமிழ்மட்டும் உணர்ந்தவர்கள் பொதுக்கல்வி யறிவையும் பெற்றுக் கொள்ளுதற்கும்

தகுதி வாய்ந்தவர்கள் ஆகவேண்டும் என்னும் நோக்கத்துடனேயே அமைக்கப் பெற்றுள்ளன. ஆகவே, நான் கூறிய குறையை ஸர்வகலாசாலையாரும் உணர்ந்து பரிகாரம் தேடியிருக்கிறார்கள் என்பது தெளிவாம்.

அரசாங்கத்தார் முயற்சியும் ஸர்வகலாசாலையார் முயற்சியும் பயன் நிரம்புதல் பொதுமக்களைப் பொறுத்ததாகும். இவ் இரண்டு ஸ்தாபனங்களும் கையாளும் முறை சீர்திருந்துவதும் பொதுமக்களைப் பொறுத்ததேயாகும். பொதுமக்கள் நிலை எவ்வாறு உள்ளது? நான் அறிந்தவரையில் அந்நிலை சிறிதும் திருப்திகரமாக இல்லை என்றுதான் சொல்லுவேன். அரசியல் பற்றிய வியவகாரத்தினால் நமக்குள் பிளவு ஏற்பட்டு, ஒன்றையும் நேர்மையுடன் பார்க்கவொட்டாதபடி நமது கண்களை மஞ்சட்காமாலை பீடித்திருக்கிறது. சாதிச் சச்சரவு இப்பொழுது மிகவும் வலுத்துவிட்டது. எல்லா விஷயங்களிலும், ஆரியன் திராவிடன், பிராமணன் அப்பிராமணன் என்ற பிரிவுணர்ச்சி ஊடுருவிச் சென்றுகொண்டே யிருக்கிறது. இவற்றிற்கு மேலும், மொழி பற்றிய சச்சரவு. வடமொழி என்றால் சிலருக்கு அறவே வெறுப்பு. தமிழ்மொழி என்றால், வேறு சிலருக்கு அப்படியே. இன்னோர்கள் கருத்தில் கம்பனும், வான்மீகியும் ஓயாமற் போர்புரிந்துகொண்டே யிருக்கவேண்டும்! இவ்விதமான மனப்பான்மைகள் ஒன்றன் மேலொன்றாக ஜனசமுதாயத்தைக் கேடுறச் செய்துவரும் இக்காலத்தில், தமிழ்மொழிக்கு எது நன்மை என்பதை எப்படி நாம் உணரமுடியும்? நலம் தீங்கு எது என்பதை அறியும் ஆற்றலே நமக்குக் குன்றிவிட்டது.

விண் சச்சரவுகள் ஒழிய வேண்டும்

ஆனால் இரண்டு பெரிய சக்திகள் நமது நாட்டில் வேரூன்றித் தழைத்து வளர்ந்தோங்கி வருகின்றன. ஒன்று மேல்நாட்டுக் கல்வியறிவு; பிறிதொன்று தேசீய உணர்ச்சி. இவ் இரண்டும் எவ்வகை இடையூறுகளையும் போக்கவல்ல பேராற்றல் படைத்தவை. மேல்நாட்டுக் கல்வியறிவு ஒவ்வொரு துறையிலும் நமக்கு உண்மையான வழிகாட்டியா யுள்ளது; மூவா இளநலம் வாய்ந்

தது; நம்முடைய அறிவு பரந்தோங்குவதற்கு இன்றியமையாதது. அக் கல்வியறிவு வேண்டும் என்னும் பேரவா தமிழ்மக்களின் உள்ளத்திலே வேரூன்றிவிட்டமை ஒரு பெருநன்மை என்றே உறுதிசொல்லுவேன். ஆங்கிலத் துரைத்தனத்தார்கள் நமக்கு அளித்துள்ள பேறுகளில் இது ஒன்றே நமக்கும் தமிழுக்கும் நீடித்த, சாசுவதமான, நன்மையை விளைக்கக் கூடியது. ஆனல் நம்மவர்க்கு ஓர் எச்சரிக்கை மேல் நாட்டுக் கல்வியறிவு வேறு; மேல் நாட்டு மொழியறிவு வேறு. இம் மொழியறிவு கல்வியறிவைச் சம்பாதித்தற்குரிய ஓர் கருவியேயாகும். இதனை நாம் மறத்தல் கூடாது. இன்னும் ஒன்று. கேவலம் மொழியறிவினல் கேடுவிளைதல் இயல்பு. சிறிது ஆங்கிலம் கற்றவுடன் நம்மவர்களுள் பலருக்கும் தலை திரும்பிவிடுகிறது. ஆங்கிலம் கற்ற மகன் தன் தந்தையையும் தாயையுங் கூட வேறினத்தைச் சார்ந்தவர்கள் என்று எண்ணிவிடுகிறன். தமிழை அநாகரிக பாஷை என்று தள்ளி யொதுக்குகிறன். இந்தக் குற்றம் நம்மைப் பாதிக்காதபடி மேல்நாட்டுக் கல்வியறிவைப் பெருக்கித் தமிழிற் பலதுறைகளிலும் நூல்கள் இயற்றி நமது பொது அறிவை விருத்தியாக்குதல் வேண்டும்.

மேல் நாட்டுக் கல்வி யறிவின் பயன்

பிறிதொரு பெரிய சக்தி தேசிய உணர்ச்சி யென்றேன். இவ் உணர்ச்சி இந்நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து வலுப்பெற்று வருகிறது. இவ் உணர்ச்சியினல் சாதிச் சச்சரவு, மொழிச்சச்சரவு முதலிய தொற்று நோய்கள் சிறிது சிறிதாக இப்போது மாய்ந்து வருகின்றன. போலியாக அன்றி உண்மையான தமிழ்ப்பற்று இதனல் விளைந்து வருகிறது. நீண்ட காலமாகப் பஞ்சப் பாட்டுக்களையும் புராணங்களையும் பன்னிப் பன்னி உரைத்து வந்ததனல், தமிழ்ச் சொற்களுக்கே பொருளை உணர்த்தும் ஆற்றல் குறைந்துவிட்டதோ என்று ஐயுறும் நிலை வந்துவிட்டது. தேசிய உணர்ச்சியினல்தான் தமிழ்ச் சொற்களுக்குப் புத்துயிரும் புத்தழகும் பிறந்திருக்கின்றன. இவ் உணர்ச்சி

தேசிய உணர்ச்சி புத்துயிர் அளித்தல்

யைக் குறிக்கும் சொல்லே நமக்குத் தாரக மந்திரமாயமை தல்வேண்டும். இவ் உணர்ச்சிதான் மகாகவி பாரதியாரை நமக்கு அளித்திருக்கிறது.

இப் புதிய சக்திகளால், நமது பொதுக் கல்வியறிவு மேன்மேலும் பெருகுதல் வேண்டும். பொதுக் கல்வியறிவுக்கும் நமது இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஒவ்வொரு தேசத்துக்குரிய மொழியின் சரிதமும் இதற்குச் சான்றுபகரும். பொதுக் கல்வியறிவு எவ்வளவாக உயர்ந்திருக்கிறதோ அவ்வளவே தமிழிலக்கியங்களும் சிறந்து விளங்கும். இனி வரவேண்டும் தமிழிலக்கியங்கள் ஆசிரியர்கள் தாமே கற்று ஆனந்திப்பதற்காக இயற்றப்படுவன அல்ல. அவ் ஆசிரியர்களை ஆதரிக்கும் தனவந்தர்கள் கேட்டு மகிழ்வதற்காக இயற்றப் படுவனவும் அல்ல. பொது மக்களின் அங்கீகாரமும் ஆதரவும் கருதியே எழுதப் படுவனவாம். இவ்வகையான ஆதரவே தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு நீடித்த துணையாக நிற்கவல்லது. பொது மக்கள் தங்களுக்குரிய பொதுக்கல்வி யறிவின் அளவிற்கு ஏற்றபடி உயர்ந்த இலக்கியங்களையே போற்றுவார்கள். இதனை உணர்ந்து ஆவன புரிதல் நம் அனைவர்க்கும் கடனும்;

பொதுக்கல்வி யறிவு பெருக வேண்டும்

இதுகாறும் இப் பெரும்பெயர் மதுரையின் சரிதத்தைக் கூறுமுகத்தால், நமது தமிழ் இலக்கிய சரிதையை முதற்கணிருந்து இந்நூற்றுண்டின் தொடக்கம் வரையிற் கூறினேன். பொதுப்பட நோக்குமிடத்து, மிகச் சிறந்த இலக்கியங்கள் பண்டைக் காலத்தில் நிரம்பத் தோன்றின. பிற்பாடு, இலக்கிய உணர்ச்சியும் சமய உணர்ச்சியும் கலந்து தமிழ்க்கவித்துவம் தனக்குரிய பேரெல்லையை அணுகிற்று. பின்னர், போலி இலக்கிய உணர்ச்சியும் போலிச் சமய உணர்ச்சியும் தலையெடுத்து, தமிழில் இலக்கிய வளர்ச்சியைத் தடுத்துவிட்டன; நல்ல தமிழ் இலக்கியங்கள் அருகியே காணப்படுவன ஆயின. பின்னர், பழந்தமிழ்

தமிழ் இலக்கிய வரலாற்றில் தோன்றிய மாற்றங்கள்

நூல்களைப் போற்றும் முறையில் உரைகள் தோன்றலாயின. சென்ற நூற்றாண்டின் இறுதியில் தமிழ்ச் சரிதம் பற்றியும், தமிழ் மக்களுடைய சரிதம் பற்றியும் ஆராய்ச்சி நூல்கள் வெளிவரலாயின. இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் புதுவதோர் கிளர்ச்சி ஏற்பட்டது.

இப் புதுக்கிளர்ச்சி தோன்றியதன் பின்னர் தமிழின் நிலை எவ்வாறு உள்ளது என ஒருவாறு சுட்டினேன். தமிழைப் பேணுவதற்கு அரசாங்கத்தாரும் ஸர்வகலாசாலையாரும் செய்துவரும் முயற்சிகளைக் குறித்துப் பேசினேன். தமிழின் மேற்கதி சரியான நெறியிலே செல்ல வேண்டுமாயின், தமிழ சமுதாயத்திற் காணும் கேடுகள் ஒழியவேண்டும் என்று கூறினேன். இறுதியாக, தமிழ் நாட்டில் எங்கும் பரந்துலவும் இருபெருஞ் சக்திகளைக் கூறி, அவற்றின் துணையால் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பேணும் முறையை விளக்கினேன்.

நமது நோக்கங்களெல்லாம் இனிது நிறைவேறும்படி எல்லாம்வல்ல இறைவனை வணங்கி இவ் உரையை முடித்துக்கொள்கிறேன்.

> தெய்வப் புலவோர் தெளித்ததமிழ் வள்ளுவனார்
> வையத்துத் தேர்ந்து மதித்ததமிழ்—துய்யபுகழ்க்
> கம்பனலம் பேணக் கனிந்ததமிழ் காசினியில்
> இன்பமுறும் வாழ்வாம் எமக்கு.

1988